


# இரவு

ஜெயமோகன்

# இரவு 1



**நீல இரவு**

**பகலின் மறுபக்கம்.**

**கொந்தளிக்கும் முகங்களின்**

**இயந்திரங்களின்**

**கணக்குகளின்**

**செய்திகளின்**

**அமைப்புகளின்**

**மறுபக்கம்.**

**நீலஇரவு**

**மௌனமே வானமென**

**மூடிய இந்த இரவு**

**அந்த கரும்பட்டுவிரிப்பின்**

**கீழ் ஓரத்துத்**

**தனிவைரம்**

**எதன் மறுபக்கம்?**

கொச்சிக்கு நான் வந்துசேர்ந்தது ஒரு நள்ளிரவில். அந்த ரயில் எங்கெங்கோ நின்று மூச்சுவாங்கி, ஊளையிட்டு, ஏராளமான அதிவேக அலட்சிய ரயில்களுக்கு வழிவிட்டு, 'ஸ்ஸ்ஸப்பா' என்று இரும்பால் முனகியபடி எர்ணாகுளம் வந்தது. ஜங்ஷனுக்குப்போக வேண்டாம், டவுனிலேயே இறங்கிவிடுங்கள் என்று உண்ணிக்கிருஷ்ணன் சொல்லியிருந்தார். ரயில் ஐந்துநிமிடம்தான் நிற்கும். நான் என் இரு கனத்தபெட்டிகளுடன் பாய்ந்திறங்கினேன். ஒருபெட்டி கட்டைவிரலை நசுக்கிவிட்டது. வலியால் நொண்டியபடி திரும்பிப்பார்த்தபோது தூரத்தில் உண்ணிக்கிருஷ்ணன் கையை தூக்கி வீசிக்காட்டியபடி

வெற்றிலைக்காவிப் பற்களால் அகலமாகச் சிரித்துக்கொண்டு வருவதைப்பார்த்தேன்.

உண்ணிக்கிருஷ்ணன் அசல் மலையாளிகளுக்கான தோற்றத்தில் இருந்தார். டப்பாக்கட்டு கட்டிய பட்டைக் கரையுள்ள வேட்டி, செருப்பு. சுள்ளிமாதிரி மயிரடர்ந்த கால்கள். மேல்பட்டனை திறந்து போட்டு கைகளை சுருட்டி மேலேற்றிய சட்டை. இடது அக்குளில் ஒரு செய்தித்தாள் சுருள். ''வரணும் வரணும்...வண்டி குறே லேட்'' என்று வரவேற்றார்.

''பெட்டியை தூக்கணுமே'' என்றேன். ''அய்யோ சாரே, நம்மளே உருட்டிக்கிட்டு போயிடுவோம். அவன்மார் வந்தால் முந்நூறு ரூபாய்க்கு குறையாமல் கேட்பார்'' என்றார். இருவரும் பெட்டிகளை உருட்டிக்கொண்டு வந்தால் குறுக்கே பாலம். ''இந்தபடியிலே ஏத்தணுமே'' என்றேன் ''நான் ஏற்றும் சார்...சார் பேசாமல் வரணும்'' என்றார்.

இருபெட்டிகளையும் இருவருமாகச் சேர்ந்துதான் ஏற்றினோம். வெளியே கொண்டு வந்ததும் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. உண்ணிக்கிருஷ்ணன் பெட்டிகளை தூக்கி அதன் பின்பக்கம் வைத்து ஏறிக்கொண்டார். நான் ஏறியதும் ''வள்ளிக்குந்நு'' என்று சொல்லிவிட்டு ''நல்ல உறக்கமா?'' என்றார். ஆட்டோ அவருக்கு தெரிந்ததா என்ற எண்ணம் ஏற்பட்டது. ''ஆட்டோ கூலி பேசலியா?'' என்று மெல்ல கேட்டேன். டிரைவர் ''இவிடே எல்லாம் ·பிக்ஸட் சார். நிங்ஙளுடே தமிழுநாடு மாதிரி பற்றிக்கில்லா'' என்றார். நான் புன்னகைசெய்தேன்.

அங்கெல்லாம் சாலை போடும் வழக்கமே இல்லை போலிருக்கிறது. சமீபத்திய மழையில் சாலை முழுக்க குட்டி குட்டி நீர்க்குட்டைகள். வண்டிக்குள் நாங்களிருவரும் ஆவேசமாக நடனமாடுவது போலிருந்தது. அதனூடாக உண்ணிக்கிருஷ்ணன் ''நல்ல வீடு சார்...சார் கேட்டதுமாதிரி ஒதுக்குபுறமா அமைதியா ஸ்வஸ்தமான வீடு...வாடகையும் சகாயம்...பின்னே பஸ் இல்லை. சாருக்கு கம்பெனி கார் உண்டுதானே?'' என்றார். நன் ''ஆமாம்'' என்றேன்.

எர்ணாகுளம் நகரமே தூங்கி கிடந்தது. ஒரு கடை ஒரு வீடு கூட திறக்கப்பட்டிருக்கவில்லை. மெல்லிய மழைச்சாரல் ஆட்டோவின் முகவெளிச்சத்தில் பொன் துகள்களாக விழுந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். இந்த பருவநிலையில் ஏன் விழித்திருக்கவேண்டும்.? ஆறுமணிக்கெல்லாம் மலையாளிகளில் தொண்ணூறு சதம் பேர் 'ரண்டெண்ணம் வீசி' விட்டு படுத்து விடுவார்கள் என்று ராஜன் சொல்லியிருந்தார்

நகர எல்லை அத்தனை சீக்கிரம் முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சாலையில் எங்கள் ஆட்டோவின் முகவெளிச்சமல்லாமல் வேறு விளக்கே இல்லை. இருபக்கமும் தென்னைமரக்கூட்டங்கள் இருட்டுக்குள் அடர்ந்து நின்று, மங்கிய வெளிச்சம் வருடிச்செல்கையில் பளபளக்கும் ஓலைகளை மெல்ல அசைத்தன. ஆட்டோ ஒலியில் சில பறவைகள் தூங்கி எழுந்து ''ரீப் ரீப்'' என்று குரல்கொடுத்தன.

சாலை சரிந்து இறங்கியது. ஏதோ ஆறு வரப்போகிறது என நான் எண்ணியதுமே மேலேற ஆரம்பித்தது. விளக்கே இல்லாத பெரிய பாலம் ஒன்றின் மீது செல்ல ஆரம்பித்தோம். கீழே அகலமான ஆறு சாம்பல்நிறமாக ரகசிய ஒளியுடன் கிடந்தது. அதில் நாலைந்து படகுகள் லாந்த ஒளி ஆட, தூக்கத்தில் மிதந்தன. நான் குனிந்து அவற்றைப் பார்ப்பதைக் கண்டு ''தாப்புவலை போடுறாங்க சார்...நல்ல கரிமீன் கிட்டும்'' என்றார் உண்ணிக்கிருஷ்ணன்.

சிறிய சாலைக்குப் பிரிந்து நீரோடையில் மிதந்து செல்வது போல வளைந்து வளைந்து வளைந்து சென்று ஒரு சிறிய இரும்பு கேட் முன்னால் நின்றது ஆட்டோ. என்னுடைய தலை பலமுறை கம்பிகளில் முட்டி வலித்தது. உண்ணிக்கிருஷ்ணன் இறங்கி இரும்பு கேட்டை திறந்தார். தரை ஈரமாக பளபளத்தது. கொஞ்சநேரம் முன்னால் நல்ல சாரல் மழை பெய்திருக்கக் கூடும்.

''வீடு குறே உள்ளேயாக்கும்...சுற்றி நல்ல தென்னந்தோப்பு உண்டு'' என்றார் உண்ணிக்கிருஷ்ணன். ஆட்டோ உள்ளே ஏறி தோப்புக்குள் சென்றது. ஒளி நனைந்து கருமையாக இருந்த தென்னைமண்டைகளை தழுவிச்செல்ல பறவைகள் கலைந்தெழுந்தன. தோப்பே கூக்குரலிடுவது போலிருந்தது. வீட்டு முற்றத்தில் ஆட்டோ நின்றது. பெட்டிகளை ஆட்டோ டிரைவரே தூக்கி வைத்தார். * ஒரு சொல்கூட பேசாமல் ஆட்டோவுக்கு பணம்கொடுத்தார். நள்ளிரவில் அத்தனை தூரம் வந்ததற்கு நூறு ரூபாய் மிகவும் குறைவுதான். சென்னையில் முந்நூறு கேட்பான்.

நான் இறங்கி நின்று சோம்பல் முறித்தேன். பழையபாணி ஓட்டு கட்டிடம். கேரளத்தில் அத்தகைய உயரமான ஓட்டுகூரை கொண்ட பெரிய கட்டிடங்களை பார்த்திருக்கிறேன். சதுரமான பூமுகம் என்ற முகப்புநீட்சி. அதன் அகலமான திண்ணைகள் மழைச்சாரலால் ஈரமாக சில்லென்று இருந்தன. தரையும் சிமிட்டி போடப்பட்டு பனிக்கட்டி போல் இருந்தது.



உண்ணிக்கிருஷ்ணன் பூட்டை திறந்து கதவைத் தள்ளி விரித்தார். ”உள்ளே நல்ல சூடுண்டாகும் சார். தட்டும் நிரையும் உள்ள வீடாக்கும்” என்றார்.”சார் உள்ளே போகணும்.நான் பெட்டிகள் கொண்டு வந்து வைப்பேன்…” நான் உள்ளே சென்றேன். அகலமான கூடம். உண்மைதான் உள்ளே வெதுவெதுப்பாக இருந்தது. காரணம் மிக உயரமாக தெரிந்த ஓட்டுக்கூரைக்குக் கீழே தேக்குமரத்தால் சீலிங் போடப்பட்டிருந்தது. பெரிய தேக்குமர இரட்டைக்கதவுகள். செங்குத்தான கம்பிகள் கொண்ட அகலமான சன்னல்கள். கூடத்தில் கனமான பெரிய நாற்காலிகள் நான்கும் ஒரு டீபாயும் கிடந்தன. ஒரு பெரிய சாய்வு நாற்காலி பிரம்பு முதுகுடன் கிடந்தது.

சாய்வு நாற்காலியில் கால்களை விரித்து அமர்ந்துகொண்டேன். உண்ணிக்கிருஷ்ணன் பெட்டிகளை கொண்டுவந்தபடி ”இதை உள் அறையில் வைக்கும். மேலே நல்ல பெட் ரூம் உண்டு சாரே” என்றார். கூடத்தின் வலதுபக்கம் மேலே செல்லும் மரத்தாலான பெரிய படிகள் இருந்தன. அவற்றில் திம் திம் என்று உண்ணிக்கிருஷ்ணன் ஏறிச்செல்லும் ஒலி கேட்டது.

உண்ணிக்கிருஷ்ணன் கீழே வந்து ”நான் நேற்று ஆள் கொண்டுவந்து நல்லா அடிச்சு வாரி விருத்தியாக்கினேன் சார்…பெரிய வீடு…ரிசார்ட் நடத்த ஆள் பிடிபிடின்னு நிக்கிறாங்க. ஹாஜியார் குடுக்க மாட்டேன்னு சொல்றார். நம்ம கம்பெனிக்கு ஒரு கெஸ்ட்ஹவுஸா வாங்கி போடலாம்.. மேலே போயி நிந்நால் அந்தப்பக்கம் காயலுண்டு…” என்றார் ”பால் ஆறுமணிக்குதான் கிட்டும். பங்கஜம் கொண்டுவரும். இப்ப ஒரு கட்டன் போடட்டுமா?”

நான் சரி என்றேன். உண்ணிக்கிருஷ்ணன் கறுப்பு டீ போட போனபோது நான் படிகளில் ஏறி என்னுடைய படுக்கையறைக்குச் சென்றேன். அகலமான சுத்தமான அறை. தேக்குமரத்தாலான தரை . சுவர் ஓரமாக ஒரு பெரிய மர அலமாரா. மரவேலைப்பாடுகள் கொண்ட பெரிய கட்டில் புதிய வார்னீஷில் பளபளவென நின்றது. புதிய மெத்தை, படுக்கைவிரிப்பு, தலையணை. என் பெட்டிகள் ஓரமாக இருந்தன. சிவப்பு சூட்கேஸை திறந்து பைஜாமாவையும் குர்தாவையும் எடுத்து போட்டுக்கொண்டேன். முகம் கழுவலாம் என இருபக்கமும் தெரிந்த அறைக்கதவுகளை திறந்து பார்த்தேன். ஒரு பெரிய அறையை பிளாஸ்டிக் விரிப்பால் தரை போட்டு கழிவறை குளிப்பறையாக மாற்றியிருந்தார்கள்.

தண்ணீர் சில்லென்று இருந்தது. வாயில் விட்டபோது தண்ணீர் கொஞ்சம் கனமாக இருப்பதாக பட்டது. முகம் கழுவிக்கொண்டு வந்து நாற்காலியில் அமர்ந்து பெட்டியை இழுத்து திறந்து என் துணிகளை எடுத்து அல்மாராவில் அடுக்கி வைத்தேன். பற்பசை சோப்பு ஷேவிங் சாமான்களை குளியலறையில் கொண்டுசென்று வைத்தேன். திரும்ப வந்தபோது பெரிய பீங்கான் கோப்பை நிறைய சூடான பாலில்லா டீயுடன் உண்ணிக்கிருஷ்ணன் நின்றிருந்தார். ”இனிப்பு மதியோ சாரே?” என்றார்.

மலையாளிகள் பாலில்லா டீ போடுவதில் கில்லாடிகள், பால் சேர்த்தால்தான் சொதப்பிவிடுவார்கள். டீயை உறிஞ்சியபடி மறுபக்க கதவு வழியாக வெளியே சென்றேன். அது ஒரு சிறிய பால்கனி. அங்கிருந்து பார்த்தபோது தென்னை மரங்களுக்கு அப்பால் வெளிச்சம் தெரிந்தது. டீ டம்ளருடன் பால்கனி கைச்சுவரை சாய்ந்து நின்று கூர்ந்து பார்த்தேன். அங்கே ஒரு பெரிய வீடு இருப்பது போல் இருந்தது. அதன் மூடிய சன்னல்களில் இருந்து மெல்லிய வெளிச்சம் கசிந்துகொண்டிருந்தது.

கண்பழகியபோது தெரிந்தது, அந்த வீட்டுக்கு முன்னால் உள்ள விசாலமான முற்றத்தில் ஏழெட்டு கார்கள் கிடந்தன. வீட்டுச் சன்னல்கள் மூடப்படவில்லை, உள்ளே இருந்த வெளிச்சமே அத்தனை மங்கலான ஒன்றுதான். அங்கிருந்து மெல்லிய குரலில் உரையாடல்களின் ரீங்காரம் எழுந்தது. எவரோ விளக்குடன் நடமாடுவது போலிருந்தது. சட்டென்று அவை மின்விளக்குகள் அல்ல, மெழுகுவத்திகள் அல்லது எண்ணைத்திரி விளக்குகள் என்று புரிந்துகொண்டேன்.

ஏதாவது பார்ட்டி நடக்கிறதா என்ன? ஆனால் இந்த பின்னிரவு வரை எந்தப்பார்ட்டி நீளும்? பார்ட்டிக்கான எந்த குதூகல ஒலியும் கேட்கவில்லை. கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நின்றேன். பிறகு கீழே இறங்கிச் சென்றேன்.

கூடத்தில் இருந்த பெரிய மரசோபாவில் உண்ணிக்கிருஷ்ணன் படுத்து போர்வையால் தலைமூடி போர்த்திக்கொண்டிருந்தார்.

”நாயரே” என்று அழைத்தேன். ”ஓய் நாயர்” . உண்ணிக்கிருஷ்ணன் கண்விழித்து ஒருகணம் திகைத்து ”ஆ, சாரா? என்ன சார்?” என்றார். ”அந்த பக்கத்து வீட்டிலே என்ன வெளிச்சம்?” என்றேன்

நாயர் ”எங்கே?” என்றார். நான் சொன்னதும் ”அதுவா? நான் நேத்தைக்கும் பார்த்தேன். அங்கே ஒரு குடும்பம் ஜீவிக்குது சார்…அவங்களை பாக்க சிலர் வாறாங்க. நமக்கு அதுக்குமேலே தெரியாது” என்றார்.

நான் அவரிடம் ”சரி தூங்குங்க” என்று சொல்லிவிட்டு திருப்பி என் அறைக்குச் சென்றேன். குளிர் இதமானதாக இருந்தது. படுத்துக்கொண்டு போர்வையை கால் வழியாக கழுத்துவரை இழுத்து விட்டேன். செல்போனில் ஒரு பழைய மலையாளப்பாடலை ஓடவிட்டேன் ”மஞ்ஞலையில் முங்ஙி தோர்த்தி தனுமாச சந்திரிக வந்நு…” ஜெயச்சந்திரனின் பழைய குரல். சின்னபையன் பாடுவது போல. வெளியே மழை மென்மையாகப் பெய்ய ஆரம்பித்தது.ஒரு ரகசியமான குதூகலம் போல மரங்களில் மழை அலைப்புறும் ஒலி.

# இரவு 2



**எல்லையற்ற**
**தூரிகையொன்றின் நுனியில்**

**சொட்டி நிற்கும் கரும்சாயம்**

**இந்த இரவு.**

**எழுதப்படாதது…**

காலையில் நான் கண் விழித்தபோது அறை முழுக்க வெளிச்சமாக இருந்தது. சாய்வாக ஒளி வந்து எதிர்ச்சுவரில் விழுந்திருந்தது. அறையின் கூரையில் நீர்ப்பரப்பு போல ஒளி தளதளத்தது. பாத்ரூம் போய் முகம் கழுவிவிட்டு கீழே வந்தேன். கீழே

முகப்புக்கதவு திறந்து கிடந்தது. சமையலறையில் பாத்திரங்களின் ஒலிகள் கேட்டன.

அரையிருட்டு பரவிய இரு அறைகள் வழியாக பின்கட்டுக்குச் சென்றேன். சமையலறையில் புதிதாக டைல்ஸ் ஒட்டி அடுப்புமேடை செய்யப்பட்டிருந்தது. ஸ்டீல்பளபளக்கும் கேஸ் அடுப்பு மீது இரு பாத்திரங்கள் இருந்தன. கொல்லைப்பக்கத்தில் இருந்து ஒரு உற்சாகமான மலையாளப்பெண்மணி வந்தாள். ஐம்பது வயதிருக்கும். வேட்டிகட்டி மேலே புள்ளிகள் கொண்ட சிவப்புநிற ஜாக்கெட் போட்டு ஒரு துண்டை முந்தானையாகப் போட்டிருந்தாள். ''நமஸ்காரம் சார். ஞான் பங்கஜமாக்கும்'' என்று அழகான பல்வரிசையைக் காட்டி சிரித்துக்கொண்டு சொன்னாள். ''சாயா எடுக்கட்டுமா''

''தமிழு பேசுமா?'' என்றேன். ''நான் மத்ராஸிலே ஆறு வருஷம் நிந்நேன் சார்'' என்றாள். சரிதான், ஆறுவருடம் இங்கே இருந்தால் நான் மலையாளத்தில் மரபுக்கவிதை எழுதுவேன். ''பால் இருக்கா?'' என்றேன். ''நான் கொண்டு வந்தேன் சார்…'' ''நாயர் எங்கே?'' ''உண்ணிசார் போயி…இனிமேல் சாயங்காலம் வரும்'' ''டீயை நல்லா நிறைய பால் சேத்து கடுப்பமா போடணும்'' என்றேன். ''தெரியும் சார் . நான் தமிழ் டீயும் போடும்''

கூடத்துக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தேன். ஹிண்டு வந்திருந்தது. பங்கஜமே கொண்டு வந்திருப்பாள் போல. அதை எடுத்து மேலோட்டமாக புரட்டினேன். அதற்குள் அவள் பெரிய கண்ணாடி டம்ளர் நிறைய டீ கொண்டுவந்தாள். பரவாயில்லை. ''இவ்ளவு வேண்டாம். இதிலே பாதிபோரும்'' என்றேன்.

டீயுடன் முற்றத்துக்கு சென்றேன். செம்மண் முற்றம் மழை பெய்து மண் கரைந்து சரல்கற்களால் ஆனதாக இருந்தது. சமீபத்தில் புல்செதுக்கப்பட்டிருந்தது. முற்றத்தின் சதுர விளிம்புக்கு அப்பால் பசும்புல் செழிப்பாக , மழைக்காலப் பளபளப்புடன் அடர்ந்திருந்தது. தென்னை ஓலைகள் வெயிலில் பளபளத்து ஆடின. தோப்புக்குள் நிறைய மட்டைகளும் ஓலைகளும் விழுந்து அப்படியே காய்ந்து கிடந்தன. தேங்காய்கள் கூட கிடந்தன. அங்கே யாரும் இவற்றை பொறுக்குவதில்லை போலும்

தோட்டத்துக்கு அப்பால் அந்த வீடு தெரிந்தது. என் வீட்டைப்போலவே உயரமான ஓட்டு வீடு. நடுவே சரிந்த கூரை கொண்ட கூடம். இருபக்கமும் இரு மாடியறைகள். பெரிய முற்றம். தொழுவம் போல ஒரு சார்ப்பு. வீட்டுக்கதவு மூடியிருந்தது. யாருமே இருப்பதாகத் தெரியவில்லை.

நான் வீட்டைச் சுற்றிக்கொண்டு பின்பக்கம் சென்றபோது சட்டென்று கண்ணுக்குள் ஒளி வந்து கொட்டியது போல காயலைப் பார்த்தேன். அத்தனை

அருகே காயலிருக்கக்கூடும் என நான் எண்ணவே இல்லை. என் வீடிருந்த தோப்பு அப்படியே சென்று காயலை அடைந்தது. காயல் விளிம்பில் கல்லால் ஆன மதில் கட்டி படி இறக்கியிருந்தார்கள்.

காயலை நோக்கிச் சென்றேன். என் படுக்கையறையில் இருந்தால் காயலை நன்றாகவே பார்க்க முடியும்போலும். காலையில் கூரையில் பளபளத்த ஒளி காயலின் நீரலை வெளிச்சம்தான். ஒற்றையடிப்பாதை காயலை நோக்கிச் சென்றது. மதில் அருகே சென்றபோது காயலின் நீர்வெளி பிரமிப்பூட்டும்படியாக பரந்து கிடப்பதைக் கண்டேன். மழைக்காலமாகையால் நீர் நீலமாக இல்லாமல் கொஞ்சம் மஞ்சள் கலந்து இருந்தது. அலைகள் தளக் தளக் என்று மதிலின் கீழ்விளிம்பில் மோதின.

மழையரித்த சிமிட்டிப்பரப்பு சொரசொரவென்றிருந்தது. மெத்தென்று வெல்வெட் பாசி படிந்த கல்படிகள் காயலை நோக்கி இறங்கிச்சென்று நீரில் மூழ்கி இளம்பச்சை நிறமாக நீருக்குள் தெரிந்து மறைந்தன. நீர்வெளி முழுக்க கனத்த நீர்ப்பாசிகளின் குமிழ்கள் மிதந்து காற்றில் அலைபாய்ந்தன. ஒருபக்கமாக அவற்றை காற்று அள்ளிச்சென்றபோது ஒரு கணம் அது ஒரு மாபெரும் நதி என்று பிரமை எழுந்தது. ஆனால் உடனேயே அவை சுழன்று திரும்பி வந்தன.

மதில் மேல் அமர்ந்துகொண்டேன். நல்ல குளிரான காற்று நீர்மீதிருந்து வந்தது. அதில் பச்சைப்பாசியின் வாசனை. நீர்பரப்பில் ஒரு பெரிய கூண்டுப்படகு மாபெரும் திமிங்கலம் போல நிதானமாகச் சென்றது. படகோட்டி பெரிய மூங்கிலால் படகை உந்தி நகர்த்திக்கொண்டிருந்தான். அந்தக் கூண்டுக்குள் கயிறுக்கான தேங்காய்நார்பொதிகள் நிறைந்திருந்தன. படகு கொஞ்ச தூரம் போனபின் நகர்வதாக தோன்றவில்லை, சிறிதாகியபடியே இருந்தது. பின்பு இந்தப்பக்கம் இன்னொரு படகு வந்தது.

காயலின் மறுபக்கம் தெரியவில்லை. என் அறையில் நின்றால் ஒருவேளை தெரியக்கூடும். ஒருபெரிய மோட்டார் படகு எதிர் திசையில் அலைகளை எழுப்பியபடிச் சென்றது. அது முழுக்க ஆட்கள். நீரில்செல்லும் டவுன்பஸ். அலைகள் வந்து என் மதில்சுவர் மேல் அறைந்தன. நீர்பாசிகள் எழுந்து எழுந்து வளைந்து வளைந்து அமைந்தன. படகுக்கு மேலே ஒரு காகம் தாழ்வாகப் பறந்து என் மேல் தென்னைஓலையில் வந்தமர்ந்தது

”சாரே” என்றாள் பங்கஜம். வேட்டி நுனியை தூக்கி ஜாக்கெட்டில் செருகியபடி நின்று ”படியிலே எறங்க வேண்டாம். சறுக்கல் உண்டு” என்றாள். ”சரி”என்றேன். ”புட்டும் கடலைக்கறியும் வைக்கட்டா?” ”சரி” அவள் திரும்பிச்சென்றாள். என்ன அழகான சிரிப்பு என எண்ணிக்கொண்டேன்.

காயலில் குளிக்க முடியாது என்று தோன்றியது. குளிப்பதற்கு ஏதாவது இடமிருக்கிறதா என்று மாலை உண்ணிக்கிஷ்ணனிடம் கேட்டுப்பார்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். சோம்பலாக நாள் முழுக்க அமர்ந்திருப்பதற்கு ஏற்ற இடம். அங்கே ஒரு மேஜைநாற்காலியை கொண்டு வந்து போடச்சொல்லவேண்டும். தென்னைமர நிழலில் வெயிலே வரப்போவதில்லை. வேலைசெய்வதையும் அங்கேயே செய்துகொள்ளலாம்.

மீண்டும் பங்கஜம் வந்து ”சாரே புட்டு ரெடியாக்கும்” என்று சொல்லும் வரை நீரையே பார்த்துக்கொண்டு ஏதேதோ எண்ணங்களில் ஆழ்ந்திருந்தேன். உலகின் பலநாடுகளில் நான் கண்ட நீர்வெளிகள் என் நினைவு வழியாக கடந்து சென்றுகொண்டிருந்தன. எழுந்து சோம்பல் முறித்தபடி திரும்பி வரும்போது மீண்டும் அந்த வீட்டைப்பார்த்தேன். வீடு மூடி ஆளரவமில்லாமல் கிடந்தது.

சம்பா அரிசிப் புட்டு தேங்காய் மணத்துடன் மென்மையாக இருந்தது. கடலைக்கறியும் உளுந்துப் பப்படமும் வேக வைத்த நேந்திரம் பழங்களுமாக சுவையான காலையுணவு. அதைச் சாப்பிட்டபின் மதியம் எப்படிச் சாப்பிடுகிறார்கள் என எண்ணிக்கொண்டேன். ”பக்கத்துவீட்டிலே யாரு இருக்கா?” என்று பங்கஜத்திடம் கேட்டேன்.

”அங்கேயா?” என்று இழுத்தாள். ”அங்கே ஒரு டாக்டரும் பெஞ்சாதியுமாக்கும். நான் அவரை கண்டிட்டில்லை. சொல்லிக்கேட்டதுதான்....” எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தமாதிரி ஒரு சூழல் இந்தியாவில் கேரளத்தில் மட்டும்தான் இருக்கும். ஒவ்வொரு வீடும் தனித்தனியாக தோட்டங்களுக்குள் தென்னை மரக்கூட்டங்களுக்குள் ஒளிந்துகொண்டிருந்தது. ஒரு வீட்டில் என்ன நடக்கிறதென்று பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு தெரியாது. அக்கறையும் இல்லை. தனித்தனியாக வாழும் ஒரு மக்கள்கூட்டம்தான் மலையாளிகள்.

சாப்பிட்டபின்னர் மூச்சு திணறுவது போலிருந்தது. மீண்டும் காயல்கரைக்கு வந்தேன். காயலின் விளிம்பாக இருந்த சிமிண்ட் மதிலை ஒட்டி காயலைப்பார்த்தபடியே நடந்தேன். காயலில் மேலும் அதிகமான படகுகள் சென்றன. ஒரு படகிலிருந்து ஏதோ மலையாளப்பாட்டு கரைந்து கரைந்து காற்றில் வந்தது.

அந்த வீட்டுக்கு அருகே வந்து விட்டேன். அருகே சென்று பார்த்தாலென்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. தயக்கம் இருந்தாலும் ஒரு அன்னியனுக்கே உரிய ஆர்வம் உந்தியது. அந்த வீட்டு முற்றத்துக்குச் சென்று நின்று பார்த்தேன். வீட்டின் எல்லா ஜன்னல்களும் எல்லா கதவுகளும் இறுக்கமாக பூட்டப்பட்டிருந்தன. முற்றம் செம்மண்ணில் சில டயர்த்தட வளைவுகளுடன் சுத்தமாக இருந்தது. வீட்டில் யாரும் அப்போது யாரும் இருப்பது போல

தெரியவில்லை. ஆனால் மனிதர்கள் குடியிருக்கும் வீடுதான். காலி வீட்டை பார்த்தாலே தெரிந்துவிடும், அதில் ஒரு பாழ்தன்மை இருக்கும். மனிதர்குடியிருக்கும் வீட்டுக்கே உரிய சின்னச்சின்ன தடயங்கள் எங்குமிருந்தன. அவற்றை நம் ஆழ்மனம் பொறுக்கிக்கொள்கிறது.

வீட்டை மெதுவாகச் சுற்றி வந்தேன். பலவகையான உபயோகப்பொருட்கள் போடப்பட்ட சார்பு. ஒரு கார் நின்றுகொண்டிருந்தது. முழுக்க முழுக்க கறுப்புக்கண்ணாடி போடப்பட்ட சிறிய மாருதி ஆல்டோ. பின்பக்கம் சில கோழிகள் மேய்ந்துகொண்டிருந்தன. ஒரு பெட்டைக்கோழி என்னை நிமிர்ந்து பார்த்து அலகு பிளந்து கவனித்தது. வீட்டின் எல்லா பக்கமும் எல்லா வாசல்களும் மூடப்பட்டிருந்தன. இரவில் வந்து தங்கிவிட்டு செல்கிறார்கள் போல

ஆனால் அங்கே என்னால் நிற்க முடியவில்லை. என்னுடைய அகம் ஏனோ பதைத்துக்கொண்டே இருந்தது. ஒருவகையான நிம்மதியின்மை. விரும்பத்தகாத ஏதோ நினைவுக்கு வந்தது போல. பிடிக்காத ஒன்றை எதிர்பார்ப்பது போல. மீண்டும் வீட்டு முகப்பை ஏறிட்டு பார்த்துவிட்டு திரும்பிவிட்டேன்.

எடுத்துவந்திருந்த ஜான் கிருஷாமின் நாவலை நூறு பக்கம் வாசித்தேன். பின்பு என் அறையின் பால்கனியில் அமர்ந்து காயலையே பார்த்துக் கொண்டிருந்தேன். நாளைமுதல் வேலையை ஆரம்பிக்க வேண்டும். வரும்போது வேறு செல்பேசி எடுத்து வந்தேன். மிக முக்கியமான எதையாவது சொல்ல வேண்டுமென்றால் மட்டும் கூப்பிடும்படி சரவணனிடம் சொல்லியிருந்தேன். நான் ஏழு வருடத்து கணக்குகளை பார்க்க வேண்டியிருந்தது. அவற்றில் இருந்து என்னுடைய அறிக்கையை நான் அளிக்க வேண்டும். சென்னையில் என் மூளையில் எண்களே பதியவில்லை.

சாப்பிட்டுவிட்டு கொஞ்சநேரம் தூங்கினேன். கண்விழித்தபோது தென்னை ஓலைகளின் சிறகடிப்பொலி கேட்டது. மனம் நிம்மதியையும் தனிமையையும் மெல்லிய தன்னிரக்கம் கலந்த நிறைவையும் உணரும் தருணம். சோம்பலாக கட்டிலில் நெளிந்துகொண்டே இருந்தேன். பின்பு எழுந்து முகம் கழுவினேன். ஒரு பெரிய பிளாஸ்கில் டீ போட்டு வைத்துவிட்டு பங்கஜம் சென்றுவிட்டிருந்தாள். டீயை விட்டு குடித்தேன். வேலைசெய்ய மனநிலை வாய்த்தது போலிருந்தது

மடிக்கணினியை விரித்து வைத்துக்கொண்டு இணையத்தொடர்பு கொடுத்தேன். கடவு எண்ணை அளித்து உள்ளே நுழைந்து கணக்கு அறிக்கைகளை விரித்து பார்க்க ஆரம்பித்தேன். அறைக்குள் ஒளி மாறுபாடு அடைந்ததை யதேச்சையாக

கவனித்தபோதுதான் அந்தியாகி விட்டிருந்ததை உணர்ந்தேன். என் வேலைக்கான ஒரு தொடக்கம் அமைந்துவிட்ட நிறைவு ஏற்பட்டது. கணினியை மூடிவிட்டு எழுந்து இன்னொரு டீ விட்டு கையில் எடுத்துக்கொண்டு காயல்கரை நோக்கிச் சென்றேன்.

தீப்பிழம்பு போல கிடந்தது காயல்வெளி. அப்பால் தூரத்தில் அந்திச்சூரியன் விளிம்புகள் பற்றி எரிந்த மேகங்கள் நடுவே மெல்லப் புதைந்து கொண்டிருந்தது. காயல்மேல் காற்றே சிவப்புகலந்தது போல தெரிந்தது. பெரிய கூண்டுப்படகுகள் மூன்று வரிசையாக மெல்லச்சென்றன. அவற்றை உந்துபவர்களின் அசைவுக்கும் அவற்றுக்கும் தொடர்பில்லாதது போல. வெண்கொக்குகள் எதிர்திசையில் இருந்து சுழற்றி எறியப்பட்ட முல்லைமலர் சரம் போல நெளியும் அரைவட்டமாக பறந்து வந்து கடந்துசென்றன. மீண்டும் மீண்டும் அவை வந்துகொண்டே இருந்தன. ஒரு கொக்குராணுவத்தின் சிறிய படைப்பிரிவுகள் போல.

ஒரு கொக்கு கீழாகப் பறந்தபோது அது க்ரா என்றது. அண்ணாந்து பார்த்தேன். அது கொக்கு இல்லை, ஏதோ வாத்து. கழுத்தை நன்றாக நீட்டி கால்களை வயிற்றுடன் ஒட்டி வைத்து காற்றில் சறுக்கிச்சென்றது. தலைக்குமேல் தென்னையுச்சிகளில் காகங்கள் அமர்ந்து பூசலிட்டு எழுந்து பறந்து மீண்டும் அமர்ந்துகொண்டிருந்தன.

எத்தனை ஆயிரம் பறவைகள் என்று நினைக்க ஆரம்பித்தேன். வானத்தை நிறைத்தபடி அவை சென்றுகொண்டே இருந்தன. எங்கே செல்கின்றன, எதை உண்கின்றன? வானத்தில் மேகங்கள் ஒவ்வொன்றாக ஒளியை இழந்து சாம்பல்குவியல்களாக மாறின. சிவப்புக் கண்ணாடித்துருவல்கள் போல கொஞ்சம் மேகப்பிசிறுகள் மட்டும் மேற்கே தெரிந்தன.

சட்டென்று என் மனதில் ஒரு அதிர்ச்சி. அந்த வீட்டுக்கதவுகள் உள்ளே இருந்துதான் தாழிடப்பட்டிருந்தன. ஆம் ,சந்தேகமே இல்லை. அந்த வீட்டுக்குள் யாரோ இருக்கிறார்கள். அந்த உணர்வுதான் என்னை பதற்றம் கொள்ளச்செய்தது!

# இரவு 3

**திகைத்து நின்றது இரவு**

**தன்னைத் தானே அறிந்து.**

**ஒருதுளிகூட மிச்சமில்லாமல்...**



இருட்டு தோட்டம் மீது சீக்கிரமே கவிந்துவிட்டது. சூரியன் மறைந்தபின்னர் காயலின் நீர்விளிம்பில் தங்கக்கத்தியின் கூர் போல ஓர் ஒளி மட்டும் மின்னிக்கொண்டிருக்க காயல்பரப்பின் கலங்கல் நீர் மஞ்சள் ஒளிபரவி நெளிநெளிவாக உருக்கி வார்க்கப்பட்ட வெண்கலத் தகடாலானதுபோல் இருந்தது. தென்னந்தோப்புக்குள் இருட்டுக்குள் சில சிற்றுயிர்கள் ஓடும் சரசரப்பு கேட்டது. உள்ளே தீபத்தை வைத்து மூடப்பட்ட கருவறைக் கதவின் இடுக்கு போல ஆகியது வான்கோடு. பின்னர் அதுவும் அணைய காயலின் நீர்வெளி எவர்சில்வர் தகடாகியது.

பின்பு கண் பார்த்திருக்கவே கருமை படர்ந்து ஈரமான சிலேட் பரப்பாக ஆகியது காயல். பின்னர் கிராபைட் கருமையின் பளபளப்பு. இருளுக்குள் நீரலைகள் தளக் தளக் என மதிலை நக்கின. ஒரே ஒரு அரிக்கேன் சுடராக ஒரு படகு நீர்மேல் நகர்ந்து சென்றது. மீண்டுமொரு படகு. இரு சிவந்த புள்ளிகள். சட்டென்று காயல் கண் பெற்று என்னை நோக்குவதாக உணர்ந்தேன்

என் பிரக்ஞை பக்கத்து வீட்டிலேயே இருந்தது என்பதை அங்கே ஒரு தீப ஒளி தெரிந்ததைப் பார்த்ததும் உணர்ந்தேன். அந்த வீட்டின் கதவுகள் திறந்திருந்தன. ஜன்னல்கள், வாசல்கள் எல்லாம். உள்ளே நிறைய சிறு தீபங்கள் சுடராட மெல்லிய சிவந்த ஒளி அலையடித்தது. நான் என் பால்கனியில் நின்று அந்த வீட்டின் வாசலையே பார்த்துக்கொண்டிருந்தேன். அதிக ஆட்கள் இருப்பதாக தெரியவில்லை. அதிகம்போனால் இருவர்

வீட்டுக்குள் இருந்து ஒரு உயரமான கிழவர் நன்றாக உடையணிந்து கையில் நடைக்குச்சியுடன் வெளியே சென்றார். கொஞ்ச நேரம் கழித்து ஒரு கிழவி நீலநிறமான சால்வை ஒன்றை அணிந்துகொண்டு வெளியே வந்து கதவை பூட்டி விட்டு படிகளில் நின்றாள். கிழவர் காரைக் கொண்டுவந்து முற்றத்தில்

நிறுத்தியதும் அவள் ஏறிக்கொண்டாள். கதவு மூடும் ஒலி துல்லியமாகக் கேட்டது. கார் பின்பக்க விளக்கு சிவப்பாக சீறி விழித்து அணைய மெல்ல உறுமி சென்று மறைந்தது.

இரவுணவை வெப்பப்பெட்டியில் எடுத்து வைத்துவிட்டு பங்கஜம் சென்றிருந்தாள். சப்பாத்தியும் தேங்காய்ப்பால்விட்ட கறுப்பான உருளைக்கிழங்கு கறியும். சாப்பிட்டு விட்டு நான் கொஞ்ச நேரம் மின்னஞ்சல்களைப் பார்த்தேன். கணக்குகளின் மீதான என் முதலறிக்கையை அலுவலகத்துக்கு அனுப்பினேன். சோம்பல் முறித்து காலைத்தூக்கி கட்டில் மீது வைத்துக்கொண்டு சாய்ந்தபோது கார் உறுமும் ஒலி கேட்டது. எழுந்து பால்கனிக்கு வந்து நின்றேன். காரின் முகவெளிச்சம் தென்னைமரங்களின் ஊடாக சிதறி ஒளிச்சட்டங்களாக என் வீட்டு சுவரில் பரவிச் சுழன்று சென்றது. மரநிழல்கள் வரிசையாக ஒன்றை ஒன்று துரத்தி ஓடின.

காரை அணைத்துவிட்டு கிழவர் இறங்க கைகளில் நிறைய பொட்டலங்களுடன் ஒருவர் இறங்கி நின்றார். பின்னர் கிழவியும் கைகளில் பொட்டலங்களுடன் இறங்கி கதவைத்திறந்தாள். கிழவர் கையில் பெரிய இரு பைகளுடன் அவர்களுக்குப் பின்னால்சென்று வீட்டுக்குள் நுழைந்தார். வீட்டுக்குள் பேச்சொலிகளும் சிரிப்புகளும் கேட்க ஆரம்பித்தன

நான் கொஞ்சநேரம் தயங்கி அமர்ந்திருந்தேன். என்ன செய்வதென்று யோசித்தேன், ஆனால் அந்த யோசனை பலவகையில் சிதறிச்சிதறித்தான் சென்றது. பின்பு எதையுமே முடிவுசெய்யாமல் சட்டென்று எழுந்து பாண்ட் சட்டை போட்டு கையில் செல்போனையும் எடுத்துக்கொண்டு தோட்டம் வழியாகச் சென்றேன். தோட்டத்திற்குள் சரசரவென ஏதேதோ ஓடியது. தென்னைமட்டைகளில் முட்டிக்கொள்ளாமல் செல்ல செல்போன் வெளிச்சமே போதுமானதாக இருந்தது.

அந்த வீட்டு முற்றத்திற்குச் சென்று நின்றேன். திரும்பிவிடலாமா என்று உள்ளே ஓடிய எண்ணத்தை அழுத்தி மிதித்து மேலேறி வீட்டு வாசலில் படிகளில் ஏறினேன். வீட்டுச்சன்னல்களும் கதவுகளும் எல்லாமே திறந்து கிடந்தன. என்னுடைய நிழலசைவு என்னை ஒருகணம் திடுக்கிட வைத்தது. உள்ளே பல இடங்களில் தீபங்கள் எரித்தன. நெய்ப்பலகார வாசனை நிறைந்திருந்தது.

கூடத்தை எட்டிப்பார்த்தேன். பெரிய பழையபாணி கூடம். பழைய மரச்சாமான்கள். சுவரில் ஒரு பெரிய காளி மாதாவின் படம். கீழே ஒரு முக்கால் ஆள் உயரமான பித்தளைக்குத்துவிளக்கு ஏழுதிரிபோட்டு கொளுத்தப்பட்டிருந்தது. சுடர்கள் மலரிதழ்கள் போல அசையாமல் நின்றன.

நான் தயங்கி எப்படிக் கூப்பிடுவதென தெரியாமல் திரும்புவது போல ஓர் அசைவை உடலில் அடைந்தபோது அந்தக் கிழவி உள்ளிருந்து எட்டிப்பார்த்தாள்.

”வரூ” என்றாள். நான் ”இல்லை நான்…” என்றபோதுதான் நான் வேறு யாரோ என்று அவள் புரிந்துகொண்டாள் ”எந்தா வேண்டே?” ”நான்..வந்து…” என்று தடுமாறி ”எனக்கு பக்கத்துவீடுதான்…சும்மா…” என்றேன். உடனே யோசித்து ”உங்க கிட்ட அனாசின் சாரிடான் ஏதாவது இருக்குமா? ஒரே தலைவலி” என்றேன்

உள்ளிருந்து கிழவர் வந்து ”ஆரா அது கமலம்?” என்றார். என்னைப்பார்த்து புருவத்தைச் சுருக்கினார். அந்த அம்மையார் ”.. அயலத்தே ஆளாணு…தலவேதனைக்கு குளிக வேணமத்ரே” என்றாள்

அவர் என்னை ஒருகணம் கூர்ந்து பார்த்தபின் சிரித்து ”கம் இன்…” என்றார். ”கன் யூ ஸ்பீக் மலையாளம்?” நான் ”நோ…ஐயம் நியூ ஹியர்…” என்றேன் ”சென்னை?” ”..யா…” ”தமிழிலே பேசுங்கோ…நான் நல்லாவே தமிழு பேசுவேன்” என்றார் ”இவளும் தமிழு பேசுவாள். நான் நாகப்பட்டிணத்திலே எட்டு வருஷம் வேலை பார்த்திருக்கேன்..கம் இன்” நான் ”ஐயம் சரவணன்.. ஆடிட்டர்” என்றேன். ‘நைஸ்” என்றார் அவர்.

நான் உள்ளே போனபடி ”ஒரு மாதிரி தலைவலி…” என்றேன். அவர் சிரித்து, கையை ஒருமாதிரி வீசி ”ஓ கமான்…உனக்கு தலைவலியும் இல்லை ஒண்ணும் இல்லை. சும்மா இங்க வரணும்கிறதுக்காக சொல்றே” என்றார். ”நீ காலையிலே வந்து பாத்துட்டு போனதை நானும் கமலமும் உள்ளே இருந்து பாத்தோம்…” எனக்கு முதுகில் மெல்லிய சில்லிப்பு ஏற்பட்டது.

”உள்ளே இருந்தீங்களா?” என்றேன். ”கமான் டேக் யுவர் சீட்…” என்றார். உள்ளே ஆர்மோனியத்தில் யாரோ ரீங்காரமிட்டார்கள். தெரிந்தபாட்டுதான். ”பாம்புகளுக்கு மாளமுண்டு பறவகளுக்காகாசமுண்டு…” அவர் தலையை அசைத்து ”அது மஜீத். ஹி இஸ் எ குட் சிங்கர் ஆண்ட் மியுஸிஷ்யன்….நான் விஜயன் மேனோன். நேவியிலே அட்மிரலா இருந்தேன். ரிட்டயர் ஆகி பதினெட்டு வருஷம் ஆகுது…இது கமலம்…”

”ஹாய்” என்றேன். ”சாப்பிட்டாச்சா?” என்று கமலம் கேட்டாள். ”ஆமா…சப்பாத்தி, கறி இருந்திச்சு” ”அடாடா இங்கியே சாப்பிட்டிருக்கலாமே… கமலம் இஸ் எ வண்டர்புல் குக்” என்றார் விஜயன் மேனோன். ”பரவாவில்லை”என்றேன் ”சரி, நாளைக்குச் சாப்பிட்டா போச்சு… ஸ்மோக்?” ”இல்லை” ”ஸாரி” என்றபடி அவர்

ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார். சிகரெட்டை தந்தத்தாலான ஒரு பைப்பில் பொருத்தி நாசூக்காக இழுத்தார்.

அசப்பில் பழைய மனேக்ஷாவை நினைவுறுத்தும்படி இருந்தார். அழகான ஸ்டைலான மனிதர். சீரான மூக்குக்குக் கீழெ கச்சிதமான வெண்மீசை கூர்மையாக முறுக்கப்பட்டிருந்தது. குட்டையான ராணுவ கிராப். உறுதியான உடல். கன்னச்சதைகளில் அசைவில்லாமல் நாசுக்காக புகையை இழுத்து சாம்பல்கிண்ணத்தில் தட்டியபடி என்னை கூர்ந்து பார்த்தார். கண்களில் எப்போதுமே மென்மையான ஒரு சிரிப்பு இருந்தது.

”ஸோ யு ஆர் வண்டரிங்...” என்றார். நான் திடுக்கிட்டேன். ”நீ என்ன நெனைக்கிறாய்னு சொல்றேன்...பகலிலே வீட்டை பூட்டிப்போட்டிருக்கு. ராத்திரி தெறந்து வெளக்கு வச்சு பேசிட்டிருக்காங்க...இல்லியா? யூ ஆர் ரைட். ஸ்டிரேஞ்ச், பட் நாங்க இப்டித்தான். பன்னிரண்டு வருஷமா நாங்க பகலையே பாத்ததில்லை...”

ஒரு நிமிடம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை ”அப்டியா?” என்றேன். அவர் கண்களைப் பார்த்ததும்தான் சட்டென்று உறைத்தது. வாயைப்பிளந்தேன். ”எஸ்”என்று அவர் சிரித்தார். ”நாங்க வெயில் வர்ரதுக்குள்ளே தூங்கிடுவோம். பகல் முழுக்க தூங்குவோம். சாயங்காலம் வெயில் போனபிறகு எந்திரிச்சு கடைக்கோ கோயிலுக்கோ போயிட்டு வருவோம். அப்றம் விடியறது வரைக்கும் முழிச்சிட்டு இருப்போம். எங்க வாழ்க்கை முழுக்க முழுக்க ராத்திரியிலேதான்... வி ஆர் அதர் பீப்பிள்...”

நான் என்னுவதைப் புரிந்துகொண்டவராக ”நோ..எங்களுக்கு எந்த நோயும் கிடையாது. நாங்க இப்டி இருக்கணும்னு நெனைச்சு இப்டி இருந்திட்டிருக்கோம். வி லைக் டு பி....என்ன சொல்றது? நாக்டிரனல்னா தமிழிலே என்ன?” ”இரவுலாவி” என்றேன். ”குட்..தமிழிலே எல்லாத்துக்கும் வார்த்தை இருக்கு கமலம்...ஸீ..மலையாளத்திலே நமக்கு எதுக்கும் நல்ல வார்த்தை கிடையாது. ஒண்ணு அப்டியே இங்கிலிஷ். இல்லாட்டி அசிங்கமா சம்ஸ்கிருதம். என்ன அது, நிஸாசஞ்சாரி. மை ·பூட்”

”பகலிலே வெளியே வரவே மாட்டீங்களா?” என்றேன். அவர் சிரித்துக்கொண்டு ”சொன்னேனே? சூரியவெளிச்சத்தைப் பாத்து பன்னிரண்டுவருஷமும் ஏழுமாசமும் ஆகுது...” நான் நம்பமுடியாமல் மனதை பல தருணங்களை நோக்கி கொண்டுசென்றேன். ”இல்ல, பகலிலே எங்கியாம் போகணும்னா?” ”போறதில்லை...வி ஹெவ் ·ப்ரண்ட்ஸ்..” நான் அவரையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்

கமலா நல்ல ·பில்டர் காபி கொண்டுவந்தார். ”·பில்டர் கா·பி” என்றார் சிரித்தபடி ”பிகாஸ் யு ஆர் எ டமிலியன்” ”தாங்க்ஸ்” என்றேன். காபி மிகக்கச்சிதமாக இருந்தது. ”பர்·பக்ட்” என்றேன். ”தேங்க்யூ” என்றார். சிறுவயதில் கமலா பார்ப்பவர் மூச்சை நிறுத்தும் பேரழகியாக இருந்திருக்க வேண்டும்.

”யூ ஆர் ரைட்” என்றார் மேனன் ”சின்ன வயசிலே இவ ரோட்டிலே இறங்கினா டிரா·பிக் ஜாம் ஆயிடும்..ஷி வாஸ் சச் எ கிரேட் பியூட்டி” நான் அவர் என் மனதை வாசித்த விதத்தை எண்ணி வியக்க, கமலம் ”ஓ…டோண்ட்” என்று அவரை மெல்ல அடித்தார்

”ஏன் பகலிலே போறதில்லை?” என்றேன். ”ஏன்னா ராத்திரியிலேதான் மனுஷன் வாழணும்…” என்றார் மேனோன் ”மனுஷன் அதுக்காகத்தான் படைக்கப்பட்டிருக்கான்…நீ காட்டிலே பாத்திருக்கியா? எல்லா மிருகங்களும் ராத்திரியிலேதான் வெளியே வரும். ஆனை சிம்ஹம் மான் பன்னி எலி எல்லாமே… பகலிலே வரக்கூடிய பெரிய பிராணின்னு எதுவுமே கிடையாது… காட்டுக்குள்ளே போயிருக்கியா?”

”இல்லை” என்றேன். வசீகரமான பேச்சு. பேசுபவர் பேச்சில் ஆழ்ந்த உறுதியுடன் அதை முழுக்க முழுக்க நம்பி பேசினால் நம்மால் அச்சொற்களில் இருந்து கவனத்தை விலக்க முடிவதில்லை. ”காடு முழுக்க பகலிலே தூங்கிட்டிருக்கும் தெரியுமா, சூரியன் அணைஞ்சதும்தான் காடு கண்முழிக்கும். நூத்துக்கணக்கான மிருகங்கள், ஆயிரக்கணக்கான சின்ன ஜீவராசிகள் கிளம்பிரும். இரைதேடுறது, வேட்டையாடுறது, இணைசேருறது என்னாலே ராத்திரியிலேதான்… .ஆதிமனுஷன் காட்டிலே இயல்பா இருந்தப்ப கண்டிப்பா ராத்திரியிலே வேட்டைக்குப் போகிற ஜீவராசியாத்தான் இருந்திருப்பான். பகலிலே அவன் வாழ ஆரம்பிச்சது நாகரீகத்தை உண்டுபண்ணிக்கிட்டபிறகுதான்”

எனக்கு அந்தப்பேச்சு வினோதமாக இருந்தது. அவர் என் கண்கள் வழியாக நான் எண்ணுவதை துல்லியமாக பின் தொடர்ந்தார் ”நம்ப முடியாதபடி இருக்கு இல்லையா? அப்டிதான் இருக்கும். ஏன்னா நாம இந்த நாகரீகத்தை உண்டுபண்ணி எப்டியும் முப்பதாயிரம் வருஷம் ஆகியிருக்கும். எத்தனை ஜெனரேஷன். நம்ம உடம்பு மனசு சிந்தனை எல்லாமே அதுக்கேத்தமாதிரி அடாப்ட் ஆகியிருக்கு. இன்னொரு மாதிரி சிந்திக்கவே நம்மாலே முடியறதில்லை… ஆனால் சிந்திச்சுப்பார்த்தா இது உண்மைன்னு தெரியும்”

நான் தலையசைத்தேன். ”இப்டி யோசிச்சுப்பார், இந்த நாகரீகம் பண்பாடு இன்றைக்குள்ள வாழ்க்கை எல்லாத்தையும் ஒரு நகரம்னு வைச்சுக்கோ. நகரத்தை சுத்தி இருக்கிற காடு அதோட மறுபக்கம். நகரத்துக்கு பகலிலே வாழ்க்கை, காட்டுக்கு ராத்திரியிலே வாழ்க்கை. இது வெளுப்புன்னா அது கறுப்பு.

இதோட மறுபக்கம் அது...” அவர் இன்னொரு சிகரெட் பற்றவைத்தார். ”உனக்கு இங்க உள்ள இயந்திரங்கள், கார்கள், அழுக்கு ,புகை, சத்தம், தூசு, நெரிசல் ,குப்பைக்கூளம் ,நாத்தம் எல்லாம் வேணும்னா நீ பகலை தேர்ந்தெடுக்கணும். அதுக்கெல்லாம் மறுபக்கம் வேணும்னா ராத்திரியத்தான் தேர்ந்தெடுக்கணும். நானும் இவளும் ராத்திரியே போதும்னு முடிவுகட்டினோம்...”

”ஆண்ட் தாட் இஸ் வை வி ஆர் எக்ஸ்டிரீம்லி ஹாப்பி” என்று அவர் சொன்னார். புகையை ஆழ இழுத்து மெல்ல விட்டபடி ”மத்த எல்லாத்தையும் விடு. ராத்திரி எவ்வளவு அழகா இருக்கு பார். இந்த தீபங்களோட தங்க நிறமான வெளிச்சம். கறுப்புப்பட்டிலே தங்க சரிகையாலே ஓவியங்களா செஞ்சு வச்சதுமாதிரி இருக்கு எல்லாமே... என்ன ஒரு அழகு.. ராத்திரிக்குக் கண் பழகிட்டா நீ புத்தம் புதிசான ஒரு உலகத்தைப் பாக்க ஆரம்பிச்சிருவே. அற்புதமான உலகம், மகத்தான உலகம்...”

நிறங்களற்றது என நான் நினைத்ததுமே அவர் சொன்னார் ”நிறங்கள் உண்டு...ஆனா அதெல்லாம் நீ பகல்வெளிச்சத்திலே பார்க்கிற ஆபாசமான நெறங்கள் இல்லை. மென்மையான அடக்கமான அழகுள்ள நிறங்கள். இந்த விளக்கைப்பார்...”என்று குத்துவிளக்கைக் காட்டினார். ”என்ன ஒரு நிறம் இல்லியா? வெண்கலம் அற்புதமான உலோகம். ஒரு பதினெட்டுவயசு அழகியோட தொடை மாதிரி பளபளப்பா...மெருகோட”

”விஜய்!” என்றார் கமலம், முகம் சிவக்க. அவர் சிரித்தபடி ”ஓகே ஓகே...ஸீ இதை காலைவெளிச்சத்திலே பார்த்தால் எப்டி இருக்கும் தெரியுமா? வெளிறி கோடும் கறையுமா....அருவருப்பால இன்னொரு தடவை இதை நீ பாக்கமாட்டே...என் வாழ்க்கையிலே எப்பவுமே நான் நினைச்சுக்கிடறது இதுதான், ஐம்பத்தாறு வருஷம் நான் வாழ்க்கையை மிஸ் பண்ணிட்டேன். அசிங்கமான ஆபாசமான ஒரு உலகத்திலே வாழ்ந்திட்டேன்...”அவர் உடலை உலுக்கி தலையை அசைத்தார்.

”எப்டி ஆரம்பிச்சீங்க?”என்றேன். ” அது ஒரு கதை...ஒரு தடவை பரம்பிக்குளம் காட்டுக்குள்ளே மரத்துமேலே கட்டின ஒரு பரணிலே ராத்திரி தங்கியிருந்தோம் நானும் இவளும். யானைக்கூட்டம் பக்கத்து குட்டையிலே தண்ணிகுடிக்க வரும்னு சொன்னாங்க. அதுக்காக ராத்திரி முழுக்க கண்விழிச்சு பாத்திட்டிருந்தோம். அது சித்திரைமாசம். வானத்திலே அருமையான நிலா. அதைச்சுத்தி கண்ணாடிமேகங்கள். நிலாவெளிச்சத்திலே காடே தகதகன்னு இருந்தது. எப்டிச் சொல்றது...ஸீ, ஒரு பெரிய வெள்ளை மஸ்லீன் திரையிலே நிழல்களை ஆடவிட்டமாதிரி... இல்லை இருட்டுலே ஒரு ப்ளுஜாகர் வைரக்கல்லிலே கண்ணை வைச்சு உள்ளே பார்த்தது மாதிரி...பார்த்திருக்கியா?”

”இல்லை” என்றேன். ”அமேஸிங்…அப்டி ஒரு மிதமான ஜொலிப்பு… வைரம் ஒரு கல் மட்டுமில்லை. ஒரு வைரக்கல் ஆயிரம் அறை உள்ள ஒரு அடுக்குமாடி பங்களா மாதிரி. கண்ணாடிப்பங்களா. அதுக்குள்ளே அறைகள் தோறும் மென்மையா விளக்கு போட்டா எப்டி இருக்கும்…ஆனா காட்டுக்குள்ளே நிலா நுழையறது இன்னும் அற்புதம்… அப்ப நான் முதல்முறையா ஒரு மரநாயை பார்த்தேன். எங்க பங்களா முன்னாடி நின்ன மரத்திலே இருந்து இறங்கி வந்து என்னைப்பார்த்தது.. கண்ணு ரெண்டும் ரெண்டு சின்ன மரகதக்கல் மாதிரி பச்சையா ஜொலிச்சுது… நான் அப்டியே பேச்சிழந்து போயிட்டேன். என்ன ஒரு உயிர்… அது மேலேறிப்போச்சு. மரக்கிளை நுனியிலே போய் உட்கார்ந்தப்ப அதோட உடலிலே ஒவ்வொரு முடியும் வெள்ளிசரிகை மாதிரி ஜொலிக்க ஆரம்பிச்சுது….மைகாட்! மைகாட்! பெட்டென்னு அது தாவி நிலாவெளிச்சத்திலே ஒரு க்ஷணம் அப்டியே நீந்தி பக்கத்து மரத்துக் கிளையிலே போய் உக்காந்தது. எனக்கு உடம்பு தூக்கித்தூக்கி போட்டுது. அது விட்டுட்டு போன கிளையாகவும் அது போய் உக்காந்த கிளையாகவும் என் மனசு ஆடிட்டிருந்தது…நான் அப்டியே மயக்கம்போட்டுட்டேன்…”

அவர் முகம் முழுக்க அந்தக் கனவைக் கண்டேன். கமலம் அந்தக் கனவை பகிர்ந்துகொள்பவள்போல அவர் தோளை மெல்லத் தொண்டிருதாள். ” அஞ்சு நிமிஷம் கழிச்சு முழிச்சுகிட்டு அழுதிட்டே இருந்தேன். இவளும் அழுறாள்… கண்விழிக்க முடியாத ஒரு கனவு மாதிரி அந்த ராத்திரி போய்ட்டே இருந்தது. எவ்ளவு ஜீவராசிகள். ஆந்தைகள் பெருச்சாளிகள் காட்டுபன்னிகள் ஒரு காட்டுபூனை…அப்றம் யானை… யானையோட இருட்டு… இருட்டு யானையாகி வந்து நம்ம முன்னாடி நின்னு காதும்தலையும் ஆட்டிட்டு திருப்பி இருட்டா ஆகிற பயங்கரமான அழகு.. கடைசியா அதிகாலையிலே ஒரு சிறுத்தை… கொன்னைப் பூக்குவியலிலே செஞ்ச உடம்பு. அது அப்டி, மென்மையா, கைக்குழந்தை மாதிரி, காலெடுத்து வைச்சு வந்தது. கடவுள் பக்தன் மனசுக்குள்ளே அப்டித்தான் வருவார்னு நினைக்கிறேன்… அது குட்டையிலே தண்ணீர் குடிச்சு எழுந்து திரும்பிப்பார்க்கிறப்ப அதன் மீசைமுடிகளிலே தண்ணித்துளி நின்று ஜொலிச்சு நடுங்கிச்சு….தட் வாஸ் எ பிளஸ்ட் நைட்… எ ஹெவென்லி நைட்…”

பெருமூச்சுடன் மெல்ல உடலை இலகுவாக்கி பின்னால் சாய்ந்து காலை நீட்டிக்கொண்டார். ”திரும்புறப்ப நான் எங்க கூட இருந்த கரும்பன்ங்கிற ஆதிவாசிகிட்டே கேட்டேன், பின்னிரவிலே வெளிச்சம் ஜாஸ்தியா ஆகுதான்னு…’இல்லை சாமி, காட்டுக்குள்ள பாக்கப்பாக்க நம்ம கண்ணோட வெளிச்சம் ஜாஸ்தியா ஆகும்’னு சொன்னான். என் இதயத்திலே ஒரு வாளை பாய்ச்சினது மாதிரி இருந்தது அது. அப்டீன்னா என் கண்ணுக்குள்ள இருட்டா இருந்தது? பகலிலே நம்ம கண்கள் முழுக்குருடாகவா இருக்கு? திரும்பி வர்ர

வழி முழுக்க அதைப்பத்தியே நெனைச்சிட்டிருந்தேன். கண்ணுக்குள்ளே இருக்கு வெளிச்சம். வெளியே வெளிச்சமிருக்குன்னு நினைக்கிறது மாதிரி முட்டாள்தனம் ஒண்ணுமே இல்லை. டு யூ நோ, இந்த அத்தனை விளக்கையும் அணைச்சாலும் எங்களுக்கு துல்லியமா கண் தெரியும்....ஒரு அழகுக்காகத்தான் இதை வச்சிருக்கோம். சாதாரணமா நாங்க ரெண்டுபேரும் மட்டும் இருந்தா விளக்கே இல்லாமல் இருப்போம்... இவ சமையல் செய்வா. நான் பியானோ வாசிப்பேன்..”

”அப்றம்?” என்றேன். ”அந்த ராத்திரிக்குப்பின்னாடி எங்களுக்கு ராத்திரி மேலே பெரிய மோகம் வந்திட்டுது. தினமும் ராத்திரி எந்திர்ச்சு மொட்டை மாடியிலே போய் உக்காந்திருப்போம். அப்றம் ராத்திரிகளிலே வெளியே வாக்கிங் போக ஆரம்பிச்சோம். கொஞ்சம் கொஞ்சமா ராத்திரிக்கு கண்பழகிப்போய் பகலிலே எதையுமே பாக்க முடியல்லை. ஒருநாள் அதிகாலையிலே நான் இவளை எழுப்பி சொன்னேன். எதுக்காக இந்த அசிங்கமான பகலிலே நாம் வாழணும், நமக்கு அழகான ராத்திரிகள் இருக்கேன்னு சொன்னேன். நல்லா ஞாபகமிருக்கு அது ஒரு மே மாசம் –”

”மே எட்டு, திங்ககிழமை..”என்றார் கமலா. ”...எஸ்...அன்னைக்கு முடிவெடுத்தோம்....அதுக்குப்பிறகு இதோ இப்பவரை இப்டியேதான் இருக்கோம்”

நான் மெல்ல ”அதனாலே உடம்புக்கு...” என்றேன் ”ஒண்ணுமே ஆகலை. சொல்லப்போனா எங்களுக்கு பலவிதமான பிரச்சினைகள் இருந்திச்சு. எனக்கு பிரஷர் இருந்தது. இவளுக்கு ஹைப்பர் டிப்ரஷன். ஒருநாளைக்கு நான் எட்டு மாத்திரை சாப்பிடணு. இவ ஆறு... இப்ப எதுவுமே இல்லை.வீ ஆர் பர்·பக்ட்லி ஹேப்பி...இப்ப எங்க வாழ்க்கையிலே அழகுக்கும் சந்தோஷத்துக்கும் மட்டும்தான் இடம்..”

நான் ”வைட்டமின் டி..” என்றேன். ”ஓ கமான்...புல்ஷிட். மனுஷனுக்கு ரொம்பக் கொஞ்சம் வைட்டமின் டி போரும்... அதிகாலையிலே உள்ள வெளிச்சமே அதைக் குடுத்திடும். வெயிலிலே சுத்தணும்ணு இல்லை... ” என்றார் மேனோன்.

உள்ளிருந்து குள்ளமான ஒருவர் வந்தார், ”சேச்சி சாய உண்டோ?” என்றார். ”இரிக்கெடா” என்றபடி கமலா உள்ளே போனார். அவர் விளக்கருகே வந்தபோது பார்த்தேன். ஒருகண் சிவந்து ஒரு வடு போல இருந்தது. ”இது மஜீத்.” என்றார் மேனோன். ”டெய்லர். ஒரு ஆக்ஸிடெண்டிலே கண்ணிலே அடிபட்டிட்டுது.. வெளிச்சத்தை பாக்க முடியாது. வீட்டுக்குள்ளேயே நாலுவருஷம் இருந்தான். நான் கொடுத்த விளம்பரத்தைப்பார்த்துட்டு லெட்டர் போட்டான்.” ”விளம்பரமா?” என்றேன். ”ஆமா, நாங்க இப்ப ஒரு கம்யூனிட்டி.. எண்பத்திமூணுபேர்

இருக்கோம்...” ஆச்சரியமாக மஜீதை பார்த்தேன். அவர் மெல்ல புன்னகை செய்தார்.

”இவரும் பகலிலே போகமாட்டாரா?” மஜீத் சிரித்தபடி ”பகலு கண்டு பத்து வர்ஷம் கழிஞ்ஞு” என்றார். நான் ஆச்சரியமாக பார்த்தேன். ”என்னுடெ ஜீவிதத்தில் ஞான் சந்தோஷமாய் இரிக்குந்நது ஈ பத்து வர்ஷமாயிட்டாணு” என்றார் மஜீத்.

மேனோன் ”மஜீத் நல்லா தைப்பான். அவுல் டெய்லர்ஸ்னு ஒரு கடை நடத்துறான். வசதியா இருக்கான்” நான் அவரைப்பார்க்க மேனோன் ”இவனை ஊரிலே ஆந்தைன்னு சொல்ல ஆரம்பிச்சங்க. நான் சொன்னேன், டேய் மக்கு மாப்புளே ஆந்தைன்னா அதிலே என்ன கேவலம்? அது எவ்ளவு வீரமான பறவை. என்ன ஒரு கம்பீரமான பறவை...நீ ஆந்தைதான்..அந்தப்பேரிலேயே கடையை வைன்னேன்..வீட்டிலேயே போர்டை மாட்டி உக்காந்தான். ஒருநாளுக்கு நாலு பாண்ட் தைப்பான்...மத்தகடையிலே இருநூறு ருபா கூலின்னா இவன் கடையிலே முந்நூறு...”

நான் மஜீதிடம் ”ஏன்” என்றேன். ”நம்முடே கைக்கணக்கு மற்றவன்மாருக்கு வருகில்ல சாரே”என்றார் மஜீத். ”தினமும் கூடுவீங்களா?” என்றேன். ”அப்டி ஒரு கணக்கு இல்லை. மாறி மாறி சந்திச்சுக்குவோம்....எங்களுக்கும் ஒரு சமூகம் வேணுமே...பேசிக்கிடறதுக்கு சிரிக்கிறதுக்கு விஷயங்கள் இருக்கே...”

நான் மஜீதிடம் ”பாட்டு படிச்சீங்களா?” என்றேன். மஜீத் வெட்கத்தில் முகம் சிவக்க ”படிச்சிட்டில்ல...”என்றார். ”மஜீத் கோழிக்கோடு அப்துல்காதருடைய சிஷ்யன்..கேட்டு படிச்ச சிஷ்யன்...நல்லா பாடுவான்..பாடு மஜீதே”

கமலம் டீ கொண்டுவந்து கொடுத்தார். மஜீத் அதை குடித்துவிட்டு போய் ஆர்மோனியத்தை எடுத்துவந்தார். அதை முன்னால் வைத்து குனிந்து கட்டைகளைப் பார்த்துக்கொண்டு கொஞ்சநேரம் பேசாமலிருந்தார். கைகள் கட்டைகளில் ஓட ஆர்மோனியம் இனிமையாக முனகிக்கொண்டது. பின்னர் அது ரீங்கரித்தது. மெல்ல கனத்த குரலில் ”ஆஆஆ” என்று ஓர் ஆலாபனையை ஆரம்பித்தார். கஜல் பாடல் போலிருந்தது. கூடவே ஆர்மோனியம் சென்றது. இரு பட்டாம்பூச்சிகள் பறப்பதுபோல ஆர்மோனியமும் குரலும் முத்தமிட்டு முத்தமிட்டு படபடத்தன. ”ரசூலே நீ என்னை அறியும்....என் ஹ்ருதயத்தின் நோவறியும்...”

இரவு சங்கீதத்துக்கு இத்தனை அழுத்தத்தைக்கூட்டும் என நான் அறிந்திருக்கவேயில்லை. இந்த அமைதியில், இந்த இளங்குளிரில், இந்த கண் குளிரும் செவ்வொளியில், கேட்கும் எந்த ஒலியும் சங்கீதமாகும்போலும். மனம்

இரவில் நெகிழ்ந்திருக்கிறது. அன்றாட வாழ்க்கையின் அத்தனை சிக்கல்களையும் வெற்றிகளையும் தோல்விகளையும் சதிகளையும் துரோகங்களையும் உதறிவிட்டு வேறெங்கோ வந்து அமர்ந்திருக்கிறது. உடல் இனிய களைப்பால் இறுக்கத்தை இழக்க பிரக்ஞை மெல்லிய வீணைநரம்பாக ஆகிவிட்டிருக்கிறது. காற்று தொட்டாலே அதிர ஆரம்பிக்கிறது அது. என் உடல் மெலிதாக நடுங்கிக்கொண்டே இருந்தது. மனம் உருகி உருகி துயரமே இல்லாத தூய சோகம் என்னை ஆட்கொண்டு அழக்கூடாது அழக்கூடாது என என் போதம் தடுக்கத்தடுக்க நான் கண்ணீர் விட ஆரம்பித்தேன்.

அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. மஜீத் பாடி நிறுத்திய இடைவெளியை ஆர்மோனியம் நிரப்பி ஊர்ந்து வேறு மெட்டுக்குச் செல்ல மீண்டும் பாடல் ‘மறந்து போயோ மைமுனே, ஞான் தந்நொரா செம்பனிநீர் மொட்டினே?” . நான் தந்த ரோஜாவை மறாந்துவிட்டாயா மைமுனா? அந்த சிவந்த ரோஜாமொட்டு என்னுடைய இதயம். அதில் காதலின் தேனையல்லவா நிரப்பி உனக்கு தந்தேன். உன்னுடைய கைகளை முகர்ந்துபார், அந்த ரோஜாவின் நறுமணம் வீசும். மைமுனா அது என் குருதியின் வாசனை அல்லவா?.

அணைக்கட்டுகளின் சுவர்களில் கையை வைத்தால் அப்பால் தேங்கியிருக்கும் பிரம்மாண்டமான நீர்வெளியின் எடையை கைகளில் உணர முடியும் என்று தோன்றும். இரவின் இருள் ஒரு பெரும் சுவராக அதற்கப்பால் உள்ள பிரம்மாண்டம் ஒன்றின் அதிர்வு ததும்பியதாக தோன்றியது.

## இரவு 4



**தனிமையை**

**இரவால் போர்த்திக்கொள்ள முடியும்.**

**தனிமையின் ஒவ்வொரு சொல்லுடனும்**

**தாயின் கனிவுடன் உரையாட**

**இருளால் முடியும்.**

மேனன் பெருமூச்சுடன் ”சங்கீதம் ராத்திரிக்கு மட்டுமே சொந்தமான ஒரு கலை…பகலிலே பாட்டு கேக்கிற முட்டாள் பாட்டே கேட்டதில்லை” என்றார். ”கமலம்…எனக்கு ஒரு இன்ச் பிராந்தி..” என்றபின் என்னிடம் ”நீ?” என்று

கேட்டார். நான் ”நோ” என்றேன். ”டோண்ட் பி ஷை..” ”நோ…நான் குடிக்கிறதில்லை” ”தட் இஸ் கூட்” என்றார் அவர்

வெண்ணிற ஒளியாலானது போன்ற மிக மெல்லிய கண்ணாடிக்கோப்பையில் தவிட்டுநிறப் படிகம்போல பிராந்தி வந்தது. அவர் அதை கையில் வைத்து திருப்பித்திருப்பிப் பார்த்தார் ”கண்ணாடிக்கு திரவங்கள்கிட்ட ஒரு உறவிருக்கு பார்த்தியா? ஒரு வகையான ரொமான்ஸ், ஐ மீன் காதல். கண்ணாடி திரவங்களை தழுவிக்கொள்கிற மாதிரி எதுவுமே செய்றதில்லை. கண்ணாடியோட அணைப்புக்குள்ளே திரவங்கள் கொள்கிற வசதியையும் அழகையும் வேற எப்பவுமே அதுகளிலே நாம பாக்க முடியாது… அதோட கண்ணாடி அதன் பூரண அழகோட இருக்கிறது ராத்திரியிலேதான்…பகல் வெளிச்சம் கண்ணாடியை கூசி சுருங்கி இல்லாம ஆக்கிடறது”

கோப்பையை திருப்பித்திருப்பி பார்த்தார் ”நான் இந்தகோப்பையை பெல்ஜியத்திலே இருந்து இம்போர்ட் பண்ணினேன்…இதைக் கழுவறதுக்கு தனி பஞ்சும் லிக்விடும் அவனே குடுப்பான்…நைஸ்!” ஆனால் குடிக்கவில்லை. நான் கோப்பையையே பார்த்தேன். அது என்னை மனவசியம் செய்வதுபோல் இருந்தது. திரவங்களும் படிகங்களும் ஒளிகொள்ளும்போது நம் கண்களை ஈர்த்து நினைவுகளின் நிறம்படரச்செய்துவிடுகின்றன.

”ஒரு இண்டியூஷன்..பிகே வருவார்னு நினைக்கிறேன்…” நான் புன்னகையுடன் ”அவர்தான் கம்பெனியா?” என்றேன். ”ஆமா…ஆனா மொத்தம் நாப்பத்திரண்டுபேர் குடிக்கிறவங்க இருக்காங்க… ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு டேஸ்ட். பாதிபேர் பீரோட சரி…பிராந்திகுடிக்கிறவங்க நானும் பிகெயும் மட்டும்தான்…”

”நீங்க நல்லா தமிழ் பேசறீங்க” என்றேன். ”மை காட்…நான் சொல்லலியா? தமிழிலே பேசறதுக்கு ஒரு ஸ்டார்ட்டிங் வேணும். ஆரம்பிச்சா உன்னைவிட துல்லியமா பேசுவேன். கன்னடமும் பேசுவேன். அப்றம் ஹிந்தி…பெங்காலி… ” என்றார் ” அதோட நான் நல்லாவே தமிழ் வாசிப்பேன். ஆக்சுவலி ஐ மெட் டி.ஜானகிராமன் ட்வைஸ்….ஒரு தடவை அவர்கூட நான் ரயிலிலே சேந்து டிராவல் பண்ணியிருக்கேன்…” உரக்கச்சிரித்தபடி ”ஹி வாஸ் லைக் எ ஷை பிராமின் லேடி…” என்றார்

நான் புன்னகை செய்தேன். அவர் அந்தக்கோப்பையை இருமுறை முகர்ந்தபின் மஜீதிடம் ”பாடுடா மஜீதே” என்றார். ”மதி..” என்ற மஜீத் எழுந்து சென்று ஒரு அலங்காரப்பெட்டியை திறந்தார். புராதனமான ரிக்கார்ட் பிளேயர் அது. ஆனால் அதை நவீன ஸ்பீக்கர்களுடன் இணைத்திருந்தார்கள். இருட்டு அங்கே கொஞ்சம் பளபளப்பாக ஆனதுபோல கிரா·பைட்டாலும் அரக்காலுமான அந்தக்கருவி தெரிந்தது.

மஜீத் ஒரு கனமான பழைய எல்பி ரிகார்டை எடுத்து அதை வாசித்தார். அவர் அந்த எல்பி ரெகார்டை எடுத்தபோது என் மனம் துணுக்குற்றது. அவர் ஒரு வட்டமான இருட்டுத்துண்டை கையில் எடுப்பது போலவே இருந்தது. இருளுக்குள் அதன் பளபளப்பு நெளிந்து மறைந்தது.கரும்பச்சை வெல்வெட் மீது மெல்ல வைத்தபோது என் மனத்தின் மெல்லிய பரப்பொன்றில் அதை வைத்தது போலிருந்தது. அதன் மீது ஊசி தொட்டபோது என் உடல் சிலிர்த்தது. மெல்லிய ரீங்காரம். பின்பு கோழிக்கோடு அப்துல்காதரின் கனத்த குரல் எழுந்தது. 'ரம்ஸானிலே சந்திரியகல்லே? ரா¡க்கிளியுடே மந்த்ரணமல்லே? ஆமினா ஆமினா ஆமினா…"

இசையின் வருடலுக்குள் இசையின் ஒரு பகுதிபோல தூரத்தில் ஒரு பாத்திரம் நகருமளவுக்கு ஒலியாக ஒரு கார் வந்து திரும்புவது கேட்டது. வெளியே மென்மையான காலடிகள். கதவு ஓசையில்லாமல் காற்றால் திறக்கப்படுவதுபோல திறக்க வாசலில் பெரிய தொந்தியுடன் உற்சாகமான அறுபதுவயதுக்காரர் சிரித்தபடி நின்றார். மேனன் தலையை லேசாக அசைத்தார். அவர் உள்ளே வந்தபோது நான் எழப்போக கையை லேசாக அசைத்தபின் அவர் உள்ளே வந்து சோபாவில் திமிங்கலம் நீரில் மூழ்குவதுபோல மென்மையாக அமர்ந்தார்.

கதவருகே ஒரு நிற அசைவு. நான் திரும்பி பார்த்தக் கணத்தில் அங்கே நின்றிருந்த பெண் ஒரு காலை மெல்லத்தூக்கி அதிலிருந்த செருப்பின் வாரை அவிழ்த்துக்கொண்டிருந்தாள். லேசாக முன்னால் குனிந்து சரிந்து இடதுகையால் வலது கால் செருப்பை அவிழ்க்கும் கோணத்தில் நான் அவளுடைய முன் தலையையும் கன்னங்களையும், கழுத்தையும், தோள்களையும், ஜாக்கெட்டுக்கு மேல் திறந்த மேல்மார்பையும் இரு கைகளையும் மட்டும்தான் கண்டேன்.

அறையின் தீப ஒளி காற்றில் மெல்ல அசைந்தது .அவளுடைய உடல் கருமையில் செவ்வண்ணத்தால் வரையப்பட்ட ரெம்ப்ராண்ட் ஓவியம் போலிருந்தது. அபாரமான வெண்ணிறச் சருமம் கொண்டவளாக இருக்கவேண்டும். அதில் செந்நிற ஒளி பட்டு அவள் கன்னங்களும் நீண்ட கழுத்தும் திறந்திருந்த தோள்குழிகளும் படிகம் போல மின்னின. கைகளின் அசைவில் இரு மார்புகளும் சற்றே அழுந்தி உருவான சிறிய பிளவு ஒருகணம் ததும்பி மறைந்தது.

அவள் அன்னியனைக் கண்டதும் தன் புடவைவையை சரிசெய்தபடி உள்ளே வந்தாள். நான் என்னை மறந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். எங்கே இருக்கிறோம் என்ன செய்கிறோம் என்ற பிரக்ஞையை முழுமையாகவே இழந்துவிட்டிருந்தேன். அவள் தலைமயிரை லேசாக ஒதுக்கியபடி

பார்க்கப்படும்போது பெண்களுக்கு உருவாகும் பெருமையும், சலிப்பும், மகிழ்ச்சியும் கலந்த அக்கறையின்மையைக் காட்டியபடி என்னை நோக்கி கண்களை திருப்பாமல் வந்து சோ·பாவில் அமர்ந்தாள். ஆனால் அவள் கண் அனிச்சையாக என்னைவந்து அரைக்கணம் தொட்டுச்சென்றதும் கைகள் முந்தானையை மேலே இழுத்து விட்டன.

அப்துல்காதர் மெல்ல முனகி அமைதியானதும் கருவியில் முள் ர்ர்ர் என்று உரசிச்சென்றது. அவரது குறிப்பறிந்து மஜீத் பிளேயரை அணைத்தார். கனமான அமைதி நிலவியது. பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்த மேனோன் ''ஐ வாஸ் எக்ஸ்பெட்டிங் யூ'' என்றார். குண்டுமனிதர் புன்னகைசெய்து என்னைப்பார்த்தார். ''திஸ் இஸ் சரவணன். ·ப்ரம் சென்னை...''

அவர் என்னை நோக்கி நட்பாக புன்னகைசெய்தார். ''நான் ஒரு சார்ட்டட் அக்கவுண்டண்ட். சரன் அக்கவுன்ட்ஸ் என்ற நிறுவனத்தை நடத்துகிறேன்...'' என்றேன் ஆங்கிலத்தில். மேனோன் ''இது குமாரன் நாயர். லாயராக இருந்தார். இப்போதும் பிராக்டீஸ் செய்கிறார். இது அவர் மகள் நீலிமா நாயர்'' என்றார். நீலிமா என்னை நோக்கி கச்சிதமாகப் புன்னகைசெய்தாள். சிவந்து கனிந்து மலர்ந்த உதடுகளுக்குள் இரு சிறு பற்கள் தோன்றி மறைந்தன. இரு கன்னங்களிலும் குழிகள் உருவாகி கரைந்தன. நீர்ப்பரப்பில் காற்று உருவாக்கும் சுழி போல. ஆனால் கண்கள் புன்னகை இல்லாமல் எச்சரிக்கையாக என் கண்களை ஊசிமுனையை ஊசிமுனை போல தீண்டிச்சென்றன.

மேனன் என்னிடம் ''நாயரும் நன்றாக தமிழ் பேசுவார்... அவரும் சென்னையில் இருந்திருக்கிறார்...'' என்றார். நான் ஆச்சரியத்துடன் ''மெட் ராஸிலேயா?'' என்றேன். ''ரொம்ப காலம் முன்னாடி..ஐ திங் ஆன் எயிட்டீஸ்...'' நாயர் மகளைச் சுட்டிக்காட்டி ''இவள் அங்கே பத்மாசேஷாத்ரியிலேதான் படிச்சாள்'' என்றார்

''அங்கே என்ன செஞ்சீங்க?'' நாயர் ''நான் அங்கேதான் லாயரா இருந்தேன். என்னோட ஏரியா கம்பெனி லா. தென் ஐ கேம் பேக்'' அவர் முகத்தில் சிறிய ஒரு உணர்வுமாற்றம் தெரிந்தது. மேனன் என்னிடம் ''அவருக்கு ஒரு சின்ன பிரச்சினை... அங்கே இருக்க முடியாம ஆச்சு. இங்கே வந்திட்டார். இப்ப லீகல் அட்வைஸ் மட்டும் பண்றார்...'' என்றார்.

நான் நீலிமாவை பார்த்தேன். அவள் தன் கையின் நகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். என் கண்கள் அவள் மீதிருப்பது அவளுக்கு தெரியும் என்று அவள் சருமத்தில் இருந்தே தெரிந்தது. என் கண்கள் அவள் சருமத்தில் எந்த இடத்தைப் பார்த்தனவொ அந்த இடத்தில் காயல்பரப்பில் காற்று பரவுவது போல மெல்லிய புல்லரிப்பு எழுவதை கண்டேன். அவள் கழுத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். மென்மை மென்மை மென்மை என்ற சொற்களாக

இருந்தது அது. அவள் கை ஒன்று அனிச்சையாகச் சென்று அந்தக்கழுதை வருடி இறங்கியது.

"எந்தா மஜீதே?" என்றார் நாயர். "ஓ..." என்று மஜீத் சிரித்தார். கமலா உள்ளிருந்து வந்து "டா மஜீதே.... நினக்கு உள்ளில் எடுத்து வச்சிட்டுண்டெடா" என்றார். மஜீத் உள்ளே சென்றார். "அப்போள் நமுக்கு துடங்ஙாம்" என்றார் மேனன். நாயர் எழுந்துசென்று ·ப்ரிட்ஜை திறந்து உள்ளிருந்து வண்ணமயமான புட்டியையும் ஒரு கோப்பையையும் எடுத்து வந்தார். டீபாயை இழுத்துப்போட்டு அதை வைத்தார். "என்னா கமலா தமிழிலே பேசுவோமா?" என்றார்.

கமலா சிரித்தார். "சோடா...கொண்டுவா தங்கமே" என்றார் நாயர். "ஒரு லார்ஜ்...அதுக்கு மேலே போனா நான் வீட்டிலே இருந்து பிடிச்சு இறக்கி விட்டிருவேன்" என்றபடி கமலா உள்ளே சென்றார். அவர் அந்த குப்பியை கைக்குழந்தை போல எடுத்து மெல்ல வருடி கொஞ்சினார். அதை உள்ளங்கையில் அடித்தபின் மூடியை திருகி திறந்து கார்க்கை பல்லால் கடித்து திறந்து மேஜைமேல் வைத்தார். புளித்த பழரச மணம் எழுந்தது.

"சரவணன் குடிக்குமா?" என்றார் நாயர். "நோ...ஹி இஸ் எ டீடோட்டலர்" என்று மேனன் பதில் சொன்னார். "தட் இஸ் ஸ்டிரேஞ்ச். ஹி இஸ் எ பிஸினஸ்மேன் யூ நோ" என்றபடி நாயர் பொன்னிறமான திரவத்தை கொஞ்சமாக கோப்பையில் ஊற்றினார். அதன் ஒளி டீபாயின்மீது ஒரு பொன்னிறச் சிதறலாக விழுந்து கிடந்தது. நாயர் கைகளை உரசிக்கொண்டு பின்னால் சாய்ந்து "மேன் திஸ் இஸ் லை·ப்" என்றார்.

நான் நீலிமாவைப் பார்த்து "நீங்க குடிப்பீங்களா?" என்றேன். அவள் நான் அவளிடம் பேசுவதையே எதிர்பார்த்திருக்காதவள்போல பதறி "ஓ..நோ...மை காட்!" என்றாள். சிரிப்புடன் முகம் சிவந்தது. நாயர் "லுக் மிஸ்டர் சரவணன் அவள் நல்லா பாடுவாள். வயலின் வாசிப்பாள்... அதுபோதும் அவளுக்கு..."என்றார்.

நீலிமா என்னைப்பார்த்து மென்மையாகப் புன்னகைசெய்து "சுமாரா" என்றாள். மேனன் "நோ...ஷி இஸ் ரியலி நைஸ்" என்றார். கமலா சோடாவுடனும் நீருடனும் வந்து "குமாரேட்டா... பறஞ்ஞுது ஓர்மையுண்டல்லோ?" என்றாள். "உண்டே" என்று நாயர் இருகைகளாலும் வாய்பொத்தி பவ்யம் காட்டியபின் கடகடவென சிரித்தார்.

கமலா என்னிடம் "தென் வை யூ ஆர் சிட்டிங் தேர்? கமான்..." என்றார். நீலிமாவிடம் "வாடீ" என்றபின் உள்ளே சென்றார். நான் மன்னிப்புத்தோரணையில் இருவரிடமும் புன்னகைசெய்தபின் கைகளைத் தூக்கி

சோம்பல்முறித்தபடி உள்ளே சென்றேன். எனக்கு கொஞ்சமாக தூக்கம் வர ஆரம்பித்திருந்தது. மணி பன்னிரண்டு தாண்டிவிட்டது.

உள்ளே எல்லா அறைகளிலும் நெய்தீபங்களோ மெழுகுவத்திகளோ எரிந்தன. நெய்விளக்குகளின் சுடரிலிருந்து புகை வருவதில்லை என்பதைக் கவனித்தேன். வீட்டின் பின்பக்கம் ஒரு மரப்படி இருந்தது. அதில் ஏறி மேலே சென்றால் மரத்தால் தரைத்தளம் போடப்பட்ட ஒரு பெரிய பால்கனி. அதில் வெண்ணிற பெயிண்ட் அடிக்கப்பட்ட சூரல் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

கமலா அமர்ந்துகொண்டார். நான் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டதும் என் எதிரே அமராமல் பக்கவாட்டில் நீலிமா அமர்ந்துகொண்டாள். அப்படித்தான் அவள் அமர்வாள் என நான் எதிர்பார்த்திருந்தேன். இப்போது அவளைப்பார்க்கவேண்டுமென்றால் நான் நன்றாக திரும்பவேண்டும்.

எனக்கு முன்னால் தூரத்தில் இருட்டில் ஒரு வெண்சுவர் சாம்பல்நிறமாகத் தெரிந்தது. அதன் மீது ஒரு சுடர் பரவிசென்றது. சில கணங்களுக்குப்பின்னால்தான் அது காயல் என்று உணர்ந்தேன். அதையே பார்த்துக்கொண்டிருந்தபோது கொஞ்ச நேரத்தில் அந்தப்படகை என்னால் பார்க்க முடிந்தது. பின் அந்தப்படகை உந்துபவனின் வெட்டுத்தோற்றம் தெரிந்தது.

”கண்ணு பழகல்லை?” என்றார் கமலா. ”ஆமாம்” என்றேன். ”கண்ணு பழகிட்டா எல்லாம் சரியாயிடும்…” ”உங்களுக்கு இப்ப காயல் நல்லா தெரியுதா?” என்றேன். ”எஸ், வெரி கிளியர்லி…”என்று தலையை அசைத்தார். ”விளக்கு இல்லாம நாலு போட் போயிட்டிருக்கு…” நான் ஆச்சரியத்துடன் ”எங்கே?” என்றேன். ”அதோ…அங்க…லுக் கேர்·புல்லி” அவரது விரல் சுட்டிய இடங்களையே பார்த்தேன். இருட்டுக்குள் அசைவு தெரிவது போலிருந்தது. அது பிரமை என்றும் பட்டது.

நீலிமா ”வானத்திலே இருந்து கண்ணை கீழே இறக்கி பார்த்தா தெரியாது… இந்தக்கரையில் இருந்து கண்ணை மேலே தூக்கி பாக்கணும்…” என்றாள். நான் திரும்பி அவளைப் பார்த்தேன். அவள்தானா பேசியது என்ற ஆச்சரியம் கொண்டவனாக. அவள் குரல் அழுத்தமான இனிமையுடன் இருந்தது — மிகப்பெரிய குடம் கொண்ட வீணையின் நாதம்போல. சட்டென்று நான் புன்னகை செய்துகொண்டேன் ”தேங்க்ஸ்” என்றேன்.

அவள் சொன்னதுபோல பார்த்தபோது உண்மையிலேயே ஒரு படகைக் கண்டேன், அதைக் கண்டபின் மேலும் மூன்று படகுகளையும் ஒன்றிலிருந்து இன்னொன்றாகச் சென்று பார்க்க முடிந்தது. ”ஏன் லைட் இல்லாம போறாங்க?”

என்றேன். ”கரிமீன் பிடிக்கிறாங்க…லைட் இருந்தா கரிமீன் மேலே வராது” என்றார் கமலா.

நான் நீலிமாவிடம் பேச விரும்பினேன். ஆனால் அதற்கு அவளை நோக்கித்திரும்ப வேண்டும். திரும்பிப்பார்த்துப் பேசுவது மிதமிஞ்சிய ஆர்வத்தைக் காட்டிவிடுமா என்ற ஐயம் ஏற்பட்டது. ஆனால் என் எண்ணம் என்னுள் வளர்ந்து வளர்ந்து என்னைதிரும்பச் செய்தது. அப்போது அவள் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நான் பதறி பார்வையை விலக்கினேன்.

என்ன இது? நான் பார்க்காத பெண்களா? நிலையாக ஒரு மனைவி என்பது பெரிய போர் என்று எண்ணியிருந்தேன். நாலைந்து நாட்களுக்குள் எனக்கு பெண்கள் சலிப்பேற்படுத்திவிடுகிறார்கள். என் வட்டத்துக்குள் உள்ள பெண்கள் அனைவருமே ஒரே வார்ப்பு. நான் என்ன கார் வைத்திருக்கிறேன், அடுத்து எந்த வெளிநாட்டுக்குச் செல்லப்போகிறேன், என்னுடைய ஷேர்கள் என்ன ஆயின என்பதற்கு அப்பால் அவர்களுக்கு அக்கறைகளே இல்லை.

நான் சட்டென்று நாற்காலியை நன்றாக திருப்பி போட்டு அவளை நோக்கி அமர்ந்துகொண்டு ”நீங்க என்ன பண்றீங்க?” என்றேன். ”நானா…ஐயம் ஜஸ்ட்..” என்று கையை விரித்து சிரித்தாள். நான் அவளை நோக்கி திரும்பிய அதிர்வு அவள் கழுத்தில் துடித்தது. உதடுகளை உள்ளே இழுத்து மடித்துக்கொண்டு அடிக்கடி கமலாவைப் பார்த்தாள்.

”என்ன படிச்சீங்க?” என்றேன். ”இங்க்லீஷ் லிடரேச்சர்…லா படிக்க ஆசை இருந்தது.படிக்கலை” நான் புன்னகையுடன் ”நல்லதாபோச்சு…லாயர்களெல்லாம் பெரிய போர்” என்றே. அவள் சிரித்தாள். பதின்பருவத்துப்பெண்களுக்கு கூச்சம் ஏற்படும்போது சிரிக்கும் பாவனையில். அந்தச் சிரிப்பு வழியாக அவள் கொஞ்சம் நெருங்கி வருவது போல் இருந்தது

கீழே மஜீதின் பாட்டு ஒலிக்க ஆரம்பித்தது. அப்போது எந்தப்பாட்டைக் கேட்டிருந்தாலும் அது என் மனநிலைக்கு உகந்ததாகப் பட்டிருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ‘சக்கரத்தேன் குடமல்லே? சந்திரிகயுடே வெண்மலரல்லே?’. ”மஜீத் நல்லா பாடுறார்” என்றேன். கமலா ”அவர் ஒருகாலத்திலே கல்யாணவீடுகளிலே கூட பாடிட்டிருந்தார். அதனாலே எல்லா பாட்டும் ஒப்பனப்பாட்டுதான்…” என்றார்.

பின் மெல்ல ஓர் அமைதி உருவாகியது. வழியும் தேன்விழுதைப்போல அழுத்தமான அமைதி. நான் பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தேன். அவள் என்னிடம் ”உறக்கம் வருதா?” என்றாள். ”கொஞ்சம் வந்தது…அப்றம் போயிடுச்சு” என்றேன். ”ஒருவாரம் போரும், அப்றம் நாம ராத்திரியிலே

தூங்கினதே மறந்திருவோம்...” என்று சிரித்தாள். கன்னங்களின் குழிகளை அரைஇருட்டிலும் என்னால் பார்க்க முடிந்தது. அல்லது அரையிருட்டில்தான் அவை தெளிவாகத்தெரியுமா?

”நீங்க எப்பலேருந்து இப்டி ஆரம்பிச்சீங்க?” என்றேன் ”எது?” ”இல்ல, இப்டி நைட் கம்யூனிட்டிலே” அவள் முகம் அரைநொடி மாறியது. ”ஸாரி...” என்றேன். ”ஓ, நோ.. இட் இஸ் ஓகே” என்றாள் ”ஐ ஹேட் ஆன் ஆக்ஸிடெண்ட்” நான் ”அப்டியா?” என்று பொதுவாகச் சொன்னேன். அவள் ”ஆறுவருஷம் முன்னாடி, தேனாம்பேட்டை சிக்னல் பக்கத்திலே” அதன்பின் ஒன்றும் சொல்லவில்லை



நான் அரைக்கணம் காத்திருந்துவிட்டு ”கண்ல அடிபட்டுதா?” என்றேன். அவள் பேசாமல் தலையைச்சரித்து இமையை கீழிறக்கியவளாக அமர்ந்திருந்தாள். கமலா ”ஷி லாஸ்ட் ஹெர் ·பியான்ஸே...” என்றார். ”ஓ ஐயம் ஸாரி” என்றேன். சில நொடிகள் மேலும் மௌனம் நீடித்தது. பின்பு அவள் ”ஓக்கே...தட் இஸ் ஓகே” என்றபடி சிரித்துக் கலைந்து ”என் பக்கத்திலேதான் உக்காந்திருந்தான். ஐ வாஸ் டிரைவிங்...ஒரு கார் மேலே இடிச்சுட்டேன்...அங்கியே நசுங்கி...”

”வேண்டாம்” என்றேன். அவள் புன்சிரித்தபோது அச்சிரிப்பின் வினோதம் என்னை மெல்ல துணுக்குறச்செய்தது. ”அந்த அதிர்ச்சியிலே எனக்கு கொஞ்சம் மெண்டல் பிராப்ளம் ஆயிட்டுது...”சட்டென்று உரக்கச்சிரித்து ”பயபடாதீங்க, நான்

பைத்தியம்லாம் இல்லை. ஒரு நெர்வ்ஸ் பிரேக்டவுன். கோர்வையா சிந்திக்க முடியாம ஆயிட்டுது. அடிக்கடி தூக்கிவாரிப்போடும். பத்துபதினைஞ்சுநாள் அப்டியே ஞாபகத்திலே இருந்து மறைஞ்சுபோயிடும்... டிரக்ஸ் எடுத்துக்கிட்டேன். கொஞ்சம் கொஞ்சமா தூக்கமே இல்லாம ஆயிடுச்சு..எப்பவாவது மாத்திரை போட்டுகிட்டு அரைமணிநேரம் தூங்கினா உண்டு...''

நான் தவறாக எங்கோ திறந்துவிட்டேனா என்று எண்ணிக்கொண்டேன். மொத்த சூழலும் இப்போது மாறிவிட்டது. இருட்டு கனத்தமீரக்கம்பிளிபோல உடலை அழுத்தி மூடியது. ''...அப்றம் என்னால பகலிலே கண்முழிக்கவே முடியாம ஆச்சு..கண்கூசும், வாந்தி வரும்...சத்தம் வெளிச்சம் ஜனங்கள் எதுவுமே பிடிக்காம ஆச்சு... அப்பா என்னை குன்னூருலே எங்க எஸ்டேட்டிலே கொண்டுபோய் விட்டார். அங்கே நான் கொஞ்சம் கொஞ்சமா சரியாயிட்டேன். நைட்ல காட்டுக்குள்ள ஆதிவாசி வேலைக்காகாங்க நாலுபேரை கூட்டிக்கிட்டு சும்மா சுத்திட்டு வருவேன்.. ஐ பிகேம் எ நாக்ட்ரனல் அனிமல்...''

''அப்பா?'' என்றேன். ''அப்பாவும் எனக்காக இப்டி மாறிட்டார். ஆக்சுவலி ஹி வாஸ் ஆல்ஸோ இன் எ கிரேட் அகனி.. ஷாம் அவரோட சொந்த மருமகன்தான்...'' ''யாரு?'' என்றதுமே புரிந்துகொண்டு ''ஓ'' என்றேன். ''அவருக்கும் இந்த சேஞ்ச் ரொம்ப புடிச்சுபோயிருந்தது. அவருக்கும் ஹைப்பர் டென்ஷன் பிபி எல்லாம் இருந்தது. இப்ப டோட்டலி நார்மலா இருக்கார். டாக்டருக்கே பெரிய ஆச்சரியம்...எப்டீன்னே புரியலைன்னு சொல்லிட்டே இருப்பார்''

கமலா என்னிடம் ''ஸீ, யாருமே நேச்சுரலா இந்த மாதிரி ஆகிறதில்லை. எவ்ரிபடி ஹேஸ் தெயர் ஓன் ஸ்டோரி...'' என்றார். ''உடனே எங்களுக்கு என்ன கதைன்னு யோசிக்காதே... வி ஆர் பியூர்லி ·பிலஸ·பிகல்...ஆனா மத்தவங்க அப்டி இல்லை.. எல்லாரிட்டயும் கேட்டுட்டிருக்கக்கூடாது...'' நான் பதறி ''ஐயம் ஸாரி, ஐயம் ஸாரி'' என்றேன். ''இல்லல்ல...அதனால சொல்லலை...ஞாபகப்படுத்தக்கூடாதேன்னு சொன்னேன்'' என்றார் கமலா.

நீலிமா ''நோ ஆன்டி... இட் இஸ் ஓகே...அவர் கேட்டது பிடிச்சிருந்தது. இப்ப அதையெல்லாம் சாதாரணமா சொல்ல முடியுதே. எல்லாம் வேற எங்கேயோ வேற யாருக்கோ நடந்த விஷயம் மாதிரி இருக்கு... பகல் ஞாபகம் வர்ரப்ப பழைய கனவு மாதிரிந்தான் இருக்கு...'' என்றாள். நான் ''ஸாரி'' என்றேன். ''நோ ஐ லைக்ட் இட்'' என்று அவள் புன்னகை செய்தாள்.

கமலா ''நான் பொதுவாச் சொன்னேன்'' என்றார். ''பேசிட்டிருங்க...நான் போய் பாட்டிலை எடுத்து பூட்டி வச்சிட்டு வர்ரேன்...நாயர்சாப் குடிக்க ஆரம்பிச்சா நிறுத்த தெரியாம கஷ்டப்படுவார்...'' என்னிடம் புன்னகைத்துவிட்டு

எழுந்துசென்றார். அவர் போவதைப் பார்த்த கணம் எனக்குத்தெரிந்தது என்னிடம் அந்தரங்கமாக பேச தனக்கு தயக்கமில்லை என்று நீலிமா சொன்னதுதான் அவர் நாசூக்காக போவதற்குக் காரணம் என்று. என் முகபாவனையில் அத்தனை வெட்ட வெளிச்சமாகவா இருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன்.

நானும் அவளும் தனித்து விடப்பட்ட போது இருவருமே ஒருவரை ஒருவர் உணர்ந்தபடி பேசாமல் அமர்ந்திருந்தோம். பேசு பேசு என என்னை நானே பிடித்து முன்னால் தள்ளினேன். பேசுவதற்கு ஒரு சொல்லும் அகப்படவில்லை. தாகமாக இருப்பது போல் இருந்தது. அவளை நேருக்கு நேராகப் பார்ப்பதை தவிர்க்க காயலைப் பார்த்தேன். காயல் இப்போது தெளிவாகவே தெரிந்தது. நான்கு சரக்குப் படகுகள் சென்றன. ஒன்றில் மெல்லிய சங்கீதம் கேட்டது.

கண்களை திருப்பியபோது அவள் என்னைப்பார்த்த கண்களைச் சந்தித்து நான் திடுக்கிட்டு பார்வையை விலக்கிக்கொண்டேன். ஒருகணம் கழித்து மீண்டும் அவளைப்பார்த்தபோது கண்களைச் சரித்து நாற்காலியின் சூரல் பிசிறை பிய்த்துக்கொண்டிருந்தாள். முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை. நான் துணிச்சலுடன் அவளையே பார்த்தேன். அவளுடைய கன்னங்களை கழுத்துக்களை மார்பின் வெண்பரப்பை. நான் பார்க்கும் இடங்கள் மெல்ல புல்லரிப்பதைப்போல தோன்றியது. அவள் கழுத்திலேயே என் பார்வை தங்கியது. அவள் கரம் என் பார்வையின் தூலம் போல எழுந்து கழுத்தை மெல்ல வருடிச் சென்றது

நான் ”ஸோ யு ஆர் நாட் மேரீட்?” என்றேன். கேட்டதுமே என் மனம் முரசுப்பரப்பு போல அதிர்ந்தது. எத்தனை அபத்தமான அப்பட்டமான கேள்வி. ஆனால் அவள் அந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்தவள் போல மிக சகஜமாக சிரித்து ”பாத்தா எப்டி தெரியுது?” என்றாள். அந்தத் துணிச்சல் என்னை இன்னமும் அதிரச்செய்தது. என் நா அசைவை இழந்தது போல இருந்தது. ஒருகணம் கழித்து ”தெரியலை” என்றேன். அவள் சிரித்து ”ஐயம் எ ஸ்பின்ஸ்டர்” என்றாள். நான் என் மனஎழுச்சியின் உச்சத்தை அடைந்தபின் மெல்ல களைத்து பின்னால் வந்தேன்.

ஆனால் அதன் பின்னர் பேசவே முடியவில்லை. நான் காயலையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன். அவளும் தன்னுள் ஆழ்ந்து அமர்ந்திருந்தாள். கமலா வரும் ஒலி கேட்டது. நான் சற்றே அசைந்து அமர்ந்தேன். ”என்ன சண்டை போட்டீங்களா? ”என்றார். ”சண்டையா எதுக்கு?” என்றேன் ”பின்ன உம்முன்னு இருக்கீங்க?” ”இல்லியே” என்றேன். நீலிமா புன்னகைசெய்தாள்.

”கமான் லெட் அஸ் ஹேவ் டின்னர்” என்றார் கமலா. ”இந்நேரத்திலேயா?” ”இதுதான் எங்க கணக்கிலே சப்பர்... இப்ப மணி நாலரை” என்றார் கமலா. ”கமான்..பசிக்குதுதானே? ”சரியா பசிக்கலை” என்றேன். ”இன்னைக்குச் சாப்பிட்டா நாளைக்கு கச்சிதமா பசிக்கும்..கமான் நீல்”

மூவரும் இறங்கி கீழே சென்றோம். முகமது ர·பியின் இந்திப்பாட்டு ஓடிக்கொண்டிருக்க நாயர் சோ·பாவில் பின்னால் சாய்ந்து வாய்திறந்து அரைத்தூக்கத்தில் இருந்தார். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவர் போல இருந்தார் மேனன். மஜீத் தரையில் கால்நீட்டி கண்மூடி அமர்ந்திருந்தார்.

கமலா கைகளை தட்டி ”கமான், ஊணு கழிக்கண்டே?” என்றார். நாயர் கண்களை திறந்து ”ஓ,டிவைன்” என்றார். பெருமூச்சுடன் ஒன்றுமே பேசாமல் மேனன் எழுந்தார்.

# இரவு 5



**சொல்லப்படாதவை**

**இருண்டுவிடுகின்றன**

**ஒன்றுடன் ஒன்று தழுவி**

**அடித்தளத்தில் படிகின்றன**

**இருண்டு**

**இரவாகின்றன**

அன்று பகல் முழுக்க நான் அயர்ந்து தூங்கினேன். விடிகாலையில் மேனன் வீட்டில் நன்றாகவே சாப்பிட்டிருந்தேன். சப்பாத்தி இட்லியைவிட மென்மையானதாக இருந்தது. தேங்காய்ப்பாலைச் சுண்டவைத்து உருளைக்கிழங்கு போட்டு செய்யப்பட்ட குருமா. கீரைபோட்டு செய்யப்பட்ட

நெய்வாசமடித்த பருப்புக்கறி. அன்னாசிப்பழத்தைக் கொண்டு செய்யப்பட்ட புளிக்கறி, அதை கமலா புளிசேரி என்றார்.

நான் சிரித்தபடி ”கேரளத்திலே என்ன ஊர் பேரும் சாப்பாட்டுப்பேரும் ஒண்ணு மாதிரிரிருக்கு…நேத்து தாமரச்சேரீன்னு ஒரு ஊரைப்பத்திச் சொன்னாங்க” என்றேன். அவர் சிரித்தபடி வெண்ணிறமான ஒரு கறியை பரிமாறி ”இதுக்குப்பேரு காளன்…உங்க ஊரிலே இது மனுஷங்க பேரில்ல?” என்றார். நான் சிரித்தேன். கடைசியாக பிரதமன் வந்தபோது அதன் பேரைக்கேட்டதுமே நான் சிரிக்க ஆரம்பித்தேன்.

அற்புதமான உணவு. பால்விட்டு வெல்லம் போட்டு செய்யப்பட்ட பிரதமன் என் நாவில் ஒவ்வொரு புள்ளியிலும் தங்கி ருசித்தது. நாயர் ஒரு நம்பூதிரி ஜோக் சொன்னார். விருந்தில் மூக்குமுட்ட சாப்பிட்ட நம்பூதிரி சோறு மேற்கொண்டு தேவையில்லை, வயிற்றில் ஒருபருக்கைக்குக்கூட இடமில்லை என்றார். பரிமாறியவர் ‘அடாடா, பிரதமன் வருகிறதே’ என்றார். ‘வரட்டுமே சாப்பிடுகிறேன்’ என்றார் நம்பூதிரி. ‘அதெப்படி?’ என்று பரிமாறுபவர் வியந்தார். ‘திருவிழாக்கூட்டத்தில் யானைவந்தால் தானாகவே வழி உருவாகிவிடுகிறதல்லவா’ என்றார் நம்பூதிரி. நான் வெடித்துச் சிரித்தேன். ஏன் அப்படி சிரித்தேன் என சிரிக்கும்போதே நினைத்துக்கொண்டேன்.நீலிமாவை கவர நினைக்கிறேனா? இல்லை. என் மனம் முழுக்க உவகை இருந்தது. அதற்கிணையான மகிழ்ச்சியுடன் நான் என் வாழ்நாளில் எப்போதுமே இருந்ததில்லை.

நீலிமாவும் நாயரும்தான் நில்லிவிடைபெற்று கிளம்பினார்கள். நாயர் என் கைகளை தன் கனத்த கைகளால் பற்றி ”அப்ப பாப்பம்” என்றார். ஏப்பம் விட்டு ”இங்கே எப்ப வந்தாலும் நான் ஏகப்பட்டது சாப்பிட்டுடறேன்…” என்றபின் உடனே உரக்கச்சிரித்து ”அதனாலேதான் தினமும் வந்திடறேன்” என்றார். நீலிமாவின் கண்களை என் கண்கள் சந்தித்தன. அவள் மிகச்சிறிதாக தலையை அசைத்து புன்னகை செய்தாள். அந்த விடைபெறலில் இருந்த அந்தரங்கத்தன்மை என்னை ஒருகணம் உலுக்கியது. அவள் சென்ற பலநிமிடங்களுக்கு நான் அதிலேயே இருந்தேன். மலையாளிகள் பொதுவாகவே மெல்லிய பாவனைகள் மற்றும் அசைவுகள் வழியாக பலவற்றைச் சொல்லக்கூடியவர்கள் என எனக்கு தெரியும் என்றாலும் அக்கணத்தில் அது எனக்காகவே அவள் அளித்த அந்தரங்கமான ஒரு செய்தி என்றே பட்டது. ரகசியமான ஒரு தீண்டல்போல. ஏன், ரகசியமான ஒரு முத்தம்போல.

அவள் சென்றபின் சற்றுநேரம் பொதுவாகப்பேசிக்கொண்டிருந்தோம். அதன்பின் நான் கிளம்பி என் வீட்டுக்கு வந்தேன். கதவைத்திறந்து உள்ளே சென்றபோது என் வீடு குளிர்ந்து தனித்து ஒரு காட்டுபொய்கை போல கிடப்பதாகப் பட்டது.

நான் அதில் இறங்கிக் குளிக்கப்போவதாகவும். என்ன, மனம் முழுக்க ஒரு விசித்திரமான கிளர்ச்சி என்று எண்ணிக்கொண்டு சமையலறைக்குச் சென்று நானே ஒரு கறுப்பு டீ போட்டுக்கொண்டேன்.கோப்பையுடன் மேலே சென்று என் பால்கனியில் நாற்காலியைப் போட்டுக்கொண்டு அமர்ந்தேன். முதலில் குளிர் இதமாக இருந்தது என்றாலும் மெல்ல மெல்ல நடுக்க ஆரம்பித்தது. காயலில் இருந்து நேராக ஏறிவந்த காற்றில் நீர்ப்பாசியின் மணம் . உள்ளே போய் போர்வையை எடுத்துவந்து போர்த்திக்கொண்டேன்.

காயலின் அலையோசை காட்டின் இலையசைவு போல தோன்றியது. பின்னர் வலிந்து ஒரு கற்பனையை உருவாக்கினேன், அது ஒரு மாபெரும்பட்டுப்புடவையின் சலசலப்பு. உடனே கற்பனை என்னை அறியாமலேயே விரிந்தது. அது நீலநிறமான பட்டு. விளிம்பில் வெள்ளிச்சரிகை. அதை ஒரு வியாபாரி உதறி உதறி விரிக்கிறார். இல்லை அதை அணிந்து ஒரு பெண் இருளில் நடந்து செல்கிறாள். இல்லை அவள் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு காலாட்டுகிறாள்... என்னுள் அந்தக் கற்பனை தன்னை நிறுவிக்கொண்ட விதம் பிரமிப்பூட்டியது. ஒரு கட்டத்தில் உண்மையிலேயே அப்பால் ஒரு பட்டுப்புடவை அசைகிறதென்றே என் மனம் எண்ணியது.

வானில் நிறைய விண்மீன்கள் இருந்தன. நேற்று பகல் முழுக்க வானில் மேகங்கள் இருக்கவில்லை. அவை கடலோரம் குவிக்கப்பட்டிருக்கும் நைலான் மீன்வலைகள் போல கீழ்ச்சரிவில் கொஞ்சம் காணப்பட்டன. பின்பு கரைந்துவிட்டன. நட்சத்திரங்கள் குளிரில் நடுங்குவதுபோலிருந்தது. எனக்கு முன்னால் சரிவில் ஒரு நட்சத்திரம் தொலைதூர நியான்விளக்கு மாதிரி செம்மஞ்சள் ஒளியுடன் அதிர்ந்ததுளது ஏதோ கோள் என்று நினைத்துக்கொண்டேன். என் வாழ்நாளில் அத்தனை சாவகாசமாக வானையும் நட்சத்திரங்களையும் பார்த்ததில்லை. அவை கீழே உற்றுநோக்கும் கண்கள் என்று பழங்குடிகள் நம்புகிறார்கள் என்று எங்கோ படித்திருக்கிறேன். எப்படி அவற்றை கண்களாக உருவகிக்கிறார்கள் என்றே தெரியவில்லை.

ஆனால் சில நிமிடங்களில் நட்சத்திரங்கள் என்னைப் பார்க்க ஆரம்பித்தன. இருட்டுக்குள் நிற்கும் மிருகங்களின் கண்கள். இதோ இது ஒரு ஓநாய். இது புலி. இது மான். இவை முயல்கள். விலங்குகளின் கூட்டங்கள். மான்விழிகளுடன் ஒரு பெண் இருட்டுக்குள் நின்றிருக்கலாகாதா என்ன? அங்கே அக்கணத்தில் நானும் நீலிமாவும் நின்றிருந்தோம் என்று உணர்ந்தேன். ஆம், எங்களை நான் கண்டுகொண்டிருந்தேன். இரு மனங்கள் ஒன்றாக ஆன பிறகு ஒன்றாக ஆகிவிடும்பொருட்டு உடல்கள் தவிக்குமே அந்த தவிப்புடன் அங்கே நின்றிருந்தோம். நட்சத்திரங்கள் எங்களைப் பார்த்தன. நட்சத்திரக் கண்கள். எத்தனை கோடி கண்கள். பிரமித்த கண்கள்!

ஒரு பாடல் நினைவுக்கு வந்தது. அறைக்குள் சென்று ஐபாடை எடுத்துவந்தேன். அதில் அந்தப் பாட்டை போட்டேன். ‘இரவுக்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒன்றே ஒன்று’ என்ன ஒரு துள்ளலான குரல்! எப்போதும் அழியாத இளமை. சுசீலா இறந்து மண்ணாகி, அவர் நினைவுக்கும் வயதாகிப்போனாலும் இந்த இளமை நிலைநிற்கும். விண்மீன்களைப்போல என்றும் புதியதாக. ‘இரவுக்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒன்றே ஒன்று. அறிவுக்கு ஆயிரம் கண்கள் உறவுக்கு ஒன்றே ஒன்று’ அந்த இருளில் வேறெங்கோ இருந்து அந்தப்பாடல் காற்றில் ஏறி என்னிடம் வந்து என்னைத்தொட்டுவிட்டு மீண்டும் இருட்டுக்குள் சென்றது. சுசீலா ஒரு குரல் அல்ல. இறந்தகாலத்தின் இனிய நினைவு. .

என் ஆழத்தில் ஒரு ஊற்றுவாயை திறந்துவிட்டது அப்பாடல். விடியற்காலையில் நம்மைத்தீண்டும் பாடல் கிறுக்காக்கிவிடுகிறது. என் பித்து மடைதிறந்தது. திரும்பத்திரும்ப அப்பாட்டையே கேட்டுக்கொண்டிருந்தேன். அது தவிர எதுவுமே என் மனதில் இருக்காதது போல. அந்த இரவு, நட்சத்திரங்கள், பச்சைமணமுள்ள காற்றசைவுகள், அலையோசை, நீலவெளி, அதன்மீது படிந்த தொடுவான்கோடு எல்லாமே அந்தப்பாடலாக இருந்தன. ‘அங்கும் இங்கும் அலைபோலே தினம் ஆடிடும் மானுட வாழ்விலே, எங்கே நடக்கும் எதுநடக்கும், அது எங்கே முடியும் யாரறிவார்?’ சுசிலாவின் குரல் காற்றில் பறக்கும் சரிகை. இருட்டுக்குள் ஒரு கரிய பறவை இருண்ட காயல் மீது தாவித்தாவிப்பறந்தது.

கிழக்கில் ஒரு மெல்லிய சிவப்புத்தீற்றல் விழுந்தது. கரிய சருமத்தில் கீறல் விழுந்து குருதி கசிவதுபோல. சட் சட்டென்று சில மேகங்கள் பற்றிக்கொண்டன. நான் பார்த்திருக்கவே ஏராளமான மேகமலைகள் வானில் பிறந்து வந்தன. நூற்றுக்கணக்கான கண்ணாடிச் சிற்பங்களை வனைந்தபடிச் சென்றது கண்ணுக்குத் தெரியாத ஒரு கரம். ‘இரவுக்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒன்றே ஒன்று’. என் நேர்முன்னால் ஒரு செக்கசிவந்த மேகம் குருதி படிந்த பஞ்சுபோல இருந்தது. பின் அதன் விளிம்புகளில் ஒளி சிதற அது படிகமாகியது. ஒரு மாபெரும் அலங்காரவிளக்காகியது. கீழே கருஞ்சாம்பல் நிறமான அலைத்தளதளப்பாக காயல் உருவாகி வந்தது. அதன்மேல் பாய்விரித்த நான்கு படகுகளும் அவற்றை தாண்டிச் சென்ற மூன்று பறவை வரிசைகளும் உருவாகி எழுந்தன.

என் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. என்னால் வானைப்பார்க்க முடியவில்லை.. கூசும் கண்களை இரு கட்டைவிரல்களால் அழுத்திக்கொண்டேன். மிண்டும் கண்ணைத் தூக்கியபோது இன்னமும் கூசியது. எழுந்து அறைக்குள் சென்றேன். அறைக்குள் இருந்த இளம் இருட்டு கண்ணுக்கு இதமாக இருந்தது. என்ன ஆயிற்று? இரவெல்லாம் இருட்டுக்குள் கூர்ந்து

நோக்கி நோக்கி பாப்பாக்கள் பெரிதாகிவிட்டனவா என்ன? கண்களைக் கழுவிக்கொண்டபோது ஆறுதலாக இருந்தது. அறையின் சன்னல்களை நன்றாக மூடி ஏஸியை போட்டுவிட்டு படுக்கையில் படுத்தேன். என் உடல் படுக்கையை எவ்வளவுதூரம் நாடியிருந்தது என்று அப்போது புரிந்தது. என் கண்களுக்குள் இருட்டுக்குள் ஒரு கரிய காயல் பளபளத்துக்கொண்டே இருப்பதைக் கண்டபடியே தூங்கிப்போனேன்.

மதியம் பன்னிரண்டு மணிவாக்கில் பங்கஜம் வந்து கதவைத்தட்டினாள். கண்களை திறந்து "என்ன?" என்றேன். ""நாயர் சார் வந்திருக்கார்" ""ஆறுமணிக்கு வரச்சொல்லு" என்றேன். ""ஊணு எடுக்கட்டே?" நான் சாப்பாட்டைப் பற்றி யோசித்தபோது வயிறு மறுத்தது. "வேண்டாம்" என்றேன்.அவள் சென்றபின் மீண்டும் தூக்கம் என்னை இழுத்துக்கொண்டது. நான் பேசிக்கொண்டிருக்கும்போது தூக்கம் அருகே பொறுமையில்லாமல் காத்து நின்றிருந்தது போல.

நான் கண்விழிந்த்தபோது இருட்டியிருந்தது. எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு சன்னலைத் திறந்து வெளியே பார்த்தேன். காயல் கரும்பச்சைத்தைலம் போல நெளிந்தது. பாசிப்படலப்பாய்விரிப்புகள் எழுந்து அமர ஒரு பெரிய படகு விளக்குகளுடன் சென்றது. நீருக்குள் அந்தப்படகை ஒளிரும் மீன்களின் குழு ஒன்று தொடர்வதுபோல் இருந்தது. தாப்புவலை போடும் இரு பாய்மரப்படகுகள் செல்வதறியாது சென்றன. தூரத்தில் வான் சரிவில் சற்றே வெளிச்சம் சிந்தியிருந்தது. ஈரத்தரையில் ஒளி பிரதிபலிப்பது போல. அந்த ஈரத்தை யாரோ துடைப்பது போல ஒளி மறைந்தது.

பல்தேய்த்து சவரம் செய்து குளித்துவிட்டு கீழே வந்தேன். சமையலறையில் பங்கஜம் இருந்தாள். "சோறு பூரி ரண்டுமே இருக்கு சார். ஹாட்பேக்கில் உண்டு...காபி பிளாஸ்கிலே இருக்கு..." என்றாள். நான் "சரி" என்றபடி காபியை மட்டும் விட்டுக்கொண்டேன். கூடத்தில் வந்து அமர்ந்துகொண்டு செய்தித்தாள்களை வாசித்தேன். அதிகாலையின் செய்தித்தாள் வாசிப்பது போலத்தான் இருந்தது. ஏழுமணிக்கு உண்ணிகிருஷ்ணன் வந்தார். "என்ன சார் உறக்கமா?" என்றார்.

நான் அவரிடம் பொதுவாக பேசிக்கொண்டிருந்தேன் "வேறே ஏதாவது சகாயம் வேணுமானா சொல்லுங்கோ சார்" என்றார். "எங்கயாவது போகணுமானா நான் வருவேன்" என்றார். நான் "பரவாயில்லை" என்றேன். அவர் கிளம்பிச் செல்லவேண்டுமென்று பொறுமையிழந்திருந்தேன். மேனன் வீட்டில் நெய்விளக்கொளி சன்னமான வண்ணம் போல இருட்டில் ஊறிப்பரவியிருந்தது. அங்கே மெல்லிய வீணை ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. உண்ணிகிருஷ்ணனை

நான் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் அன்றைய அரசியல் செய்திகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

‘யார் இந்த மனிதன்!’ என என் மனம் வியந்தது. இவனுக்கும் எனக்கும் என்ன உறவு. இவன் வாழும் உலகம் எனக்கு மிக அப்பால் எங்கோ இருக்கிறது. உதவாத செய்திகள், அவை அளிக்கும் பதற்றங்கள், ஆவல்கள், இலட்சியங்கள், ஏமாற்றங்கள். .. மேனன் வெளியே இறங்கி முற்றத்தில் நின்று என்னைப் பார்த்தார். கைதூக்கி ‘ஹாய்’ என்றார். நான் ”குடீவினிங் அட்மிரல்” என்றேன். ”குடீவனிங். நாங்க ஒரு சின்ன டிரிப் போறோம். விரும்பினா கூட வரலாம்” நான் சிரித்து ‘நீங்கள் உங்கள் பேரழகியான மனைவியுடன் அல்லவா செல்கிறீர்கள்” என்று ஆங்கிலத்தில் சொன்னேன்.”ஆமாம், ஆனால் எனக்கு ஒரு நல்ல சாட்சி இருந்தால் பிடிக்கும்” என்றார் அவர் சிரித்தபடி. ‘ஒரே நிமிஷம்’ என்றபின் உண்ணிகிருஷ்ணனைப் பார்த்தேன்.

”அப்போ நான் கிளம்பறேன் சார்” என்று எழுந்தார் அவர்.நான் மேலே விரைந்து பாண்ட் சட்டை ஷ¥ அணிந்து செல்போனை எடுத்துக்கொண்டு கீழே வந்தேன். வீட்டைப்பூட்டிவிட்டு மேனனின் வீட்டு முற்றத்திற்குச் சென்றேன். கமலா ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தார். “ஹாய்” என்று அழகாகப் புன்னகை செய்தார். ”ஆர் யூ கமிங் வித் அஸ்?” ”யா” ”நைஸ்” என்றபின் ”வா” என்றார். அந்த ஒருமை எனக்கு பிடித்திருந்தது

மேனன் ஓட்டினார். நான் அவர் அருகே அமர்ந்திருந்தேன். பின்பக்கத்து இருக்கையில் கமலா இருந்தார். நான் மேனனிடம் ”நாம் இருக்கும் இடத்தின் பெயர் என்ன?” என்றேன். ”சரியாகச் சொன்னால் சாத்தநாட்டுக்கரை. இதெல்லாம் ஆளில்லாத சதுப்புகள். இப்போதுதான் கட்டிடங்கள் தோட்டங்கள் எல்லாம் வருகின்றன..” என்றார் மேனன். கார் என்.எச்.17 வழியாக நகரத்திற்குள் நுழைந்தது. அவ்வேளையில் எல்லா விளக்குகளும் ஜொலிக்க நகரத்தெருக்கள் செம்பிழம்புகள் ஆட பற்றி எரியும் காடு போலிருந்தன.

”இவளுக்கு சில துணிகள் எடுக்க வேணுமாம். இவளைக் கொண்டுபோய் கடையில் விட்டுவிட்டு நாம் ஒரு ஐஸ்கிரீம் சாப்பிடுவோம்” என்றார் மேனன். எம்.ஜி.ரோட்டில் ஆதிரா சில்க்ஸில் கமலாவை இறக்கிவிட்டு எதிரே இருந்த பார்லருக்குச் சென்று ஐஸ்கிரீம் சாப்பிட்டோம். அவ்வேளையில் எல்லா நாற்காலிகளிலும் குடும்பங்கள் அமர்ந்திருந்தன. புஷ்டியான சிறு குழந்தைகள் நிறைந்து ததும்பும் கோப்பைகள் போல அலைமோதிக்கொண்டிருந்தன.

கண்ணாடிச்சன்னல்வழியாக நகரத்தைப் பார்த்துவிட்டு மேனன் திரும்பினார் ”ஒன்று கவனிச்சிருக்கியா, எந்த நகரத்திலேயேயும் ராத்திரியிலே ஜனங்கள் உற்சாகமாக பொங்கிட்டிருக்கிறதைத்தான் பாக்க முடியும். இதோ இந்த

தெருவிலே போயிட்டிருக்கிற ஒருத்தராவது டல்லா போறது மாதிரி இருக்கா?" என்றார். உண்மைதான், நான் அதை ஒருபோதும் கவனித்ததில்லை. தெருவில் சென்றுகொண்டிருந்த அத்தனைபேருமே உல்லாசமாகத்தான் தெரிந்தார்கள். குழந்தைகள் உயிர்த்துடிப்புடன் பேசிக்கொண்டு அங்குமிங்கும் கண்கள் அலைய நடந்தன. சிரிப்பு நிறைந்த முகத்துடன் பெண்கள். கவனமான உற்சாகத்துடன் ஆண்கள்.

இதோ கையில் ஏழெட்டு பிளாஸ்டிக் பைகளுடன் மனைவியையும் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சாலையைக் கடக்க நிற்கும் இந்த மனிதர் இரவில் அல்லாமல் இந்த முகமலர்வுடன் இருப்பாரா? இதோ தூணைப்பற்றியபடி நின்று இளைப்பாறும் கனத்த பாட்டியின் முகத்தில் கூட சிரிப்புதான் கொஞ்சம் முன்னால்போய்விட்டிருந்த இரு இளம்பெண்கள் திரும்பிவந்து ஏதோ கேட்க அவர் பூரிப்பும் சிரிப்புமாக ஏதோ சொல்கிறார். நான்கு பையன்கள் உரக்க ஏதோ சொல்லிச் சிரித்துக்கொண்டு செல்கிறார்கள். ஆம், மொத்த நகரமே இரவைக் கொண்டாடிக்கொண்டிருந்த்து. அதை நம்பமுடியாமல் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

எங்காவது, எந்த ஊரிலாவது இரவில் சாலையில் துயரமான எவரையாவது சந்தித்திருக்கிறேனா? நினைவில் எங்குமே ஒரு முகம் கூட இல்லை. கடும் உழைப்பாளர்கள், கைவிடப்பட்டவர்கள்கூட இளைப்பாறல் தெரியும் முகங்களுடன்தான் இருக்கிறார்கள். இரவில் ஒளிபெற்று ததும்பும் நகரத்தெருக்களில் மலர்ந்து அலையும் நூறுநூறாயிரம் முகங்கள்தான் நினைவில் நிறைந்தன. சென்னை, மும்பை, டெல்லி ,நியூயார்க், லாஸ் ஆஞ்சலிஸ், டோக்கியோ, குலாலம்பூர், சிங்கப்பூர், சிட்னி...ஆம். சொன்னால் ஒரு அபத்தமான நம்பிக்கை போலிருந்தாலும் அது உண்மை. இரவில் மனிதர்கள் மலர்கிறார்கள்.

"ய...யூ ஆர் ரைட்" என்றார் மேனன் என் மனதை இயல்பாக படித்தபடி. "பார்த்தாயா, இந்த மனிதர்கள் எல்லாமே இரவில் ஒளிபெற்றவர்கள் போலிருக்கிறார்கள். அவர்களின் ஆடைகள் முகங்கள் எல்லாமே இரவிலே மின்னுகின்றன. ஆனால் பகலில் இவர்கள் சோர்ந்து சூம்பிப்போயிருப்பார்கள்..." நான் பெருமூச்சுடன் தலையசைத்தேன். "மிக எளிமையான விஷயம். இவர்களுக்கு தெரியவில்லை அது" என்றார் மேனன். "இரவுதான் இவர்களுக்காக இயற்கை வகுத்த நேரம். ஆனந்தத்தை அறியும் புலன்கள் இரவில்தான் கண்விழிக்கின்றன"

"பிரவுன் கேர்ல் இன் த ரிங்" என்று போனி-எம் அதிர ஆரம்பித்தது. மலையாளிகளுக்கு போனி-எம் என்றால் மேற்கே திறக்கும் சன்னல் போல. எத்தனையோ வருடங்களாக இதை கேரள கபேக்களில்

கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனாலும் என் கால்கள் தாளமிட ஆரம்பித்தன. எனக்குள் வேறு ஒரு உடல் புரண்டு நடனமிட்டது.

கமலா செல்போனில் அழைத்தபோது நாங்கள் கிளம்பிச் சென்று அவரை அழைத்துக்கொண்டோம். கமலா வாங்கிய சேலைகளை என்னிடம் காட்டினார். பெரும்பாலும் சிவப்பின் வகைபேதங்கள். ”இந்தச் சேலைகளை பகலிலிலே கட்டமுடியாது. கண்ணைப்பறிக்கும் என்பார்கள்...” என்றார் கமலா. ”நீலத்தில் எடுத்திருக்கலாமே” ”உனக்குப் பிடித்த நிறம் நீலமா?” என்றார் கமலா. ”ஆமாம்” என்றேன். ”இரவில் நீலம் சரியாக தெரியாது. ஏனென்றால் இரவே நீலநிறமானதுதானே?” மேனன் சொன்னபடி காரை ஓட்டினார்.

கமலா என்னிடம் மெல்லிய புன்னகையுடன் ”ஸோ யூ லைக் நீலிமா” என்றார். என் உள்ளம் ஜிலீரென்றது. அவர் கண்களைப் பார்க்காமல் திருப்பிக் கொண்டேன். ”நான் அவசரப்படறேன்னு நீ நினைக்கலாம். ஆனா..”என்றார் கமலா. நான் அவரை நோக்கி திரும்பினேன். அவர் சட்டென்று முகம் மீது தனி விளக்கொன்று விழுந்ததைபோல சிவந்து ஒளிகொண்டு ”நான் திரும்பி வர்ரப்ப நீங்க ரெண்டுபேரும் அமைதியா இருந்தீங்க. ஆனா ரெண்டுபேருமே ஒருத்தரை ஒருத்தர் கவனிச்சுகிட்டும் இருந்தீங்க. தட் வாஸ் எ ஸம்மிட்” என்றார். அதை நானும் உணர்ந்தேன். நான் புன்னகைசெய்தேன்

”ஸோ ஸம் திங் கோயிங் டு ஸ்டார்ட்” என்றார் மேனன். ”இண்டிரஸ்டிங்” நான் பதறி ”அதெல்லாம் இல்லை அட்மிரல். நான் சும்மா...” என் மனம் திம் திம் என அறைந்தது. ”ஐ லைக் ஹெர்..தட் இஸ் ஆல்” மேனன் உரக்கச் சிரித்தபடி ”டார்லிங், இட் இஸ் ரியல்லி எ ·பன் டு ஸீ தி லவர் பாய்ஸ்.. ” என்று கமலாவை கண்ணாடியில் பார்த்து கண்ணடித்தார்.கமலா சிரித்துக்கொண்டே என்னைப் பார்த்தார். எதிர் காரின் ஒளியில் அவரது சிவந்த உதடுகளுக்குள் சிறிய தூயவெண்பற்களின் அழகிய வரிசை செவ்வியல் ஓவியங்களில் விரியும் மகத்தான புன்னகை போலிருந்தது.

பானர்ஜி சாலையில் வரிசையாக தலையில் ஒளியுடன் நின்ற விளக்குத்தூண்கள் கடந்துசென்றன. செங்கனி ஒன்று மட்டும் பழுத்து நிற்கும் மரங்கள். தூரத்தில் விளக்குகளினாலான கோடாக அவை வளைந்தன. சிவந்த விளக்கொளி ஒழுகும் ஓடைகளாக ஆயின. விளம்பரத்தட்டிகள் இருளின் சுவரில் மாட்டப்பட்டிருப்பவை போல ஒளிகொண்டு வானில் நின்றன. நகரத்தின் சந்திப்புகளில் எல்லாம் பெரிய ஹோலோஜன் விளக்குகள் நிலாக்களாக ஒளிவிட்டன. நூறு நூறு நிலாக்கள்.நான் சட்டென்று இயல்பாக அந்த வரியைச் சென்றடைந்தேன். ”இரவுக்கு ஆயிரம் கண்கள்... ”



நான் முணுமுணுப்பதைக் கேட்டதும் கமலா ”என்ன பாட்டு?” என்றார். நான் அதைப் பாடத்துணியாமல் வரிகளாகச் சொன்னேன். ”குட் சாங்” என்றார் மேனன். ”சுசீலா இஸ் அ டிவைன் சிங்கர்” கமலா என்னிடம் ”யார் இதுக்கு மியூசிக்? எம்.எஸ்.வியா?” என்றார். நான் ”இல்லை கே.ஆர்.மகாதேவன்” என்றேன். ”ஓ” என்றார் அவர். மேனன் ”இரவுக்கு ஆயிரம் கண்கள். இரவு ஒரு இந்திரன். பகல்னா சிவன். ஒரே ஒரு நெற்றிக்கண் மட்டும்தான்” என்றார். நான் புன்னகைசெய்தேன். கமலா மெல்ல ”இரவுக்கு ஆயிரம் கண்கள் பகலுக்கு ஒன்றே ஒன்று…”என்று முனகலாக பாட ஆரம்பித்தார். துல்லியமான இனிய குரல்.

அந்தப் பாடல் வழியாக மிதந்துசெல்வதுபோல ஒளிததும்பிய சாலைவழியாக சென்றோம். சாம்பல்நீலப்பட்டுப்பரப்பாக கிடந்த காயல்மீது கோஸ்ஸ்ரீ பாலம். அதற்குப்பின் வல்லார்ப்பாடம் பாலம். தென்னைமரக்கூட்டங்கள் அடர்ந்த அரைச்சதுப்பு நிலங்களுக்கு மேல் நகரத்தின் செவ்வொளியை திருப்பியளித்த வானம் விடிகாலையின் செம்மங்கலுடன் விரிந்திருந்தது. காரின் பின்பக்கச் சன்னல் வழியாகப் பார்த்தபோது நகரில் பெரும் தீப்படலம் நிறைந்திருப்பதாக பிரமையெழுந்தது. வானத்தில் முக்கால் நிலவு தனித்து தன் மேகங்களுடன் அசையாமல் நின்றது. விண்மீன்கள் வானத்தின் செம்மங்கலில் பெரும்பாலும் ஒளிகுன்றி மறைந்திருந்தன. கீழ்ச்சரிவில் மட்டும் சிவந்த கோள் ஒன்று மின்னிக்கொண்டிருந்தது. ‘இரவுக்கு ஆயிரம் கண்கள்…’ சுசீலா ஒரு தனித்த நட்சத்திரம்.

பக்கவாட்டில் துறைமுகப்பகுதி தெரிந்தது. ஹோலோஜன் விளக்குகள் எரிய அப்பகுதி மண்ணில் இருந்து சற்றே தூக்கப்பட்டு அந்தரத்தில் நிற்பது போலிருந்தது. ஓர் உயரமான கிரேனின் மீது விளக்கொளியில் ஒரு மனிதன் வானில் நடக்கும் தேவனைபோல இருள் மீது சென்றான். கரியவானின் பட்டுப்பரப்பில் சிவப்பு பச்சை விளக்குகள் ஒளிர ஒரு சிறு பூச்சி போல ஆகாயவிமானம் ஒன்று ஒட்டியிருந்து மெல்ல ஊர்ந்து சென்றது. சாலையில் மரக்கிளையில் அடர்ந்திருக்கும் நூற்றுக்கணக்கான மின்மினிகள் போல

பின்புறம் ஒளிரும் கார்கள். அவை தயங்கி பின் முந்த முயன்று பின் விர்ரிட்டு சென்றுகொண்டிருந்தன. கட்டிடங்களின் அடுக்குகளில் விளக்குகள் எரிய அவை எடையில்லாதவையாக ஆகி இருளில் மிதந்து நின்றன. தூரத்தில் எர்ணாகுளம் நகரம் உருகும் பொன்னாலானதாக தகதகத்துக்கொண்டிருந்தது.

# இரவு 6

**எத்தனைகோடி**
**பகல்களை**

**அணைத்தால்**
**உருவாக்கமுடியும் ஓர் இரவை!**\



கார் கொச்சியில் வேளி தாண்டிச் சென்றது. நான் ஏழெட்டுமுறை எர்ணாகுளம் கொச்சிக்கு வந்திருந்தபோதும்கூட எனக்கு அந்த நிலப்பகுதி பிடிபடவில்லை. எங்கே கொச்சி முடிந்து எர்ணாகுளம் ஆரம்பிக்கிறது என்று மலையாளிகளால்கூட சொல்லிவிடமுடியாது. கடல் உள்ளே புகுந்து பள்ளம்தோறும் பரவியதுபோல , அல்லது மாபெரும் டம்ளர் ஒன்று சரிந்துநீர் சிதறியது போல சிதறிப்பரவிக்கிடக்கும் காயலால் சூழப்பட்ட ஏராளமான தனித்தீவுகளால் ஆனது எர்ணாகுளம் நிலப்பரப்பு. அதை இங்கே துருத்துகள், வைப்புகள் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் மாங்குரோவ்காடுகள் தவிர்த்தால் பெரும்பாலான காயலோரங்கள் தென்னைமரக்கூட்டங்களால் ஆனவை.

தூரத்திலிருந்து பார்க்கும்போது கொஞ்சம் உயரமான புல்மேடுகளாக தோன்றும் தென்னைமரக்கரைகள் நடுவே காயலை நோக்கி நிற்கும் பூதாகரமான குடியிருப்புக் கட்டிடங்கள். இருண்ட காயலில் விழுந்து கிடக்கும் கட்டிடப்பிரபலிப்புகளின் சிவந்த விளக்குகள் அலைகளில் தள்ளாடின. எனக்கு கு§ளோட் மோனேயின் வாட்டர் லில்லீஸ் ஓவியங்கள் நினைவுக்கு வந்தன. பெரியதோர் திரையில் சிதறும் குழம்பும் வண்ணங்கள்.

பிரான்ஸ் சென்றிருந்தபோது லூவர் அருங்காட்சியகத்தில் அவற்றை பார்த்து நின்றிருக்கிறேன். அவற்றின் பிரம்மாண்டம் தான் என்னை முதலில் கவர்ந்திருக்கிறது. ஏன் அவை தூரிகை ஓட்டமே தெரியுமளவுக்கு இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு ஓவியங்களைப் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது. ஆனால் நீரில்கரையும் விளக்குக்ளைக் கண்டபோது உருவங்கள் மழுங்கும் தெளிவின்மையில் அபூர்வமான ஓர் அழகு இருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டது.

கார் பீச் ரோட்டில் நுழைந்து தெற்காக திரும்பி தாண்டி பக்கவாட்டில் ஒரு சிறியசாலையில் ஏறி கடற்கரை நோக்கிச் சென்றது. நான் ”எங்க போறோம், கடற்கரைக்கா?” என்றேன். மணி ஒன்பதை நெருங்கிக்கொண்டிருந்தது. ”இல்லை, இங்க ஒரு முக்கியமான மனுஷ்யர் இருக்கார். உங்களுக்கு சந்திக்க பிடிக்கும்” என்றார் மேனன். நான் கமலாவைப் பார்த்தேன் ”சுவாமி பிரசண்டானந்தா, கேட்டிட்டில்லயா?” என்றார். ”இல்லையே” ”நாட் வெரி பாப்புலர். பட் என் இம்பார்ட்டண்ட் மேன்” என்றார்.

கார் கடற்கரையை நெருங்கியது. நான் கண்ணாடியை கீழிறக்கி அலைகளின் ஒலியை கேட்டேன். உப்புவீச்சமுள்ள காற்று குளிருடன் வந்து மோதியது. கடற்கரையில் அந்நேரத்தில் வெட்டவெளிக்குரிய மெல்லிய கண்வெளிச்சம் மட்டுமே இருந்தது. கடல் இருட்டுக்குள் கட்டிபோட்ட பெரியதோர் மிருகம் போலிருப்பதாக எண்ணிக்கொண்டேன்.

கடற்கரை வழியாக கொஞ்சதூரம் சென்று தென்னைத் தோப்புக்குள் சென்றிருந்த சாலையில் ஏறி உள்ளே நுழைந்தோம். இருட்டுக்குள் தென்னைமரங்கள் ஓலைகள் வழியாக கடற்காற்று பீரிடும் இரைச்சலுடன் நின்றிருந்தன. சாலை திரும்பி திரும்பிச்செல்ல நேர்முன்னால் தென்னைமரங்கள் பாய்ந்து வந்து வழிமறித்து பின் விலகுவதுபோலிருந்தது.

தென்னைமரங்கள் நடுவே பெரியதோர் முற்றமும் அதன் நடுவே தனித்தனியாக ஏழெட்டு குடில்களும் தெரிந்தன. அவற்றில் அரிக்கேன் விளக்குகள் சில எரிந்துகொண்டிருக்க மிக மெல்லிய செவ்வொளி இருளில் சிந்திக்கிடந்தது. ”வெல் சுவாமி இஸ் தேர்” என்றார் மேனன். என்னிடம் திரும்பி ”எனக்கு இவரது ஆன்மீகம் தியானம் எதிலும் நம்பிக்கை இல்லை. ஹி இஸ் டிரையிங் சம்திங்....ஆனா ரொம்ப புத்திசாலியான மனுஷ்யம். எதைப்பற்றியும் நல்லா பேசலாம். நல்ல மெட்டஃபர்ஸ் சொல்லுவார்...”என்று ஸ்டீரிங்கை ஒடித்தார்.

கார் உறுமி நின்றது . நான் கதவைத்திறந்து இறங்கி நின்று குடில்களைப் பார்த்தேன். மேனன் இறங்கி காரைப்பூட்டினார். ”இங்கே நெறையபேர் இருக்காங்களா?” என்றேன். ”நெறையன்னா? ஒரு எட்டு பேர் நிரந்தரமா இருக்காங்க. அப்பப்ப நெறையபேர் வந்து தங்கிட்டு போவாங்க. உங்களுக்கு இஷ்டமிருந்தா நீங்க கூட தங்கலாம்...எனிவே திஸ் இஸ் எ நைஸ் பிளேஸ்” நான் தயங்கி ”இவரும்...” என்றேன் ”ஆமா இவரும் இரவுலாவிதான்... இல்லாட்டி எனக்கு இவர் கிட்டே என்ன பேச்சு? கமான்” என்றார் மேனன்.



நாங்கள் குடில்களின் வாசலை அடைந்தபோதுதான் ஒடிசலான ஒரு சாமியார் வெளியே வந்து ”அய்யோ , இதாரு மேன்னனா…வரணம்…மற்றயாள் ஆரு?” என்றார். மேனன் என்னிடம் ”சுவாமி உதயபானு” என்று அறிமுகம் செய்துவிட்டு ”இது சரவணன். எ நியூ ·ப்ரண்ட்” என்றார். உதயபானு ”புதிய ரெக்ரூட்மெண்ட் அல்லே?” என்று கேட்டு சிரித்தார். நீளமான கழுத்தில் குரல்வளை ஏறி இறங்கியது. சிரிக்கும்போதும் பேசும்போதுமெல்லாம் உடல் விதவிதமாக நெளிந்தது அவருக்கு. பக்கவாட்டில் இரு கைகளையும் வைத்து அழுத்தி சப்பி நீட்டி எடுத்தது போன்ற முகம். கூர்மையான மூக்கு. எங்கோ பார்த்த முகம் என்று தோன்றியது.

”சுவாமி உதயபானு ஒரு சக்ஸஸ்புல் லாயரா இருந்தார்…” என்றார் மேனன். ”ரொம இண்டிரஸ்டிங்கான கதை… ஒருநாள் ஒரு தப்பான கேஸிலே ஜெயிச்சிட்டார். சின்னப்பொண்ணை கற்பழிச்ச ஒருத்தனுக்கு விடுதலை வாங்கிக் குடுத்திட்டார். அதுமுதல் ஒருவாரம் தூக்கமில்லை. அப்டியே எல்லாத்தையும் விட்டுட்டு அலைய ஆரம்பிச்சார். இங்கே வந்து சேந்திட்டார்” உதயபானு ”அந்நைக்கு முதல் இந்நுவரை ராத்ரி உறங்ஙிட்டில்லா” என்று புன்னகை செய்தார். நான் அந்தப்புன்னகையில் அவர் முகச்சாயலை அடையாளம் கண்டுகொண்டேன். அவர் அச்சு அசல் வி.கெ.கிருஷ்ணமேனன் போலிருந்தார்.

”யா…ஹி இஸ் எ குளோஸ் ரிலேட்டிவ் ஓ·ப் வி.கெ.கிருஷ்ணமேனன்…ஸேம் கிளான்” என்றார் மேனன் என்னிடம். மேனன் என் மனதுக்கு மிக நெருக்கமாக வந்துகொண்டிருப்பதை எப்போதுமே உணர்ந்தவன் என்பதனால் எனக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை. உதயபானு பவ்யமாக மார்பிலே கையை வைத்து ” அவரெல்லாம் ரொம்ப பெரிய மனிதர். எம்.ஓ.மத்தாயே அவரைப்பற்றி கிசுகிசு எழுதுமளவுக்கு பெரியவர்” என்றார். நான் சிரித்தேன்.

உள்ளே சென்றோம். வட்டவடிவமான குடில். ஓரமாக ஒரு ஹரிக்கேன் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. புகையே இல்லாத விளக்கு.வாசனையும் வேறுமாதிரி இருந்தது. ஸ்பிரிட்டில் எரிவதாக இருக்கலாம். தரையில் அலங்காரமான கோரைப்பாய்கள் விரிக்கப்பட்டு சிவந்த உறையிடப்பட்ட உருளைத் தலையணைகள் போடப்பட்டிருந்தன. நாங்கள் அமர்ந்துகொண்டதும் உதயபானு ”ஞான் போய் அறியிக்காம்” என்றார். ”பிஸியாணோ?” என்றார் மேனன். ”நோ..ஹி வாஸ் ரீடிங் சம்திங்” என்று உதயபானு வெளியே சென்றார்.

பதினைந்து நிமிடத்தில் மறுவாசல் வழியாக நாற்பது வயது தோன்றக்கூடிய சுவாமி பிரசண்டானந்தாஉள்ளே வந்தார். தோளில் புரண்ட கரிய சுருண்ட குழல்கற்றைகள். கன்னங்கரிய தாடி மார்பின்மீது விழுந்து கிடந்தது. அகலமான

நெற்றிக்குக் கீழே உற்சாகமான பையன்களுக்குரிய அழகிய கரிய கண்கள். கூர்மையான மூக்கு. மிக வசீகரமான மனிதர். ”வரணம் வரணம் மேனனே...கண்டு ஒருபாடு நாளாயல்லோ” என்று சிரித்துக்கொண்டே கும்பிட்டார்.

மேனன் எழாமலேயே ”யா...கிளாட் டு மீட் யூ...”என்றார். கமலா கையூன்றி எழுந்து சென்று சுவாமியின் பாதங்களை தொட்டு வணங்கினார். அவர் கமலாவின் தலையைத் தொடாமலேயே ஆசியளித்தார். நானெ ழப்போக ”சிட் டவுன் சிட் டவுன்” என்று சொல்லி அமர்ந்துகொண்டார். ”யூ ஸ்பீக் மலயாளம்?” என்று என்னிடம் கேட்டார். ”நோ.. ” என்றேன். ”ஓ” என்றார். ”நான் மலையாளி அல்ல என்று எப்படி தெரியும்?” என்றேன். ”ஐ நோ ·பேஸஸ்...இ வாஸ் எ டிராவலர் ·பார் ட்வெண்டி இயர்ஸ்” என்று சாதாரணமாக புன்னகைசெய்தபடிச் சொன்னார். ”நீங்க அனேகமா கடலூர் அந்தப்பக்கம். பெரும்பாலும் தொண்டைமண்டல வெள்ளாளர் சாதி. சரியா?” அவரது தமிழில் மெல்லிய மலையாளா நெடி இருந்தது.

நான் சிரித்து ”சரி” என்றேன். பிரசண்டானந்தா”நான் பதினேழு பாஷை பேசுவேன். அதிலே பதினாறு பாஷை மலையாள வாசனையோட இருக்கும்...” என்றார். ”அது கேக்க நல்லாத்தான் இருக்கு...”என்றேன் ”மலையாள நெடி இருந்தா தமிழ் கொஞ்சம் சா·ப்டா ஆனதுமாதிரி இருக்கு...பொங்கலிலே கொஞ்சம் நெய் ஜாஸ்தியா விட்டது மாதிரி”

பிரசண்டானந்தாஉரக்கச் சிரித்தார் ”நைஸ் ஸிமிலி...” என்றார் ”யூ நோ, இப்ப நீங்க பேசற தமிழோட அந்த ஒலி தெலுங்கிலே இருந்து வந்தது. தெலுங்குக்கு அந்த ஒலி பிராகிருத பாஷையிலே இருந்து வந்திருக்கணும். தெலுங்குதான் படபடன்னு பேசற பாஷை.வடக்கு ஆந்திராவிலே மத்யபிரதேஷ் பார்டரிலே உள்ள ஆதிவாசிகள் இப்பகூட பிராகிருதஜன்யமான பாஷைகள் பேசுறாங்க. அவங்ககிட்ட இந்த டியூனை நான் கவனிச்சிருக்கேன்...” என்றார்.

”ஓ” என்றேன் வியப்புடன். ”...அதுக்கு சரித்திரபூர்வமான காரணங்கள் இருக்கு. தமிழ்நாடு முழுக்க முந்நூறு வருஷம் தெலுங்கர்களோட ஆட்சியிலே இருந்திருக்கு. மன்னர்கள் மட்டும் தெலுங்கு இல்லை. கிட்டத்தட்ட ஒருகோடி ஜனங்களும் அங்கேயிருந்து வந்து தமிழ்நாடு முழுக்க பரவியிருக்காங்க. அவங்க தமிழை தெலுங்கு உச்சரிப்புக்கு மாத்திட்டாங்க. அதுக்கு முன்னாடி தமிழ் கேக்கிறதுக்கு மலையாளம் மாதிரித்தான் இருந்திருக்கும்...ஸீ, தெலுங்கு ஆதிக்கம் இல்லாத இடங்களிலே இருக்கிற பழமையான தமிழ் அப்டியே மலையாள ஓசையோடத்தான் இருக்கு. ·பர் எக்ஸாம்பிள் தெற்குதிருவிதாங்கூர். ஐ மீன் , கன்யாகுமாரி ஜில்லா பாஷை. அப்றம்

ஸ்ரீலங்காத் தமிழ். அப்றம் மேற்குமலைகளிலே இருக்கிற டிரைப்ஸ் பேசற தமிழ்…”

நான் அவரை அதற்குள் புரிந்துகொண்டிருந்தேன். அபாரமான தர்க்கம் கொண்ட மனிதர். ஒன்றிலிருந்து ஒன்றாக அறிதல்களை கோர்த்தபடியே சென்று ஒரு முழுமையை உருவாக்கக் கூடிய வலிமை கொண்டவர். அத்தகையவர்கள் பிறர் சிந்தனைகள் மீது அபாரமான செல்வாக்கைச் செலுத்துபவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் எதையுமே மறுத்து வாதிட முடியாது.

”ஐ வாஸ் வண்டரிங்” என்று மேனன் ஆரம்பித்தார் ”தமிழ்நாட்டிலே தமிழர்களுக்கு ரொம்ப பிடித்தமான பாடகர்கள் யாருன்னா அவங்க அனேகமா தெலுங்கர்கள் இல்லேன்னா டி.எம்.எஸ் மாதிரி சௌராஷ்டிரர்கள்… பி.சுசீலா பத்தி நீங்க கொஞ்சம் முன்னாடி பேசிட்டிருந்தீங்க.. அந்தம்மா தமிழை தெலுங்கு மாதிரி உச்சரிக்கிறவங்க. ற, க மாதிரி எழுத்துக்களை எல்லாம் ர·ப்பா உச்சரிப்பாங்க. அதே மாதிரி எஸ்.பி.பாலசுப்ரமணியம்… தமிழ்க்காதுகளுக்கு தமிழை தெலுங்கு மாதிரி உச்சரிச்சாத்தான் சரீன்னு தோணுதுன்னு நெனைக்கிறேன்…”

நான் அவர்களை எதிர்த்து வாதிட விரும்பினேன். ஆனால் என் மனத்தின் மூலையில் அது உண்மைதானா என்றும் தோன்றிவிட்டிருந்தது. ஆகவே என் எதிர்ப்பு வலுவாக அமையாதென்று எண்ணி அமைதியாக இருந்தேன். ”வெல், உங்க பேரே சொல்லலியே” ”சரவணன்” என்றேன். நான் சில கணங்கள் தயங்கியபின் ”நீங்க இங்கே பகலிலே யாருமே முழிச்சிட்டிருக்கிறதில்லையா?” என்றேன்.

பிரசண்டானந்தாபுன்னகையுடன் தாடியை வருடியபடி ”நோ…” என்றார் ”அது எங்களோட நியதி. இந்த ஆசிரமத்துக்கே நிஸாலயம்னுதான் பேர். ராத்திரி தங்கற எடம். இங்க வாட்ச்மேன் மட்டும் பகலிலே கண்விழிச்சிருப்பார். ”அவர் புன்னகை பெரிதாகியது ”ஸீ, இங்கே எங்களுக்கு பத்து பசுக்கள் இருக்கு. அதெல்லாமிகூட ராத்திரியிலேதான் முழிச்சிருக்கும்…வழக்கமா பகலிலே முழிச்சிருக்கிற பசுக்களை விட நாப்பது சதவீதம் அதிகமா பால் குடுக்குது. க்ஷீர விகஸன போர்டிலே இருந்து சயண்டிஸ்ட்ஸ் வந்து பாத்திட்டு போயிருக்காங்க…” நான் ”அப்டியா?” என்றேன். ”அதிலே பெரிய மர்மம்லாம் ஒண்ணும் இல்லை. ஸீ, பகலிலே பசுக்களை மேயவிட்டா வெயிலிலே அலைஞ்சே அதோட எனர்ஜியிலே பாதி இல்லாம ஆயிடும்..” என்று சிரித்தார்.

நான் அவரிடம் எதைப்பற்றி பேசவேண்டும் என எண்ணிக்கொண்டேன். எதைப்பற்றிப் பேசினாலும் அவரிடம் ஏற்கனவே அதற்குப் பதில் இருக்கும் என்று தோன்றியது. ”யூ மே ஆஸ்க் எபவுட் தி நைட் எகஸ்பரிமென்ட்ஸ்” என்று

அவரே அடியெடுத்துக்கொடுத்தார். ''எதுக்கு ராத்ரியிலே முழிச்சிருக்கணும்? ஆன்மீகமா ஏதாவது காரணம் இருக்கா?'' என்றேன். அவர் தாடியை நீவியபடி ஒருகணம் என்னை நோக்கி புன்னகைசெய்து,''வள்ளலார் சொல்லியிருக்கார்ல, தனித்திரு விழித்திரு பசித்திரு அப்டீன்னு. தனித்திருன்னா சாதாரணமா மத்தவங்கள மாதிரி இருக்காதேன்னு அர்த்தம். பசித்திருன்னா உடலாலேயும் மனசாலேயும் பசியோட இருன்னு அர்த்தம். எதுக்கு விழித்திருன்னு சொன்னார்? விழிப்புன்னா என்ன? அகவிழிப்பைச் சொல்லலை. அது தியானம் மூலம் வரக்கூடியது. அகவிழிப்பு வர்ரதுக்கான வழியை... அவர் சொல்ற விழிப்புங்கிறது தூங்காம இருக்கிறதைத்தான்....அதைத்தான் கீதை சொல்லுது, பிறர் தூங்கும்போது யோகி விழித்திருக்கிறான்'

நான் அவர் மேலே பேசியதை கவனிக்கவில்லை. அவர் அப்போது சொன்ன அனைத்தையும் பலமுறை ஏற்கனவே சொல்லியிருந்திருக்கக் கூடும். தெளிவான தர்க்கங்களாக வந்துகொண்டிருந்தன. பகல் ஜாக்ரத் என்னும் விழிப்புநிலையால் ஆனது என்றால் இரவு கனவுநிலை என்னும் ஸ்வப்னத்தால் ஆனது. ஆழ்நிலை என்ற சுஷ¤ப்திக்கும் அதில் இருந்து முழுநிலை என்ற துரியத்திற்கும் செல்வதற்கு மிகச்சிறந்த வழி இரவுதான். பகலில் தியானம் செய்தால் நாம் நம் விழிப்புணர்வை அழியச்செய்து கனவுநிலையை கொண்டுவரவே நம் ஆற்றலில் பெரும்பகுதியைச் செலவிட வேண்டியிருக்கும். இரவில் நாம் நம் கனவுநிலையில் இருந்து அடுத்தபடிகளுக்குச் சென்றுவிடலாம்.

''எதுக்காக நம்ம முன்னோர்கள் எல்லா கலைகளையும் ராத்தியிலே நடத்தினாங்க? கதகளி ராத்திரி விடிய விடிய நடக்கும். சாக்கியார்கூத்து ஓட்டன்துள்ளல் எல்லாமே ராத்திரிதான். ஏன் தெருக்கூத்து? அதுவும் ராத்திரியிலேதானே....சங்கீதக்கச்சேரிகளைக்கூட அந்தக்காலத்திலே ராத்திரியிலேதான் வச்சிட்டிருந்தாங்க. ஏன்னா ராத்திரியிலே மனசு கனவுத்தன்மையோட இருக்கு. மனசோட விழிப்புநிலையை ஊடுருவி கனவுநிலையோட பேசறதைத்தான் நாம கலைகள்னு சொல்றோம், இல்லையா? அதுக்கு சரியான நேரமே ராத்திரிதான். நான் பஸ்தர்காடுகளிலே ஆதிவாசிகளைக் கவனிச்சிருக்கேன். பகலிலே பெரும்பாலும் எங்கியாவது சுருண்டு கிடப்பாங்க. ராத்திரியிலேதான் வேட்டையாடுறது. நடனமாடுறது பூசை செய்றது எல்லாமே...'' பிரசண்டானந்தாநாடகத்தனமாக நிறுத்தி ''ஏன், செக்ஸ¤க்கேகூட ராத்திரிதான் பொருத்தமா இருக்கு இல்லையா? அப்ப ஆணும் பெண்ணும் மனசு நெகிழ்ந்து ஒண்ணாகிற மாதிரி பகலிலே சாத்தியமில்லை. பகலிலே அவங்க உறவே வேற மாதிரி இருக்கும்...யூ நோ''

நான் வெறுமே தலையசைத்தேன். ''நம்ம யோகசாதனைகள் எல்லாத்துக்குமே ராத்ரிதான் உசிதமானது..'' என்றார் பிரசண்டானந்தா. ''குறிப்பா தாந்த்ரீகயோக

சாதனைகளை பகலிலே பண்ணவேகூடாது. உபாசனை விபாசனை இரண்டுக்குமே ராத்ரிதான் உசிதமானது. பகலிலே அர்ச்சனை பஜனை மட்டும்தான் செய்யலாம். இது சாஸ்திரம். அனுபவத்திலே இருந்து நம்ம முன்னோர்கள் தெரிஞ்சுகிட்ட விஷயம்...” நான் அதற்கும் தலையசைத்தேன். இந்த இருநாட்களிலும் நான் ஒரு மாபெரும் கனவுக்குள் நழுவி நழுவி சென்றுகொண்டே இருப்பதாக எனக்குத் தோன்றியது.

”வெல், நெறைய பேசிட்டேன்னு நினைக்கிறேன். நீங்களே எல்லாத்தையும் பாக்கத்தானே போறீங்க...கமான். ஏதாவது சாப்பிடுங்க. நான் சில வேலைகளை முடிக்கவேண்டியிருக்கு” என்றபடி பிரசண்டானந்தா எழுந்தார். நான் எழுந்தேன். பிரசண்டானந்தா வெளியே சென்றதும் உதயபானு உள்ளே வந்து ”அப்போ, லெட் அஸ் ஹேவ் எ மீல்” என்றார். ”எந்தா ஸ்வாமி இந்நு ஸ்பெஷல்?” ”எவ்ரிதிங் இஸ் ஸ்பெஷல் ஹியர்...கமான்” என்று சிரித்து ”வரூ” என்று என்னிடம் சொன்னார்.

நாங்கள் அவரை பின்தொடர்ந்து சென்றோம். வெளியே வட்டவடிவமான குடில்கள் நடுவே நிலாவெளிச்சம் பரவ ஆரம்பித்திருந்தது. தென்னைமரத்தின் ஓலைநிழல்கள் தரையெங்கும் அசைந்தன. குடிசைகளுக்குள் இருந்து வாசல்கள் வழியாக மென்மையான செவ்வெளிச்சம் தரையில் விரிப்புபோல விழுந்துகிடந்தது. குடில்களுக்குப் பின்பக்கம் நீளமான குடில்தான் உணவுச்சாலை. அங்கே நான்கு அரிக்கேன் விளக்குகள் எரிந்தன. நாங்கள் உள்ளே நுழைந்ததும் உள்ளிருந்து ஒரு வெள்ளைக்கார மாது எட்டிப்பார்த்து ‘ஹாய் கம்லா” என்றார். ‘ஹாய்” என்றபின் கமலா என்னிடம் ”திஸ் இஸ் லிஸ்” என்றார். லிஸ் பழுப்புநிறப் பற்களைக் காட்டி சிரித்து ”ஹாய்” என்றார். அவருக்கு நடுவயதிருக்கும். நீளமான கழுத்தும் நீளமான முகமும் சாம்பல்நிறமான குட்டைமயிரும் கொண்டவர். மிகமெல்லிய உதடுகள், சற்றே மேலேந்திய சிறு மூக்குக்கு இருபக்கமும் சருமம் சிவப்பாக தீய்ந்திருந்தது.

கமலாவும் உதயபானுவும் லிஸ்ஸ¤டன் உள்ளே சென்றார்கள். நானும் மேனனும் அங்கே கிடந்த மேஜைக்குப்பின் அமர்ந்துகொண்டோம். முரட்டு மரத்தாலான மேஜை . அமர்வதற்கு பெஞ்சு. மேனன் புன்னகையுடன் ”ஐ திங் யூ ஆர் கன்·ப்யூஸ்ட்” என்றார். நான் புன்னகைத்து ”கொஞ்சம்” என்றேன். ”எனக்கு இந்த தியானம், யோகம், உபாசனா எதிலேயும் நம்பிக்கை இல்லை. ஆனா இது ஒரு செண்டர். இங்கே நிறையபேர் வராங்க. எல்லாருமே எங்களைமாதிரி லை·ப்ஸ்டைல் உள்ளவங்க...”என்றார் ”அதோட கமலாவுக்கு இந்த யோகசாதனைகளிலே நம்பிக்கை இருக்கு. வீட்டிலே தினமும் என்னென்னமோ தியானம்லாம் பண்றா...” என்று சிரித்தார்.

கமலா உள்ளிருந்து இரு பீங்கான் தட்டுகளுடன் வந்தார். ''இந்நு லிஸ் குக் செய்திரிக்குந்நு... இத்தலியன் ஐட்டமா'' என்றார். கொழகொழவென்று சிறிய வெண்குழாய்களை சரிவாகச் சீவியதுபோல மாவுத்துண்டுகளும் தக்காளியும் பச்சைமிளகாய் போட்டு ஒரு தட்டு நிறைய மகரோனி வந்தது. நான் சாப்பிட்டிருந்த மகரோனியின் சாயலேதும் இல்லை. ஒரு வகை கேரள மகரோனி. ஸ்பூனால் சிறிது எடுத்து வாயில்போட்டேன். ஒரு சிறிய கொழகொழப்பு இருந்தாலும் நன்றாகத்தான் இருந்தது. ''வெஜிட்டேரியன்'' என்றார் லிஸ். நான் ''நைஸ்'' என்றேன். லிஸ் ''தேங்க் யூ'' என்றார்.

''லிஸ் ஒரு டீச்சர். இத்தலியிலே ஒரு நைட் ஸ்கூலிலே வேலைபாக்கிறாங்க. அங்கே நைட்லே முழிச்சிருந்து அப்டியே பழகிட்டாங்க. வெகேஷனுக்கு இங்கே வந்திடுவாங்க'' என்றார் கமலா. ''இங்கே நெறைய வெள்ளைக்காரங்க இருக்கிறாங்களா?'' ''ஸ்திரமா அதிகம் பேர் இல்லை. ஆனா நெறையபேர் வந்திட்டுபோவாங்க. ஸீ, இது ஒரு பெக்கூலியர் லை·ப்ஸ்டைல் உள்ள ஆசிரமம். இதுமாதிரி வேறே ஏதும் இல்லை இல்லியா?'' ''ஆமாம்'' என்றேன்.

லிஸ் குடிப்பதற்கு பால்விட்ட டீ கொண்டுவந்தார். ஆனால் டீயின் மணம் இல்லை. ''இது டீ இல்லை'' என்று கமலா சிரித்தார். ''செஞ்சந்தனம், கிராம்பு, சர்க்கரை எல்லாம் போட்டு செய்ற ஒரு ஆயுர்வேத பானம்...ரத்தத்தை சுத்தம்பண்ணும். லங்ஸ¤க்கு நல்லது'' என்றார். மேனன் என்னைப்பார்த்து ரகசியமாகக் கண்ணடித்தார். ஆசிரமத்திற்குள் வந்தது முதலே கமலா உற்சாகம் மிக்க இளம்பெண் போல ஆகிவிட்டதைக் கவனித்தேன். அத்தனை உரக்கவும் உயிர்த்துடிப்புடனும் அவர் பேசி நான் கவனித்ததில்லை.

''கம்லா'' என்றபடி வெண்ணிற குர்தா அணிந்த உயரமான மனிதர் உள்ளே வந்தார். ஆங்கிலத்தில் ''நீ வந்ததை கேள்விப்பட்டேன். லைப்ரரியிலே இருந்தேன், அந்த பெயிண்டிங் காப்பி கெடைச்சுதா?'' என்றார். கமலா ''அடடா, மறந்தேபோனேன். அடுத்தமுறை கண்டிப்பாக கொண்டுவருகிறேன் . ஸாரி முகர்ஜி சார்.'' என்றபின் திரும்பி ''இது அதீந்த்ரியநாத் முக்கர்ஜி.. முக்கர்ஜி சாப், இது சரவணன். எங்கள் புதிய நண்பர்'' என்று அறிமுகம் செய்தார்.

முகஞ்ி வலுவான பெரிய கையை நீட்டி என் கைகளைக் குலுக்கினார் . ''நீங்கள் என்ன செய்கிறீர்கள்?'' ''நான் ஆடிட்டராக இருக்கிறேன்'' என்றேன். சரிதான் என்பது போல கையை அசைத்து ''எனக்கு ஆடிட்டர்களில் ஆர்வமில்லை. என்னிடம் பணமில்லை'' என்றபின் ''என்ன மேனன், எப்படி இருக்கிறீர்கள்?'' என்றார்.

மேனன் ''நீங்கள் இன்னமும் குண்டாகிவிட்டீர்கள்'' என்றார். ''நிஜமா? நான் தினமும் கடற்கரையில் எட்டுகிலோமீட்டர் நடக்கிறேனே'' என்றார் முக்கர்ஜி.

”நீங்கள் ஏன் வெண்ணைசேர்க்காத சப்பாத்தி சாப்பிடக்கூடாது?” என்றார் மேனன். ”ஓ, என்னால் சாப்பாட்டில் சமரசம்செய்துகொள்ள முடியாது” என்ற முக்கர்ஜி ”வாருங்கள், நான் என் புதிய பெயிண்டிங்கைக் காட்டுகிறேன்” என்றார். மேனன் எழுந்து தட்டை உள்ளே கொண்டு சென்று தொட்டியில் போட்டார். நானும் பின்னால்சென்று பாத்திரத்தை கழுவ ஆரம்பித்தேன்.

உதயபானு என்னருகே வந்து ”நோ..யூ ஆர் அவர் கெஸ்ட்” என்றார். நான் சிரித்துக்கொண்டு ”ஸாரமில்ல” என்றேன். மேனனின் தட்டையும் கழுவி வைத்தேன். நானும் உதயபானுவும் மட்டும் ஆனபோது அவர் சட்டென்று சிரிப்பு அணைந்து ”மிஸ்டர் சரவணன், நிங்ஙள் இந்த கேங்கிலே சேர்ந்நு எத்ர நாளாயி?” என்றார். நான் ஆச்சரியத்துடன் ”ரெண்டுநாள்தான்” என்றேன். ”விட்டுட்டு ஓடிக்கோ…இதிலே இரிக்காதே…திஸ் இஸ் எ வெரி டேஞ்சரஸ் கேம்” என்றார் உதயபானு. நான் அச்சத்துடன் அவரது மீசையில்லாத நீள முகத்தையே பார்த்தேன். தீவிரத்தால் வெறித்த கண்களுடன் ”நீ நசிச்சு போகும்…ஜீவிதம் நாசமாகிப்போகும்..ரெக்ஷப்பெட்டோ…ஓடிக்கோ” என்றார் உதயபானு

லிஸ் உள்ளே வந்ததும் சட்டென்று உதயபானு திரும்பி வெளியே சென்றுவிட்டார். நான் பிரமை பிடித்து சிலகணங்கள் அப்படியே நின்றேன். வெளியே கமலா ”சரவண்..ஆர் யூ கமிங்?” என்றார். ”எஸ்” என்றேன்

# இரவு 7

**எந்தப்பகலிலும்**

**இரவு இருந்துகொண்டிருக்கிறது**

**ஒவ்வொன்றுக்கும் கீழே அழுந்தி**

**ஒவ்வொன்றுக்கும்பின்னால் பதுங்கி**

**மௌனமாக காத்திருக்கிறது.**



வெளியே முக்கர்ஜியின் உரத்த குரல் ஒலித்தது. நான் வெளியே சென்றபோது நிலவொளியில் மூவரும் கூடி நின்றுபேசிக்கொண்டிருந்தார்கள். முக்கர்ஜி மேனனைவிடவும் அரையடி உயரம். அவரது குர்த்தாவை சராசரி உயரமுள்ள ஒருவர் அணிந்தால் அது பாதிரிமார் அங்கி போல ஆகிவிடும். எதையுமே மிதமிஞ்சிய ஆர்வத்துடன் கையசைவுகளுடன் பேசுபவர். வாழ்நாள் முழுக்க தன்னைவிட குள்ளமானவர்களிடம் பேசியதனாலேயே சற்றுக் குனிந்து பேசுபவராக ஆகிவிட்டிருந்தார். தோள்களுக்குப் பின்னால் ஒரு சிறு கூனல்.

நான் அருகே சென்றபோது ”ஒன்று சொல்கிறேன்.. இந்தப்பிரபஞ்சத்தில் இருக்கும் ஒரே உண்மையான நிறம் சிவப்புதான். மற்ற நிறங்கள் எதிலும் உயிரே இல்லை. சிவப்பில் மட்டும்தான் உயிர் இருக்கிறது...உயிர் என்றால் அது எரியவேண்டும். தீ மாதிரி ரத்தம் மாதிரி...இதோ வந்துவிட்டார்” என்றபின் என்னிடம் ”என்ன முகம் பதறிப்போய் இருக்கிறது? என்னுடைய பேச்சைக்கேட்டாலே இப்படி பயப்படுகிறாய். என் ஓவியத்தைப் பார்த்தால் என்ன ஆகும்?” என்றார் சிரிக்காமல். நான் பலவீனமாக புன்னகைசெய்தேன். ‘கமான்...லெட் அஸ் மூவ்”

பேசிக்கொண்டே நடந்து குடிசைகளைக் கடந்து உள்ளே சென்றோம். உயரமான ஒரு வட்ட வடிவக்குடிசைக்கு வாசலில் விளக்கொளியில் செவ்வண்ணத்தில் ஒளிவிட்ட திரைச்சீலை தீக்கொழுந்து போல கடற்காற்றில் படபடத்தது. குடிசைக்குள் பெருஅதோர் தீக்குண்டம் எரிவது போல. அந்த தீக்குள் புகுவது போல முக்கர்ஜி உள்ளே சென்றார். என்னிடம் ”கம் இன் ...திஸ் இஸ் மை ஸ்டுடியோ” என்றார். மேனனும் கமலாவும் உள்ளே நுழைந்த பின்பு நான் நுழைந்தேன்.

உள்ளே வட்டவடிவமான மண்சுவர்களில் நிறைய ஓவியச்சட்டங்கள் தொங்கின. எல்லா ஓவியங்களும் முதற்கணத்தில் ஒரே ஓவியத்தின் நகல்களாக எனக்குப்பட்டன. கொஞ்சம் கவனித்தபின்னர்தான் அவை வெவ்வேறு ஓவியங்கள் என்று பட்டன. அனைத்துமே பெண்முகங்கள். வெவ்வேறு பெண்கள். முகங்களின் கோணங்களும் வண்ணக்கலவைகளும்கூட வேறு வேறு. ஆனாலும் அவையெல்லாம் ஒரே ஓவியம் என்று ஏன் தோன்றுகின்றன என்று எனக்குப் புரியவில்லை.

ஓவியங்களைப் பார்த்துக்கொண்டு மெல்ல சுற்றி வந்தேன். அறைநடுவே பெரியதோர் ஸ்பிரிட் விளக்கின் சுடர் மெல்ல படபடத்துக்கொண்டிருக்க அந்த ஒளியில் ஓவியத்திரைகள் அந்திமேகங்கள் போல செம்பிழம்பாக இருந்தன. அந்திமேகங்களைச் சொல்ல நல்ல ஒரு சொல் உண்டே… நினைவுக்கு வரவில்லை. எல்லா ஓவியங்களும் சிவப்பின் பேதங்களால் ஆனவையாக இருந்தன. அழுத்தமான தூரிகைத்தடங்களுடன் கூடிய இம்ப்ரஷனிச பாணி ஓவியங்கள்.

ஜ்வாலாமுகி – நினைவில் வராமலேயே சட்டென்று நாவில் வந்துவிட்டது. சுவாலைக்கு முகம் காட்டியவள். சுவாலையே முகமாக ஆனவள். எல்லா பெண்களும் எரியும் தீயின் முன் நிற்பதுபோல — ஆம், அதுவும் தெரிந்துவிட்டது. அத்தனை பெண்களும் தீயை அல்லது அந்தியொளியை முகத்தில் ஏந்தும் கோணத்தில் இருந்தார்கள். கண்களில் கன்ன வளைவுகளில் ஒளி பளபளத்தது. அத்தனை பெண்களும் எரிந்துகொண்டிருந்தார்கள். ஆம், அத்தனை முகங்களிலும் உக்கிரமான கோபமோ குரோதமோ வெறியோ ஏதோ இருந்தது.

”என்ன, ஓவியங்கள் பிடித்திருக்கின்றனவா?” என்றார் முக்கர்ஜி. நான் மெல்ல புன்னகைத்து ”எனக்கு ஓவியம் பற்றி எதுவுமே தெரியாது…” என்றேன். ”அது ரொம்ப நல்லது…உனக்கு என்ன தோன்றுகிறது?” நான் ”பயமாக இருக்கிறது” என்றேன். ”ஏன்?” என்றார். ”ஏதோ துர்தேவதைகள் போல இருக்கிறார்கள் இந்தப்பெண்கள்…” அவர் ”வாவ்!” என்றபின் கமலாவிடம் ”பார்த்தாயா கமலா?” என்றார். நான் ”ஏன்?” என்றேன். கமலா, ”இந்த சீரியலோட பொதுத்தலைப்பே ‘யக்ஷிகள்’தான்” என்றார். நான் முகம் மலர்ந்து ”அப்படியா?” என்றேன்.

முக்கர்ஜி ”யக்ஷிகளின் நிலம் இந்த கேரளம். நான் அதற்காகவே இங்கே வந்தேன். யக்ஷிகளைச் சந்திக்கத்தான் இரவில் வாழ ஆரம்பித்தேன். பதினெட்டுவருடங்களாக இந்த யக்ஷிபூமியில் யக்ஷிகளை தேடி அலைகிறேன்…” என்றார். நான் மீண்டும் ஓவியங்களைப் பார்த்தேன். அவர்கள் எல்லாருமே சாதாரண குடும்பப் பெண்கள் போலத்தான் தோன்றினார்கள். ”நீ நினைப்பது சரிதான்”என்றார் முக்கர்ஜி ”அவர்கள் எல்லாருமே சாதாரணமான

பெண்கள்தான்...யக்ஷி என்பது ஒரு ஆளுமை அல்ல. ஒரு தருணம்தான். எல்லா பெண்ணும் ஏதோ ஒருதருணத்தில் யக்ஷியாக ஆகி திரும்பி வருகிறாள்...."

"இது அதீன் எப்பவுமே சொல்ற ஒரு சூத்திரம்....எல்லா பெண்களும் இவருக்கு எதிரே வர்றப்ப பக்கத்தில வந்ததும் ஒரு யக்ஷிப் புன்னகையை காட்டிட்டுபோறாங்க. ரெண்டு கோரைப்பல்லும் ரத்தநாக்குமா..." என்றார் மேனன். "ஷட் அப் யூ ஓல்ட் பாஸ்டர்ட்" என்றார் முக்கர்ஜி நட்பாகச் சிரித்தபடி. நான் "ஏன் யக்ஷியை வரைகிறீர்கள்?" என்றேன்.

முக்கர்ஜி சிந்தித்து "இந்தக் கேள்விக்கு நான் ஒவ்வொரு முறையும் ஒரு பதிலைச் சொல்வது வழக்கம். இந்த முறை உனக்காக யோசிக்கிறேன்..."என்றார். பிறகு "பகல் ஒரு பெண் என்றால் இரவு ஒரு யக்ஷி ..அதனால்தான்" என்றார். நான் "புரியவில்லை..." என்றேன். "இதுக்குமேல் என்னால் சொல்ல முடியாது. நான் வரைந்து காட்டுகிறேன்"என்றார். மேனன் "இதேமாதிரி இன்னொரு மாடர்ன் ஆர்ட்டை வரைவார். அதற்கு உரையாக இன்னொன்றை வரைய வேண்டியிருக்கும்" என்றார்.

வெளியே நிதானமாக மணி அடிக்க ஆரம்பித்தது. "அதற்குள் ஆரம்பித்துவிட்டார்களா?" என்றார் முக்கர்ஜி. நான் நேரத்தைப் பார்த்தேன். மணி பதினொன்றரை. அந்த அறைக்குள் மேஜை நாற்காலி கட்டில் ஏதும் இல்லை. ஒரு உறக்கப்பை மட்டும் இருந்தது. ஒரு பெரிய சூட்கேஸ். முக்கர்ஜிக்கு சொந்தமாக ஏதும் உடைமைகள் இல்லை என்று எண்ணிக்கொண்டேன்.

"கமான்...லெட் அஸ் மூவ்" என்று முக்கர்ஜி என் தோளில் கையை வைத்தார். கனமான பெரிய கை. பெரிய மூக்கும் பெரிய கண்களும் பெரிய உதடுகளுமாக ஒரு சராசரி மனிதனை கொஞ்சம் 'புளோ அப்' செய்தது போல இருந்தார். "நீங்கள் சாந்தி நிகேதனில் படித்தீர்களா?" என்றேன். "எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டு "கமலா?" என்றார். மேனன் "முட்டாள், ஒரு ஓவியம் வரையும் வங்காளியிடம் அப்படிக் கேட்காவிட்டால்தான் ஆச்சரியம்" என்றார். "ஏன், வங்காளத்தில் எத்தனை ஓவியப்பள்ளிகள் இருக்கின்றன..." என்றார் முக்கர்ஜி "இருக்கலாம். இங்கே தெரிந்தது சாந்தி நிகேதன் மட்டும்தானே?"

குடிசைகளுக்கு நடுவே இருந்த அந்த உயரமான கட்டிடத்தையும் குடிசை என்றுதான் சொல்லவேண்டும். கூம்பாகச் சரிந்த கூரைப்பரப்பை அதிகரிப்பதற்காக அதை ஒன்றுமேல் ஒன்றாக இரண்டு அடுக்காக கட்டியிருந்தார்கள். நாங்கள் சென்றபோது ஒருவர் ஒருவராக பலர் அங்கே வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள். இரு வெள்ளைப்பெண்மணிகள் குட்டைப்பாவாடையும் டி ஷர்ட்டும் அணிந்தவர்களாக குனிந்து வந்தார்கள்.

ஒரு வெள்ளைய இளைஞனும் அவன் தோழியும். இருவருமே டிஷர்ட்டும் ஷார்ட்ஸ¤ம் அணிந்திருந்தார்கள். இருவருமே அண்ணன்தங்கைகள் போல ஒரே வகையான மெல்லிய உடல்வாகும், ஏந்திய மூக்கும், கீறல்போன்ற உதடுகளும் கொண்டிருந்தார்கள்.

நாலைந்து நடுவயதுச் சாமியார்கள் காவியுடையும் அடர்ந்த தாடியுமாக வந்தார்கள். இரு நரைத்தாடி சாமியார்கள் அவர்களுக்குப்பின்னால். அனைவருமே முற்றிலும் மௌனமாக கனவில் நடப்பவர்கள் போல வந்து அக்கட்டிட வாசலில் வைக்கப்பட்டிருந்த பெரிய வெண்கல பாத்திரத்தில் இருந்து நீரை அள்ளி கால்களைக் கழுவியபின் உள்ளே சென்று அமர்ந்து கொண்டார்கள்.

கால்கழுவி உள்ளே செல்லுமிடத்தில் அடர்சிவப்பு நிறத்தில் மெத்தைபோல கால்துடைக்க திண்டு போடப்பட்டிருந்தது. உள்ளே துல்லியமான வட்டவடிவ அறைக்கு நடுவே ஒரு தூக்கு விளக்கு தொங்கியது. கடற்காற்றில் அணையாமலிருக்க கண்ணாடிக்குழல் போடப்பட்ட பாரம்பரியமான வெண்கல விளக்கு அது. உள்ளே செஞ்சுடர் ஓர் ஒற்றைத்தாமரை இதழ் போல அசையாமல் நின்றது. அந்த விளக்கின் சங்கிலி செங்குத்தாக ஒரு கோடுபோல அந்தரத்தில் எழுந்து மிக உயரத்தில் அந்தக்கூடத்தின் வட்டக்கூரையின் நட்ட நடுப்புள்ளியில் சென்று இணைந்தது.

அறையின் வடக்கு பக்கம் சுவர் ஓரமாக தரையில் மிகப்பெரிய வண்ணக்கம்பளம் ஒன்று கிடந்தது. நான் அமர்ந்த பின்னர்தான் அது கம்பளமல்ல வண்ணப்பொடிகளால் வரையப்பட்ட ஒரு ஓவியக்கோலம் என்று புரிந்துகொண்டேன். கரியாலும் செவ்வண்ணங்களாலும் வெண்ணிறமான மாவாலும் வரையப்பட்ட அந்த ஓவியம் மனித, தாவர மிருக வடிவங்கள் ஏதுமில்லாததாக இருந்தது. பலவகையான ஜியோமிதி வடிவங்கள் மட்டுமே. முக்கோணங்கள் அறுகோணங்கள் சதுரங்கள் . வெளியே சதுரவடிவ விளிம்புகளுடன் ஆரம்பித்து கணிதவடிவங்களாலான சுழல்களாக மையம்நோக்கிச் சென்று ஒளிவிடும் வெண்புள்ளியில் முடிந்தது. பலவகையான கோடுகள் ஒன்றையொன்றை வெட்டுவதன் மூலம் அந்த வடிவங்கள் உருவாகின்றன என்று பட்டது. கோடுகளைப் பார்த்தபோது வடிவங்கள் மறைந்தன. கோடுகள் ஓடிக்கொண்டிருப்பதுபோலப் பிரமை எழுந்தது.

அந்த ஓவியக்கோலத்திற்கு அப்பால் ஒரு பெரிய வெண்கலத்தாம்பாளம் வைக்கப்பட்டிருந்தது. அதில் நன்றாக துலக்கப்பட்ட ஒரு வெண்கலக் கலசம். அதைச்சுற்றி உதிரச்சிவப்பான மலரிதழ்கள் குவிக்கப்பட்டிருந்தன. வேரு பூசைப்பொருட்கள் ஏதுமில்லை. அதனருகே ஒரு மலரிதழ் வடிவிலான

மரப்பலகை. அறைக்குள் நுழைந்தவர்கள் ஒவ்வொருவராக சுவரோரமாக இருந்த பிரம்புநிலைகளில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த அலங்காரக் கோரைப்பாய்களை எடுத்துப் பிரித்துப் போட்டு அமர்ந்து கொண்டார்கள். நான் அந்த கோலத்தின் வடிவச்சிக்கலையே கண்களால் பின்தொடர முயன்றபடி இருந்தேன். என் பார்வையை அது மீண்டும் மீண்டும் ஏமாற்றியபடி இருந்தது.



கூடத்திற்குள் கனமான மௌனம் நிலவியது. எவரும் இருமவோ அசையவோகூட இல்லை. அங்கே எவருமே இல்லாமலிருப்பது போலிருந்தது. நான் கடிகாரத்தைப் பார்த்தேன். பன்னிரண்டுக்கு பத்துநிமிடம். எனக்குப் பசிப்பதுபோல் இருந்தது. லிஸ் வந்து என்னை புன்னகையில்லாமல் கண்சந்தித்துவிட்டுச் சென்று அமர்ந்துகொண்டாள். அங்கே என்ன நடக்கப்போகிறது என்று எனக்கு தெரியவில்லை. ஒரு பூஜையா? ஆனால் பூஜைக்கான விரிவான ஏற்பாடுகள் எவையும் என் கண்ணுக்குத் தென்படவில்லை. காத்திருக்கும்தோறும் காலம் மிகமெல்ல கணங்களாக, அணுக்கணங்களாக, நகர ஆரம்பித்தது.

வெளியே மணியோசை கேட்டது. சங்கு ஊதும் ஒலி. கிழக்கு பக்கத்து வாசல் வழியாக நிழல்கள் முதலில் வந்தன. நிழலைத் தொடர்ந்து வருபவர் போல மொட்டை போட்டு ரத்தச்சிவப்பான வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்த நடுவயதான மனிதர் கையில் சிறிய தட்டுமணியுடன் வந்தார். சீராக அதை அடித்தபடியே வந்து வடக்கு எல்லையில் இருந்த பீடம் நோக்கிச் சென்றார். அவர். அவருக்குப் பின்னால் பிரசண்டானந்தா கையில் ஏழு திரி சுடர் கொண்ட பித்தளை விளக்குடன் குருதிச்சிவப்பான ஜிப்பா வேட்டி அணிந்து நடந்து அவர அவருக்குப்பின்னால் அதே போன்ற ஆடை அணிந்த இன்னொரு மொட்டை மனிதர் வந்தார். பிரசண்டானந்தாவின் முகம் அந்த விளக்கொளியில் தாடி தழல் போலச் சுடர உக்கிரமாக தெரிந்தது.

பிரசண்டானந்தா நேராகச்சென்று அந்த மரப்பலகையில் அமர்ந்து விளக்கை தாம்பாளத்தின் முன்னால் வைத்தார். சங்கு வைத்திருந்தவர் கடைசியாக ஓங்காரமாக ஊதி நிறுத்தியபின் சங்கை தாம்பாளத்தின் அருகே வைத்துவிட்டு மையவிளக்கருகே வந்து அதன் கண்ணாடியை தூக்கி திரியை இழுத்து அணைத்தார். கூடம் இருண்டு அந்த ஏழுசுடர்களின் அசையும் ஒளி மட்டும் கண்ணுக்குள் பெய்தது. மணி அடித்தவர் மணியை அடித்துக்கொண்டே இருந்தார். அதன் வேகம் அதிகரித்தது.

பிரசண்டானந்தா பத்மாசனத்தில் கண்மூடி அமர்ந்ததும் மணியோசையை நிறுத்தி மணியை கீழே வைத்துவிட்டு அவரும் விலகி நின்றுகொண்டார். மணியோசை நின்றாலும் அதன் ரீங்காரம் பிரக்ஞையில் நீடித்தது. அந்த ரீங்காரமே மௌனமாக நீண்டது. ஆழ்ந்த மௌனத்தில் நான் கடலோசையைக் கேட்க ஆரம்பித்தேன். கடல் நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருப்பது போலிருந்தது. கூடத்திற்கு வெளியே படிகளில் அலைகளின் விளிம்பு பரவிச்செல்லும் ஒலி கேட்பது போல. பிரசண்டானந்தா கண்களைத் திறந்து ஏழுசுடர்களின் ஒளியை தன் வளைவுகளில் பிரதிபலித்துக்கொண்டிருந்த கலசத்தையே உற்று நோக்கினார். பின்பு கணீரென்ற குரலில் பாட ஆரம்பித்தார். நான் கடிகாரத்தைப் பார்த்தேன், மிகச்சரியாக பன்னிரண்டு மணி.

பிரசண்டானந்தாவின் குரல் பெரும்பாலான மலையாளப்பாடகர்களைப் போல ஜேசுதாஸின் உச்சரிப்புடன் அவரது குரலை நினைவூட்டுவதாக இருந்தது. சம்ஸ்கிருதச் சொற்களுக்கு அவற்றுக்கே உரிய அழுத்தங்களை அளித்துப் பாடுவதில் ஜேசுதாஸ் நிபுணர் என்று நினைப்பதுண்டு.மாது ஏதோ சுலோகம். வேதபாடலா? ஆனால் வேதங்களை பாடும் வழக்கமான உச்சரிப்பு இல்லை. ஓங்கி எழுந்து அலையலையாக அடங்கும் உச்சரிப்பு. சங்கராபரணம் என்று தோன்றியது. விதவிதமான மனப்பிம்பங்களை அளித்தபடி அந்தப் பாடல் ஒழுகிச்சென்றது. நான் என் இளமைப்பருவத்து சுற்றுலாப்பயணம் ஒன்றை நினைவுகூர்ந்தேன். ஆந்திராவில், பெண்ணையாற்றின் உற்பத்தியிடத்துக்குப் போயிருந்தோம்.

சம்ஸ்கிருதப் பாடல் முடிந்ததும் கைகூப்பியபடி சற்று நேரம் அமர்ந்திருந்தார் பிரசண்டானந்தா. பின்பு மலர்களை அள்ளி அந்த கலசத்தின் மீது போட்ட படி மந்திரங்களைச் சொல்ல ஆரம்பித்தார். ‘ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ·பட்! ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹா!’ என்பது போன்ற ஒலிகளால் ஆனவையாக அவை இருந்தன. மந்திரங்கள் முடிந்ததும் கைகூப்பி சில நிமிடங்கள் இருந்த பின்பு ‘யா தேவி சர்வ ·பூதேஷ¤ சக்தி ரூபேன சம்ஷ்டிதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:’ என்று ஆரம்பித்த நாமாவளியுடன் மந்திரங்கள் முடிந்தன.

அப்படியே கண்மூடி அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். மொத்தக் கூடமும் அவருக்காகக் காத்திருந்தது. மென்மையான குரலில் ஆங்கிலத்தில் ” தேடுபவர்களே, இதோ மீண்டுமொரு இனிய இரவு மலர்ந்திருக்கிறது…” என்று ஆரம்பித்தார். ”கன்னங்கரிய கூந்தலில் விண்மீன்களைச் சூடி கன்னங்கரிய உடலில் கன்னங்கரிய பட்டாடை அணிந்து ராத்ரிதேவி நம்மிடம் வந்திருக்கிறாள். பகலில் வெந்து கிடந்த நிலம் அவள் பாதம்பட்டு குளிர்கிறது. வேதனை நிறைந்த நெஞ்சங்கள் இனிய கனவுகளால் இளைப்பாறுகின்றன. நோய்கள் சற்றே விலகி நிற்கின்றன. சஞ்சலங்கள் அணைந்து அமைகின்றன. துய பேரருளுடன் அவள் வந்து நம்மை ஆசிர்வதித்திருக்கிறாள்.



நண்பர்களே, நான் சொல்லும் வரியொன்றுண்டு. இரவு ஒரு யானை. யானை எத்தனை அற்புதமான மிருகம். மிருகங்களில் அதற்கு இணையாக ஏதுமில்லை. கன்னங்கரிய பேருடல். அதன் எல்லா அசைவுகளும் அழகே. அது ஒரு மாபெரும் குழந்தை. ஆனால் அந்த மகத்துவத்திற்குள் மதம் ஒளிந்திருக்கிறது நண்பர்களே. மிருகங்களிலேயே யானையைப் பழக்குவதுதான் மிக மிக எளிதானது. ஆனால் ஒருபோதும் முழுமையாக பழக்கிவிடமுடியாத மிருகமும் யானைதான்.

யானைமேல் இருக்கும் மனிதன் உணரும் அகங்காரம் ஒன்றுண்டு. அவன் தன்னை ஒரு மகாராஜாவாக, சிம்மாசனம் மேல் அமர்ந்தவனாக உணர்கிறான்.

அவனறிவதில்லை அவன் மகத்தான அறியமுடியாமை ஒன்றின் மீது அமர்ந்திருக்கிறான் என்று. நம் முன்னோர் அதை உணர்ந்திருந்தார்கள். யானை மறப்பதேயில்லை என்று சாஸ்திரம் சொல்கிறது. யானை மன்னிப்பதேயில்லை என்கிறது. யானைப்பகை என்று அது குறிக்கப்பட்டிருக்கிறது.

இரவு ஒரு யானை. சாமரக்காதுகள் அசைய, கொம்புகள் ஊசலாட, பொதிகள் போல் காலெடுத்து வைத்து மெல்ல நடந்து வரும் யானை. கஜராஜவிராஜிதம் என்று காளிதாசன் சொன்னான். பேரழகியின் நடை யானையின் நடை போன்றது. ராத்ரி தேவியின் நடையல்லவா அது? யானை இதோ நம் வாசலில் வந்து நிற்கிறது. கன்னங்கருமையாக. பேரழகாக. வாருங்கள் அதன் வெண்தந்தங்களைப் பற்றிக்கொள்வோம். அதனிடம் காலெடு யானை என்று சொல்வோம்.ஏறியமர்ந்தால் இந்த உலகையே வென்றவர்களாவோம். ஆனாலும் அது யானை. அறியப்படமுடியாதது. ஏனென்றால் அது காடு. ஊருக்குள் இறங்கிவந்த காடல்லவா யானை? புதர்களின் இருளும் மலைப்பாறைகளின் கம்பீரமும் காட்டருவிகளின் ஓசையும் மலைச்சுனைகளின் குளிரும் கலந்தது யானை...

மெல்ல மெல்ல நான் அச்சொற்களில் இருந்து என் அந்தரங்க உலகை நோக்கிச் சென்றுவிட்டேன். இரவுகளின் நினைவுகள். ஓர் இரவில் நான் புரண்டெழுந்தபோது அருகே அம்மா இல்லை. இருளில் எழுந்து அமர்ந்தேன். சுவர்களும் கூரையும் எல்லாம் மிக அருகே வந்திருந்தன. மிக அப்பால் மெல்லிய இருகுரல்கள் உரையாடிக் கொண்டிருந்தன. அந்த ஒலிக்கு தாளம் போல கடிகாரம் டிக்டிக்கித்துக்கொண்டிருந்தது. நான் நூற்றுக்கணக்கான கண்களால் பார்க்கப்பட்டேன். கண்களை மூடிக்கொண்டு படுத்தபோது என் எண்ணங்களுக்கு தாளமாகியது கடிகாரம்.

நான் எண்ணங்களில் இருந்து மீண்டபோது பிரசண்டானந்தா அவரது உரையின் கடைசிப்பகுதிக்கு வந்திருந்தார். ஒரு கவித்துவமான படிமத்தில் ஏறிக்கொண்டு அடுத்ததற்காக கைநீட்டுவது அவரது வழி என்று தோன்றியது. அந்தப்படிமங்கள் வழியாக அவர் உத்தேசிப்பதைத்தான் சொல்கிறாரா அல்லது அந்தப்படிமங்கள் அவரை யானைபோலச் சுமந்துகொண்டுசெல்கின்றனவா?

கண்களை மூடி "ஓம்! ஸ்ரீம்! ஹும்! ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹும்" என்று முழங்கி கைகூப்பியபின் பிரசண்டானந்தா சட்டென்று எழுந்து திரும்பி வந்தவழியாகச் சென்றார். மொட்டைத்தலை ஆள் கண்ணாடிக்குடுவைக்குள் கைவிட்டு விளக்கை ஏற்றியபோது சுடர் மெல்ல முளைத்தெழுந்தது. கூடவே சுவர்கள் வளைந்து கூரை எழுந்து அந்த அறையும் உருவாகி வந்தது.

இரு மொட்டைத்தலை சாமியார்களும் கூடத்தின் நான்கு பெரிய சன்னல்கதவுகளையும் திறந்தார்கள். கடற்காற்று உள்ளே பீரிட ஆரம்பித்தது. ஏழுதிரிவிளக்கின் சுடர்கள் படபடத்து ஒவ்வொன்றாக அணைந்தன. நீரில் விழுந்த சாயம் கலைந்து பிரிவது போல புகை பிரிந்து எழுந்து காற்றில் கரைந்தது. சன்னல் கதவுகளை குறிப்பிட்ட விதத்தில் சரித்து திறந்து வைத்தபோது காற்று இன்னமும் சீராக வேகமாக கூடத்துக்குள் சுழன்றடித்தது.

சிலகணங்கள் கழித்துத்தான் நான் அதைக் கவனித்தேன். அந்த விசித்திரமான ஓவியக்கோலம் கலைந்து வண்ணத்தூள்கள் ஒன்றுடன் ஒன்று கலக்க ஆரம்பித்தன. ஓவியத்தின் கணிதவடிவங்கள் மழுங்கி மங்கி மெல்ல கரைந்து கலவையான வண்ணத்தூள் சுவரோரமாகக் குவிந்தது. கண்ணெதிரே அந்த ஓவியம் இல்லாமலானது ஒரு கனவு போலிருந்தது.

# இரவு 8



**கங்குல் வெள்ளம்**
**கடலென அலைக்கும்**
**நெஞ்சப்புணை என்**
**கை நழுவிச்செல்லும்**

மௌனமாக திரும்பிக்கொண்டிருந்தோம். காரை இப்போது கமலா ஓட்டினார். ஒற்றுத்தாள் நீரை உறிஞ்சிக்கனப்பதுபோல இரவு ஈரமாகி குளிர்ந்து கனத்துக்கொண்டிருந்தது. இன்னும் சற்றுநேரத்தில் அதிலிருந்து கருமை சொட்டி வடிய ஆரம்பிக்கும். அதன் விளிம்புகள் வெளிற ஆரம்பிக்கும். நான் சன்னலோரத்தில் சுழன்றுசென்றுகொண்டிருந்த தென்னந்தோப்புகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். தென்னைமரங்களின் ஓலைகளை ஒவ்வொன்றாக துல்லியமாகப் பார்க்க முடிந்தது. மரங்களின் உடல்வளையங்களை எண்ணமுடியும் என்று பட்டது. எத்தனை விரைவாக என் கண்கள் இருட்டுக்குப் பழகிவிட்டன!

ஒரு முழுக்கச்சேரி முடிந்தபின்னர் உறையிடாமல் வைக்கப்பட்டிருக்கும் தம்புரா போன்று என் அகத்தை உணர்ந்தேன். ரீங்காரம் அதன் குடத்தில் வளைவுகளில் ஆணிகளில் தந்திகளில் எங்கும் ததும்பிக்கொண்டிருந்தது. கமலா 'இரவுக்கு ஆயிரம் கண்கள்' என்று சீட்டியடித்தார். மேனனைவிடத் திறமையாக கச்சிதமாக அவர் காரோட்டுவதைக் கண்டுகொண்டிருந்தேன். மேனன் முன்னிருக்கையில் அமர்ந்துகோண்டு விளக்கைப்போட்டு ஒரு சிறிய நூலை சரித்து வெளிச்சத்துக்குக் காட்டி வாசித்துக்கொண்டிருந்தார்.

பூஜைமுடிந்து மீண்டும் சமையலறைக்குச் சென்று காய்கறிகளும் ஓட்ஸ¤ம் போட்டு கஞ்சியாக வைக்கப்பட்ட ஓஒர் உணவை குடித்தோம். போர்ட்ரிட்ஜ் என்று லிஸ் சொன்னபடி கண்களைச் சிமிட்டினார். அவர் சமையலில் ஏதோ சோதனைகள் செய்துபார்க்கிறார் என்று நினைத்துக்கொண்டேன். அதன்பின்னர் நூலகத்திற்குச் சென்று முக்கர்ஜியுடன் பேசிக்கொண்டிருந்தோம். முகர்ஜி மூவாற்றுபுழாவுக்கு செல்வதகாச் சொன்னார். அங்கே ஏதோ யட்சியம்பலத்தில் அம்ம ஊட்டு சடங்கு நடக்கப்போகிறது. அவரது நண்பரான கரிமுற்றம் நம்பூதிரி அவரை அழைத்திருந்தார்.

நான் முக்கர்ஜியிடம் சாக்தம் பற்றி பொதுவாக கேட்டேன். அவர் எப்போதுமே விரிவுரை ஆற்றும் மனநிலையில் இருப்பவர் போல. சட்டென்று ஆரம்பித்துவிட்டார். இந்திய மதங்கள் ஆறு. அவற்றில் பெருமதங்கள் மூன்றுதான். சைவம் வைணவம் சாக்தம். சாக்தம் பிரபஞ்சத்தில் அலகிலாத ஆற்றலை கடவுளின் உருவமாக வழிபடுகிறது. ''இரண்டு வகை ஆற்றல்களின் முரணியக்கம்தான் இந்த பிரபஞ்சம். செயலாற்றல். அது ஒரு கருத்து. ஒரு தூண்டுகைக் காரணம், அவ்வளவுதான். அதை சிவம் என்றார்கள். அதனால் உயிர்கொண்டெழுந்து இப்பிரபஞ்சமாக ஆகி விரிந்திருப்பது விளைவாற்றல். நிலையானது அதுதான். அதுதான் படைப்புக்காரணம். அதுதான் சக்தி...''

முகர்ஜி என்னைக் கூர்ந்து நோக்கினார் ''ஏன் சக்தியை மட்டும் வழிபடவேண்டும் என்கிறாயா? இங்கே நாம் காண்பதெல்லாம் சக்தி மட்டும்தான். அறிவதெல்லாம் சக்தியை மட்டும்தான். சக்திதான் எல்லாம். செயலின்மையில் இருந்து சக்தி எப்படி செயலுக்கு வந்திருக்க முடியும் என்று ஊகித்து சிவம் என்ற ஒன்றை அறிய முடியும் அவ்வளவுதான். ஆகவே சக்திதான் மானுடன் அறிந்து உணரக்கூடிய ஒரே முழுமுதல் தெய்வம்...அத்துடன் சிவம் ஏன் இன்னொரு பேராற்றலாக இருக்க வேண்டும்? அதுவேகூட சக்தியின் இன்னொரு முகமாக ஏன் இருக்கக் கூடாது? சக்தியின் ஒரு சிறுதுளியே தன்னை சிவமாக ஆக்கிக்கொண்டு தன்னைத் தூண்டி தன்னைச் செயல்வடிவமாக ஆக்கியது என்றால் அதில் என்ன பிழை இருக்க முடியும்? ஆம், சிவத்தை நீங்கள் மறுத்துவிட முடியும். மறுக்கப்பட முடியாதது சக்தியே. ஏனென்றால் அது கண்கூடானது...''

மந்திரிக்கப்பட்டவனைப்போல நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். தான் சொல்லும் விஷயங்களில் அபாரமான நம்பிக்கை கொண்டவர்களிடமிருந்து மனதை விலக்குவது எளிதல்ல. ”சாக்த மதத்துக்கும் மற்ற மதங்களுக்கும் பெரிய வேறுபாடுண்டு. மற்ற மதங்கள் எல்லாம் ஏதாவது ஒரு கட்டத்தில் உருவாக்கப்பட்டவை. தத்துவம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டவை. சாக்த மதம் அப்படி அல்ல. அது நம்முடைய மனம் சென்று தொடமுடியாத ஆதிப்பழங்காலத்தில் தன்போக்கில் தோன்றியது. தாயிடம்தான் மனிதன் பேரன்பின் அலகிலாத வல்லமையை முதலில் உணர்கிறான். அந்த பேரன்பை எப்போது அவன் இயற்கையில் உணர ஆரம்பித்தானொ அப்போதே சாக்தம் பிறந்துவிட்டது. அப்படி உணார்ந்தவன் ஒரு நியாண்டர்தால் குரங்காகக்கூட இருக்கலாம். உலகமெங்கும் தாய்வழிபாடு பரந்து கிடக்கிறது. லட்சோபலட்சம் அன்னை தெய்வங்கள். தாய்தெய்வங்கள் இல்லாத ஐநூறடி தூரத்து மண்ணை நீங்கள் இந்த பூமியில் கண்டுகொள்ள முடியாது. அன்று கலகாரி பாலைவனத்தை காட்டிக்கொண்டிருந்தார்கள். ஆளில்லாத வரண்ட நிலம். அங்கே ஒரு மரம். அதைச் சுட்டிக்காட்டி புதர்மனிதர்கள் அதை தாய் என்கிறார்கள் என்றான் விவரிப்பாளன். ஆம் தாய் தெய்வம் இல்லாத இடமே இல்லை...”

முகர்ஜி முன்னால் குனிந்தார். வலியுறுத்த விரும்பும் விஷயத்தைச் சொல்ல வரும்போது மெல்ல நம்மை தொடுவது அவரது வழக்கம். அவரது கனத்த கையை என் முழங்கை மேல் வைத்து மேஜைக்கு அப்பாலிருந்து உற்று நோக்கிச் சொன்னார் ” இன்று சாக்தம் என்று நாம் அறிவது இந்தியாவிலிருந்த பல்லாயிரம் தாய்வழிபாடுகளில் சிலவற்றை மட்டும் எடுத்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய வழிமுறை மட்டும்தான். உண்மையான சாக்தம் என்பது இந்திய மண்ணில் விரிந்து பரவிக்கிடக்கிறது. உங்களூரில் பார்த்தேன், ஒரு தெருவில் ஏழெட்டுமாரியம்மன் கோயில்கள். வங்காளத்தில் சொல்லவே வேண்டாம். ஒரு வீட்டு வளைப்புக்குள் நாலைந்து அம்பாதேவி கோயில்கள் இருக்கும். சாக்தம் மானுடனின் இயல்பான ஒரு வெளிப்பாடு. அதில் ஒருபகுதியே சாக்த மதம்...”

மேனன் புத்தகத்தை மூடி காரின் அறைக்குள் வைத்துவிட்டு பெருமூச்சு விட்டார். கார் கடற்கரையை ஒட்டிய சாலையில் சென்றுகொண்டிருந்தது. எங்கள் இடதுபக்கம் வெண்ணிற அலைகள் இருளுக்குள் வளைந்து வளைந்து பின்வாங்கின. நான் காரின் கண்ணாடியை தழைத்தேன். கடற்காற்று ஓர் அருவி போல உள்ளே கொட்டி நிறைந்தது. ஒரு கணம் நுரையீரல் குளிரால் உப்பியது. ”கொஞ்ச நேரம் நின்றுவிட்டு போகலாமே” என்றார் மேனன். கமலா காரை நிறுத்தினார். கதவை திறந்து வைத்துக்கொண்டு கடலையே பார்த்துக்கொண்டிருந்தோம்.

”ஒரு நடைபோய்விட்டு வரலாமா?” என்றார் மேனன். நான் செருப்பை கழற்றிவிட்டு கதவைத்திறந்து மணலில் கால்வைத்தேன். மணலின் மேல்பக்கம் பொருக்காக ஆகி சில்லிட்டிருந்தது. கால் குளிரை நொறுக்கி உள்ளே புதைந்தபோது மணலின் அந்தரங்கம் இளம்சூடாக இருப்பதை உணர்ந்தேன். கமலாவின் முந்தானை சிறகாக எழுந்து பறக்க அவர் அதைப் பற்றி இழுத்து நன்றாக போர்த்திச் செருகிக் கொண்டார். கடலில் இருந்து காற்று வருகிறதா இல்லை கடலுக்குள் போகிறதா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. காற்று பக்கவாட்டில் இருந்து வீசுவது போல அவ்வப்போது தோன்றியது. வானத்தில் பாதிநிலா மேகங்களை சத்தமில்லாமல் கச்சிதமாகக் கிழித்துக்கொண்டு சென்றது.

கடலோரம் சென்று அலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றோம். கடலும் கரையும் சாம்பல்நிறத்தின் பலநூறு அழுத்தவேறுபாடுகளால் வரையப்பட்ட ஓவியம் போல தெரிந்தன. அலை வந்து கரைகழுவிச் செல்லும்போது மணல்சரிவு பளபளத்து, அந்த பளபளப்பு அணைந்து பின்வாங்க , அந்த மென்கதுப்பில் சிறுகுமிழிகள் கண்ணாடிமுத்துக்களாக மின்னி அணைந்து உள்ளிழுக்கப்பட்டு சின்னஞ்சிறு குழிகளாக மாறுவதை பார்க்க முடிந்தது. அலைநுரைகளின் சில சிதறல்கள் ஆங்காங்கே மணலில் கைவிடப்பட்டு சுருசுருவென வற்றி மறைந்தன. தூரத்தி கொத்து முள்ளுடன் ஒரு கடலுயிரியின் ஓடு கிடந்தது. அலை துவண்ட கரைகடலுக்கு அப்பால் பெருங்கடல் கிரானைட் நெளிவுகளாக சென்று தொடுவானின் மாபெரும் கண்ணாடிவில் வளைவை அடைந்தது. வானம் அங்கிருந்து வளைந்தெழுந்து உச்சியில் நன்றாக இருண்டு எங்களை நோக்கி வந்து உதிரி மேகங்களின் கூரையாகிச் சென்று பின்னால் தென்னைமரக்கூட்டங்களுக்கு மேலே பரவி மௌனமாக சரிந்தது.

இருட்டுக்குள் சிறிய பறவைகள் கடல்மீது பறப்பதைக் கண்டேன். அவை நீரில் இறங்கி மோதி தத்தி மேலெழுந்து மீண்டும் இறங்கின. அவற்றின் துடிக்கும் சிறகுகளைக்கூட என்னால் பார்க்க முடிந்தது. பிரமையா இல்லை நான் புதியதோர் கண்ணைப் பெற்றுவிட்டேனா? கரையோரமாக தூரத்தில் ஒரு மனிதன் நடந்து வருவதைக் காணமுடிந்தது. கடலைப் பார்த்துக்கொண்டு குனிந்து ஏதோ செய்தபடி வந்தவன் எங்களைப் பார்த்துவிட்டான். ஒரு கணம் நின்றபின் அருகே நெருங்கி வந்தான். அவன் கரிய உடலில் ஈரம் வழிவதைக் கண்டேன். மார்பின் ரோமங்கள் நீர்வடிய ஒட்டியிருந்தன. முன்வழுக்கையில் மணல்துகள்கள். அவன் நின்று ”ஆரா மேனன் சாரா?” என்றான். மேனன் ”அதேடா…” என்றார்.

அவன் அருகே வந்து நின்று ”கண்டிட்டு குறே நாளாயல்லோ” என்றான். என்னைக்கூர்ந்து நோக்கி ”அதாரு புதிய ஆளு?” என்று கேட்டான். ”இதொரு

தமிழ்நாட்டுகாரன். ஓடிட்டரா" என்றார் மேனன். "ஓ" என்று ஆர்வமில்லாமல் சொன்னபின்பு அவன் கடலோரமாக நடந்து குனிந்து மணலில் நீண்டிருந்த ஒரு கோடை பிடித்து கயிறாக தூக்கி இழுத்து அங்கே இருந்த ஒரு தறியில் கட்டினான். "அவன் பேரு தோமா" என்றார் மேனன். "என்ன பண்றார்?" "சீன தாப்புவலை போட்டிருக்கான். கரையொரமா போடுவாங்க. அப்றம் இழுத்து எடுப்பாங்க. இறாலும் சிப்பியும் கிடைக்கும்" நான் அவர் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

"தோமா வலையை போட்டுவிட்டு இந்த வெளிச்சத்திலே உக்காந்து மலையாள மனோரமா வாசிப்பார்" என்றார் கமலா. "நான் முதலிலே பார்த்தப்ப அப்டியே அதிர்ச்சி ஆயிட்டேன். 'தோமா பத்து வயசிலே இந்த தொழிலுக்கு வந்தாச்சு. பகலிலே கண் திறக்கிறதே இல்லை..." நான் அவரையே பார்த்தேன். இருட்டுக்குள் அவர் கடல்மணலில் சில அடையாளங்களை வைத்தபடிச் சென்றுகொண்டிருதார். "கடலிலே மீனிருந்தா இங்கே நின்று பார்த்து சொல்லுவார்... கடல்மீன் போறப்ப தண்ணி நிறம் மாறுமாம்" என்று கமலா சொன்னார். மேனனிடம் "அவர் உங்க சங்கத்திலே உண்டா?" என்றேன். "ஓ நோ...அவரு வேற மாதிரி... இவரைமாதிரி சீனவலை போடுற நெறையபேர் இருக்காங்க. இவங்களுக்கான ஓட்டல் டீக்கடை எல்லாமே உண்டு. இவங்க வேற ஒரு சங்கம். நாம அதிலே சேரணுமானா நாமும் சீனவலை ரெண்டு வாங்கணும்" என்றார் மேனன்.

கோவிந்தன் திரும்பி செல்லும் வழியில் மேனன் "பொலி உண்டா தோமாச்சா ?" என்றார். தோமா "ஓ என்னா பொலி? மோசம் மேனனே. வளரே மோசம்.. மழை ஒந்நு சாறியால் கொள்ளாம்" என்று சொல்லிக்கொண்டே சென்றார். தூரத்தில் இன்னொரு உருவம் தெரிந்தது. அவர் கைகளை காட்ட தோமாவும் கையசைத்தார். பின்பு அலை ஒன்றில் குதித்து குதிரை மேல் ஏறுவது போல அதில் ஆரோகணித்து உள்ளே சென்று மறைந்தார். "எ பியூட்டிபுல் புர·பஷன்" என்றார் மேனன். உடனே சிரித்துக்கொண்டு 'நாட் ப்ர·பவுண்ட் பட் டீப்" என்றார்.

திரும்பி காரில் வந்து ஏறிக்கொண்டோம். மேனன் என்னிடம் "பிரசண்டானந்தா இன்னிக்குப் பாடிய சம்ஸ்கிருதப்பாடல் என்ன தெரியுமா?" என்றார். நான் தலையசைத்தேன். "இதுக்கு ராத்ரி சூக்தம்னு பேரு. ரிக்வேதத்தில் பத்தாம் மண்டலத்திலே உள்ள எட்டு மந்திரங்கள். சாக்த மதத்தில் இது ஒரு முக்கியமான மூலமந்திரம்" என்றார். "லிஸ் அதை இங்க்லீஷிலே மொழிபெயர்த்து அவளே மியூசிக் போட்டு பாடியிருக்கா" அவர் ஒலிக்கருவியை இயக்க மின்னிக்கொண்டு அது விழித்தது. கித்தாரின் மெல்லிய அதிர்வு. தாளம் நிலையாக ஓட ஆரம்பித்த பின்பு லிஸ்ஸின் குரல் எழுந்தது

இரவெனும் தேவி

எங்கும் நிறைகிறாள்

எல்லாவற்றையும் பார்க்கிறாள்

அனைத்து எழில்களையும்

தன்னுள் ஏந்திக்கொண்டிருக்கிறாள்

அமுதமாகி வந்து

வான்வெளிய நிறைக்கிறாள்.

மேடுகளையும் பள்ளங்களையும்

நிரப்பி வழிகிறாள்.

ஒளியால் இருளை வெல்கிறாள்.

தன் சகோதரி உஷாதேவியை

தன் இடத்திலே நிறுத்திவிட்டு

மெல்ல விடைபெறுகிறாள்.

விலகிற்று இருள்.

அவள் வரும்போது

மரத்திலுள்ள கூடுகளை நோக்கி

பறவைகள் செல்வதுபோல

நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்கிறோம்

அவள் எங்களுக்கு

துணையிருப்பாளாக!

மனை மேவினர் மாந்தர்

மிருகங்களும் பறவைகளும்

விண்ணளக்கும் வேகப்பருந்துகளும்

தங்கள் இடம் தேடிச்சென்றன.

ஓநாய்க்கூட்டங்களை விலக்குக

பசித்த பெண்நாய்களை விலக்குக

ஊர்மிதேவி, இரவெனும் அரசி!

திருடர்களை விலக்குக!

நாங்கள் கடந்துசெல்ல

எளிதானவளாகுக!

எல்லையற்ற வண்ணங்களால்

இருளை எழில்மயமாக்கும் இரவுமங்கை

இன்று வந்திருக்கிறாள்

காலைதேவியே

நீ இருளின் கடன்களை தீர்ப்பாயாக.

இரவே

பேரொளியின் புதல்வியே

இந்த துதிப்பாடல்களை

புனிதமான பசுக்களைப்போல்

உன்னிடம் ஓட்டிவருகிறேன்

வெற்றிகொள்பவனாகிய என்னுடைய

இந்தக் காணிக்கைகளை ஏற்றுக்கொள்க!

லிஸ்ஸின் குரல் ஆழமானதாக இருந்தது. மேலைநாட்டுச் செவ்வியலிசைப்பாடல்களில் எப்போதுமுள்ள மென்மையான நடுக்கம் அந்த செய்யுள்களுக்குச் சரியாகப் பொருந்தி வருவதுபோல. உணர்ச்சிமிகுதியால் ததும்பிக்கொண்டு பாடுவதுபோல. எங்கோ ஒரு அறியாடஹ் நாடில் புல்வெளியின் விரிவில் தங்கள் மந்தைகளை பட்டியில் கட்டியபின் தீமூட்டி சூழ்ந்தமர்ந்து தாடியும் முடியும் நீண்ட புராதன இடையர் சிலர் பாடுவது போல. ஆச்சரியமாக, அந்தப்பாடல் அவர்களை செம்புக்கம்பிச்சுருள் போன்ற மயிர்கள் கொண்ட வெள்ளையர்களாக கற்பனைசெய்ய வைத்தது.

”இங்கே சாக்த பூஜை செய்கிறார்களா?” என்று கேட்டேன். கமலா உத்வேகத்துடன் ”சுவாமி சாக்தர். ஆனால் வழக்கமான சாக்த சம்பிரதாயங்கள் ஏதும் இல்லை. இது முழுக்க முழுக்க வேறுமாதிரியானது. அமாவசையன்று பஞ்சதத்வ பூஜை செய்வார். வேண்டுமானால் இந்த அமாவாசைக்கு நாம் வருவோம்.” என்றார்.

நான் ”பஞ்சதத்துவம் என்றால்?” என்றேன். மேனன் சிரித்துக்கொண்டு ”பஞ்சகாலத்து தத்துவம்...லீவ் ஹிம் அலோன் டார்லிங்” என்றார். நான் புன்னகைசெய்தேன். ”ஸீ இதெல்லாம் நம்மை மாதிரியானவங்கர்களுக்கு வேடிக்கை பார்க்கத்தான் லாயக்கு. அபாரமான நம்பிக்கை இருந்தாத்தான் இதிலெயெல்லாம் இன்வால்வ் ஆக முடியும். கொஞ்சம் தர்க்கபுத்தி இருந்தாகூட நடக்காது. நான் இங்கே உன்னைக் கொண்டுவந்ததே இந்த நைட் சொஸைட்டீஸ் எந்தெந்த வகையிலே எல்லாம் இருக்குன்னு தெரிஞ்சுக்கத்தான்... யூ வாண்ட் மியூசிக்?”

நான் ”ம்” என்றேன். மேனன் மலையாள பாடல்களைப் போட்டார். அவரது ரசனைக்கு ஏற்றபாடல்கள். ‘இந்த்ர நீல பூ சூடி வரும் சுந்தர ஹேமந்த ராத்ரி..’ மேனன் நன்றாகக் காலை நீட்டியபடி ”வயலார் ராமவர்மா எழுதியதிலே எழுபத்தஞ்சு சதவீதம் பாட்டும் ராத்திரியைப்பத்தின பாட்டுதான். ராத்திரி ,நிலா, மேகம் ,காயல், படகு இதான் அவரது கனவுலகம்...நைஸ்” என்றார்.

எனக்கு தூக்கம் வருவதுபோலிருந்தது. காரின் இருக்கையில் தலையச் சாய்த்தேன். சில நிமிடங்கள்தான் தூங்கியிருப்பேன். அல்லது அது தூக்கமே இல்லை, இன்னொரு யதார்த்தம். உதயபானுவின் உறுத்த கண்களுடன்கூடிய முகம் என் முன் எழுந்து வந்தது ”ஓடிக்கோ...நீ நசிச்சுபோகும்...”

நான் திடுக்கிட்டு எழுந்தேன். ”என்ன?” என்றார் மேனன். ”நோ” என்று வாயை துடைத்தேன். ”நைட்மேர்?” ”நோ” மேனன் சிரித்து ”நீ நான்கே முறை குரட்டை விட்டாய்...” என்றார். நான் புன்னகைத்தேன். என்ன ஒரு துல்லியம். நேரில்பார்த்ததைவிட அந்தக் கனவில் உதயபானு இன்னமும் தெளிவாக

தெரிந்தார். வாயைச்சுற்றி அழுத்தமான கோடுகள். கூர்மையான மூக்கின் நிழல் மேலுதட்டில் விழ ஒருசில முடியிழைகள் காற்றில் ஆட அந்த நிழல் முகத்தின் பக்கவாட்டில் அலைய....

கார் மீண்டு நகருக்குள் சென்றது. ”நாம இப்ப வீட்டுக்குத்தானே போறோம்?” என்றேன். ”இல்லை...இங்கே சபரீஷ்னு ஒருத்தர் இருக்கார். ஒரு சிற்பி. அவரைப்பாத்துட்டு விடிகாலையிலே மகாதேவர்கோயிலில் நிர்மால்யம் கும்பிட்டுட்டு திரும்பலாம்னு பிளான்..” என் முகத்தைப் பார்த்துவிட்டு ”ஏன்?” என்றார் மேனன். நான் ”இல்லை, நான் வேணுமானா சிட்டியிலே எறங்கி ஒரு டாக்ஸியிலே போய்க்கறேன்...” ”என்ன?” என்றார் கமலா ஆச்சரியத்துடன் திரும்பி. ”ஒண்ணுமில்லை. நெறைய வேலை கிடக்கு. இப்பதான் நெனைச்சுகிட்டேன்...இப்ப போய் ஆரம்பிச்சா முடிச்சுட்டு கொஞ்சநேரம் தூங்கலாம்” ”ஓ” என்று நம்பிக்கை வராமல் சொல்லி தோளைக்குலுக்கினார் கமலா.

மேனன் ”தென் வி வில் டிராப் யூ அட் தி ஜங்ஷன்...” என்றார் ”டாக்ஸி எப்பவும் கிடைக்கும். ஸாரி, நாங்க வர்ரதா சபரீஷ் கிட்டே சொல்லிட்டோம். அவர் வெயிட் பண்ணுவார்” ”அய்யய்யோ அதெல்லாம் ஒண்ணுமே இல்லை. நீங்க போயட்டு வாங்க” என்றேன். காரில் அதன்பிறகு மௌனம் நிலவியது. நான் ஏதோ சஞ்சலத்துக்கு ஆளாகியிருப்பதை மேனன் புரிந்துகொண்டிருந்தார் என்று எனக்கு நன்றாகவே தெரிந்தது. மௌனத்தை கலைப்பதற்காக அவரே ”இந்த சபரீஷ் ஒரு நல்ல சிற்பி...வெண்கலத்தில் சிற்பம் செய்றான். ஆனா உருக்கி வார்க்கிறதில்லை. பின்பக்கம் தட்டித்தட்டி புடைப்புச் சிற்பமாச் செய்றான்” என்றார். ”எ ரியல் மாடர்ன் ஆர்ட்டிஸ்ட்” என்றார் கமலா ஸ்டீரிங்கை வளைத்து. மேனன் ”ஷ்யூர். ஆனா சிலசமயம் சில சிற்பங்கள் லாரி ஏறிப்போன தாம்பாளம் மாதிரி இருக்கும்” என்றார். ”விஜய்” என்று கமலா அதட்டினார்.

நகரம் தூங்கிக்கொண்டிருந்தது. இருபக்கமும் கடைவரிசைகள் கண்மூடி நெற்றியில் ஒளிரும் விளக்குகளும் நியான் எழுத்துக்களுமாக அமர்ந்திருந்தன. மாபெரும் கட்டிடங்கள் நரம்புகள் புடைத்த அரக்கர்கள் போல நிற்க சாலையில் விளக்கொளி தொடப்படாத சாயம் போல சிந்திக்கிடந்தது. ஜவகர் சாலையில் பாண்டிக்குடி சந்திப்பில் நான் இறங்கிக்கொண்டேன். சாலையின் ஓரமாக மூன்று டாக்சிகள் கிடந்தன. வெண்ணிறமான டாட்டா இண்டிகா வண்டிகள். நான் இறங்கியதும் மேனன் ”டாக்ஸி வருமான்னு கேளு” என்றார். நான் சென்று டாக்ஸியின் சன்னல் வழியாக உள்ளே பார்த்தேன். உள்ளே டிரைவர் சீட்டை நன்றாகப் பின்னுக்குத்தள்ளி தூங்கிக் கொண்டிருந்தார்



நான் அவரை தட்டி எழுப்பினேன். வாயைத் துடைத்துக்கொண்டு ”எந்தா?” என்றார். ”டாக்ஸி வருமா? சாத்தனாட்டுகரை...” என்றேன். ”கேறிக்கோ” என்றபின் ”முந்நூறு ரூபா ஆகும்” என்றார். ”ஓக்கே” என்றபின் மேனனிடம் ”·பைன் அட்மிரல்” என்றேன். ”பை” என்று அவர் கையசைத்துவிட்டு கண்ணாடியை தூக்கினார். கார் சிவப்பு பின்விளக்கு அதிர உறுமி மேலே சென்றது. நான் டாக்ஸிக்குள் ஏறி அமர்ந்து கொண்டேன்.

தூங்கும் மிருகம் ஒன்றின் உடல்வழியாக ஊர்ந்துசெல்லும் பேன் போல நகரில் சென்றது டாக்ஸி. சாலையோரங்களில் வாழைத்தார் தண்டுகளும் காய்ந்த வாழையிலைகளும் கிடந்தன. கான்கிரீட் குப்பைக்கூண்டுகள் நிறைந்து வழிந்தன. புழுதிக்குழிகளில் நாய்கள் முகம் புதைத்து தூங்கின. ஒரு பைத்தியக்காரன் பரட்டைத்தலையும் எண்ணையில் நனைத்ததுபோல அழுக்கு படிந்த சட்டையுமாக ஏதோ சொன்னபடி நடந்து சென்றான்.

கார் ரீக் என்ற ஒலியுடன் நின்று விட்டது. டிரைவர் அதை மீண்டும் மீண்டும் இயக்க அது ரீ ரீக் ரீக் என்று ஒலியெழுப்பி அணைந்தது. ”என்ன?” என்றேன்.

”தெரியல்ல சார்…பாக்கிறேன்…ஒரு நிமிஷம்” டிரைவர் இறங்கி காரின் பானெட்டை திறந்து உள்ளே பார்க்க ஆரம்பித்தான். என்னால் காருக்குள் சும்மா அமர்ந்திருக்க முடியவில்லை. கதவைத்திறந்து வெளியே இறங்கினேன். காற்று இல்லை, ஆனால் நன்றாகவே குளிர்ந்தது. அருகேதான் கடல், ஆனால் எப்படி காற்றடிக்கவில்லை என்று ஆச்சரியமாக இருந்தது.

சாலையோரமாக ஒரு கல்வெர்ட் இருந்தது. அதன் மேல் அமரலாமா என்று பார்த்தேன். சுத்தமானதாகத் தெரியவில்லை. ஆகவே நின்றுகொண்டு வானத்தைப் பார்த்தேன். மேகப்படலம் இருந்ததுபோலும், நட்சத்திரங்கள் கரிய நீருக்குள் கிடந்து மின்னுபவை போலிருந்தன. சில இடங்களில் தெரிந்த சிறிய மின்மினி நடுக்கங்கள் மறைந்து போயின. பெருமூச்சுடன் கடிகாரத்தைப் பார்த்தேன். மூன்று இருபது. எதற்காக திரும்பிவிடலாமென்ற முடிவை எடுத்தேன் என்று தெரியவில்லை. ஏனோ மேற்கொண்டு இந்த இரவை அவர்களுடன் கழிக்கத் தோன்றவில்லை.

அசப்பில் திரும்பியபோது என் ஓரக்கண் ஏதோ அசைவைக் கண்டுகொண்டது.



இருளே அசைந்தது போல. நான் திரும்பி கீழே பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. கண்ணை விலக்கி மீண்டும் பார்த்தபோது அசைவுகள் தெரிந்தன. சற்று குனிந்து கூர்ந்து பார்த்தேன். அந்த ஓடை முழுக்க விதவிதமான குப்பைகளைக் கொட்டியிருந்தார்கள். பாலிதீன் பொதிகள் இலைச்சுருள்கள் காகிதங்கள். அந்தக் குப்பைகள் நடுவே பெரிய பெருச்சாளிகள் மொய்த்துக்கொண்டிருந்தன. பார்க்கப்பார்க்கத்தான் அவை ஏராளமாக இருப்பது என் கவனத்துக்கே வந்தது. இருளுக்குள் ஒரு கொழுத்த கரிய திரவத்தில் அலையிளகுவது போல பெருச்சாளிகள் முண்டியடித்தன. மெல்லிய பிச் பிச் பிச் என்ற ஒலி.

அவற்றில் ஒன்றின் கண்களை சட்டென்று என்னால் பார்க்க முடிந்தது. மறுகணம் அனைத்துப் பெருச்சாளிகளின் கண்களையும் பார்த்தேன். சாக்கடைக்குள் கிடக்கும் உடைந்த கண்ணாடிச்சில்லுகல் போல மெல்லிய

மினுமினுப்புகள். பின்பு ஓடைக்குளும் நிறைய கண்களைப் பார்த்தேன். ஒரு சிறு கடைவீதியின் நெரிசல். ஆம், இந்த நகரத்தின் அடியில் சாக்கடைகளின் வலைப்பின்னல்கள் வளைகள் வழியாக அவை ஒரு பாதாள நகரத்தை உருவாக்கிக்கொண்டிருக்கலாம். பல லட்சம் எலிகள் இருக்கக் கூடும். தலைமுறைகள் தலைமுறைகளாக வாழும் ஒரு இருள் சமூகம்

என் பிடரியை யாரோ தொடுவது போலத் தோன்றி உடல் சிலிர்த்தது. டிரைவர் ''போகாம் சார்'' என்றார் . நான் விரைந்து காரில் ஏறி அமர்ந்து கண்களை மூடிக்கொண்டேன். கண்கள் மின்னும் எலி ஒன்றின் கூரிய முகத்தை கண்டு கண்களை திறந்தேன். தலை சுழல்வதுபோலவும் வாந்தி வருவது போலவும் இருந்தது. கண்ணாடியை திறந்து வெளிக்காற்றை உள்ளே விட்டேன். கண்களுக்குள் சென்ற தெருவிளக்கின் ஒளிகள் உள்ளே ஏதோ நரம்புகளை தீண்டி அதிரச் செய்தன. கண்களை மூடிக்கொண்டாலும் அந்த ஒளிச்சிதறல்கள் நீடித்தன.

# இரவு 9



**எந்த நாளில் எந்த இரவில்**

**இரவின் முடிவின்மையை**

**முதலில் உணர்ந்தேன்?**

**விண்மீன்களும் பால்வீதிகளும்**

**முட்டிமுட்டிப்பால்குடிக்கும்**

**கரிய தாய்ப்பன்றிதான் அதுவென்று**

**எப்போது உணர்ந்துகொண்டேன்?**

அறைக்குள் நுழைந்ததுமே உடைகளைக்கூட மாற்றாமல் அபப்டியே கட்டிலில் விழுந்து தூங்க ஆரம்பித்துவிட்டேன். ஒருமணிநேரம் தூங்கியபின்பு விழித்துக்கொண்டு எங்கிருக்கிறேன் என்று அரண்டு சுற்றுமுற்றும் பார்த்தேன். எலிகளின் ஓசைகள் கேட்டதுபோல் உணர்ந்தேன். எலிகளா? எழுந்து அறையை கூர்ந்து பார்த்தேன். இருளுக்குள் நன் கண்கள் ஒவ்வொரு பொருளாக துல்லியமாக தேடிவந்தன. பின்பு அப்படியே மீண்டும் படுத்து தூங்கிவிட்டேன்.

நான் கண்விழித்தபோது காலை பத்து மணி. புரண்டுப்படுத்து தூங்கவேண்டும் என்று என் உடலும் மனமும் உந்தின. ஒரு கணம் நான் அதற்கு என்னைக் கொடுத்தேன் என்றாலும் உடனே உள்ளத்தால் உடலை உந்தி தூக்கி எழுந்து மெத்தையில் அமர்ந்துகொண்டேன். பெருமூச்சுவிட்டுக்கொண்டு என் அறையை உணர்ந்துகொண்டிருந்தபோதே நேற்று நான் விட்ட இடத்தில் இருந்து சிந்தனை மேலே சென்றது – எலிகள்! எலிகளா? என் அறைக்குள் எலிகள் வர நியாயமில்லை. மறுகணம் அந்தக் காட்சி. எலிகளின் பாதாள நகரம்.



அந்த நினைப்பிலிருந்து தப்ப விழைபவனைப்போல எழுந்து படியிறங்கி கீழே வந்தேன். நான் இறங்கியபோது படிகள் படபடவென ஒலியெழுப்பின. பங்கஜம் உள்ளிருந்து எட்டிப்பார்த்து ஆச்சரியத்தை கணநேரத்திலேயே அடக்கி, ”சாய எடுக்கட்டே?” என்றாள் ”ம்ம்” என்றேன். சோபாவில் சென்று அமர்ந்து கொண்டு நாளிதழை எடுத்து விரித்தேன். அந்த பக்கங்களில் வெறும் கரும்புள்ளிகள்தான் முதலில் தெரிந்தன. கண்களை பலமுறை கொட்டிக்கொண்ட பின்னர்தான் எழுத்துக்களாக அவை ஆயின. பங்கஜம் டீயுடன் வந்தாள். மலையாளிகள் எதற்காகத்தான் இப்படி லோட்டா நிறைய டீ போடுகிறார்களோ தெரியவில்லை. பாதிகுடித்தபின்பு அப்படியே வைத்துவிட்டு எழுந்தேன்.

வெளியே வந்து தோட்டத்தைப் பார்த்தேன். அதிகவெளிச்சத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் போல பளீரென்று வெளிறிக்கிடந்தது தென்னந்தோப்பு. மரநிழல்கள்

நடுவே பீய்ய்ச்சியிருந்த ஒளி சுண்ணாம்புநீரை வீசி வீசிக் கொட்டியது போலிருந்தது. கீழே கிடந்த காய்ந்த தென்னையோலைகள் சாம்பல்நிறமாக, செத்து மட்கிய கால்நடைகளின் விலா எலும்புகள் போலக் கண்களை உறுத்தின. தென்னைமரங்களின் தடியே இந்த அளவுக்கு அசிங்கமான சாம்பல்நிறம் என்பதை அப்போதுதான் கவனித்தேன். ஓலைகள் உதிர்ந்த வடுக்கள் புண்தழும்புகள் போலிருக்க பிரம்மாண்டமான சிலந்தியொன்றின் நூற்றுக்கணக்கான கால்கள் போல அவை நின்றன. முற்றத்தில் மண் மீது தென்னை ஓலைகளின் நிழல்கள் ஆடிய வெயில் வழுவழுப்பான திரவம் போல சிந்திப் பரவிக் கிடந்தது.

மேலே சென்று என் அறைக்குள் நுழைந்து மடிக்கணினியை எடுத்துக்கொண்டு பால்கனிக்குச் என்று அமர்ந்தேன். காலைவெயில் காயலின் மீது பொழிந்து அதன் பிரதிபலிப்பு தென்னைமரங்களின் உச்சியின் ஓலைவட்டத்தின் அடியில் பட்டு அலையடித்தது. வெயிலை சிதறடித்தபடி ஓலைநுனிகள் காற்றில் துடித்தன. காகங்கள் தகரத்தால் தகரத்தை உரசுவது போல சலிக்காமல் ஒலியெழுப்பிக்கொண்டே இருந்தன. நான் கணித்திரையை பார்க்க ஆரம்பித்தபோது கண்கள் கூசி கண்ணீர் வழிய ஆரம்பித்தது. வெயில் என்ற கூச்சமில்லாத அப்பட்டத்தை, அர்த்தமற்ற வெறிச்சிடலை அத்தனை தீவிரமாக நான் உணர்ந்ததில்லை.

எழுந்து என் அறைக்குள் சென்று ஏஸியைப்போட்டுக்கொண்டு விளக்குகளை அணைத்தபின் வேலைசெய்ய ஆரம்பித்தேன். கடிதங்களுக்கு பதில்போட்டேன். சில கணிதப்பக்கங்களை சரிபார்த்தேன். முதுகு வலித்தபோது மல்லாந்து படுத்துக்கொண்டேன். என்ன ஆயிற்று என்ற எண்ணம் பீதியாக ஆகியது. என் கண்களை நான் இழந்துவிட்டேனா? பகல்களை முழுமையாகவே இழந்துவிட்டேனா? இனிமேல் சாதாரணமான வாழ்க்கையே எனக்கில்லையா என்ன? சென்னையின் என் அலுவலகம், கார்கள் உரசிக்கொள்ளும் தெருக்கள், அண்டைவீட்டுக்காரர்கள் எதுவுமே இல்லையா என்ன? எங்கே சென்றுகொண்டிருக்கிறேன்?

இல்லை, இதை இப்படி விடுவதில்லை. எல்லாவற்றையும் இப்போதே விட்டுவிடவேண்டியதுதான். இப்போது முழுதாக மூன்றுநாட்கள்கூட ஆகவில்லை. நான் சற்று அதிகமாகவே உணர்ச்சிகரமாக ஈடுபட்டுவிட்டேன் என்பதுதான் பிரச்சினை. கண்களை இருளுக்குள் உறுத்து உறுத்து பார்த்து பழக்கிக் கொண்டுவிட்டிருக்கிறேன். இன்று ஒருநாளிலேயே நான் என் கண்களை மீட்டு எடுத்துவிட முடியும். சட்டென்று எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு கீழிறங்கினேன். பங்கஜம் ”சாரே, ஊணு காலமாயி” என்றாள். ”வரேன்” என்றி சொன்னபின்பு முற்றத்தில் இறங்கி காயலை நோக்கிச் சென்றேன்.

நான் செய்த பிழை எடுத்ததுமே வெளிச்சத்தைப் பார்த்ததுதான். நிழல்களை மட்டுமே பார்க்கவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகக் கண்கள் பழகட்டும், அதன் பின்பு சாதாரணமாகப் பார்க்கலாம். மரங்களுக்குக் கீழே பரவிக்கிடந்த நிழல்களை மட்டுமே பார்த்துக்கொண்டு குனிந்தே நடந்தேன். கண்களை சுருக்கிக் கொண்டு வெளிச்சம் அதிகம் கண்ணுக்குள் விழாமல் பார்த்துக்கொண்டேன். காயலை ஒட்டி கல்மதில்மேல் அமர்ந்துகொண்டு காயலின் ஓரமான தென்னைமரங்கள் நீரில் நிழல் அலைபாய நின்ற பச்சை இருளையே பார்த்தேன். இளம்காற்று வந்துகொண்டிருந்தது. சிறிது நேரத்தில் கண்களில் இருந்து கண்ணீர் வழிவது நின்றது. கண்களை சாதாரணமாக வைத்துக்கொண்டு பார்க்கலாமென்றாயிற்று

திரும்பி காயலைப் பார்த்தேன். காயலை ஒருபோதும் அத்தனை மூளியாக நான் பார்த்ததில்லை என்று பட்டது. எந்த விதமான அழகுமில்லாத அம்மணம். சாயம்போன இளநீலச்சீலை போல சிற்றலைகளுடன் வெயிலில் விரிந்துகிடந்தது நீர்ப்பரப்பு. ஆப்ரிக்கப் பாசியின் குமிழ்கள் அழுக்குப்பச்சைநிறத்தில் அலைகளில் எழுந்தமர்ந்தன. பொருந்தாத ரத்தச்சிவப்பு நிறமும் மஞ்சள்நிறமும் பூசப்பட்ட ஒரு போக்குவரத்துப் படகு தலைக்குமேல் புகையை கப் கப் என்று துப்பியபடி செல்ல பாசிக்கம்பளம் வளைந்து அமைந்தது. நாலைந்து வெண்கொக்குகள் எதிர்காற்றில் ஏறி சிறகுகள் கலைய பறந்து வந்து பாசிப்படலம் மீது மெல்ல அமர்ந்து ஊசலாடின.

கண்களை மூடிக்கொண்டேன். என் மனம் ஏதோ வகையில் திரிபுபட்டுவிட்டதா என்ன? இல்லை, உண்மையிலேயே இவை இப்படித்தான் இருக்கின்றனவா? இயற்கையின் அழகு என்கிறார்களே அது உண்மையில் என்ன? எந்தவிதமான நிற ஒருமையும் இல்லாத ஒரு காட்சிவெளி அல்லவா கண்முன் நிற்கிறது. இதோ அழுக்குப்பச்சை நிறம் மீது சாம்பல்நிறபூச்சுள்ள வெண்ணிறச் சிறகுகளுடன் இந்தக் கொக்குகள் அமர்ந்திருக்கின்றன. நிறஒருமையை கொஞ்சம் உணர்ந்த ஓர் ஓவியனுக்கு இந்தக்காட்சி குமட்டலைத்தான் அளிக்கும். ஒருபோதும் அவன் இதை வரையமாட்டான். இந்த பொருந்தாமையைச் சமன் செய்ய ஏதோ ஒன்று செய்வான். ஒருவேளை மனிதன் ஓவியத்தைக் கண்டுபிடித்ததே அதற்காகத்தானா? இயற்கையின் தான்தோன்றித்தனமான காட்சிவெளியை தனக்குப் பிரியமான முறையில் அழகுபடுத்திக்கொள்வதற்காகத்தானா?



சோர்வுடன் எழுந்து திரும்பி நடந்தேன். தென்னைமரங்களின் தடியின் சாம்பல் நிறத்துக்கும் இலைகளின் பசுமைக்கும் என்ன பொருத்தம்? மண்ணின் செஞ்சிவப்புக்கும் அடித்தடிகளின் பழுப்பு நிறத்துக்கும் என்ன பொருத்தம்? சம்பந்தமே இல்லாமல் வெண்ணிறமான சுவர்களும் சிவப்புநிறமான ஓட்டுக்கூரையுமாக என் வீடு. அதன் சன்னல்களில் பாசிப்பச்சை நிறமான பூபோட்ட திரைச்சீலை. அதன் தரைக்கு நீலச்சாம்பல் நிறமான சிமிண்ட்பூச்சு. யானை ஒன்று வரைந்த ஓவியத்தை ஓர் அலுவலகத்தில் பார்த்தேன். எந்தவிதமான நிற ஒருமையும் இல்லை. குரங்குகள் வரைந்தாலும் அப்படித்தான் இருக்கும்போலும். இயற்கையில் அழகு என்பது உண்மையில் இல்லையா என்ன? மனிதனின் கற்பனைதானா அது?

ஆம், இயற்கையில் அழகென்று எதைச் சொல்கிறார்கள்? பசுமையை. ஏனென்றால் பசுமை மனிதனுக்கு உணவு தருவது. பூக்களை. ஏனென்றால் பூக்கள் காய்களாக மாறக்கூடியவை. தீயை. ஏனென்றால் அது குளிர் போக்குவது. அந்தியை பொன்னை. ஏனென்றால் அவை தீயை நினைவூட்டுகின்றன. பெண்ணை. அது காமம். காமத்தால் அழகிய அனைத்தையும் பெண்ணுடன் இணைத்துக்கொள்கிறான். அழகிய அனைத்துடனும் காமத்தையும் இணைத்துக்கொள்கிறான். இயற்கை மீது படரும் மனிதனின் ஆசைதானா அழகை உருவாக்குவது? நான் கண்ட அழகான நிலக்காட்சிகள், அழகான ஓவியங்கள், கலைப்பொருட்கள், நடனங்கள், ஆடைகள் அனைத்தையும் மனதுக்குள் வரிசைப்படுத்திப் பார்த்தேன். ஆம், எளிய வாழ்வாசையை மட்டுமே அழகென எண்ணிக்கொண்டிருக்கிறான் மனிதன்.

வியர்வை வழிய களைத்து என் கூடத்தில் நுழைந்து சோபாவில் அமர்ந்துகொண்டேன். பங்கஜம் வந்து மௌனமாக நின்றாள். நான் உள்ளே சென்று உணவுமேஜையில் அமர்ந்துகொள்ள அவள் சாப்பாட்டை பரிமாற ஆரம்பித்தாள். பச்சை வாழையிலையில் வெண்ணிறச் சோறு. செங்காவி நிறமான குழம்பு. மஞ்சள்நிறமான கூட்டு. எவர்சில்வரின் அபத்தமான மினுமினுப்புடன் பாத்திரங்கள். பசியன்றி வேறெதாவது காரணம் இந்த காட்சியை அழகாகக் காட்டுமா என்ன?

சாப்பிட ஆரம்பித்ததுமே பசியை உணர்ந்தேன். சில உருளைகள் உண்டதுமே பசி அடைத்துக்கொண்டது. வடித்த கஞ்சியில் வெந்நிர் கலந்து உப்பு போட்டு கொஞ்சம் தேங்காய்ப்பால் சேர்த்து சுவையான ஒரு குடிநீரை பங்கஜம் தயாரித்திருந்தாள். அதை நாலைந்து டம்ளர் குடித்துவிட்டு எழுந்துகொண்டேன். பங்கஜம் முகத்தில் கேள்வி இருந்தது

நான் கைகழுவும்போது ”ஊணு மோசமா?” என்று அவள் பின்னாலிருந்து கேட்டாள். ”நல்லா இருந்தது…எனக்கு பசியில்லை” என்றேன். அவள் சில நிமிடங்கள் தயங்கிவிட்டு ”…அந்த மேனன் விட்டுக்கு போனா…அவங்க யட்சி உபாசனை உள்ள ஆட்களாக்கும். அங்க போனா அவங்க மாயம் வச்சு பிடிச்சுடுவாங்க. பின்ன அதிலே இருந்து தப்ப முடியாது” என்றாள். நான் ”இல்லல்ல நான் சும்மாதான் போனேன்” என்றேன். ”போன வருஷம் ஒரு தோணிக்கார பையன் அவங்க வீட்டுக்கு அடிக்கடி போயிட்டிருந்தான். பின்ன அவனுக்கு கிறுக்காயிபோச்சு. இப்பம் அவன் கிறுக்கா அலையுறான்னு கேட்டிட்டுண்டு.” என்றாள். என் முகம் மாறியதை தடுக்க முயன்று வேறுபக்கம் பார்த்தேன்.

”யட்சி உபாசனை உள்ளவங்க வசியம் செய்தா பின்ன மனசு அவங்க பக்கம்தான் நிக்கும். அவங்க சொல்லித்தாறதுதான் சத்தியம்னு தோணும். அவங்க காட்டுறது மட்டும்தான் அழகுன்னு தோணும். மத்த எல்லாமே அசிங்கமா தோணும். யட்சிப் பிராந்து பிடிச்சால் பின்ன பகலிலே கண்ணெடுத்து பாக்க முடியாது. ராத்திரிதான் முழிச்சிருக்க முடியும்…நான் குறே கண்டிட்டுண்டு சாரே” நான் பெருமூச்சுடன் ”சரி” என்று சொன்னபின் மாடியேறி என் அறைக்குச் சென்றேன்.

மீண்டும் அந்தப்பீதி என் மனசைக் கவ்வியது. இதயத்தில் கனமான ஏதோ அப்பியிருந்து அதை துடிக்கமுடியாமல் செய்வதுபோல. கட்டிலில் அமர்ந்து கொண்டு ஒரு வார இதழைப் பிரித்தேன். என்னென்ன எண்ணங்கள் வழியாக மனம் கடந்துசெல்கிறது! எப்போதுமே நான் இப்படியெல்லாம் நினைத்தவனல்ல. இந்த எண்ணங்களே என்னுடையவை தானா? கம்யூட்டரில் வைரஸ் போல ஒருவரின் மூளைக்குள் சிந்தனைகளை செலுத்திவிடமுடியுமா என்ன? என்னுடைய சிந்தனை அமைப்பே மாறிவிட்டிருக்கிறது. கட்டிலில் மல்லாந்துபடுத்துக்கொண்டு கூரையையே பார்த்துக்கொண்டிருந்தேன். என்ன ஆகிவிட்டது? திடீரென்று பால் திரிவது போல என் பகல்நேரங்கள் காட்சியின் ஒத்திசைவை இழந்து சிதைந்துவிட்டிருக்கின்றன. இனிமேல் என்னால் பகலை ரசிக்க முடியாது.

உண்மையில் எந்தமனிதனாவது பகலை ரசிக்க முடியுமா என்ன? மதியவெயிலில் அழகாக இருக்கும் இயற்கைக்காட்சி என்று ஒன்று உண்டா?

பேரழகுகொண்ட நிலங்கள்கூட ஆபாசமாக திறந்து கிடப்பதைத்தானே மதியத்தில் பார்க்க முடியும்? அழகு என்று மனிதர்கள் ரசிக்கும் காட்சிகள் ஒன்று காலைவிடியும்போது அல்லது மாலை மயங்கும்போது அல்லது மழைக்கருக்கலின்போது. ஆம், பகல் மறையும்போதுதான் அழகு பிறக்க ஆரம்பிக்கிறது. மறையும் பகலில் இருந்து சிலகாட்சிகளை எடுத்து அழகெனக் கொள்கிறான் மனிதன்.

அப்படியென்றால் இரவு மட்டுமென்ன? இரவும் மனிதனால் உருவாக்கப்படும் அழகு கொண்டது அல்லவா? இருக்கலாம். ஆனால் இரவில் ஒரு பெரிய வசதி இருக்கிறது. மனிதன் தனக்கு தேவையானவற்றை மட்டும் தேவையான அளவுக்கு ஒளி அமைத்து பார்த்துக்கொள்ள முடியும். இரவின் வண்ணங்களை முழுக்க மனிதனே தீர்மானிக்க முடியும். வெளியே நகரத்தில் உலவும்போதுகூட அங்குள்ள அனைத்துக் காட்சிகளும் மனிதனின் அழகுணர்வால் வெளிச்சம்போட்டு உருவாக்கப்பட்டவைதானே? பகல் அப்படி அல்ல. பிரம்மாண்டமான வானத்தால் மனிதனை ஒருபொருட்டாகவே நினைக்காமல் அவன் மீது கொட்டப்படுவது அது.



நான் எப்போதோ தூங்கிவிட்டிருந்தேன். விழித்துக்கொண்டபோது அந்தியொலிகள் கேட்டன. எழுந்து கட்டிலிலேயே அமர்ந்திருந்தேன். தூங்கும்போது கரைந்து அறுபட்ட சிந்தனைகள் தூக்கம் விழித்தகணமே ஆழத்துப் பரல்மீன் மேலெழுவது போல எப்படி எழுந்து வருகின்றன. பகல் அர்த்தமற்ற காட்சிகளை மனிதன் மீது கொட்டுகிறது. நரைத்த காட்சிகள், எரியும் காட்சிகள்,ஒத்திசைவில்லாத காட்சிகள், உறுத்தும் காட்சிகள்.

அப்பட்டமாக இருப்பதனாலேயே ஆபாசமான காட்சிகள். இந்த வரியே மனதில் வருகிறது. ஆம், ஒரு பேரழகியை நடுமதிய வெயிலில் நிறுத்தி வைத்தால் அவள் எப்படி இருப்பாள். நீலிமாவை –

நான் மனதை இறுக்கி அந்த எண்ணத்தை உதறினேன். கீழே இறங்கி வந்தேன். பங்கஜம் இல்லை. பிளாஸ்கில் டீ இருந்தது. அதைக்குடித்துவிட்டு மேலே வந்து பால்கனியில் சற்று நேரம் அமர்ந்திருந்தேன். வானம் மென்மையான ஒளியுடன் ஒரு பெரிய பாலிதீன் பரப்பு போல தெரிந்தது. கசங்கல்கள் போல ஆங்காங்கே மேத்த்தீற்றல்கள். பறவைக்கூட்டங்கள் ஒலியே இல்லாமல் காற்றில் வழுக்கிச் சென்றன. தோட்டத்திற்குள் கூடணையும் காகங்களின் கூட்டக்கரைச்சல். தென்னை மரங்கள் நடுவே அந்த மாமரம் இலைகளை நாக்குகளாக ஆக்கி கூச்சலிடுவதுபோல் இருந்தது. என்ன ஒரு மென்மை, எத்தனை இதம். தென்னையோலை இலைகள் அழுத்தமான பச்சை நிறத்தில் எண்ணைப்பூச்சுகொண்டவை போல மெலிதாகப் பளபளத்து காற்றை அளைய மரங்களின் வளையங்கள் வழியாக இளஞ்செம்மை வழிந்து அவற்றை உயிர்துடிக்கும் சருமம்போல் ஆக்கியிருந்தது.

தூரத்தில் காயல்மீது இரு பாய்மரப்படகுகள் சென்றன. நீலம் மீது வெண்மை. ஆனால் நீலத்தை இருள வைத்து வெண்மையை எரியாத துலக்கம் கொள்ளவைத்து அந்தி மிகக் கச்சிதமாக இணக்கியிருந்தது. நீலப்பரப்பா கரும்பரப்பா சாம்பல் பரப்பா என்ற ஐயமெழும் படி மங்கிவிட்டிருந்த ஏரிநீரில் ஆப்ரிக்கப் பாசியின் குமிழ்கள் தளிர்ப்பச்சை நிறத்தில் எழுந்தாடின. நான் பெருமூச்சுகளாக விட்டுக்கொண்டிருந்தேன். எங்கும் ததும்பிய ஒருமை அனைத்தையும் இணைத்து ஒரேயனுபவமாக ஆக்கி கண்முன் பரப்பியிருந்தது. இந்தவெளியில் பலவண்ணங்களுடன் பல்லாயிரம் பறவைகள் பறக்கலாம். அவையும் இதன் பகுதிகளே ஆகும்

புகை துடித்தெழ வண்டு ரீங்கரிப்பது போல உறுமியபடி ஒரு பயணிகள் படகு சென்றது. நிறைய மனிதர்கள். உள்ளே ஒரே ஒரு விளக்கு தனிமின்மினி போல தெரிய அத்தனைபேரும் நீரையே பார்த்துக்கொண்டு சென்றார்கள். நீலநிற அடிக்குடமும் மஞ்சள்நிறமான கூரையும் கொண்ட படகு. மஞ்சள்நிறம் பித்தளையின் மெருகைக் காட்டியபடி சற்றே வளைந்தது. வானத்தில் செம்மை வழிந்து வழிந்து அடிவானத்தில் தேங்கி நீர்ப்பரப்பில் கரைந்து அலைகளில் நெளிந்துகொண்டிருந்தது.

காரின் மெல்லிய உறுமல் கேட்டது. மேனனின் வீட்டைப் பார்க்கலாகாது என்று நான் திரும்பி அமர்ந்திருந்ததை அப்போதுதான் உணர்ந்தேன். மெல்லிய செவ்வெளிச்சம் சிந்தும் சாளரங்களும் வாசல்களுமாக நின்றது வீடு. காரில் இருந்து நாயரும் நீலிமாவும் இறங்கிச் செல்வதைக் கவனித்தேன். நீலிமா

என்னை பார்த்ததுபோலிருந்தது. நான் அவளைக் கவனிக்காதது போல் திரும்பிக்கொண்டேன். தென்னைமரத்தின் மேல்வட்டம் ஒரு மாட்டுவண்டிச்சக்கரம்போல் ஆரங்களுடன் தெரிய அதுவழியாக தெரிந்த வானச்சிதறல் ஒளிமங்கிக்கொண்டே இருப்பதைக் கண்டேன். பின்பு திரும்பிப்பார்த்தபோது மேனனின் வீடு இருட்டுக்குள் ஆழ்ந்து விட்டிருந்தது. இருட்டில் தொங்கிய நாலைந்து செம்பட்டுத்திரைச்சீலைகள் போல ஒளிபரவிய சன்னல்களும் வாசல்களும் தெரிந்தன.

நான் எழுந்து என் அறைக்குள் வந்து மடிக்கணினியை எடுத்து வைத்துக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்தேன். இந்த ஒருநாள்தான் நான் யாரென்பதை எனக்குக் காட்டும். என்னை பிறிதொருவர் வசியம் செய்ய முடியுமா என்று நானே அறியும் நாள் இது. இன்று கண்களைக்கும் வரை வேலைசெய்துவிட்டு தூங்குவேன். நாளை பகலில் விழித்திருப்பேன். இந்த இரவுச்சமூகம் ஒரு மலைச்சுனை. அதில் கால்நனைத்தாகிவிட்டது. அதன் ஆழம் நானறியாதது. போதும், இந்த அனுபவம் இங்கே முடிகிறது. ஆம், என் மன உறுதிக்கு நானே வைத்துக்கொள்ளும் சோதனை இது. எல்லா தேர்வுகளிலும் முதலில் வந்திருக்கிறேன். எத்தனையோ வணிக அரங்குகளில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன். அந்த மன திண்மை இப்போது என்னுடன் வரவேண்டும்.

நான் தொடர்ந்து வேலைசெய்தேன். கிட்டத்தட்ட தேங்கிவிட்டிருந்த எல்லா வேலைகளையும் முடித்துவிட்டேன். ஆர்மோனிய ஒலி கேட்டது. மஜீதின் குரல் மெல்ல கரைந்து கரைந்து ஒலித்தது. அந்த அறையில் இப்போது கையில் ஒரு பிராந்தி கிண்ணத்துடன் மேனன் சோ·பாவில் சாய்ந்து அமர்ந்து அரைக்கண் செருகி கேட்டிருப்பார். ஏன் அதை நினைக்கிறேன். இல்லை, இது என் மனம் போடும் ஒருவேடம். நான் நீலிமாவைத்தான் நினைக்கிறேன். அவளுடைய அழகிய திறந்த தோள்கள் பளீரென என் கண்ணில் வந்து சென்றன. நான் என்னைஉலுக்கி வேலைக்குள் திணித்துக்கொண்டேன்

நள்ளிரவுக்குப் பின்னர் எழுந்து சோம்பல் முறித்து தண்ணீர் குடித்தேன். மணி ஒன்றரை. அவ்வளவு நேரம் விழித்திருந்தபோதிலும் களைப்பே தெரியவில்லை. தூக்கம் வருவதுபோலவும் இல்லை. என் பெட்டியைத் துழாவியபோது நான்கு மெலட்டொனின் மாத்திரைகள் கிடந்தன. விமானப்பயணங்களுக்காக நான் அவற்றை வைத்திருந்தேன். ஒன்றை பிய்த்து வாயில்போட்டுக்கொண்டு தண்ணீர் குடித்தேன். தூக்க மாத்திரைகளின் முக்கியமான விஷயம் என்னவென்றால் நன்றாகத் தூங்கப்போகிறோம் என்ற எண்ணம் உருவாகும் என்பதே. மெத்தையில் படுத்துக்கொண்டு காலாட்டிக்கொண்டு தூக்கம் வருகிறதா என்று எண்ணிக்கொண்டே தூங்கிவிட்டேன்.

கனவுகளற்ற தூக்கம். ஆகவே தூங்கியதே தெரியவில்லை. ஒருகணம் போலத்தான் இருந்தது. விழித்துக்கொண்டபோது ஏஸியின் உறுமலைக் கேட்டேன். அதை கடலோசை என்று எண்ணியது என் மனம். கடற்கரையில் விண்மீன்கள் நடுங்கும் வானத்தின் கீழே நானும் நீலிமாவும் நின்றிருந்தோம். அவள் உடலின் இளம் வெம்மையை நான் உணர்ந்தேன். அவளுடைய குரல் தூத்தில் யாரிடமோ பேசிக்கொண்டிருக்க நான் அவளிடம் யாரிடம் பேசுகிறாய் என்றேன். அவள் அருகே இல்லை என்பதை அப்போது உணர்ந்தேன். விழித்துக்கொண்டேன்.

என் மனம் நெகிழ்ந்து மென்மையாக இருந்தது. ஏதோ ஒருகணத்தில் நான் கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்துவிடுவேன் என்பது போல. எதற்காக அந்த துயரம்? தெரியவில்லை. ஆனால் நான் மிகவும் துயரமானவனாக, மிகப் பிரியத்திற்குரிய ஒன்றை இழந்தவனாக, திரும்ப அது கிடைக்கவே கிடைக்காது என்று அறிந்தவனாக என்னை உணர்ந்தேன். நான் எதை உணர்கிறேன் என்று இன்னொரு மூலையில் என் தர்க்கம் அலைபாய்ந்து பின்பு பற்றிக்கொண்டது. இப்போது வெளியே விடிந்திருக்கும். வானத்தில் இருந்து கண்களை கூசச்செய்யும் ஒளி பரவி ஒவ்வொன்றும் அதன் மாயத்தன்மையை இழந்து மண்ணோடு மண்ணாக ஒட்டி வெளிறி கூசி அழுக்காகி கிடக்கும். அந்த உலகில்தான் நான் இறங்கிச் செல்லவேண்டும். அந்த காட்சிகளைத்தான் நான் என் மனமாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

இரவை நான் இழந்து விட்டேன். இந்த இரவு முழுக்க அருகே, என் கையெட்டும் தூரத்தில், பேரழகுடன் அவள் எனக்காக காத்திருந்தாள். சிவந்த நெய்விளக்கு வெளிச்சம். ஒளியை ரகசியப் புன்னகை போல வெளியிடும் கண்ணாடிப்பாத்திரங்கள். ஒளியை செம்முத்தாக வைத்திருக்கும் கதவின் குமிழ்கள். பொன்னாக உருமாற்றமடைந்துவிட்ட வெண்கலப்பாத்திரங்கள். உயிர்ச்சருமத்தின் மென்மையை அடைந்து சிலிர்த்துக்கொள்ளும் வார்னீஷ் மரப்பரப்புகள். நான் சட்டென்று ஒரு மெல்லிய விசும்பலை வெளியிட்டுவிட்டேன். உடனே என்ன இது அபத்தமாக என்று என்னை கட்டுப்படுத்திக்கொண்டு எழுந்து சென்று தண்ணீர் குடித்தேன்.

டம்ளரை வைத்தபோது கதவைத் திறந்து பார்த்தாலென்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. விடிந்திருக்க வாய்ப்பில்லை. சன்னலைத்திறந்து வெளியே பார்த்தேன். இருளுக்குள் தென்னை மரக்கூட்டங்கள் அசையாமல் நின்றன. மேனன் வீட்டுக்குள் இருந்து பேச்சொலிகளும் சிரிப்பொலிகளும் கேட்டன. இரு கார்கள் நின்றன. மனம் அதிர நான் அவள் கார் இருக்கிறதா என்று பார்த்தேன். இருந்தது. என் மனதின் அறைதலை என்னாலேயே கேட்கமுடிந்தது. நான் வார்ட்ரோபை திறந்து சட்டையையும் பாண்டையும் மாட்டிக்கொண்டு கீழே

பாய்ந்து கதவைத்திறந்து வெளியே பாய்ந்து மேனன் வீட்டை அடைந்து வாசலை மூச்சிரைக்க கடந்தேன்

## இரவு 10



**விண்மீன்குமிழிகள் மிதக்கும்**

**நதி இந்த இரவு**

**குறையாத கடலில் இருந்து**

**நிறையாத கடல் நோக்கி**

**ஒழுகிச்செல்கிறது.**

**மௌனமாக**

**நுரையில்லாமல்**

நான் வாசலில் நின்றதைக் கண்டு நீலிமா அனிச்சையாக கால்வாசி எழுந்துவிட்டாள். முகம் மகிழ்ச்சியில் விரிய உதடுகள் எதையோ சொல்லவருபவை போல லேசாக பிளக்க வெண்பற்கள் உள்ளே செவ்விளக்கொளியில் தெரிய அவள் கணித்திரையில் கிரா·பிக்ஸ் உயிர்கொண்டு சற்றே அசையும் செவ்வியல் ஓவியம்போல் இருந்தாள். நான் என்னைத் திரட்டிக்கொண்டு ''ஐயம் ஸாரி..'' என்றேன். மேனன் ''கமான்'' என்றார் நான் சென்று நாற்காலியில் நீலிமாவுக்கு நேர் எதிராக அமர்ந்துகொண்டேன்.

நீலிமாவின் கன்னங்கள் திட்டுத்திட்டாகச் சிவந்து கொண்டிருப்பதாக பட்டது. உதடுகள் இன்னமும் ஈரம் கொண்டவை போல. கண்களின் ஓரத்தில் மெல்லிய நீர்க்கசிவு பளபளத்தது. கைவிரல்நகங்களைப் பார்த்துக்கொண்டிருக்க இமைகள் சிறிய குருவியொன்றின் சிறகுகள் போலச் சரிந்திருந்தன. கழுத்தின் குழியில் அதிர்வு தெரிந்தது.

''இது தாமஸ் தெக்கேப்பறம்பில்...'' என்றார் மேனன். மீசையில்லாமல் கூரிய மூக்குடன் விளிம்பில்லா கண்ணாடி போட்டு ஜிப்பா அணிந்த மனிதர் ''ஹாய்'' என்று வொயின் கோப்பையை தூக்கினார். நான் ''கிளாட் டு மீட் யூ'' என்றேன்.

”தாமஸ் ஒரு பாதிரியார்” என்றார் மேனன் ”ஆங்கிலத்தில். நிறைய பாடல்களும் கவிதைகளும் எழுதியிருக்கிறார். இங்கே செயிண்ட் ஆன்ஸ் செமினாரியில் இருக்கிறார்” நான் அவரைப் பார்த்ததுமே அவர் ஒரு பாதிரியார் என்று எப்படியோ கண்டுபிடித்திருந்தேன். ”இது சரவணன்...ஆடிட்டர். ஒரு புதிய வரவு” என்றார் மேனன்.

நாயர் ”நாங்கள் மனம்திரும்புதலைப் பற்றியும் சுயவருத்தத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம்” என்றார். ”நான் என்ன சொன்னேன் என்றால் பாவம் என்பது எப்படி ஒரு கணநேர மன எழுச்சியோ அதைப்போன்றதே மனம்திரும்புதலும் என்று. ஒரு கிரா·ப் கோடு மேலே போவதும் கீழே இறங்குவதும் மாதிரி. இரண்டுமே இரண்டு வகையான உச்சங்கள். ஒன்றின் பிரதிபலிப்புதான் இன்னொன்று. அந்த மனிதனின் ஆளுமை என்பது இரண்டுக்கும்பொதுவாக நடுவே ஓடும் மையக்கோடு மாதிரி... எதற்குச் சொல்கிறேன் என்றால் நான் பல குற்றவாளிகளைச் சந்தித்திருக்கிறேன். நான் கொஞ்சநேரம் பேசும்போது கண்ணீர்விட்டு அழுது இனிமேல் இந்த தப்பை பண்ணவே மாட்டேன் சார், திருந்திவிட்டேன் என்பான். ஆரம்பகாலத்தில் நானும் அதை நம்பியிருந்தேன். ஆனால் திரும்பவும் அதையே செய்வான். அப்படியானால் என்னிடம் சொன்னது பொய்யா? அதுவும் உண்மைதான்....இது ஒரு ஊஞ்சல் மாதிரி. எந்த அளவுக்கு ஒருபக்கம் எழுகிறதோ அதே அளவுக்கு மறுபக்கமும் செல்லும். சென்றாக வேண்டும்...”



மேனன் ”அதாவது, இவரை மாதிரி பாதிரியார்கள் பாவமன்னிப்பு கொடுப்பதன் வழியாக மேலும் குற்றவாளிகளை உருவாக்கி அளிக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள்” என்றார். தாமஸ் ”மேனனே, கர்த்தாவினோடு களி வேண்ட கேட்டா?” ”போடா” என்றார் மேனன் இன்னொரு இஞ்ச் பிராந்தி விட்டுக்கொண்டு வெள்ளி இடுக்கியால் பனிக்கட்டிகளை எடுத்து போட்டபடி. ”நல்ல நாயர் ஒரிக்கலும் செய்த காரியத்தினாய் நாணிக்கில்ல கேட்டடா?” தாமஸ் ”நாயம்மாருக்கு எந்தும் ஆகாம்...”என்றபின் என்னிடம் ”கேட்டீர்களா மிஸ்டர்- ” ”சரவணன்” என்றேன் .”சரவணன், நாயர்களிலும்

சர்தார்ஜிகளிலும் கிறித்தவர்கள் கிடையாது. அவர்களுக்குப் புரியுமளவுக்கு பைபிளை எளிமைப்படுத்த வத்திகான் இனிமேல்தான் ஒரு கமிட்டி போடப்போகிறது." என்றார்.

"நீ பாவமன்னிப்பைப்பற்றி பேசப்போகிறாய் என்றால் இன்னும் ஒரு லார்ஜ் ஏற்றிக்கொள்வது நல்லது" என்றார் மேனன். "ஓ, அடியனு மதியே" என்றார் தாமஸ். பிறகு நாயரிடம் "அதாவது இதிலே நான் கவனித்த விஷயம் என்னவென்றால் எதற்காக மனிதன் மனம் திரும்புகிறான்? மூன்று காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, அவன் செய்துகொண்டிருக்கும் விஷயங்களில் அவனுக்கே உள்ளூர ஒரு கண்டனம் இருக்கிறது. அது தவறு என்று அவன் மனசாட்சி சொல்கிறது... " "ஓ புல் ஷிட்" என்றார் மேனன் "ப்ளீஸ்" என்று சொல்லிவிட்டு தாமஸ் தொடர்ந்தார். "இரண்டு அவனுக்கு அவன் இருக்கும் நிலையில் பலவகையான பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை சமாளித்து அவனால் அங்கே தொடர முடியவில்லை. மூன்று, அவனுக்கு வேறு ஒரு புதிய வாழ்க்கை வேண்டும் என்று தோன்றுகிறது. பெரும்பாலானவர்களில் இந்த மூன்று அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்தே இருக்கின்றன"

"இந்த மூன்று காரணங்களில் முதல் இரண்டு காரணங்களுக்காக யார் மனம் திரும்புகிறார்களோ அவர்கள் கண்டிப்பாக திரும்பிசென்றுவிடுவார்கள். ஏனென்றால் ஒருமுறை மனம்திரும்பி சில நல்ல விஷயங்களைச் செய்ததுமே அவர்களின் குற்றவுணர்ச்சி போய்விடுகிறது. இதில் என்னைப்போன்ற பாதிரியார்கள் வேறு அவர்களிடம் நீ செய்தவை எதுவும் பெரிய தப்புகள் இல்லை என்று சொல்லிவிடுவோம். அதைப் பொறுக்கிக் கொள்வார்கள். பிரச்சினைகளை அஞ்சி மனம்திரும்புகிறவர்கள் சில நாட்களிலேயே அலுப்பு கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். ஏனென்றால் அந்தப்பிரச்சினைகள்தான் அவர்களின் முழுமையான ஆற்றலை செலவிட்டு அவர்கள் செய்யவேண்டிய செயல்கள். எப்போது மனித ஆற்றல் வெளியே வருகிறதோ அப்போதுதான் அவன் மகிழ்ச்சியாக இருப்பான். பிரச்சினைகள் இல்லாத சலிப்பில் இருந்து வெல்ல திரும்பவும் தவறுகளுக்குச் செல்வான். பாவத்தில் இருக்கும் ஈர்ப்பு இருக்கிறதே அது சாதாரணமானதல்ல. பாவமளவுக்கு உயிர்த்துடிப்பான இன்னொன்று கிடையாது. பாவம் அளவுக்கு நம்மை மூழ்கடிக்கும் வல்லமை வேறு எதற்குமே கிடையாது. சொல்லப்போனால் லூசிஃபர் ஏசுவை விட மகத்தானவன். என்ன இருந்தாலும் அவன் மூத்தவன் அல்லவா? இருந்தாலும் ஏன் லூசிஃபர் தோற்கிறான் என்றால் மானுடகுலம் நீடித்து வாழவேண்டும் என்று பரமபிதா நினைக்கிறார் என்பதனால்தான். ஏசு ஜெயித்தால் மட்டுமே மானுட குலம் வாழ முடியும். அது மட்டும்தான் ஏசு ஜெயிப்பதற்கான காரணம். மற்ற எல்லா காரணங்களும் லூசிஃபருக்குச் சாதகமானவை"

நான் சட்டென்று அந்த உரையாடலில் இருந்து வெளியே வந்துவிட்டேன். நீலிமாவை என் உடலின் எல்லா மயிர்க்கால்களாலும் உணர்ந்தபடி அவளைப் பார்க்காமல் தாமஸை நோக்கி பார்வையை வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தேன். அவளுடைய பிரக்ஞை முழுக்க என் மீதே இருக்கிறதென்று பட்டது. ”மனம் திரும்புகிறவன் இன்னொரு மேலான வாழ்க்கை வேண்டும் என்று நினைத்தான் என்றால் அவனுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அங்கே ஏசு பேசுவதற்கு ஒரு சிறிய இடைவெளி கிடைக்கிறது. ஏனென்றால் அது ஒரு அடிப்படையான ஆசை. இன்னும்கொஞ்சம் மேலான ஒன்று தனக்கு வேண்டும் என்ற நிரந்தரமான ஆசையால் தான் மானுடகுலம் இதுவரை கொண்டுவரப்பட்டிருக்கிறது. புனிதமான ஆசை அது. ஏசு முழுமனதோடு ஒத்துக்கொள்ளக்கூடிய ஆசை. இன்னமும் அழகான இன்னமும் தீவிரமான இன்னமும் பெரிய ஒன்று வேண்டும் என்று. அதை நாம் ஒரு குற்றவாளிக்கு அளித்தால் அவன் திரும்பிச் செல்ல மாட்டான். எட்டாம் வகுப்பு மாணவனை நீங்கள் ஏழாம் வகுப்பில் உட்காரச் செய்ய முடியாது. அவன் உடம்பு கூசும். சின்ன வயது சட்டைக்குள் நாம் நுழைய முடியாது”

”ஓ, இவன்றே ஆ குரிசு எடுத்து கொடுத்தால் மதியல்லோ... போடா” என்றார் மேனன். அவர் நன்றாகவே போதையில் இருந்தார். ”நான் ஒரு விஷயம் கவனித்திருக்கிறேன் மிஸ்டர்–” ”சரவணன்” ”எஸ்,சரவணன், இந்த நாயர்கள் அடிப்படையில் போலீஸ்காரர்கள். அதாவது படைவீரர்கள். அவர்கள் தத்துவஞானிகளாக இருக்கலாம். கலைஞர்களாக இருக்கலாம். அரசியல்வாதிகளாக இருக்கலாம். ஒரு லார்ஜ் உள்ளே போனால் எல்லா நாயரும் படைநாயர்தான். அதன் பிறகு லெ·ப்ட் ரைட் மட்டும்தான் மண்டைக்குள் இருக்கும்” நான் லேசாக புன்னகை செய்தேன்.



மேனன் துடித்தெழுந்து ”யூ பிளடி ·பக்கர்... யூ நோ ஆல் நஸ்ராணிஸ் ஆர் பேஸிக்கலி லோ·பர்ஸ்... கேட்டியா சரவணன். எல்லா சிரியன் கிறிஸ்தவர்களும் குடிகாரப்பொறுக்கிகள். சந்தேகமிருந்தா இவனோட பிஷப்புக்கு ஒரு நான்கு லார்ஜ் ஊற்றிக்கொடுத்துப்பாரு. சங்ஙனாச்சேரியிலே அவன் அப்பூப்பன் பரட்டுக்காட்டு தோமாச்சன் வாத்து மேய்க்கிறப்ப சொல்ற எல்லா கெட்டவார்த்தையும் அவன் வாயிலேயும் வரும்... நம்ம ஜோர்ஜ் பூதக்காட்டிலை தெரியுமில்லை? ப்ச, பழைய பிஷப். பெரிய மகான். இப்ப அவரோட கல்லறையிலே ஸ்கூல் பிள்ளைங்க மெழுகுவத்தி ஏத்துறாங்க. செயிண்ட் ஜோர்ஜ்...அவரு எனக்கு நல்ல பழக்கம். பகல் முழுக்க பிரார்த்தனை பிரசங்கம். ராத்திரியானா பிராந்தி ஏத்திக்கிட்டு டா ஏசு,மயிரேன்னு ஆரம்பிச்சு விடிய விடிய நாறடிப்பார். ஒரு ஆசாரியை அப்டித்தான் நடத்தணும்னு எங்கிட்ட சொனனர். அவரோட அப்பா பூதக்காட்டில் வற்கிச்சாயனுக்கு போட் செய்ற ஆலை இருந்தது. அதிலே நெறைய ஆசாரிமாரை பாத்திருக்காராம். ஒரு ஆசாரிக்கு என்ன பெரிசா ஞானம் கெடைச்சிருக்கும்னு நமக்குத் தெரியாதான்னு சொல்லுவார். சொல்லப்போனா ஏசுவுக்கும் ஜோர்சச்சாயனோட தெறி பிடிச்சிருந்ததுன்னு தோணுது. இல்லேன்னா அவரை செயிண்டா ஆக்கியிருக்க மாட்டாரே. சும்மா இவனை மாதிரி ஆட்கள் நாள் முழுக்க கர்த்தாவே கர்த்தாவேன்னு போட்டு உயிரை எடுக்கிறதுக்கு ஒரு சேஞ்சா ஒருத்தர் நல்ல சாவக்காட்டு மலையாளத்திலே நாலு புளிப்பும் காரமும் உள்ள வார்த்தை பேசிக்கேட்டா ஒரு சுகம்தானே... எந்தா தோமா?”

”நாயம்மாருக்கு எந்தும் பறயாம்”என்றார் தோமஸ் ”கேட்டீர்களா மிஸ்டர் சங்கரன், நாயர்களுக்கு கேரளத்தில் இருந்து நேரே நரகத்துக்கு போவதற்காக பரிசுத்த பிதா ஆகாசத்தில் ஒரு சூப்பர்ஹைவே போட்டிருக்கிறார். ஆனாலும் அதில் டிரா·பிக் ஜாம்” மேனன் ”போடா...கமலே...மை டியர், ஐ வான்ட் சம் லிகர்...சம் ஹெவென்லி டிரிங்க்” என்றார். நாயர் ”மனம்திருந்தும் குற்றவாளி என்று ஒருவர் உண்டா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது ·பாதர்” என்றார். ”இருக்கிறார்கள். நிறையவே இருக்கிறார்கள்.” ”நான் பார்த்ததில்லை...” ”ஏன் நானே அவர்களில் ஒருவன்தானே?” என்றார் தோமஸ். ”அதுக்கு நீ எங்கேடா மனம் திரும்பினாய், பாஸ்டர்ட்?” என்று மேனன் சிவந்த கண்களுடன் ஆங்கிலத்தில் உக்கிரமாகக் கேட்டார். ”ஸீ மிஸ்டர் சரவணன், மை டியர் ஆடிட்டர் சரவணன், நீ ஒரு நல்ல தமிழன், இந்த நாய் என்னோட கிளாஸ்மேட். நான் எழுதிக்கொடுத்த பிட்பேப்பரை வைத்து பரீட்சை எழுதி ஜெயிச்சுட்டு இப்ப எனக்கே அட்வைஸ் பண்றான்... டா மயிரே, நீ சரோஜினியம்மையோடு எந்து பறஞ்ஃ எந்நு ஞான் பறயுமே...கர்த்தாவாண சத்யம் ஞான் பறயுமே”

நாயர் மேனனை முற்றாகப் புறக்கணித்து ”ஒரு மனிதன் அவனுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஒன்றை கண்டுகொண்ட பின்பு அதிலிருந்து மீளமாட்டான்” என்றார். ”அது மகிழ்ச்சி என்று எப்படிச் சொல்ல முடியும்? பலசமயம்

மனிதனுக்கு துன்பம் தேவைபபட்டுகிறது. வலி தேவைப்படுகிறது. அவமானம் தேவைப்படுகிறது. தேடிப்போய் அவற்றை அடைபவர்கள் உண்டு" என்றார் ·பாதர் . நான் "நீங்கள் என்ன செய்கிறீர்கள் ·பாதர்?" என்றேன். "நான் சொந்தமாக ஒரு பாவமன்னிப்பு முறையை உருவாக்கியிருக்கிறேன்" என்றார் தாமஸ்."பகல் முழுக்க உபவாசம் இருக்கவேண்டும். நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு தனிமையில் வந்து பாவமன்னிப்பு கோரவேண்டும். நிஸாகும்பஸாரம் என்று பெயர். இப்போது மிகவும் பிரபலமாகிவிட்டது. இரவில் மனிதர்கள் நெகிழ்ந்து போய் இருக்கிறார்கள்". மேனன் "பிகாஸ் இம்மீடியட்லி தே கன் கோ ஹோம் ஆண்ட் ·பக்" என்றார். அவரது மோவாய் நன்றாகவே மார்பில் படிந்திருந்தது.

"நீங்கள் அப்படித்தான் இரவுலகுக்கு வந்தீர்களா?" என்றேன் "ஆமாம். ஆரம்பம் முதலே எனக்கு இரவு பிடிக்கும். பகல் முழுக்க மனிதர்களுடன் இருப்பதாகவும் இரவு நானும் கர்த்தாவும் மட்டும் இருப்பதாகவும் தோன்றும். இரவுதான் பிரார்த்தனையின் நேரம். சொர்கம் வாசல்களை திறக்கும் நேரம். எங்கள் தேவாலயத்திற்கு வாருங்கள். எங்கள் செமினாரி பதினேழாம் நூற்றாண்டில் சிரியன் மிஷன் ஒன்றால் கட்டப்பட்டது. அங்குள்ள தேவாலயம் மிகவும் பழமையானது. பதினெட்டாம் நூற்றாண்டுச் சுவரோவியங்கள் உண்டு. ஆல்ட்டர் மிகவும் அழகாக இருக்கும். பலாமரத்தால்செய்யபப்டு கில்ட் அடிக்கபப்ட்ட சிற்பங்கள். குழந்தை ஏசுவும் மரியும். வழக்கமாக தேவாலயங்கள் சிலுவை வடிவில் இருக்கும், இது ஓவல் வடிவில் இருக்கும். அந்த தேவாலய அரங்கில் விடியற்காலையின் குளிரில் தன்னந்தனியாக சில மெழுகுவத்திகளை ஏற்றிவைத்துவிட்டு பிரார்த்தனை செய்தால் கர்த்தாவாகிய ஏசுகிறிஸ்துவை இதோ இவ்வளவு பக்கத்தில் அறிய முடியும். அவரது உடலின் சூடு நம் மீது படுவது போல் இருக்கும்"

"·பாதர் ஒரு கிறிஸ்தவ இரவுச் சமூகத்தை உருவாக்கியிருக்கிறார்" என்றார் நாயர். "அய்யய்யோ அப்படி எல்லாம் இல்லை. நள்ளிரவுக்குப் பின்னால் பிரார்த்தனை செய்வதை நான் பிரபலப்படுத்தினேன். என் மீதான நம்பிக்கையில் கொஞ்சம் புதியவர்கள் வந்திருக்கிறார்கள். இரவின் மௌனத்தில் ஒரு சர்ச் ஆர்கனை மெல்ல தொட்டால் போதும் தேவ சங்கீதம் எழும். ஆலய மணிகளில் துணியைச் சுற்றி மெல்ல அடிப்போம். அந்த நாதம் காதுகளிலேயே விழாமல் மனதுக்குள் சென்று விடும்.." என்றார் தாமஸ் "ஓ, ஹி இஸ் ஆல் ஓவர்" என்று மேனனைப்பார்த்து உதட்டைப் பிதுக்கினார். மேனன் நன்றாக தூங்கிவிட்டிருந்தார். "மனம் திரும்புகிறவர்களை நான் இரவுலகுக்குக் கொண்டு வந்துவிடுகிறேன். அவர்கள் செய்துவந்த அனைத்தையும் அந்த சூழலுடன் அந்த உணர்வுகளுடன் அப்படியே உதறிவிட்டு இரவுக்கு வந்து விடச்செய்வேன். இங்கே முற்றிலும் புதிய ஓர் உலகம். பிதாவின் ஆசி மௌனமாக மண்மீது பொழிந்துகொண்டிருக்கும் ஒரு புனிதமான உலகம். அதன் பின் அவர்களுக்கு

வியாபாரமும் சதிகளும் பேராசைகளும் பாவங்களும் நிறைந்த பகல் இல்லை. தியானமயமான இரவு மட்டும்தான்''

நான் அவரது அந்த தீவிரத்தை சற்றே மிகையாக உணர்ந்த அக்கணமே அவர் சிரித்து ''ஆனால் இதெல்லாம் திருடர்களுக்கு பொருந்தாது. அவர்கள் ஏற்கனவே இரவில்தான் இருக்கிறார்கள். கர்த்தாவின் அருளோடு திருடுகிறார்கள்'' என்றார். நான் சிரித்தேன். அவர் அபாரமான புத்திசாலித்தனம் கொண்ட மனிதர் என்று ஊகித்தேன். அவரது நம்பிக்கையின் அதீதத்தன்மையை அவரே கிண்டல் செய்து கொள்வதன்மூலம் அதை மேலும் உறுதிப்படுத்திக்கொள்கிறார்.

''வாட் ஹேப்பண்ட் டு ·புட்?'' என்றார் மேனன். ''ஐ திங் கம்லா இஸ் டூயிங் சம்திங் நியூ''என்று ·பாதர் சொன்னார். ''ஞான் போயி நோக்கட்டே'' என்று சொல்லி நீலிமா எழுந்தாள். நான் அவளைப் பார்த்து புன்னகை செய்தேன். அவள் என் கண்களைப் பார்த்து ''நீங்க கூட வாங்க'' என்றாள். அந்த நேரடியான அழைப்பு என்னை சில கணங்கள் பதறச் செய்தது. பின்பு ''எஸ்..ஷ்யூர்'' என்று எழுந்துகொண்டேன். இருவரும் உள்ளே சென்றோம்.

நீலிமா ''ரெண்டுபேரும் போட்டு அறுத்துட்டாங்க இல்ல?'' என்றாள். நான் ''அதெல்லாம் இல்லை'' என்றேன். ''ஒண்ணும் சொல்ல வேண்டாம். நானே பார்த்தேன். பச்சைமுட்டை குடிச்ச முகபாவத்தோட உக்காந்திட்டிருக்கிறதை...'' என்றாள். நான் சிரித்தேன். ''கமான்..'' என்று சொல்லி உள்ளே சென்றாள். அவள் அருகே நிற்கையில் அவளுடைய பளீரிட்ட தோள்களை விட்டு கண்களை நகர்த்த முடியாமல் ஆனால் அப்படிப் பார்ப்பதன் அத்துமீறலை உணர்ந்தவனாக நான் இனிய திணறல் ஒன்றை அடைந்தேன்.

கமலா சமையலறையில் அவசரமாகச் சமைத்துக்கொண்டிருக்க அருகே மஜீத் அமர்ந்திருந்தார். நான் மஜீதை பார்த்ததும் ''ஹலோ இக்கா'' என்றேன். ''எந்தா மோனே?'' என்று சொல்லிவிட்டு நீலிமாவைப் பார்த்து ''நீலமிழியுள்ளோரு மொஞ்சத்தி நின்னுடே நோக்கொரு முனயுள்ள கத்தி''' என்று பாடினார். நீலிமா புன்னகை செய்தாள். ''நான் சமையலுக்கு உதவி வேணுமா?'' என்றேன் .''முடிஞ்சிட்டுது'' என்றார் கமலா. ''என்ன குற்றவாளிகளை ராத்திரியிலே பிரார்த்தனை செய்ய சொல்லணுமா வேண்டாமா, தர்க்கம் எதுவரைக்கும் வந்திருக்கு?'' என்றார் சிரித்தபடி. ''இங்கே கேட்குமா?'' என்றேன்.''நான் வரும்போதே இதினேப்பற்றித்தான் பேச்சு அங்கே''

மஜீத் சிரித்தபடி ''ஞம்மக்கு ஒரு ஐடிய உண்டு. நல்ல வர்க்கத்துள்ள மனிசேம்மாரு ஒந்நு ·பாலிளகி மண்டன்மாராவான் மேண்டிட்டா இம்மாதிரி ஹராம்புடிச்ச வெள்ளம் வலிச்சு கேற்றுந்நே'' என்றார். நான் ''என்ன சொல்றார்?'' என்றேன். ''மலையாளம் புரியாதா?'' ''புரியும்...ஆனா இவர் பேசறது சுத்தமா

புரியலை” ”இது அரபி மலையாளம்… பர்க்கத்துன்னா அறிவு. அப்றம் ·பால்ன்னா கிறுக்கு….ஹராம்னா பாபம்…எந்தா மஜீதே?” மஜீத் ”பின்னே?” என்றார். நான் ”சரி , அது அரபி. ஆனா மத்த மலையாளமும் புரியலியே” ”அது அல்லாவுக்குத்தான் முழுக்க புரியும்” என்றார் கமலா ஆங்கிலத்தில்.

நான் ”மொத்தத்தில் என்ன சொல்ல வருகிறார்?” என்றேன். ”புத்திசாலிகள் ஒரு விடுதலைக்காக தங்களை முட்டாளாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்று இந்த மதுவைக் குடிக்கிறார்கள் என்கிறார்” என்று நீலிமா ஆங்கிலத்தில் சொன்னாள். ”இதுவும் ஒரு மலையாளம். ஆறுமலையாளிக்கு நூறு மலையாளம் என்று ஒரு பழமொழி உண்டு. மலையாளத்தில் மற்ற மொழி கலந்தால்தான் மலையாளம் வளரும். இது ஒரு காக்டெயில்” கமலா சிரித்தாள்.

”ஞம்மடே கார்ணோம்மாரு கடலில் அரேபியாக்கு உரு ஓட்டி கயிஞ்ஞுவரா.. போப்பூர்ல்…அறியாலோ போப்பூரில்..” என்றார் மஜீத். கமலா ”போப்பூர் கோழிக்கோடுக்கு அருகில் இருக்கும் ஒரு ஊர். நூறு வருடம் முன்புகூட பெரிய துறைமுகமாக இருந்தது. அரபு வணிகம் முழுக்க அந்த வழியாகத்தான் நடந்திருந்தது. பிறகு ஆற்றுமணல் மூடி துறைமுகம் அழிந்தது. இப்போதுகூட ஏராளமான கட்டிடங்கள் அங்கே கைவிடப்பட்டு கிடக்கின்றன” என்று சொன்னார். ”சமையல் முடிஞ்சாச்சு…. குடிகாரங்க ரெடியாயிட்டாங்களா?” ”ஞான் நோக்கிட்டு வராம் ஆன்டி” என்று நீலிமா கிளம்பினாள்

மஜீத் அந்தக்காலத்தில் போப்பூரில் உருக்கள் சாயங்காலம்தான் கரைக்கு வரும் என்று சொன்னார். இரவு முழுக்க சரக்குகளை கரையிறக்குவார்கள். மாட்டு வண்டிகளில் கோழிக்கோட்டுக்கு கொண்டுவருவார்கள். விடிவதற்குள் சரக்கு ஏற்றிக்கொண்டு உருக்கள் கிளம்பிவிடும். உருக்கள் என்றால் என்னா என்று கேட்டேன். பெரிய மரக்கலங்களுக்கு உரு என்று பெயர், இப்போதுகூட போப்பூர் பகுதியில் ஆசாரிமார் அவற்றைச் செய்கிறார்கள் என்றார்.

ஏன் மரக்கலங்கள் இரவில் வரவேண்டும்? ஏனென்றால் அவை பகலில்தான் கிளம்பிச் செல்ல முடியும். கரையோரமாக கடலுக்குள் நிறைய மலைகள் உண்டு. அடையாளங்களை வைத்து கவனமாகச் செல்ல வேண்டும். இரவில் போக முடியாது. ஒரு முற்றபகலில் கிளம்பவில்லை என்றால் அந்த நாள் வீண் இருபது இரவும் , இருபது பகலும் ஆகும் அரேபியாவுக்குச் சென்று சேர. அரிசி முதல் துணிகள் வரை கொசெல்வார்கள். பேரீச்சம் பழம் முதல் குதிரைகள் வரை கொண்டு வருவார்கள். ”அதொரு காலம் மோனே… அந்நொக்கே மாப்ளைக்கு முஸீபத்து உண்டாயிருந்நு” முஸீபத் என்றால் என்ன என்று நான் கேட்கவில்லை.

போப்பூர் இரவுநகரம் என்று அழைக்கப்பட்டது. பகலில் நகரம் அப்படியே களையிழந்து ஆவிகளின் நகரமாக ஆகிவிடும். போப்பூரில் பேய்கள் பகலில்தான் சுற்றிவரும் என்று பழமொழி உண்டு. பண்டக சாலைகள் பூட்டிக்கிடக்கும். சாளைமீன் காயப்போட்டதுபோல எல்லா இடங்களிலும் கூலியாட்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். கண்விழித்திருக்கும் எவரையுமே பார்க்க முடியாது. காலையில் பள்ளியில் தொழுகைக்கு மோதினாரும் முசலியாரும் மட்டும்தான் இருப்பார்கள். மாலைத்தொழுகைக்குத்தான் பட்டுக்குல்லாயும் சொக்காயும் அணிந்த மாப்ளகள் வந்து கூடுவார்கள்.

தொழுகை முடிந்ததும் வடக்கன் மாப்ளா ஓட்டல்களில் கூட்டம்கூட்டமாக குழுமி வெள்ளையப்பமும் பத்திரியும் மாட்டுக்கறியும் ஆவிபறக்க சாப்பிடுவார்கள். உருக்கள் ஒவ்வொன்றாக கரையடுக்க ஆரம்பிக்கும். எங்கும் சீனவிளக்குகள் எரியும். ஹாஜி தடத்தில் காதர் மொய்தீன் கடைக்கு முன் அந்தக்காலத்திலேயே பிரம்மாண்டமான கல்விளக்குத்தூண் நாட்டி அதில் கேஸ் விளக்கு போட்டிருந்தார். மண்ணெண்ணை ஒரு பெரிய பீப்பாயில் தரையில் வைக்கப்பட்டிருக்கும். வண்டு போல ரீங்கரித்தபடி விளக்கு எரிந்துகொண்டிருக்கும். அது ஒரு பிரம்மாண்டமான பூச்சி என்று நம்பிய முஸ்லீம்கள் அதற்கு இபிலீசு விளக்கு என்று பெயரிட்டார்கள்.

”இபிலீஸ்னா?” ”செகுத்தான். படைச்சோனின்றே சத்ரு.” இபிலீஸ் விளக்கின் ஒளியில் தடத்தில் கடைமுற்றம் பகலாக இருக்கும். சாதாரணமான பகல் அல்ல பொன்வெளிச்சம் உள்ள பகல். அந்த வெளிச்சத்தில் ஹாஜி வெள்ளி நாணயங்களை பரப்பிவைத்து அவற்றை பொன் நாணயங்களாக மாற்றினார் என்று சொல்வார்கள். ஆயிரம் தீக்கண்கள் கொண்ட விலங்குகள் போல மரக்கலங்கள் கடலில் பொறுமை இழந்து ஒன்று மீது இன்னொன்று மெல்ல முட்டி அலைபாயும் சீனவிளக்குகளின் ஒளியில் மனிதர்களுடன் அவர்களின் நிழல்களும் அசைய நகரமே ஜின்னுகளும் இபிலீஸ¤களும் கலந்து நடனமிடுவது போலிருக்கும். ”இப்போ போப்பூரினு ராத்ரியில்ல மோனே.. பகல் மாத்ரமே உள்ளூ”என்றார் மஜீத்

மேனனும் நாயரும் பேசியபடியே வந்தார்கள். பின்னால் ·பாதர் தாமஸ் நீலிமாவுடன் சிரித்துக்கொண்டு வந்தார். மேனன் முகம் கழுவி போதையே இல்லாமல் புதிதாக இருந்தார். அதற்குள் எப்படி மொத்த சாராயத்தையும் ஜீரணித்துக்கொண்டார் என்று புரியவில்லை. மேனன் என்னிடம் ”சாப்பிடலாமா?” என்றார். ”யூ ஆர் சோபர்”‘ என்றேன். ”எஸ் ஐயம்” என்று சிரித்துக்கொண்டே ஊண்மேஜையில் அமர்ந்தார். கமலா என்னிடம் ”இந்தா இதையெல்லாம் எடுத்து வையுங்கள்.. ”என்றார். நான் பாத்திரங்களை எடுத்து வைக்க ஆரம்பித்தேன். மஜீத் தண்ணீர் நிரப்பி வைத்தார்

·பாதர் ”கேட்டா நாயரே, யுவர் டாட்டர் இஸ் என் எக்ஸ்டிரீம்லி ப்யூடிபுள் கேர்ல்” என்றார். ”பாத்தியா இதனாத்தான் இந்தாள் பாதிரியானான். இத ரகசியத்தைக் கண்டுபிடிக்க இவனுக்கு எட்டுமாசம் ஆகியிருக்கு” என்றார் மேனன். ”பெண்ணுங்களோடு குணுங்ஙாதே வந்து இருந்நு தின்னடா பட்டீ” . ·பாதர் வந்து அமர்ந்துகொண்டு ”எனக்கு இங்கே வருவது மிகவும் பிடித்திருக்கிறது கமலா. வருடம் முழுக்க கர்த்தாவிடம் பேசிக்கொண்டிருந்ததற்கு இங்கே வந்து சாத்தானிடம் ஒருநாள் பேசுவது நல்ல மாறுதலாக இருக்கிறது”

நானும் சாப்பிட அமர்ந்துகொண்டேன். மஜீதும் பரிமாறினார். ”ஒருகாலத்தில் கமலா பேரழகி” என்றார் ·பாதர் ”ஆனால் இப்போது அதைவிட பேரழகி” கமலா சிரித்தபடி ”தோமாச்சா வேண்டா வேண்டா” என்றார். உற்சாகமான உரையாடல்கள் வழியாக சென்றுகோண்டே இருந்தோம். நான் ”மஜீத் போப்பூரைப் பற்றிச் சொன்னார்” என்றேன். ”அவன் ஒன்றைச் சொல்லியிருக்க மாட்டானே..போப்புர்தான் ஒருபால் புணர்ச்சியின் தலைமை பீடம். ” என்றார் மேனன். ”மாப்பிளாக்கள் நாளெல்லாம் கப்பலில் வாழ்ந்தவர்கள். அங்கே அவர்கள் உருவாக்கிக்கொண்ட இரு ருசிகள். ஒன்று பிரியாணி. கையிலே கிடைத்த கறியை எல்லாம் சோற்றுடன் போட்டு வேகவைப்பது. கறி கொஞ்சம் பழசாக இருக்கும் என்பதனால் எல்லாவகையான நறுமணப்பொருட்களையும் அதில் போடுவது...அப்படித்தான் பிரியாணியை கண்டுபிடித்தார்கள். இன்னொன்று இது...கப்பலில் பெண்கள் செல்வதில்லை இல்லையா?” என்றார் ·பாதர்

மேனன் ”அந்தக்காலத்தில் போப்பூர் என்றாலே இதுதான் அர்த்தம். இப்போதுகூட போப்பூரிலும் சுற்றுவட்டாரங்களிலும் இரவுச்சங்கங்கள் உண்டு. எல்லாருமே இந்தப்பழக்கம் கொண்டவர்கள்” என்று மேனன் ஆரம்பித்ததுமே ”விஜய் வில் யூ ப்ளீஸ் ஸ்டாப் இட்?” என்றார் கமலா. நான் அனிச்சையாகக் கண்களை திருப்பியதும் நீலிமாவைப் பார்த்தேன். அவள் உதடுகள் விரியாமல் புன்னகை செய்தாள்.

”தென், வாட் இஸ் யுவர் பிளான்?” என்றார் ·பாதர். ”ஆர் யூ கமிங் வித் மி?” நாயர் மேனனைப் பார்த்தார். ”என்னுடைய பிஷப் இன்று அதிகாலை பிரார்த்தனைக்கு வருகிறார். நான் அவருக்கு இந்த சாத்தானை அறிமுகம் செய்யலாம் என்று நினைக்கிறேன். நீங்களும் வரலாம்” என்றார். நாயர் ”ஓகே...” என்றார். கமலா ”நீங்கள் மூன்று சாத்தான்களும் போனால் போதும். நீலிமாவும் சரவணனும் தனியாக எங்கோ போகவேண்டும் என்று சொன்னார்கள்” நாயர் நீலிமாவிடம் ”இஸ் இட்?” என்றார். அவள் தலையசைத்தாள். நான் பிரமிப்புடன் கமலாவைப் பார்த்தபோது அவர் புன்னகைசெய்தார்

# இரவு 11



**இன்றிரவு**
**நான் தனியாக இல்லை**
**இரவு ஒரு தோழியாக**
**என்னுடன் இருக்கிறது**
**தன் தனிமையைப்பற்றி**
**என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கிறது.**

காரை நெருங்கியதும் நீலிமா ''நீங்க ஓட்டுங்க'' என்று சொல்லி நின்றுவிட்டாள். புதிய மாருதி எஸ்டீம் கார். நான் ஏறி அமர்ந்து சாவியை திருகி அதை உயிர்ப்பித்ததும் அவள் மறுபக்கம் வழியாக ஏறி என்னருகே அமர்ந்து கொண்டாள். நான் ''எங்க போகணும்?'' என்றேன். அவள் ''எங்கயுமே போகவேண்டாம்... நான் கமலா ஆன்டிகிட்டே ஒண்ணும் சொல்லலை. அவங்களேதான் ஏதோ செய்றாங்க'' என்றாள். ''காரிலே ஏறினா எங்கியாம் போய்த்தானே ஆகணும்?'' என்றேன். ''முதலிலே கிளம்புங்க...போகப்போக எதையாவது யோசிப்போம்'' என்றாள் நீலிமா.

கார் சாலையை அடைந்தது. நான் பேசாமல் காரை ஓட்டிக்கோண்டிருந்தேன். நீலிமாவும் பேசாமலேயே வந்தாள். ஒரு இடத்திற்கு வந்ததும் மெல்லியகுரலில் ''டர்ன் ரைட்...இங்க ஒரு நல்ல எடம் இருக்கு'' என்றாள். ''என்ன?'' என்றேன் ''ஆம்பல்குளம்...'' நான் ஆச்சரியமாக ''அப்படியா?'' என்றேன். பின்பு ஐயத்துடன் ''ஆம்பல்னா அல்லிதானே?'' என்றேன். ''யா'' மேலும் சந்தேகத்துடன் ''ஆக்சுவலி தாமரைக்கும் அல்லிக்கும் என்ன வித்தியாசம்?'' என்றேன். தீவிரமாக யோசித்து, ''ம்ம்...ஒரு நூறு ரூபா வித்தியாசம் இருக்கும்'' என்றாள். நான் சிரித்து விட்டேன். அவளும் சிரித்தாள். ''போய்ப்பாப்போம்...பாத்தா தெரியுது...''

கார் மண்சாலைவழியாக படகுபோலச் சென்றது. ''இங்க ஒரு சின்ன யட்சி கோயில் இருக்கு...அதுபக்கத்திலேதான் குளம். அட்மிரல் கூட பலதடவை வந்திருக்கோம்'' சாலையின் இருபக்கமும் இருண்ட தோப்புகளுக்குள் காகங்கள் எங்கள் முகவிளக்கு ஒளி கண்டு கலைந்தெழுந்தன. ஓர் இறக்கத்தை கிட்டத்தட்ட திருப்புவளையம் மீதே படிந்து முன்னால்சாய்ந்து கடந்தபோது எதிரே சிறிய கோயில் தெரிந்தது. தரையில் இருந்து வெட்டி எடுக்கப்படும் வெட்டுகல்லால் வட்டவடிவில் கட்டப்பட்ட சுவர் மீது கூம்புபோல ஓட்டுக்கூரை. கோயிலைச்சுற்றி இடுப்பளவு உயரத்தில் வெட்டுகல் சுவர். சுவர்

முழுக்க மழையில் முளைத்த புற்கள் கருகிப்போய் மாட்டின் உடலில் ரோமம் பரவியிருப்பதுபோல தெரிந்தது.

காரைகோயிலருகே கொண்டு சென்று நிறுத்தினேன். வெளியே இறங்கி சுற்றும் பார்த்தபோது அமானுஷ்யமாக இருந்தது. எதிரே ஒரு பெரிய மரம் கிளைகளை தரைவரை தாழ்த்தி பரந்து கிடந்தது. ”இது என்ன மரம்?” ”இதுவா, இது கள்ளிப்பாலை. யட்சிகளுக்குப் பிரியமான மரம். மே மாசம் பூக்கும். குலைகுலையா பூத்து தொங்கும். மணம் தலைசுத்துறமாதிரி இருக்கும். செம்பக மணம் இருக்கில்ல அதைமாதிரி மணம்...அதைவிடவும் கடுமையான மணம்.நெறையபேருக்கு அந்த மணம் கிடைச்சா அப்டியே வாந்தி வந்திடும். ஆஸ்துமாகூட வந்திடும். அதனால இந்த மரத்தை ஊருக்குள்ள எங்கயுமே நடமாட்டாங்க. ஆனால் ரொம்பதூரத்திலே இருந்து காற்றிலே அந்த மணம் வந்தா ரொம்ப ரொமாண்டிக்கா இருக்கும்னு சொல்வாங்க... ஆக்சுவலி, கள்ளிப்பாலை மணம் வந்து நாம அதை முகர்ந்துட்டு நல்லா இருக்கேன்னு சொல்லிட்டா யட்சி அந்த மணம் வழியா வந்திடுவான்னு ஐதீகம்”

அவள் சட்டென்று அதீதமான உயிர்த்துடிப்பு கொண்டதுபோலிருந்தது. அரைநிலவின் ஒளியில் கள்ளிப்பாலை மரத்தை நன்றாகவே பார்க்கமுடிந்தது. சடைத்திரிகள் போல இலைக்கொத்துக்கள் தொங்கி காற்றிலாடின. கோயில்முற்றத்தின் சரல்பரப்பில் நிலவின் ஒளி பரவிக்கிடக்க அலுமினியப்பரப்பு போல அது தெரிந்தது எனக்கு. எங்கள் காலடிகள் கோயிலின் சுவர்களில் எதிரொலிக்க கூடவே வேறு சிலரும் நுண்வடிவில் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று பிரமை எழுந்தது.

”பயமா இல்லையா?” என்றேன். ”எதுக்கு பயம்? நானே ஒரு யட்சி...நேராப்போய் அந்த கோயிலுக்குள்ள சிலையா இப்டி கைய வச்சிட்டு நிக்கணும்னு தோணுது” என்று அபய ஹஸ்தம் பிடித்து நாக்கை நீட்டிக்காட்டினாள். ”நீ யட்சி மாதிரித்தான் இருக்கே...” ”தாங்ஸ்” ”யட்சிகள் பேரழகிகள்னு சொல்லுவாங்க...” ”வாட் யூ திங்?” என்றாள் என்னைப் பார்க்காமல். ”கண்டிப்பா...சந்தேகமே இல்லை” அவள் லேசாக குனிந்து சிரித்தாள். ”ஆனா” ”என்ன ஆனா?” ”யட்சிகளுக்கு முன்பக்கம் இருக்கும் பின்பக்கம் இருக்காதுன்னு சொல்லுவாங்க...பின்பக்கம் அப்டியே குடைவா இருக்குமாம்” ”ஓ” நான் ”உனக்கு முன்பக்கம் பின்பக்கம் ரெண்டும் இருக்கே” ”டோண்ட் பி நாட்டி” என்றாள்.

கோயிலைச் சுற்றி வந்தோம். பின்பக்கம் ஒரு சிறிய நந்தவனம். செடிகளின் இலைகளில் நிலவொளியின் மெல்லியபடலம் பரவியிருந்தது. ”என்ன மணம் அது?” என்றேன். ”நிஸாகந்தி...கேட்டிருப்பீங்களே” ”இல்லியே” என்றேன். ”நிஸாகந்தி நீயெத்ர தன்ய” என்று மெல்ல பாடினாள். ஒரு ரகசிய முத்தம்போல தித்தித்தது அந்தக் குரல். ”நல்லா பாடுறே” ”ஓ...ஐ நோ, ஐயம் நாட் எ சிங்கர்”

என்றாள். ”சும்மா முதல்வரிய மட்டும் முனகுவேன். ஓ.என்.வி எழுதின பாட்டு இது…” ”ஓ” என்றேன். ”நிசாகந்தின்னா ஒரு பூச்செடி. இரவிலே மணக்கும் செடீன்னு அர்த்தம். ராத்திரியிலேதான் பூக்கும். ராத்திரியிலேதான் மணக்கும். கள்ளிப்பாலை மாதிரியே இதுவும் மயக்கம் வர்ர மாதிரி மணக்கும்..நைஸ் இல்லை?”



நான் மூச்சை இழுத்தேன். ஏதோ வாசனைத்தைலம் மாதிரி நாசிச்சருமத்தைச் சீண்டும் நறுமணம். ”நான் இந்தபூவை கேள்விப்பட்டதே இல்லை.” ”சரி , வேற எந்தப்பூவை கேள்விப்பட்டிருக்கீங்க?” ”காலி·ப்ளவர்…போதுமா?” ”அய்யே..இதுக்கா கோவம்?” என்றாள். சட்டென்று அம்மாத்தனதத்தை பாவனைசெய்வது பெண்களின் அந்தரங்கமான கொஞ்சல்முறைகளில் ஒன்று என்று நினைத்துக்கொண்டேன். ”இது ஒருமாதிரி கள்ளிச்செடி. காக்டேஸியா குடும்பத்தில ஒண்ணு. இதுக்கு இங்கிலீஷிலே டச் மேன்ஸ் பைப்னு பேரு…” ”இப்ப போயி பாக்க முடியுமா?” ”பாக்கலாம்.ஆனா பொதுவா நிசாகந்தி பக்கத்திலே பாம்பு இருக்கும்” ”அய்யோ” ”வேணாமா?” ”வேணாம்” ”பயத்தைப்பாரு”

நான் ”நீதான் யட்சி…உனக்குத்தான் பயமே இருக்காது…போய் பறிச்சிட்டு வா” என்றேன். ”ஓக்கே” என்று அவள் நந்தவனத்திற்குள் சென்றுவிட்டாள். ”நீலிமா…ஸ்டாப் ஸ்டாப் பிளீஸ்” என்று நான் அவளை நோக்கி கூவ அவள் திரும்பி சிரித்து யட்சி மாதிரி ‘ஆ’ என்று இரு பக்கமும் கைகளைக் காட்டியபின் இருளுக்குள் சென்றாள். நான் ஒருகணம் தயங்கியபின் பின்னால் ஓடினேன்.

சருகுகள் குவிந்த நந்தவனத்தில் கால் வைக்கவே பயமாக இருந்தது. நீலிமா நின்று மணத்தை மூக்கால் பிடித்து அனுமானித்து சென்றாள் ”நீலிமா, ப்ளீஸ் வேண்டாம்..பயமா இருக்கு” என்றேன். ”கமான்..” என்று அவள் சென்று ஒரு புதர் அருகே நின்றாள். அந்தச்செடி இருளில் நன்றாக தெரியவில்லை. ஆனால் பூவை நான் பார்த்துவிட்டேன். சப்பாத்திக்கள்ளிப் பூவைப்போல கீழ்நோக்கி குனிந்து நின்றது. வெண்ணிறமான இதழ்கள். ஒரு சிறு வெண்கொற்றக்குடை. நீலிமா எம்பிக்குதித்தாள். பின்பு பின்னால் வந்து ”பாம்பு” என்றாள். ”எங்கே?” என்றேன். அவள் காலை தட் தட் என்று தரையில் உதைக்க புதருக்குள் இருந்து

சரசரவென்று ஒரு பாம்பு என் முன் பாய்ந்து என்னை வளைத்து ஓடியது. பளபளக்கும் சாட்டை ஒன்று நெளிந்து செல்வது போலிருந்தது.

நான் சிலைபோலக் குளிர்ந்து நின்றுவிட்டேன். காலை தூக்கி வைக்க முடியுமென்று தோன்றவில்லை. ''அது சாதாரணமான சாரைப்பாம்புதான்'' என்றாள் நீலிமா. அந்தப்பூவைப் பறித்துவிட்டாள். என்னருகே கொண்டுவந்து ''மோந்துபாக்கணுமா?'' என்றாள். நான் வாங்கி முகமருகே கொண்டுவந்துவிட்டு திருப்பிக்கொடுத்தேன். ''ரொம்ப கடுமையா இருக்கே'' அவள் அதை மூக்கருகே கொண்டுசென்று ஆழமாக இழுத்துவிட்டு ''எனக்கெல்லாம் இந்த அளவுக்கு மணம் இல்லேன்னா பத்தாது'' என்றாள். '' உன்னை சிலசமயம் பாத்தா கிறுக்கு மாதிரி இருக்கு'' என்றேன். அடுத்தக்கணமே அதைச் சொல்லியிருக்கக் கூடாதோ என்ற உணர்வு ஏற்பட்டது.

ஆனால் அவள் அதை விருப்பமாகவே எடுத்துக்கொண்டாள் ''ஆக்சுவலி, எனக்கு மெண்டல் பிராப்ளம் இருந்தப்பதான் நான் ரொம்ப ·ப்ரியா இருந்தேன்னு நினைக்கிறேன். எதைப்பத்தியுமே கவலை இல்லை. நான் பாட்டுக்கு நடுராத்திரியிலே இறங்கி காட்டுக்குள்ளே போயிடுவேன். காட்டுயானைக்கூட்டத்துக்கு நடுவிலே எந்த பயமும் இல்லாம போயி நின்னிருக்கேன். நல்லா ஞாபகம் இருக்கு. ஒருவாட்டி ஒரு காட்டுமாடு என்னை தூக்கி வீசிட்டுது. ஒண்ணும் பெரிய அடி கிடையாது. .. அப்பதான் நான் நிஜம்மாவே வனயட்சியா இருந்தேன்..'' அவள் பூவை தலையில் வைத்துக்கொண்டாள் ''வனயட்சி நிசாகந்தி பூவை சூடியிருப்பாள்னு சொல்வாங்க..''

''குளம் இந்தப்பக்கமா?'' என்றேன். ''இந்தப்படிகள் வழியா போகணும்..ரொம்ப பெரிய குளம்லாம் இல்லை. ஆனா ரொம்ப பழங்காலத்துக் குளம்...'' என்றாள். வெட்டுகல்லால் ஆன படிகளில் இறங்கி சென்று கொஞ்சதூரம் சென்று மேலும் சில படிகள் இறங்கியபோது குளத்தின் சுற்றுமதில் தெரிந்தது. அதுவும் சிவந்த வெட்டுகல்தான். அருகே சென்றதும் நீலிமா பாய்ந்து மதில் மேல் ஏறி மறுபக்கம் பார்த்தபடி நின்றாள். கரையில் இருந்த தவளைகள் சளசளவென்று நீரில் குதித்தன. நீர்ப்பாம்பு நீரில் குதித்து வளைந்து மூழ்குவதைக் கண்டேன்.



நீர்வெளி முழுக்கவே அல்லியிலைகளால் மூடப்பட்டிருந்தது. நாலைந்து இலைகள் சூழந்த ஒரு வட்டத்துக்குள் ஒரு அல்லிமலர். தண்டு ஒரு சாண் உயரத்துக்கு நீர்மேல் எழுந்து நிற்க விரைத்த இதழ்களுடன் மலர்கள் நின்றன. அவற்றுக்கு என்ன நிறம் என்று ஊகிக்க முடியவில்லை. அல்லி இலைகள் மேல் நீர்த்துளிகள் நிலவின் ஒளியில் கண்ணாடிமணிகள் போல உருண்டசைந்தன. நான் முழங்கால் உயரமான சுற்றுமதில் மீது அமர்ந்துகொண்டேன். அல்லிமலர்களையே பார்த்தேன். மேலே மேகங்களில் இருந்து நிலா மெல்ல கிழித்து வெளிவந்து வானத்தை மிளிரச் செய்தது. குளம் மேலும் ஒளிகொண்டது. நீர்மணிகள் சிறிய வைரக்கற்களாயின. சட்டென்று ஒரு காற்று என் முதுகில் சட்டையை ஒட்டச்செய்தபடி குளம் நோக்கி வீச மொத்த அல்லியிலைகளும் மடிந்து குளமே நிறம் மாறியது. அப்போதுதான் அந்த நிறம் பச்சை என்று உணர்ந்தேன்.

‘இதெல்லாம் என்ன கலர் பூ?” என்றேன். ”எல்லா நிறமும் இருக்கு. வெள்ளைதான் அதிகம். ரோஸ்நெறம் இருக்கு…நாலஞ்சு நீலமும் இருக்கு…அதோ அந்த சுவர் ஓரமா இருக்கெ அது நீலம்” நான் அதை உற்றுப்பார்த்தேன். ஒரு கணத்தில் அதன் நீலநிறத்தை என் கண் அடையாளம் கண்டது. உடனே பிற மலர்களில் சிவப்பையும் வெண்மையையும் அடையாளம் கண்டுகொண்டேன். அவள் என்னருகே சற்றுத்தள்ளி அமர்ந்தாள். அவள் கழுத்திலும் கன்னத்திலும் சருமம் நிலவொளியில் மலரிதழ்கள்போலப் பளபளத்தது.

”இங்கே யாருமே வாரதில்லை… இது ரொம்ப சக்தியுள்ள யட்சீன்னு சொன்னாங்க” ”அப்டியா?” ”ஆமா…நூறுவருஷம் முன்னாடிவரைக்கும் எல்லா அமாவாசைக்கும் ஒரு சின்னப்பையனை பலி எடுத்திடுவாளாம். பையன்கள் ராத்திரியிலே கள்ளிப்பாலை இல்லாட்டி நிசாகந்தி மணத்தை மோந்திடுவாங்க. ஒரு செகண்ட் ஆசைப்பட்டான்னா அவ்ளவுதான். யட்சி வந்திடுவா. யட்சி வந்திட்டு போனா பையன் செத்து கிடப்பான். உடம்பு நல்லா வெளிறி வாழைத்தண்டு மாதிரி இருக்கும். நரம்புகளிலே ரத்தமே இருக்காதாம். வாழக்கல்குந்நு நம்பூதிரி வந்துதான் யட்சியை பிடிச்சு கட்டினார்னு கதை.” ”கேரளாவிலே யட்சிக்கதைகளுக்குப் பஞ்சமே இல்லை” என்றேன்

இருவரும் அல்லிகளையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தோம். எனக்கு அல்லிகளைப்பற்றி எதுவுமே நினைவுக்கு வரவில்லை. ராணி வார தழில் அல்லி பதில்கள் என்று ஒரு பகுதி உண்டு. அபத்தமாக அதுதான் நினைவுக்கு வந்தது. ஆனால் அல்லிமலர்களின் மிடுக்கு என் பிரக்ஞையை விட்டு விலகவேயில்லை. குளப்பரப்பில் அவை செருக்குடன் தலைதூக்கி நின்றன. ”குளிப்பமா?” என்றாள் நீலிமா சட்டென்று. ”மை காட்!” என்றேன். ”நான் குளிக்கப்போறேன்” நான் அவள் கண்களை அச்சத்துடன் பார்த்து அவள் கிண்டல் செய்கிறாள் என்று உடனே புரிந்துகொண்டேன். ”சரி குளி…யட்சிகள் தாமரைத் தடாகங்களிலே குளிப்பாங்கன்னுதான் சொன்னாங்க” ”குளிச்சிடுவேன்…” என்றாள்.

”ஆனா யட்சிகள் எப்டி குளிக்கும் தெரியுமா? ” ”எப்டி?”என்று கண்களைத் தழைத்தாள். அவளுடைய முகம் சிவப்பதை என்னால் கற்பனைசெய்ய முடிந்தது. ”கேரளத்திலே அதுக்கு யட்சிக்குளின்னே பேருண்டில்ல?” ”ஓ” என்றாள். ”யட்சிகளுக்கு முகத்திலே மட்டுமில்ல மார்பிலேயும் கண் உண்டுன்னு சொல்வாங்க” ‘ஸ்டாப்பிட்’ ”அப்ப நீ யட்சி இல்லைதானே? ” அவள் பேசாமல் இருந்தாள். ”சாதாரணமான பெண்..ஒத்துக்கோ” ”சரி ஒத்துக்கிட்டாச்சு..போதுமா” நான் சிரித்தேன். அவள் சிரிக்காமல் கோபமாக இருப்பதைப் போலிருந்தது.

”முக்கர்ஜின்னு ஒருத்தரைப் பார்த்தேன்” என்றேன். ”யட்சியை வரையற ஆள்” ”ஐ நோ ஹிம்..ஸ்டுப்பிட் ஓல்ட் மான்” நான் அந்த அலட்சியத்தால் சற்றே புண்பட்டு ”நல்ல மனுஷனாத்தானே தோணுது” என்றேன் ”இருந்துட்டு போகட்டுமே…” என்றாள். பேச்சைமாற்றுவதுபோல ”கன் ஐ ஆஸ்க் எ கொஸ்டின்?” என்றாள். ”எஸ்” ”வெரி பர்ஸனல்” ”ஷ்யூர்” அவள் சில கணங்கள் பேசாமல் இருந்தாள். பின்பு ”ஏன் இன்னைக்கு முன்னாடியே வரல்லை?” என்றாள். ”அதாவது வர்க்..ஆக்சுவலி…” என்றேன். ”ஷட் அப்… ஐ நோ. நீங்க வேணும்னேதான் வரலை” நான் பேசாமல் இருந்தேன். ”ஏன்?” என்றாள்.

நான் தயங்கி பின்பு ”எனக்கு பயமா இருந்தது” என்றேன். ”என்னைத்தானே பயம்?” என்றாள். அந்த அப்பட்டமான கேள்வியால் நான் அயர்ந்துபோய் அமர்ந்திருந்தேன். என் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. ”டெல் மி” நான் நாவால் உதடுகளை ஈரப்படுத்திக்கோண்டேன். ஈரம் தேவைப்பட்டது தொண்டைக்கு. ”மே பி…”என்றேன். ”மே பி…ஆனா அப்டி இல்லை…ஆக்சுவலா இந்த மாற்றம் எனக்கு பயமா இருக்கு. நான் இது வரை வாழ்ந்த வாழ்க்கையை ஒட்டுமொத்தமா விட்டுடணுமான்னு இருந்தது. இது ஏதோ ஒரு பைத்தியக்கார உலகம். இது பெரிய ஒரு எக்ஸைட்டிங்கான உலகம்தான். இருந்தாலும்–”

என் சொற்களை நான் கண்டுகொண்டேன். ”மனுஷனுக்கு பெரிய விஷயங்கள் வேண்டாம். அதான் அவன் மனசோட இயல்பு. ஒரு நூறுகோடி ரூபாய இல்லாட்டி நாலுகைப்பிடி வைரத்தை மனுஷன் கையிலே குடுத்தா பதறிப்போயிடுவான். பயத்திலே சாவான். அதுமாதிரித்தான். இந்த உலகம் வேற மாதிரி இருக்கு. இங்க எல்லாமே தீயா எரியற மாதிரி, உருகி வழியற மாதிரி இருக்கு. ஒரு சாதாரண கண்ணாடி டம்ளரைப்பாத்தாக்கூட அழகிலே மனசு மலைச்சுபோயிடுது. இது ஒரு கனவு…இந்தக் கனவிலேயே வாழமுடியுமான்னு தோணிட்டுது… கனவிலே இருந்து முழிச்சுக்கலேன்னா ஆபத்து. திரும்பி வரவே முடியாதுன்னு பட்டுது…வெல்…ஆக்சுவலி..”நான் என் வேகத்தை இழந்தேன் ”அதாவது, எனக்கு பைத்தியம் பிடிச்சிடுமோன்னு பயந்துட்டேன்”

அவள் கோணலாகப் புன்னகைசெய்தபடி ”ஏன் புடிச்சாத்தான் என்ன?”என்றாள் ”பைத்தியம்னா என்ன? மூளையிலே ஒரு நாலு ஜன்னலை கூடவே தெறந்து போடறது. இன்னும்கொஞ்சம் காற்றும் வெளிச்சமும் உள்ள வர்ரது. பைத்தியத்துக்கான சான்ஸ் இல்லாத யாருமே இல்லை. உள்ளூர பைத்தியமாகணும்னு கொஞ்சமாவது ஆசைப்படாதவங்களும் இல்லை. ஏன்னா எல்லா உச்சகட்ட அனுபவங்களிலேயும் நாம கொஞ்சம் பைத்தியங்களாத்தான் இருக்கோம்…” நான் மெல்ல மனம் அதிரப்பெற்றேன். அதை நானே உணர்ந்திருந்தேன். ”தேர் இஸ் நோ ஹாப்பினஸ் வென் யூ ஆர் ஸோபர்” என்றாள் அவள். நான் எழுந்து செல்ல விரும்பினேன். ஆனால் என் உடல் அங்கேயே இருந்தது

”லூக், இப்ப இந்த காட்சியிலே ஒரு மேட்னெஸ் இல்லையா? அதுதானே இங்க இவ்ளவு அழகை உண்டாக்குது?” என்றாள் நீலிமா. நான் ”உண்மைதான்” என்றேன். என் மூளையின் மூடிகளெல்லாம் திறந்துகொள்வது போல உணர்ந்தேன். விதவிதமான விசித்திரக் கற்பனைகள். அல்லிகள் ஒவ்வொன்றுக்கும் நாங்கள் அங்கே இருப்பது தெரியும் என்பதைப்போல. ஆகவே அவை புல்லரித்து சிலிர்த்து நிற்பவை போல. குளத்தின் ஆழத்தில் மேலும் ஆழத்துக்கு செல்லும் வாசல்கள் திறந்து கிடப்பது போல. அங்கே ஒரு நிலா அசையாமல் நின்றது.

”அப்றம் எதுக்கு பைத்தியத்தைப் பயப்படணும்” ”திரும்பி வரமுடியாட்டி?” ”எதுக்கு திரும்பி போகணும்? மனுஷனுக்கு என்ன தேவை?சந்தோஷம், அழகு, நிறைவு. அது கிடைச்சதுக்குப் பிறகு எதுக்காக திரும்பி போகணும்? எனக்கு திரும்பிப் போறதைப்பத்தி நினைச்சுப்பாக்கவே முடியலை” நான் பெருமூச்சுவிட்டேன். ”எனக்கும்தான்… நேற்று பகலை என்னால தாங்கிக்கவே முடியலை. அசிங்கமான, ஆபாசமான, வெளிச்சம். எல்லாமே கூசற மாதிரி இருந்தது… என்னால அந்த உலகுக்கு திரும்பிப் போகமுடியும்னே தோணல்லை… அப்றம் நான் உன்னை இழந்திருவேனோன்னு நினைச்சேன்…அதை என்னால தாங்க முடியல்லை…”

சட்டென்று அவள் எழுந்து, நான் திடுக்கிட்டு மார்பு அறைய செயலற்றிருந்த கணத்தில் என்னை ஆரத்தழுவிக்கொண்டு, என் உதடுகளில் தன் உதடுகளைப் பதித்தாள். நான் அவள் சூடான மூச்சையும் வழுவழுத்த மென்மையான உதடுகளையும் உணர்ந்தேன். இருவரும் ஒருவரை ஒருவர் உண்பதுபோன்றதோர் அழுத்தமான முத்தத்தில் இறுகிக் கொண்டோம். ம்ம் என்ற மெல்லிய முனகலுடன் அவள் பிரிந்து கொண்டாள். நான் அவள் கண்களைப் பார்த்தேன். ”ஞான் விடில்ல” என்று சொன்னாள். கண்கள் ஒளியுடன் மின்னின. மூச்சில் கழுத்து குழிந்து எழுந்தது. தோள்கள் கூச்சம் கொண்டவை போல முன்நோக்கி வளைந்து அசைந்தன

அவள் தோள்களின் பளீரென்ற நிறத்தை பார்த்தேன். மறுகணம் அவளை அள்ளி எடுத்து தோள்களிலும் கழுத்திலும் கன்னங்களிலும் உதடுகளிலும் ஆவேசமாக முத்தமிட ஆரம்பிந்தேன். அவள் உடல் முதலில் எதிர்விசை கொடுக்கப்பட்டதுபோல இருந்தது. பின்பு நெகிழ்ந்து என் கைகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது போல இ¨யைந்தது. பின்பு அவள் உடலில் சுயநி¨னைவு திரும்புவதை என் உடலாலேயே உணர்ந்தேன்.”மதி கேட்டோ” என்று மெல்லச் சொன்னபடி என் மார்பில் கையை வைத்து தள்ளி எழுந்துகொண்டு முந்தானையை தூக்கிப் போட்டுக்கொண்டு இடுப்பில் சேலையை செருகினாள்.


நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். ”என்ன பார்வை?” என்றாள். ”இப்ப முழிப்பு வந்திடுமோன்னு பயமா இருக்கு” என்றேன். ”கமான்…விடிய ஆரம்பிச்சாச்சு” என்றாள். நான் எழுந்தேன். கார்ச்சாவி இருக்கிறதா என்று தொட்டுப்பார்த்துக்கொண்டு நடந்தேன். அவள் சேலை சரியாக அமையவில்லை. ”ஒரு நிமிஷம்” என்று சொல்லிவிட்டு சேலையை நன்றாகவே கலைத்து சீராக உடுத்தாள். ”கொஞ்சம் புடிச்சு விடுறது?”

நான் தரையில் குந்தி அமர்ந்து சேலையின் கீழ்மடிப்புகளை விசிறிபோல மடித்து நீவினேன்.”நல்ல பழக்கம் இருக்கு போலிருக்கே” என்றாள் ”பின்னே? எங்கம்மா டீச்சர். காட்டன் புடவைதான் கட்டுவாங்க.நான் தான் இந்தமாதிரி

சேவைகள் செய்றது" என்றேன். "போகாம்" என்றாள். நான் எழுந்தபோது நிசாகந்தி மணம் வீசியது. "உன் தலையிலே பூ எங்க?" என்றேன். "அது கீழே விழுந்திருக்கும்..."என்றாள். "வேறே பூ இருக்கும்போல...நல்ல மணம்"

காரைக்கிளப்பியதும் கண்டுகொண்டேன் என் சட்டையில் இருந்துதான் நிசாகந்தி வாசனை வீசிக்கொண்டிருந்தது

## இரவு 12



**ஒலியாக இரவை மாற்றலாம்**
**சுவர்க்கோழி அதை அறியும்**
**நிறமாக இரவை மாற்றலாம்**
**வௌவால்கள் அதை அறியும்**
**ஒரு சொல்லாக**
**அதை மாற்றலாம்**
**மிக எளிமையான**
**மிக இருண்ட ஒரு சொல்லாக**
**நான்**

ஒரு வாரம் கழித்து நான் நீலிமாவிடம் சொன்னேன்"நீ அன்று அந்த முத்தத்தை அளிக்காவிட்டால் நான் ஒரு அடிகூட முன்னால் எடுத்து வைத்திருக்க மாட்டேன்". அதை ஆங்கிலத்தில்தான் என்னால் சொல்லல முடிந்தது. அந்த மொழி எல்லாவற்றையுமே ஒரு வணிகம்போல ஆக்கிவிடுகிறது என்று பட்டது. அவள் புன்னகையுடன் "ஏன்?" என்றாள் "பயமா?" நான் "பயமில்லை....ஆனா ஏதோ ஒண்ணு..ஒரு ஒருவகையான..." என்று தடுமாறி ஆங்கிலத்தில் "நான் உன்னை இன்னமும் ஒரு நடைமுறை யதார்த்தமாக புரிந்துகொள்ள ஆரம்பிக்கவில்லை. நீ என்னுடைய கனவில்தான் இன்னமும் நிகழ்ந்துகொண்டிருக்கிறாய்" என்றேன். "எல்லாம் பிரமைகள்" என்றாள்.

நான் "உன்னை நான் இதுவரைக்கும் பகல் வெளிச்சத்தில் பார்த்ததே இல்லை" என்றேன். "ஏன் பார்க்க வேண்டும்? பகல் வெளிச்சத்தில் என்ன நடந்துவிடும்?" "ஒன்றும் நடக்காது. ஆனால் அது ஒரு யதார்த்தம்..." "இது?" "இது இன்னும் கொஞ்சம் அழகான யதார்த்தம்" என்னால் குழப்பம் இல்லாமல் சொல்ல

முடியவில்லை. ”ஆனால் இந்த யதார்த்தம் நாம் உருவாக்கிக் கொள்வது. கடவுள் நமக்கு அளிக்கும் யதார்த்தம் பகல்தான். அது நம்மை மீறியது” ”நீங்கள் குழம்பிப்போயிருக்கிறீர்கள்” என்றாள் நீலிமா

உண்மைதான். குழம்பித்தான் போயிருந்தேன். மௌனமாக காரை ஓட்டினேன். நாங்கள் கொடுங்கல்லூருக்குச் சென்று கொண்டிருந்தோம். இரு பக்கமும் இரவு விளக்குகள் மௌனமாக பின்னால் ஓட சாலை சுருளழிந்து முன்னால் ஓடிக்கொண்டே இருந்தது. சிடி ஒன்றின் மீது செல்லும் லேஸர் வருடல் போல காரின் முகப்பொளி சாலை மீது செல்ல அந்த சிடியின் பதிவுகள் உயிர்கொண்டு ஒலிப்பது போல என் மனம் சிந்தனைகளை கொட்டிக்கொண்டிருந்தது. ஆனால் ஆட்டுமந்தைகள் போல முட்டி மோதி ஒன்று மேல் ஒன்று ஏறி ததும்பும் வீண் எண்ணங்களாக அவை இருந்தன

”மொத்தத்தில் நான் யட்சியா பெண்ணா என்று இனிமேல்தான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது, இல்லையா?” என்றாள். ”அப்படி எல்லாம் இல்லை…” என்றேன். அவள் கனத்த குரலில் ”ராத்திரி குரல்வளையைக் கடிச்சு ரத்தத்தை முழுக்க உறிஞ்சிட்டு போயிடுவேனான்னு பயமா இருக்கா?” நான் திரும்பி புன்னகைசெய்து ”ஆமா…” என்றேன். ” எனக்கும் ஆசையாத்தான் இருக்கு…பாப்போம்” என்றாள் நீலிமா. நான் சிரித்தபோது அவளும் சிரிக்க அந்த நிமிடம் வரை வந்த அந்த இறுக்கம் மெல்ல தளர்ந்தது.

”நீ ஒரு வலிமையான ஆளுமையாக இருக்கிறாய். அதுதான் காரணம். வலிமையான பெண்களை ஆண்கள் அஞ்சுவார்கள்” என்று மேலும் ஆங்கிலத்தில் சொன்னேன். ”ஓ கமான், அந்த ஸில்லி தத்துவப்பேச்சை விடுங்க…தமிழிலே பேசுங்க” நான் ”ஓகே” என்றேன். ”நானே வலிஞ்சு வந்தது பிடிக்கலியா?பொதுவா அந்த மாதிரி முன்னால்வர்ர பெண்கள் அவங்களோட ஈர்ப்பை இழந்திடுவாங்கன்னு சொல்றாங்களே” ”அதெல்லாம் இல்லை” என்றேன் ”அதிலேதான் ஆண்களுக்கு அற்புதமான ஒரு மகிழ்ச்சி இருக்கு…அது ஒரு அற்புதமான ராத்திரி… என் உடம்பிலே ஒருநாள் முழுக்க அந்த நிசாகந்தி மணம் வந்திட்டிருந்தது”

”நான் அன்னைக்கு எப்டியோ இமோஷனலாயிட்டேன்…ஏன்னா, நீங்க பின்னாலே காலெடுத்து வைக்கிறீங்கன்னு தோணிட்டிருந்தது. அன்னைக்கு முழுக்க நான் தவிச்சிட்டே இருந்தேன். ·பாதர் ஒரே தியாலஜியா போட்டுத்தள்ளிட்டிருந்தார். என்னாலே உக்காந்திருக்கவே முடியலை. அழுகை அழுகையா வந்தது. அப்பதான் நீங்க வந்து வாசலிலே நின்னீங்க. மைகாட், அந்த மொமெண்டை எப்டி சொல்றது. என் லை·ப்ல அது ஒரு கிரேட் மொமெண்ட். அப்டியே உடம்புக்குள்ளே இருந்து என்னென்னமோ பொங்கி வந்தது…ஒரு செகண்டிலே நான் கண்ட்ரோல் பண்ணிக்காம இருந்திருந்தா

அப்பவே அத்தனை பேர் முன்னாடி பாய்ஞ்சு வந்து கட்டிப்பிடிச்சு முத்தமா குத்திருப்பேன்..”

நான் நெகிழ்ந்து என் கையை அவள் தொடைமேல் வைத்தேன். அவள் தன் இரு கைகளாலும் என் கையைப் பற்றிக்கொண்டாள். ”ஆச்சரியம்தான் இல்லை? ஒரு செகண்டிலே நரகம் சொர்க்கமா ஆயிடுச்சு. அதுக்கு முன்னாடிவரை நான் ஏன் உயிர்வாழணும்னு நெனைச்சிட்டிருந்தேன். அதுக்குப் பிறகு நான் தான் உலகிலேயே அதிர்ஷ்டசாலின்னு தோணிட்டுது... ” நான் பெருமூச்சு விட்டேன்.

இருவரும் அவரவர் உணர்ச்சித்ததும்பல்கள் வழியாக சென்றோம். பின்னர் மீண்டும் இருவருமே பெருமூச்சு விட்டோம். மனம் முழுக்க தித்திப்பு பொங்கி இறுகி நெஞ்சு வலிப்பது போலிருந்தது. அந்த தீவிரம் மனதுக்கு அதிகம், அத்தனை உவகை மனிதனுக்கு தேவையே இல்லை, அந்த அளவுக்கு மகிழ்ச்சி கொண்டால் மகிழ்ச்சியே அவஸ்தையாக ஆகிவிடுகிறது. நரம்புகள் கனம் தாளாமல் வெடிப்பவை போல ஆகிவிடுகின்றன. நான் கீழே வர விரும்பினேன். ஒரு வேகத்தில் ஏறிவிட்ட மரத்திலிருந்து இறங்க முடியாமல் தவிப்பது போலிருந்தது. என்னால் சொற்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



பின்பு கிடைத்த ஒரு சொற்றொடரை பற்றிக்கொண்டேன். ”எப்ப நான் வேணும்னு தோணிச்சு?” நீலிமா தன் விரல்களைப் பார்த்து சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பின்பு ”உண்மையச் சொல்லட்டுமா? பாத்த முதல் நிமிஷமே” என்றாள். ”ஓ” என்றேன். ”நான் செருப்பைக் கழட்டுறப்பதான் உங்களைப் பாத்தேன். மனசு திக்குன்னு ஆகிப்போச்சு. கால்கூட கொஞ்சம் தடுமாறிச்சு...அதுக்குப் பிறகு வந்து சோபாவிலே உக்காருற வரைக்கும் நான் எங்க இருக்கேன்னே தெரியல்லை” நான் சீட்டியடித்தேன். ”என்ன சீட்டி, காலிப்பசங்க மாதிரி” ”திஸ் இஸ் த கிரேட் கண்டதும் காதல்” என்றேன்.

”ஆனா ஏன் அப்டீன்னு யோசிச்சா எனக்கு ஒண்ணு தோணிச்சு, ஐ வாஸ் லாங்விங்... எனக்கு ஒரு ஆண் தேவைப்பட்டான். அதான் உண்மை. ஏதோ ஒரு ஆண் இல்லை. மனசுக்குள்ளே ஒரு நல்ல லவ்வரா உள்ள போகக்கூடிய ஒரு

ஆண். அதான். வேறே ஒண்ணுமே இல்லை. வருஷக்கணக்கா நான் அதுக்காக ஏங்கி ஏங்கி உருகிட்டிருந்தேன். அது என்னைச் சுத்தி இருக்கிற எல்லாருக்குமே தெரியும்னு நினைக்கிறேன். எங்க அப்பா கம்லா ஆன்டி அட்மிரல் எல்லாருமே எவ்வளவு சாதாரணமா இதை அனுமதிக்கிறாங்கன்னு பாத்தா தெரியும். எல்லாருமே காத்திட்டிருந்தாங்க, உங்களை மாதிரி ஒருத்தருக்காக. எஸ், ஐ வாஸ் லாங்ஙிங்''

''எதுக்காக?'' என்றேன். உடனே கேவலமான கேள்வி என்று தோன்றி ''ஐயம் ஸாரி, வாட் ஐ மீன் இஸ்..'' என்றேன். ''தட் இஸ் ஆல் ரைட்.. செக்ஸ¤க்கான ஏக்கம்னு நினைக்கிறீங்க. அப்பட்டமா சொல்லப்போனா அதுவும் தான். எப்பவுமே என் உடம்பு செக்ஸ¤க்காக ஏங்கிட்டிருக்கு. எனக்கு தினமும் அது தேவைப்படுது... எப்பவுமே என் உடம்பு நிலைகொள்ளாம பரபரன்னுதான் இருக்கும். எப்பவுமே ரொமாண்டிக்கா...ஒரு பிரியமான ஆண் கண்முன்னாடி நின்னுட்டிருக்கிறமாதிரி... ஆனா அதுக்கு ஆம்பிளை வேணும்னு இல்லை. ·பாண்டஸி போதும். ஐ வில் டு இட் மைசெல்·ப்''

நான் அவளுடைய வெளிப்படைத்தன்மையை எப்போதுமே பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றாலும் அப்போது ஸ்டீரிங்கை பிடித்திருந்த என் கைகள் மெல்ல நடுங்கின. ''ஆனா இது அதுக்காக இல்லை. எனக்கு இமோஷனலா ஆண் தேவைப்பட்டான். ஸ்பிரிச்சுவலா... என்னாலே தனியா இருக்க முடியல்லை. அதைவிட சரியாச் சொல்லணுமானா தனியா இருக்கிறேங்கிற நெனைப்பை தாங்கிக்க முடியலை... அதான். அதுக்காகத்தான்''

நான் மீண்டும் அவள் தொடையில் கைவத்து மென்மையான தசையை மெல்லப்பற்றி அழுத்தினேன். எதிரே ஒரு லாரி வர ஸ்டீரிங்கில் கை வைக்க வேண்டியிருந்தது. ''நீங்க எப்டி இதைப் புரிஞ்சுக்கிறீங்கன்னு தெரியல்லை. ஆனா ...எப்டிச் சொல்றது...என்னால இந்த ராத்திரிய தனியா தாண்ட முடியல்லை.'' ''எந்த ராத்திரியை?'' ''இந்த நீளமான ராத்திரியைத்தான். இது ஒரே ராத்திரிதானே...நடுவே நடுவே தூங்கிட்டாலும்கூட இது ஒரு சிங்கிள் நைட் தான். அப்டித்தான் எனக்குத் தோணுது. இந்த ராத்திரி ரொம்ப நீளமானது...''அவள் குரலில் தெரிந்த தவிப்பைக் கண்டு நான் திரும்பிப் பார்த்தேன். முகம் உருகுவது போல் இருந்தது.

''...பகல் மாதிரி இல்லை ராத்திரி. பகலிலே நெறைய டைவர்ஷன்ஸ் இருக்கு. நெறைய மெட்டீரியல் விஷயங்கள் இருக்கு. ராத்திரி அப்டி இல்லை.. ராத்திரி ரொம்ப எமோஷனலானது. மனசு உருகி நெகிழ்ந்து போய் இருக்கு. அப்ப நம்மாலே எதையுமே கட்டுப்படுத்த முடியாது. ராத்திரியோட பிரச்சினையே இதான். இங்க எல்லாமே கடுமையா இருக்கும். காதல், காமம், வெறுப்பு, குரோதம் எல்லாமே உக்கிரமாத்தான் இருக்க முடியும். எதுக்குமே கண்ட்ரோல்

இருக்காது… அதான்பிரச்சினையே. ராத்திரியிலே வாழறது ரொம்பக் கஷ்டம் சரண். ராத்திரியை நம்மாலே சமாளிக்கவே முடியாது…” என் தோளில் கைவைத்து ”நீங்க என்கூட இருக்கணும். என்னை தனியா விட்டிரக்கூடாது” என்றாள்

நான் ”கண்டிப்பா…” என்றேன். மேலே என்ன சொல்வது என்று தெரியவில்லை. ”ஐ லவ் யூ” என்றேன். அந்த தேய்ந்துபோன சாதாரணமான சொற்கள் அப்போது எல்லையற்ற உணர்ச்சியும் கவித்துவமும் அர்த்த விரிவும் கொண்டவையாக இருந்தன. நான், நீ ,காதல் என மூன்றே மூன்று இருப்புகளினால் ஆன உலகம் அது. நான் நீயுடன் காதலால் இணைக்கப்பட்டிருக்கும் உலகம். நானும் நீயும் செய்வது காதல் மட்டுமாக இருக்கும் உலகம். காதல் என்ற பெயர்ச்சொல் வினைச்சொல்லாக உருமாறும் இடம் . நான் மேலும் உத்வேகத்துடன் ”ஐ லவ் யூ நீல்” என்றேன்

அவள் சீறும் ஒலியுடன் அழுதபடி அப்படியே முகம் பொத்தி மடங்கி தன் மடியில் குப்புறக் கவிழ்ந்து குலுங்கி விசும்ப ஆரம்பித்தாள். நான் அவளை திகைப்புடன் பார்க்க கார் நிலைவிட்டு ஓரமாக இறங்கியது. காரை நிறுத்திவிட்டு அவள் தலைமேல் கையை வைத்தேன். எதுவும் சொல்லத் தோன்றவில்லை. அப்போதுகூட அவளுடைய முதுகிலும் புறங்கழுத்திலும் பளீரிடும் சருமத்தில் என் பார்வை செல்வதை உணர்ந்த போது ஆச்சரியமாக இருந்தது. அவள் சில நிமிடங்கள் அழுதபின்பு நிமிர்ந்து கண்களை தன் சேலை நுனியால் ஒற்றிக்கொண்டாள். நான் சட்டென்று அவளை இழுத்து உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்டேன். அவள் அதை எதிர்பார்த்திருந்தது போல தோன்றியது

அதன்பின்னர் பயணம் மிக உற்சாகமானதாக ஆகியது. இருவரும் ஒருவரை ஒருவர் சீண்டிக்கொண்டோம். ஒருவரை ஒருவர் பிடித்து தள்ளி சிரித்தோம். எங்கள் காரே சிரித்துக்கொண்டே ஓடுவது போல அங்குமிங்கும் அலைபாய்ந்தது. நல்லவேளையாக அந்த நேரத்தில் சாலையில் எவருமே இருக்கவில்லை. அவ்வப்போது சில மீன் லாரிகள் மட்டும் கொச்சின் நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

பாலத்தின் மீது சென்றபோது நான் காரை நிறுத்தி கதவைத்திறந்து வெளியே பார்த்தேன். மெழுகு ஓவியம்போல நீரும் நீரில் பிரதிபலித்த தென்னைமரக்கூட்டங்களும் தெரிந்தன. ”போலாம், கரை பாலத்திலே நிறுத்தக்கூடாது” என்றாள் நீலிமா. ”அது பகல் சட்டம்…இது ராத்திரி. வௌவால்களுக்கு எல்லாமே தலைகீழ்தான்” ”போதும் தத்துவம்…இப்ப போறோமா இல்லையா?”

கொடுங்கல்லூருக்கு இரவு இரண்டு மணிக்குச் சென்று சேர்ந்தோம். ஏற்கனவே பத்துப் பதினைந்து கார்கள் பெரிய அரசமரத்தடியில் நின்றிருந்தன. ஒரே ஒரு டீ மற்றும் வெற்றிலைபாக்குக் கடை மட்டும் திறந்திருந்தது. காருக்குள்ளேயே நான் வேட்டியைக் கட்டி உள்ளிருந்து பாண்டை இழுத்து வெளியே எடுத்தேன். நீலிமா வாய் பொத்திச் சிரித்தாள். ”என்ன?” ”ஒண்ணுமில்லை” ‘என்னன்னு சொல்லு” ”இல்ல, மாடு குட்டி போடுறது மாதிரி இருக்கு” ”சீ...நாயே” என்று எட்டி அவள் மண்டையில் அடித்தேன். சட்டையை கழட்டிவிட்டு வெறும் மார்புடன் சென்றபோது காற்றுவந்து பட்டு உடல் சிலிர்த்தது.

” இப்ப நீங்க ஒரு நல்ல நாயர் மாதிரி இருக்கீங்க” ”அதாவது?” ”மார்பிலே முடி..” ”ஓ” என்றேன். ”ஒண்ணு தெரியுமா மலையாளா சினிமாவிலேயே நல்ல நாயர் மாதிரி இருக்கிற ஒரே ஆக்டர் மம்மூட்டிதான்” என்று சிரித்தாள். கோயில் கோபுரமில்லாமல் ஒரு சாதாரண கட்டிடம் மாதிரி இருந்தது. மையக் கோயிலுக்கு அருகே இரு சிறு கோயில்கள். ஆலமரத்தில் கீழிருந்து சென்ற ஒளி இலைகளில் ஆடியது.

காருக்குள் தாம்பாளத்தில் பூஜைக்கான பொருட்கள் இருந்தன. பழங்கள் பூக்கள் களபமும் செந்தூரமும் தவிர ஒரு செம்பட்டும் இருந்தது. கமலா எல்லாவற்றையும் முறையாக எடுத்து வைத்திருந்தார். தட்டுடன் கிழக்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்தோம். கோயில் வாசல் பூட்டியிருக்க அர்த்தமண்டபத்தில் மட்டும் சிவப்புச் சங்குபுஷ்பங்கள் பூத்தது போல சுடர்கள் எரிய குத்துவிளக்குகள் கூட்டமாக நின்ரன. ”என்ன பூட்டியிருக்கு?” என்றேன். ”இது சிவன் கோயில்...அம்மைகோயில் வடக்குமுகமா இருக்கும்... நாம பக்கவாட்டிலே நுழையறோம்”

எனக்கு அந்தக்கோயில் பலவகையான குழப்பங்களை அளித்தது. கிழக்குவாசலை நோக்கியதாக ஒரு சிவன் கோயில். அதன்வலதுபக்கம் ஒரு நீளமான கருவறை வடக்குபக்கம் திறந்தது. அதில்தான் கொடுங்கல்லூரம்மா இருந்தாள். இரு கோயில்களுக்கும் ஒரே அர்த்தமண்டபம்தான். ”வடக்கு வாசல் வழியா உள்ளே வரக்கூடாது. அம்மை கண் நேரக நம் மேல் விழக்கூடாது” என்றாள் நீலிமா. கோயிலுக்குள் சிலரே இருந்தார்கள். ஒரு கணவனும் மனைவியும் மண்டபத்தருகே நிற்க ஒரு நம்பூதிரி மட்டும் விளக்குகளுக்கு எண்ணை விட்டுக்கொண்டிருந்தார்.

கருவறைக்குள் தேவியின் சிலை சந்தனக்காப்பு போடப்பட்டு பெரிய விழிமலர்களும் வெள்ளி மார்பக அங்கியும் அணிவிக்கப்பட்டு மலர்மாலைகள் சூழல் நெய்விளக்குகளின் ஒளியில் உயிருடன் அதிர்வது போல தெரிந்தது. ”இது கண்ணகி தானே?” என்றேன் கிசுகிசுப்பாக. ”யாரா இருந்தா என்ன,

தெய்வம்” என்றாள் நீலிமா. அது உண்மைதான், சிவனும் விஷ்ணுவும் முருகனும் மட்டும் யாரென்று நமக்கு தெரியவா செய்கிறது?

கோயிலுக்குவலப்பக்கம் ஒரு மண்டபம் இருந்தது. ”அதான் பழைய கர்ப்பகிருகம். அதை ஆதிசங்கரர் நிரந்தரமா மூடிட்டார்னு சொல்றாங்க. அது மேற்கு வாசல் உள்ள கர்ப்பகிருகம். அந்த வாசலை கல் வைச்சு மூடி அதுக்கு முன்னாடி இந்தக் கருவறைய கட்டி இதை வடக்கு பாத்து வச்சிருக்காங்க.” ”உள்ளே பாக்க முடியுமா?” என்றேன். ”முடியாது. உள்ள ஸ்ரீசக்ரம் இருக்கிறதா நம்பிக்கை” என்றாள். உள்ளே இருந்த நம்பூதிரி கணீரென்ற மென்குரலில் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். தீப ஒளியில் விழிமலர்களின் வளைவில் பட்ட ஒளி நடுவிழி போல மலர அம்மன் அந்த உச்சரிப்பைக் கேட்டுக்கொண்டிருப்பதாகப் பட்டது.

மேலும் சிலர் வந்து கருவறை முன் குழுமினார்கள். ஆண்கள் அனைவரும் சட்டையில்லாமல் இருந்தது ஒரு வித்தியாசத்தை உருவாக்கியது. குழந்தைகளே இல்லை. அனைவருமே ஒரு விதமான மௌனத்துடன் தங்களுக்குள் மூழ்கியவர்கள்போல நின்றிருந்தார்கள். காற்று கோயிலை வளைத்து வந்து என்னை தழுவி கடந்துசெல்ல ஆடும் சுடர்களில் மண்டபம் திரைச்சீலை ஓவியம் போல் அசைந்து நெளிந்தடங்கியது. ”சுற்றி வரவேண்டாமா?” என்று மெல்ல கேட்டேன். ”இங்க சுத்திவரக்கூடாதுன்னு ஐதீகம்” என்றாள் நீலிமா.

கோயிலின் வலப்பக்கத்தில் இருந்து மெலிந்த கரிய உடல்கொண்ட ஒரு வயோதிகர் பெரியதோர் நார்ப்பெட்டியுடன் வந்தார். அது நிறைய பச்சை மட்டைகீற்றுகளில் வெண்துணி சுற்றி தேங்காயெண்ணை ஊற்றப்பட்ட பந்தங்கள் இருந்தன. மண்டபத்தின் நான்குமூலைகளிலும் நான்கு பந்தங்களை நட்டுவிட்டுச் சென்றார். இன்னொரும் இருவர் அவருடன் சேர்ந்துகொள்ள அவர்கள் கோயிலின் வெளி வளைப்பில் இருந்த ஏராளமான சிறு சிறு தெய்வ சன்னிதிகள் முன் மூன்று மூன்று பந்தங்களை நட்டார்கள்.

சங்கு ஒலிக்க நம்பூதிரி கருவறைக் கதவை மூடினார். ”உள்ள என்ன பண்றார்?” என்றேன்.”இங்க எல்லாமே தாந்த்ரீக பூஜைதான். உள்ள நெறைய சைகைகள் எல்லாம் உண்டு. ஒருகாலத்திலே இங்கே நரபலியெல்லாம்கூட குடுத்திருக்காங்க. எங்க அப்பா சின்னவயசிலே இங்க ஆடு கோழியெல்லாம் அறுக்கிறதைப் பார்த்திருக்கார்...”என்றாள் நீலிமா. ”நம்பூதிரியா அறுப்பாங்க?” ”இவங்க நம்பூதிரி இல்லை. இவங்களுக்கு அடிகள்னு பேரு”

ஒருவர் எங்களைப்பார்க்க நாங்கள் பேச்சை முடித்துக்கொண்டோம். சட்டென்று சங்கொலியும் மணியோசையுமாக கதவுகள் திறந்தன. உள்ளே தேவி

தகதகவென்று எழுந்து கூத்தாடுவதுபோலிருந்தது. இருபக்கமும் நெய்ப்பந்தங்கள் கூவும் சேவல் போல தலைசொடுக்கி தலைசொடுக்கி எம்பின. அடிகள் கையில் ஒரு நெய்ப்பந்தத்துடன் வெளியேவந்தார். அந்தபந்தத்தில் இருந்து நெருப்பைக் கொளுத்திக்கொண்டு சென்று எல்லா பந்தங்களையும் பற்ற வைத்தார்கள். மொத்த கோயில் வளாகமும் தீக்கொழுந்துகள் பதாகைகள் போல பறக்க தங்கள் நிழலுடன் இணை சேர்ந்து நடனமிட ஆரம்பித்தது.



அடிகள் பந்தங்களுடன் செல்ல பின்னால் அனைவரும் வணங்கியபடிச் சென்றார்கள். மேற்குவாசலில் இன்னொரு அர்த்தமண்டபம் இருந்தது. ஒரு மாபெரும் கண்டாமணி அதில் இருளுக்குள் தொங்கியது. ஒருகாலத்தில் மேற்குவாசல்தான் பிரதானமாக இருந்திருக்கிறது. அம்மன் மேற்கு நோக்கி கோயில்கொண்டிருந்த காலம். இப்போது நிரந்தரமாக மூடப்பட்டிருந்தது அது. அதன் முன் இடுப்பளவு உயரமுள்ள சுவரால் வளைக்கப்பட்ட சதுரப்பகுதியில் நிறைய சிறு கல்பிரதிஷ்டைகள். அவற்றுக்கெல்லாம் பந்தங்கள் வைக்கப்பட்டிருந்தன.


மூன்றடி உயரமான ஒரு சிலை செங்களபம் சார்த்தப்பட்டு சதையாலானது போல உருவம் மழுங்கி நின்றது. அதன் முன்பு கொண்டுவந்த பந்தத்தை நாட்டியபின் அடிகள் கைகளால் சைகைகள் செய்து ”ஓம் ஹ்ரீம் ·பட்” என மந்திரங்கள் சொன்னார். சிலைக்கு முன் செந்நிறமான மலர்களும் தாம்பாளத்தில் குவியலாக அரிசிமாவும் இருந்தன. நான் மெல்ல ”இது என்ன தெய்வம்?” என்றேன். ”இதுவா…இது நான் தான்” என்றாள் நீலிமா. ”விளையாடாதே” ”சத்தியமா…எங்க அம்மாவுக்கு மூணு அபார்ஷனுக்குப் பினனாடி இங்க வந்து வேண்டிகிட்ட பிறகுதான் நான் பிறந்தேன். அதான் எனக்கு இந்த தேவியோட பேரு வச்சாங்க. இது நீலி”

நான் அந்த செக்கச்சிவந்த சிலையையே பார்த்தேன். கண்கள் மூக்கு முலை ஏதுமில்லாத உருவம். ஒரு செம்பட்டை அழுத்தமாக மூடியதுபோல. ஆனால் பார்த்திருக்கவே அது உருவம் கொண்டது. கண்கள் தெளிந்தன. புன்னகை கூட தெரிவது போலிருந்தது. ”இவளுக்கு வனமாலா என்றும் பேருண்டு. இந்தக்கோயில் வளைப்புக்குள் நூற்றெட்டு பரிவார தேவதைகள் உண்டு. இவள்தான் தலைவி” என்றாள் நீலிமா.

அடிகள் உரத்தகுரலில் மந்திரங்களை கூவியபடி பலியர்ப்பிக்க ஆரம்பித்தார். எங்கோ ஒரு முரசு வீம் வீம் என்று அதிர ஆரம்பிக்க கண்டாமணி

இணைந்துகொண்டது. அந்த அதிர்வின் ஒளிப்பிரதிபலிப்பாக இருந்தது பந்த வெளிச்சம். நீலியின் செக்கச்சிவந்த சிலையும் ஒரு கனத்த தீச்சுடராக ஆனதுபோல உணர்ந்தேன்.

# இரவு 13



**பிடிபட்ட கரடி**
**மெல்ல எழுந்து**

**சிலித்துக்கொள்வதுபோல**
**தன்னைக் காட்டியது**
**இந்த இரவு**

ஆழ்தல் என்பது ஒன்றொன்றாக கைவிடுதல்தான். ஏனென்றால் நாம் அப்போது அவையனைத்தையும் நம்முடையனவாக ஆக்கியிருக்கும் நம்மையே படிப்படியாகக் கைவிடுகிறோம் . என் கண்ணெதிரே நான் சார்ந்திருந்த ஒவ்வொன்றாக மெல்ல மெல்ல மறைவதை கண்டுகொண்டிருந்தேன். என் அறிக்கைகள் தாமதமாக ஆக மின்னஞ்சல்கள் குவிந்தன. நட்பார்ந்த தொனி சிவந்து சிவந்து பழுத்து கனலுமிழும் சொற்களாகி பின் குளிர்ந்து சில்லிட்டது. அந்த எல்லையை நான் உணர்ந்தபோது முடிவெடுக்க ஒருநாள் தயங்கினேன்.

என் ராஜினாமா கடிதத்தை அனுப்பினேன். என் வணிகத்தொடர்புகள் ஒவ்வொன்றாக விலகின. கடைசியில் நானும் என் ஆடிட்டரும் மட்டும் உரையாடிக்கொண்டிருந்தோம். அந்தியின் சிவந்த ஒளி காயலில் உருகிக் கொண்டிருந்தபோது என்னுடைய பங்குகள் மற்றும் வருமான வரி தவிர எந்தத் தகவலையும் எனக்கனுப்பவேண்டாம் என்ற மின்னஞ்சலை நான் ஆடிட்டருக்கு அனுப்பினேன். ‘மெஸேஜ் செண்ட்’ என்ற மஞ்சள் நிற அறிவிப்பு ஒரு பெரிய விடுதலை உணர்ச்சியை ஏற்படுத்தியது. கைகளை விரித்து பின்னால் சாய்த்துக்கொண்டு கால்களை நீட்டி அமர்ந்துகொண்டேன். மிதப்பதுபோல உணர்ந்தேன்.

என்னுடைய சேமிப்பு எனக்கு எஞ்சிய வருடங்களை முழுக்க மிகவசதியானவனாக வாழப்போதுமானது. எனக்கு சென்னையிலும் மும்பையிலும் குடியிருப்புகள் இருந்தன. அப்படியானால் ஒவ்வொருநாளும் இதில் நான் என்னதான் செய்துகோண்டிருந்தேன்? வெற்றியை தேடிக்கொண்டிருந்தேன். வெற்றி என்றால்? அதை என்னால் வரையறுக்க முடியவில்லை. ஆடிட்டிங் பட்டயமும் நிர்வாகவியலில் முதுமுனைவர் பட்டமுமாக நான் பங்குச்சந்தை நிறுவனமொன்றில் பணிக்குச்சேர்ந்து பதினேழு வருடங்களாகின்றன. அப்போது வெற்றி என்பது எனக்கு ஒரு இடம் என்றே

என்னுள் இருந்தது. நான் பத்தோடு பதினொன்றல்ல என்றாகவேண்டும், என் பெயர் தனியாக சொல்லப்படவேண்டும்.

பின்பு ஒரு கருத்தரங்கில் என் துறையில் அன்று பெரிதும் பேசப்பட்டிருந்த கெ.ஆர்.பார்த்தசாரதியைச் சந்தித்தேன். பின்பு பார்த்தசாரதியாக ஆவதே என்னுடைய வெற்றி என்றாகியது. அதற்காக நான் குருதி சிந்தினேன், என்குருதி, பிறர் குருதி. பார்த்தசாரதியைக் கடந்து வெகுதூரம் சென்ற பின் மும்பையில் என் துறையின் சக்கரவர்த்தியாக இருந்த விவேக் முல்சந்தானியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அதன் பின் நியூயார்க்கின் டோரொன் ஸ்விரி. என் இலக்குகள் என்னை ஒவ்வொரு கணமும் தூக்கிச் சென்றுகொண்டிருந்தன, ஜெட் விமானத்தின் பின்பக்கம் நெருப்பு உமிழும் உக்கிரமான இயந்திரம் போல.

ஆனால் என்னுடைய வாழ்க்கை என்பது அந்தப் பயணம் மட்டுமே. தெளிவான இலக்குள்ளவர்கள் வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள், ஆனால் அவர்கள் வாழ்வதில்லை. இலக்குகளில் இருந்து இலக்குகளை நோக்கி தாவிச் செல்வதையே அவர்கள் வளர்ச்சி என்று எண்ணுகிறார்கள்.எத்தனை அபத்தமான ஒரு கோட்பாடு. இயற்கையில் முடிவிலாத வளாச்சி என்ற ஒன்று எங்கும் இல்லை. முழுமை நோக்கிய நகர்வே வளர்ச்சி. அதன் பின் இருப்பே முழுமையாக ஆகிவிடுகிறது. என்னைச்சுற்றி தென்னைமரங்களும் மாமரமும் கரியபசுமைக்குள் மூழ்கிக்கொண்டிருந்தன. ஆம், இவை அனைத்துமே வளர்ந்து முடிந்துவிட்டவை.

இந்த தென்னைமரம் எத்தனை வருடங்கள் வளர்ந்திருக்கும்? அதிகபட்சம் பதினைந்து வருடங்கள். அதன் பின்? வளர்வதற்கான அந்த ஆற்றலை முழுக்க அது என்ன செய்கிறது? மூத்த தென்னையின் இலைகள் சிறுத்துவிடுகின்றன. தேங்காய்களும் குறுகிவிடுகின்றன. ஆனால் அதன் தடி வைரம் பாய ஆரம்பிக்கிறது. அதன் இளநீரும் பருப்பும் தித்திக்க ஆரம்பிக்கின்றன. அதற்கு வளர்ச்சி என்ற ஒன்று இருந்தால் அது அகவளர்ச்சிதான். வளர்ச்சி என்பது எங்கோ ஒரு புள்ளியில் கனிதலாக மாறிவிடுகிறது.

அன்று மாலை நான் நீலிமாவுடன் ·போர்ட் கொச்சியில் ஒரு மாலுமிகளின் உணவகத்துக்குச் சென்றிருந்தேன். ஸீஸைட் பேர்ல் என்ற அந்த ஓட்டலுக்கு முன்னால் போடப்பட்ட மாபெரும் கான்கிரீட் நங்கூரங்கள் மீது கடல் ஓங்கி ஓங்கி அறைந்து வெண்ணிறமாக நுரைத்து சிதறி வழிந்தோடியது. கடற்காற்று மண்ணை அள்ளி சுவர்கள் மேல் கொட்டும் ஒலி மழைபோல கேட்டது. கார்க்கூரைமேல் மணல் விர்ர் என்று பொழிந்தது.

கான்கிரீட் தடுப்புக்கு அப்பால் காற்று கோண்டு கொட்டிய மென்மணல்வெளியில் நாலைந்து கார்கள்தான் நின்றன. நியான் விளக்கு ஒளியில் கடலோரமுத்தின் பெயர் ஒளிவிட அதன் கண்ணாடிக்கதவின் மீது கடல்நுரையின் வெண்மை ரகசியமான ஒரு பிம்பமாக தெரிவதைக் கண்டேன். காரைப்பூட்டும்போது காரின் கண்ணாடியிலும் கடலின் வெண்ணுரை தெரிந்தது. கடல் மீது செவ்விண்மீன்கள் போல மீன்பிடிப்படகுகளின் விளக்குகள் பரவிக்கிடந்தன.

கையில் ஒரு ஓலைத்தொப்பியுடன் நின்றிருந்த வெள்ளையர் என்னிடம் ‘ஹாய்” என்றார். ரெம்பிராண்ட் ஓவியங்களில் இருட்டுப் பின்புலத்தில் தெரியும் சிவந்த முகம் போலிருந்தது அது. வலுவான தாடைகளும் சுருக்கங்கள் அடந்த கனத்த கழுத்தும் கொண்டவர். அறுபது வயதிருக்கும். நான்”ஹாய்” என்றேன். புன்னகையுடன் ”ஷி இஸ் என் ஏஞ்சல்” என்றார் நீலிமாவை நோக்கி. நீலிமா ”தாங்க்ஸ்” என்றாள் சிரித்தபடி. கடல் நுரையைக் காட்டி ”பீர் நுரைப்பது போலிருக்கிறது இல்லையா?” என்றார் ” எவ்வளவு பிரம்மாண்டமான பீர் பீப்பாய்! ” நான் சிரித்தேன். ”உங்களுக்கு நல்ல பொழுது அமையட்டும்” என்று வாழ்த்தி தொப்பியை மெல்ல தூக்கினார்.

உள்ளே இருட்டு. புறஊதா விளக்குகள் எங்கிருக்கின்றன என்று தெரியாமல் ஒளிர முட்டைவடிவமான கூடம் அந்தரவெளியில் மிதப்பது போல தெரிந்தது. வான் இல்லை, தரை இல்லை. மிதக்கும் மேஜைகள் மிதக்கும் பேரர்கள். நீலிமா செம்மஞ்சள் நிற சேலைகட்டியிருந்தாள். அது கிளிப்பச்சை நிறமாக மாறியது. என்னுடைய வெள்ளைநிறமான சட்டை ஒளிவிடும் நீலமாகியது. எல்லா ஆடைகளும் சுடர் விட்டுக்கொண்டிருந்தன. ஒரு மேஜைக்கருகே சென்று அமர்ந்துகொண்டோம். திடமான கனத்த பெண்குரல் முனகுவதுபோல ஒலித்து சட்டென்று மேலெழ கித்தாரின் துடிப்பு சேர்ந்துகொண்டது.

நான் மெல்ல விரல்களால் தாளமிடுவதை கவனித்து ”நைஸ், இல்ல?” என்றாள் நீலிமா. ”ப்ளூஸ்” என்றேன். ”இது மா ரெய்னீ. இவங்கதான் டெல்டா ப்ளூஸிலே லீடிங். ஆக்சுவலி ஷி இஸ் தி மதர் ஆ·ப் தட் ஜானர்” என்றாள். ”எனக்கு அந்த அளவுக்கெல்லாம் சங்கீதம் தெரியாது. சும்மா போறபோக்கிலே கேக்கிறதுதான்..” ”எங்கிட்ட நல்ல கலெக்ஷன் இருக்கு...நான் தர்ரேன்”

பேரர் நிலவில் நடப்பவன் போல வந்து அருகே குனிந்து பளீரிட்ட குறிப்பேடு ஒன்றை எடுத்துக்கொண்டு ”யுவர் ஓடர் ப்ளீஸ்” என்றான். நீலிமா மலையாளத்தில் ”எந்தா உள்ளது?” என்றாள். ஏராளமான கடல் உணவுகள். மாட்டிறைச்சி வகைகள். நான் வறுத்த இறால் தந்தூரி ரொட்டி சிக்கன் சொன்னேன். ”யூ வாண்ட் எனி டிரிங்க்?” என்று என்னைக் கேட்டாள். ”நோ தாங்ஸ்...” ”குடிக்காம எப்டி இருக்க முடியுது?” ”என்னவோ

இருந்துட்டேன்...கொஞ்சம் குடிச்சிருக்கேன். எனக்கு ஒத்துக்கலை" "தட் இஸ் நைஸ்" என்றாள்.

"கிவ் மி வைன்" என்று சொன்னாள். நான் "நீ சாப்பிடுவியா?" என்றேன் சற்றே ஆச்சரியத்துடன். "ஒன்லி வைன்... எனக்கு ஏராளமா டிராங்குலைசர்ஸ் குடுத்திட்டிருந்தாங்க. அதை நிப்பாட்டினப்ப ஒரு வித்ட்ராவல் ஸின்ட்ரோம் மாதிரி வந்தது. அப்ப வைன் சாப்பிட ஆரம்பிச்சேன். அப்றம் விட்டிட்டேன். எப்பவாவது தோணும். இப்ப ப்ளூஸ் கேட்டப்ப வேணும்னு தோணிச்சு.."

பேரர் ஒரு பெரிய புத்தகத்தைக் கொண்டுவந்து நீலிமாவிடம் கொடுக்க அவள் அதன் நூற்றுக்கணக்கான பெயர்கள் வழியாக விரல்களால் தேடினாள். அவள் முகம் இளநீல நிறமாக இருந்தது. உதடுகள் இன்னமும் அழுத்தமான நீலம். பேரரை நோக்கி கண்தூக்கியபோது பளீரிடும் நீலத்தில் வெண்விழிகள் தெரிந்தன. "ஈ ஐட்டம் உண்டோ... ஓஸ்டிரேலியன் வைனா.." அவன் குனிந்து பார்த்து "ஷ்யூர்" என்றான்.

அவள் ஆர்டர் போடுவதை நான் மௌனமாகப் பார்த்திருந்தேன். அவன் போனதும் "என்ன பிராண்ட்?" என்றேன். "பிட்ச்னு ஒரு பிராண்ட். வேடிக்கையா இருந்தது. வைனுக்கு ஏத்த பேரு. குடிவகைகளிலே வைன் தான் பெண். மத்த எல்லாமே ஆண்..." என்றாள். நான் இசைக்கு ஏற்ப கால்களை மெல்ல தட்டிக்கொண்டிருந்தேன். நீலிமா "இப்பவும் அதைப்பத்தி நினைச்சு கவலைப்பட்டுட்டா இருக்கீங்க?" என்றாள். "எதைப்பத்தி?" "ராஜினாமா பத்தி?" "சேச்சே, அது என் மனசிலேயே இல்லை" "இல்லை உங்க முகத்திலே ஒரு சின்ன பதற்றம் இருக்கு.." அவள் முன்னால் சற்றே குனிந்து,"பணம் பத்தி கவலையா இருக்கா?" என்றாள் "கண்டிப்பா இல்லை" என்றேன்.

"மேனன் அங்கிள் அடிகக்டி சொல்றதுண்டு, திரும்பவும் பிறக்காதவனுக்கு வாழ்க்கை இல்லைன்னு... நாம பிறந்து வளர்ந்த சூழலுக்கு தக்கமாதிரித்தான் நம்ம மனசும் வாழ்க்கையும் எல்லாம் அமையுது. நம்ம ஆழ்மனசு எப்டிப்பட்டது அதுக்கு உண்மையிலேயே என்ன வேணும் எதுவுமே நமக்கு தெரியறதில்லை. நம்ம சூழல் நமக்கு உண்டுபண்ணி தர்ர பாதையிலே ஓடிட்டே இருக்கோம். ஒரு கட்டத்திலே நமக்கு தெரிஞ்சுடுது நாம யாருன்னு. அப்ப எல்லாத்தையும் உதறிட்டு இதான் நான் இதுதான் எனக்கு வேணும் அப்டீன்னு எவன் திரும்பி புதிசா ஆரம்பிக்கலியோ அவனுக்கு வாழ்க்கையிலே உண்மையான சந்தோஷமே இல்லைம்பார்.... நான் அதை நம்பறேன்"

"தியரி சரிதான்...ஆனா எல்லாருக்கும் சரியா இருக்குமா என்ன?" "எல்லாரைப்பத்தியும் நான் பேசலை. பூமியிலே நூத்துக்கு தொண்ணூத்தொன்பதுபேர் ஓட்டத்திலே மிதந்து போகத்தான் லாயக்கு. நான்

சொல்றது சென்ஸிடிவான ஆட்களைப் பத்தி. ரியல் ஹேப்பினஸ்ஸை தேடிட்டிருக்கிறவங்களைப்பத்தி..” நான் டம்ளரையே சுழற்றிக்கொண்டிருந்தேன். அது ஒரு குறிப்பிட்ட வேகத்தில் முற்றிலும் கண்ணுக்குத்தெரியாததாக ஆகியது.நிறுத்தியபோது இளநீல நிறத்தில் வெறுமையில் இருந்து பிதுங்கி வந்து வடிவம் கொண்டு நின்றது.

”என்ன முக்கியம்னா, நீங்க உண்மையிலேயே சந்தோஷமா இருக்கீங்களா இல்லையாங்கிறதுதான்...இந்த உலகம் உண்மையிலேயே பிடிச்சிருக்கா. இல்லை இது வெறும் இன்·பாச்சுவேஷன் மட்டும்தானா...அதை மட்டும் நீங்க பாத்துட்டா போதும்...” ”எது இன்பாச்சுவேஷன்? உங்கிட்ட இருக்கிற லவ்வா?” ”அதுவும் சேர்த்துத்தான்”

நான் சில நிமிடங்கள் என்னை கூர்ந்து நோக்கிக் கொண்டேன். ”உண்மையாச் சொன்னா எனக்குச் சொல்லத்தெரியலை...எனக்கு இருக்கிற ஈர்ப்பு உண்மையிலேயே மிக மிக ஆழமானது. வேற ஒரு வாழ்க்கையை என்னால நினைச்சுப்பார்க்கவே முடியலை. ஆனா” நான் அவளை நோக்கி ஒரு கணம் தயங்கிவிட்டு ”...ஆனா உள்ளூர ஒரு பதற்றம் இருந்திட்டே இருக்கு. அதாவது , இது எப்டி சரியாவரும்..இதில இயற்கைக்கு விரோதமா ஏதோ இருக்கு அந்தமாதிரி...அதாவது இது ஒரு கனவு எப்பவேணுமானாலும் கலைஞ்சிரும்ங்கிற மாதிரி... சொல்லத்தெரியலை...

வைன் வந்தது. நான்கு வகையான மெல்லிய கண்ணாடிக் கோப்பைகள். அவை பருவடிவம் கொண்டவையாக அல்லாமல் நீலஒளியால் கோடிழுத்து காற்றில் வரையப்பட்டவை போலிருந்தன. அவள் அதை ஒரு வைன் கோப்பையில் ஊற்றியபோது ஒரு கணம் என் மனம் அதிர்ந்தது. பின்னணியின் அடர்நீல இருளில் காலியான கோப்பையில் இருந்து காலியான கோப்பைக்கு வெற்றிடத்தை அவள் ஊற்றிக்கொண்டிருந்தாள். கோப்பையைத் தூக்கி முகர்ந்து ”குட்” என்றாள்.

தூரத்தில் இரண்டு மாலுமிகள் உரக்க கத்தி சண்டை போட ஆரம்பித்தார்கள். சண்டை இல்லை என்பது அவர்கள் கடகடவென சிரிக்க ஆரம்பித்தபோது தெரிந்தது. நீலிமா ”இந்த ஷேர்மார்க்கெட் கம்பெனியிலே சேருறப்ப அந்த மாதிரி ஏதாவது தோணிச்சா?” என்றாள் ”என்ன?” என்றேன். ”அது ஒரு பொய்யான உலகமா ஏன் இருக்கக் கூடாதுன்னு?” நான் அவளையே பார்த்தேன். ”அது எவ்வளவு பொய்யான உலகம். அவங்க பேசிட்டிருக்கிற வரவு செலவு லாபம் நஷ்டம் எல்லாமே ஒரு பத்துலட்சம்பேர் சேர்ந்து கூட்டா கற்பனை பண்ணிக்கிறது மட்டும்தானே? அது ஒரு காமன் இல்லூஷன்னு ஏன் சொல்லக்கூடாது?”

நான் சற்றே திகைத்தேன். அந்த கோணம் என்னை அயர வைத்தது. ”சொல்லலாம்தான்” என்றேன். ”அதேதான். எல்லா தொழிலும் எல்லா வியாபாரமும் அப்டிப்பட்ட இல்லூஷன் மட்டும்தான். ஆனா அதிலே இருக்கிறவங்க லட்சக்கணக்கிலே கோடிக்கணக்கிலே இருக்காங்க. இதிலே ரொம்பக் கொஞ்சம்பேர்தான் இருக்காங்க. இப்ப பூமியிலே ஒரு ஐம்பதுகோடிப்பேர் இந்தமாதிரி ஒரு வாழ்க்கையிலே இருந்தா இப்ப உங்களுக்கு இருக்கிற எந்த சஞ்சலமும் வந்திருக்காது…” எனக்கு அந்த வாதம் மிகவும் தர்க்கபூர்வமாக இருப்பதாக தோன்றியது. ஆனால் தர்க்கபூர்வமாக இருப்பதனாலேயே ஒன்றை நம் அகம் ஏற்றுக்கொண்டாகவேண்டும் என்பதில்லை.

நீலிமா மீண்டும் வைன் விட்டுக்கொண்டாள். அவளுக்குப் பின்னால் ஒரு பேரர் நடந்துசென்றபோது அந்த பின்னணியில் வழிந்த வைன் அடர் ஊதா நிறமாக தெரிந்து பின் மறைந்தது. மிக மர்மமான ஒரு திரவம் அது என்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த இடத்தில் நிறைந்திருந்த போதையையே அபப்டி ஊற்றிக்கொண்டிருந்தாளா என்ன?



பேரர் உணவு வகைகளுடன் வந்தான். அவன் தட்டில் அவற்றை அடுக்கி வைத்துக்கொண்டிருந்தபோது நான் என் சிந்தனைகளிலேயே ஆழ்ந்திருந்தேன். எனக்குள் ஒரு பதற்றம் இருந்துகொண்டே இருந்தது உண்மை. கோழியின் அடித்தாடை போல எனக்குள் ஒரு துடிப்பு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் இன்று மாலை என் கடைசிக்கடிதத்தை அனுப்பியபோது அது இல்லை. அது இவளைப் பார்த்தபோதுதான் ஆரம்பித்தது. இவளுடன் இருக்கும்போது

என்னுடைய புலன்கள் உச்ச கட்டத்தில் இருக்கின்றன. இவளுடைய அருகாமை எனக்குள் இருக்கும் ஏதோ ஒரு எச்சரிக்கை நரம்பை உயிர்கொள்ளச் செய்கிறது.

”என்ன ஒரே மௌனம்?” என்றாள் நீலிமா பரிமாறியபடி. ”ஒண்ணுமில்லையே” ”உங்க மனசிலே என்ன ஓடுது தெரியுமா? ” ”என்ன?” என் மனம் படபடத்தது. சரியாகச் சொல்லிவிடுவாளா? சொல்லக்கூடாது என்று என் அகம் ஏங்கியது. அப்போதுதான் இவள் சாதாரணமான பெண். அப்போது மட்டும்தான் இவள் என் கைகளுக்குள் நிற்கும் காதலி.

”என்னைப்பத்தின சஞ்சலம்தான். நான் பக்கத்திலே இருக்கிறப்ப ஒரு பதற்றம் வந்திடுது உங்களுக்கு. அது ஏன்னு இப்ப நினைக்கிறீங்க” அப்போது அவள் அப்படி சொன்னதை எண்ணி என் உள்ளம் உவகை கொண்டதைப் பார்த்து வியந்தேன். அவள் அதற்கு சரியான ஒரு விளக்கத்தை அளித்துவிடவேண்டும் என்று என் மனம் தவித்தது. ஆனால் அவள் கோப்பையை ஒருமுறை உறிஞ்சிவிட்டு ”ஐ நோ தட்... ஐ நோ யூ ஆர் ஸ்கேர்ட்... ஏன்னா நான் ஒரு ஒரு யக்ஷி... எஸ் ஐ யம்” என்று கடகடவென சிரிக்க ஆரம்பித்தாள். கழுத்தின் சருமத்திற்குள் தொண்டை வளையங்களின் வசீகரமான அசைவை பார்த்தேன்

கண்களில் மெல்லிய ஈரத்துடன் அவள் நிறுத்தினாள். உதடுகள் தடித்தவை போல, முகம் கொதிக்கும் குருதி நிறைந்தது போல இருந்தது. ”பயமா இருக்கா?” என்றாள். அவளுக்குப் போதை ஏறிவிட்டிருப்பது தெரிந்தது. ”நோ” என்று புன்னகை செய்தேன். ”பயப்படணும்... ஏன்னா நான் ஒரு யட்சி...நான் குடிக்கிறது வைன் இல்லை, ரத்தம்... எ கப் ·புல் ஆ·ப் ப்ளட்” அவள் கோப்பையை தூக்கியபடி பக்கவாட்டில் திரும்பி அங்கே அமர்ந்திருந்த வெள்ளையனிடம் ”மான், ஐ யம் டிரிங்கிங் ஹ்யூமன் ப்ளட், யூ நோ” என்றாள். ”தட்ஸ் கூட்” என்று அவன் கோப்பையை தூக்கிக் காட்ட அவனுடன் இருந்த சுடிதார் அணிந்த மலிவான கேரளவிபச்சாரி உரக்கச் சிரித்தாள்.

”நீலிமா, நாம போலாம்” என்றேன். ”ஐ வாண்ட் டு கில் ஸம்படி ஆண்ட் டிரிங் ஹிம்” என்று நீலிமா சத்தமாகச் சொல்லி உரக்கச் சிரிக்க ஆரம்பித்தாள். அவள் கன்னத்தில் பச்சை நரம்பொன்றின் அசைவைக் கண்டேன் .”ஐ வாட் டு டிரிங் எ மேன்!” என்று அவள் எழப்போக தட்டுகள் முன்னால் நகர்ந்தன. ”ப்ளீஸ்...நீலிமா ப்ளீஸ்” என்றேன். ”ஹனி டிரிங் மீ” என்றான் அந்த மாலுமி. விபச்சாரி சிரிக்க ”ஐ வில் கில் யூ” என்று நீலிமா ஒரு ·போர்க்கை கையில் எடுத்துக்கொண்டாள். நான் ”ஷட் அப்...” என்று கடுமையாக சொல்ல அவள் ஒரு கணம் யார் இவன் என்பதுபோல என்னை வெறித்துப்பார்த்தபின் அமர்ந்துகொண்டாள்.



நான் வேகமாகச் சாப்பிட்டேன். அவள் உணவுக்கு முன் வெறித்த கண்களுடன் அப்படியே அமர்ந்திருந்தாள். படையலுக்கு முன் விழித்திருக்கும் அம்மன் சிலை போல. நான் வாயை நா·ப்கினால் துடைத்துவிட்டு பில்லுக்காக கை தூக்கினேன். நீலிமா என்னிடம் ”யூ சன் ஆ·ப் எ பிட்ச்..நீ என்னைப்பத்தி என்ன நினைச்சே? உன் கைக்குள்ள அடங்கி நிக்கிற ஒரு பாவம் பொண்ணுன்னுதானே? உனக்கு அதானே வேணும்? யூ வாண்ட் எ ·பக்கர்ஸ் டால்? யூ, பாஸ்டர்ட்…யூ” அவள் முகம் முழுக்க கடும் சினத்தால் சீறி வாய் பிளந்து வெண்பற்கள் தெரிந்தன.

பேரர் பில்லைக் கொண்டுவந்தான். நான் கார்டைக் கொடுத்தேன். ”ஐ யம் நாட் டிரங்க்… நான் உங்கிட்ட ஒண்ணு கேக்கணும். நீ என்னைப்பத்தி என்ன நினைக்கிறே? நான் ஒரு விர்ஜின் தெரியுமா? தெரியுமா உனக்கு? இருபத்தேழு வயசு எனக்கு. ஆனா இப்பவும் நான் விர்ஜின்…ஏன் தெரியுமா?” அவள் முன்னால் சரிய சேலை முந்தானை சரிந்து அவள் முலைகளின் பிளவு நீலநிறமாக பளீரிட்டது. ”என்னால ஆம்பிளங்களை டாலரேட் பண்ணவே முடியல்லை. ஆம்பிளைங்களோட அசட்டுத்தனம், முரட்டுத்தனம், பேராசை, அகங்காரம்… க்ரீப்ஸ்…நேஸ்டி க்ரீப்ஸ்… நினைச்சாலே வாந்தி வருது. ஐ ஹேட் மென். இந்த உலகத்திலே கொஞ்சமாவது ஆம்பிளைங்களை அருவருக்காத ஒரு பெண் கூட இல்லை…தெரியுமா உனக்கு? தெரியுமா யூ பிளடி ·பக்கர்?”

கார்ட் வந்ததும் நான் எழுந்தேன். ”லெட் அஸ் மூவ்” என்றேன். ”நான் குடிச்சிட்டு உளறரேன்னு நீ நினைக்கிறே. எனக்கு போதை இருக்கு. அது எனக்கு தெரியும். ஆனா நான் சொல்றது என்னன்னு எனக்கு நல்லாவே தெரியும்… லிஸன்…உலகத்திலே எல்லா பொண்ணும் ஆம்பிளைங்களை அருவருக்கிறா. உலகத்திலே எந்தப்பொண்ணுக்கும் ஆண் உள்ளூர ஒரு பொருட்டே கெடையாது. ஆனால் அதை காமம் மூடியிருக்கு. அவளுக்கு பிள்ளை பெத்துக்கணும்னு ஆசை. அதுக்கு அவனோட ஸ்பெர்ம் தேவை. அதுக்காக அவனை நக்கிட்டிருக்கா… எல்லா பொண்ணும் ஆம்பிளைய உறிஞ்சி

குடிச்சிட்டிருக்கா. வயிறு நெறைஞ்சதும் சக்கையா துப்பிடுவா...யூ நோ... துப்பிடுவாங்க...தூ...”

நான் அவள் புஜத்தைப் பற்றி ”இப்ப வரப்போறியா இல்லியா?” என்றேன். ”ய..ஐ யம் கமிங்” என்று எழ நாற்காலியை பின்னால் தள்ளியபடி தள்ளாடி பின் மே¨ஜையை பிடித்துக்கொண்டு நின்றுவிட்டாள். ” ஆனா நான் எல்லாத்தையும் சொல்லுவேன்.....ஐ வாண்ட் டு டாக் டு யூ” ”சரி..போய்ட்டே பேசலாம், வா...” ”எங்க போக? நான் இங்கேயே படுத்துக்கறேன்” ”கமான்” நான் வாசலைத்தாண்டி வெளியே வந்தேன். நீலிமா உடலின் எடைச்சமநிலை குலைந்து என் கையில் நிற்காமல் ஆடினாள். வெளியே பெரிய மழை பெய்வதுபோல ஒலி. மணல் காற்று திசைமாறி ஓட்டல் மீதே மண்ணை கொட்டிக்கொண்டிருந்தது.

அந்த மாலுமி தன் தொப்பியுடன் அங்கேயே நின்றிருந்தார். அவர் என்னை நோக்கி கண்ணடித்து ”ஷி இஸ் டிரங்” என்றார். ”யா..” என்று புன்னகை செய்துவிட்டு காரை திறந்தேன். கார் மீது கவிந்தவளாக நீலிமா அவரை நோக்கி ”யூ, ஓல்ட்மான்” என்று கூவினாள். ”சொல் அன்பே” என்றார் அவர். ”நீ பெண்களை வெறுக்கிறாய். பெண்கள் உன் வாழ்க்கையை அழித்துவிட்டதாக நினைக்கிறாய்” அவர் திடுக்கிட்டது போல தெரிந்தது.”என்ன உளறுகிறாய்?” என்றபடி தொப்பியை தலையில் வைத்தார், அவர் கையை எடுத்ததும் அது பறந்தது. தடுமாறி நீலிமாவைப் பார்த்தார். ”பெண்ணை விரும்பக்கூடிய எவரும் அவளைப் பார்த்ததுமே அழகாக இருப்பதாகச் சொல்ல மாட்டார்கள். உனக்கு என் மீது அக்கறை இல்லை. உன் வெறுப்பை நீயே அஞ்சுகிறாய். அதை செயற்கையான இனிமையுடன் சொல்கிறாய்...யூ பாஸ்டர்ட்...”

அவர் நிதானமடைந்து ”நீ குடித்திருக்கிறாய்” என்றார். ”ஆமாம். அதனால்தான் உண்மையைச் சொல்கிறேன். உன்னை பெண்கள் உறிஞ்சி துப்பி விட்டார்கள். நீ இந்தக் கடற்கரையில் ஒதுங்கும் தக்கையைப் போன்றவன்” நீலிமா உரக்கச் சிரித்து ”என்னை மாதிரிப் பெண்கள் உன்னை சாப்பிட்டுவிட்டார்கள்...” என்றாள். நான் அவளை காருக்குள் தள்ளி கதவைச் சாத்திவிட்டு அவரிடம் ”ஐ யம் ஸாரி...” என்றேன். அவர் போகட்டும் என்பதுபோல சைகை காட்டினார். நீலிமா அடுத்த சன்னல் வழியாக வெளியே பார்த்து ” நீ ஓரினச்சேர்க்கையாளனாக மாறு. அதுதான் உனக்கு நல்லது” என்றாள். அவர் பீதியடைந்த முகத்துடன் பார்க்கும் கடைசிக் காட்சி என் கண்களில் நீடிக்க நான் காரைத் திருப்பி சாலையை நோக்கி ஓட்டினேன்.

நீலிமா ”நான் குடிச்சுட்டு உளறலை. நான் சொல்றது உண்மை. எனக்கு ஆம்பிளைங்களை பிடிக்கலை. ஆனா ஆம்பிளை எனக்கு தேவையாக இருக்கு. குறைவா அருவருப்பு தரக்கூடிய ஒரு ஆம்பிளை...அதுதான் நீ...” நான் காரை சாலை நோக்கி ஓட்டினேன். என் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. சாலை

வெளிச்சத்துடன் சுருண்டெழுந்து பின்னால் சறுக்கிச் சென்றது. நீலிமா பின்னால் சாய்ந்து கொண்டாள். சில நிமிடங்களுக்கு பின்னிருக்கையில் அமைதி. நான் கண்ணாடியைப் பார்த்தேன். பின்னிருக்கையில் இரு கோரைப்பற்களும் பரட்டைமுள் தலையுமாக ஒரு கரும்பிடாரி அமர்ந்திருந்தால்கூட அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டேன்.

சட்டென்று பின்னிருக்கையில் ஒரு சிரிப்பொலி கேட்டது. ”நீ இப்ப என்ன நினைக்கிறே தெரியுமா? அப்டியே விட்டுட்டு ஓடிடணும்னு நினைக்கிறே. பகல் வெளிச்சத்திலே உலவுற ஒருத்திய கட்டிட்டு ஒரு பொந்துக்குள்ள வாழ ஆரம்பிக்கணும்னு நினைக்கிறே. பகலிலே இருக்கிற பெண்களும் என்னைமாதிரித்தான். ஆனா வெளிச்சத்தை வச்சு எல்லாத்தையும் மறைச்சிரலாம். இது ராத்திரி. ராத்திரியிலே எதுக்கும் ரகசியம் இல்லை. எல்லாம் வெளியே வந்திரும்... எவ்ரி திங் இஸ் ஓபன் ஹியர்... பகலிலே இருட்டுக்குள்ள பதுங்கி கிடக்கிற எல்லாமே ராத்திரியிலே உலாவ ஆரம்பிச்சிரும்...”

அவளுடைய போதை சட்டென்று இறங்கிவிட்டது போலிருந்தது. மூளை அபாரமான கூர்மை கொள்கிறது. என் பலவீனமான புள்ளிகளை கச்சிதமாகத் தேர்வுசெய்கிறது. முனைகூரிய அம்புகள். குறிதவறாத விஷ அம்புகள்.”என்ன பண்ணப்போறே? பகலிலே ஒரு நல்ல பொண்ணா பாத்து கல்யாணம் பண்ணிக்கலாமா? பட் யூ ஹேவ் டு ·பக் ஹர் இன் த நைட்... அதுக்கு அப்றம் அவ தூங்காம இருட்டை பாத்துட்டு கிடப்பா. அப்ப அவளோட ஆழத்திலே இருந்து விஷம் திகட்டி வந்து நாக்குல் முழுக்க கசக்கும். அப்ப நீ அவளைத் தொட்டா ராஜநாகம் கடிச்சது மாதிரி ஒரு சொல்லால உன்னைக் கொன்னிருவா.... யூ நோ எல்லா பெண்ணும் யட்சிதான்... யூ ஸில்லி ரொமாண்டிக் ·பூல்...யூ..”

பின்பு அமைதி. என் பின்கழுத்து எச்சரிக்கை உணர்வில் புல்லரித்து உச்சத்தில் நின்றது. கனமான ஒரு கோடரி என் பின் மண்டையைப் பிளக்கக் கூடும். என் மூளை சிதறி வெண் நுரையாக கொட்டிக்கிடக்கக் கூடும். ஒளிரும் தீவிழிகளுடன் ஒரு பிசாசு அதை நக்கி நக்கிக் குடிக்கக்கூடும். ஆனால் சிலநிமிடங்களுக்குப் பின்னர் மெல்லிய குரட்டை ஒலி கேட்டது. நான் அந்த ஒலிதானா என்று அவதானித்தேன். ஆம், குரட்டைதான். பின்னிருக்கையை திரும்பிப் பார்த்தேன். தலையை நன்றாகப் பின்னால் சாய்த்து நீலிமா தூங்கிக்கொண்டிருந்தாள்.



மெல்ல என் உடலின் நரம்புகள் இறுக்கமிழந்து முடிச்சுகள் தொய்ந்து இலகுவாயின. என் மூச்சு சீறிக்கொண்டிருப்பதை கண்கள் எரிவதை உதடுகள் பற்களால் இறுகக் கடிபட்டிருப்பதை ஸ்டீரிங்கை நான் உச்சகட்ட இறுக்கத்துடன் பற்றியிருப்பதை உணர்ந்தேன். அப்போதுதான் வேகமானியைப் பார்த்தேன். நூற்றியெண்பது கிலோமீட்டர் வேகத்தில் சென்றுகொண்டிருந்தது கார். அக்ஸிலேட்டரில் என் கால் மிதித்து அதை தரையோடு தரையாக அழுத்தியிருந்தது. இருபக்கமும் தென்னந்தோப்புகள் கருமையான பிரவாகமாக பீரிட்டுச் சென்றுகோண்டிருந்தன.

மறுகணம் என் உடல் அதிர கார் வளைந்து வளைந்து பக்கவாட்டில் மணல் மேட்டில் சற்றே ஏறி பின்பு திரும்ப சாலைக்கு வந்து மெல்ல வேகமிழந்தது. அறுபது கிலோமீட்டர் வேகத்தில் அதை ஓட்டியபடி பெருமூச்சு விட்டேன். நல்ல வேளை. ஏதோ குருட்டு அதிருஷ்டம். நள்ளிரவுக்குப் பின்பு இந்தக் கடற்கரைச் சாலையில் முற்றாகவே வாகனங்கள் ஓடுவதில்லை.

ஆனால் அது உண்மையல்ல என்று உடனே எனக்குப் பட்டது. அந்த உச்சகட்டத்தில் என் புலன்களும் மூளையும் சாத்தியமான அதிகபட்ச கூர்மையுடன் இருந்தன. அதி துல்லியமாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. சாலையின் ஒவ்வொரு திருப்பமும் ஒவ்வொரு குழியும் என் கண்களால் அடையாளம் காணப்பட்டன. என் கைகளிலும் கால்களிலும் கார் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தது. நான் என்னுடைய முழுமை நிலையில் அப்போது இருந்தேன். ஆம், அந்தக் கணங்களை நான் ஆழத்தில் கொண்டாடிக்கொண்டிருந்தேன்.

# இரவு 14



**இரவெனும் கடலின் அடித்தளம்**

**கோடானுகோடி**

**மீன்களின் எலும்புகளும்**

**மரக்கலங்களின் சிதைவுகளும்**

**நிறைந்தது.**

**அவற்றின் மீது பறக்கின்றன**

**ஒளிரும் இமையா விழிகள்.**

நான் என் அறைக்குள் நுழைந்து கட்டிலில் விழுந்தபோது மொத்தக் குருதியையும் இழந்தவன்போல் உணர்ந்தேன். என் கைகளும் கால்களும் தலையும் இதயமும் தனித்தனியாகக் கிடக்க, பிரக்ஞை அவற்றுக்குமேலே சூடான காப்பிக்குமேல் ஆவி போல நெளிந்தாடியது. கண்களை மூடிக்கொண்டபோது ஒளிப்புள்ளிகள் சிவப்பும் நீலமுமாக பறந்து சுழன்றன. பின்பு அவை ஒன்று மீது ஒன்று என படிந்து அமைதிகொண்டன.

அதிகம்போனால் இரண்டுமணிநேரம் தூங்கியிருப்பேன். திடுக்கிட்டவன் போல விழித்துக்கொண்ட சில நிமிடங்களுக்கு எங்கிருக்கிறேன் என்ற உணர்ச்சியே இல்லை.கடலுக்கு அடியில் உக்கிரமான அழுத்தம் கொண்ட நீல நீருக்குள் மூச்சுக்குழாய்கள் புடைக்க நுரையீரல்கள் விம்ம துழாவிக்கொண்டிருந்தேன். எழுந்தமர்ந்தேன். உடல் மிகவும் வியர்த்திருந்தது.

சற்று நேரம் கழிந்துதான் ஏஸியை போடாமல் தூங்கியிருக்கிறேன் என்று உணர்ந்து சென்று சன்னல் கதவுகளை திறந்தேன். புத்தம்புதிய காயல்காற்று அறைக்குள் நுழைந்தது. கடும் தாகத்தில் குளிர் நீர் அருவி ஒன்றைக் கண்டதுபோல என் நுரையீரல்கள் ஆக்சிஜனை அள்ளி அள்ளி உண்டன.

தண்ணீர் குடித்துவிட்டு படுத்துக்கொண்டேன். விடிந்துகொண்டிருந்த நேரம்போலும். பறவைச்சத்தங்கள் கலைந்து ஒலித்தன. எழுந்து காயலுக்குள்

செல்லவேண்டுமென விரும்பினேன், ஆனால் எழுந்திருக்க முடியுமென தோன்றவில்லை. சிறிய தலைச்சுற்றல் இருந்தது. மேகம் போல பிசிறிப் பிசிறி அலையும் சிந்தனைகளை அர்த்தமில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தது என் இருப்பு. ஒரு இனிமையான தனிமை. தித்திக்கும் கைவிடப்பட்ட தன்மை.

நான் நீலிமாவை அவள் வீட்டுக்குக் கொண்டு சேர்த்தபோது இரண்டுமணி தாண்டியிருக்கும். கார் அவள் வீட்டுமுன் நின்றபோது அவள் திடுக்கிட்டு எழுந்து வாயைத்துடைத்தபின் ”எங்க வந்திருக்கோம்?” என்றாள். ”உன்னோட வீடு” என்றேன். ”ஓ” என்று முந்தானையின் மடிப்புகளை சரிசெய்து எடுத்துப் போட்டுக்கொண்டாள். கொட்டாவி விட்டபடி கதவைத் திறந்து வெளியே சென்று ”ஆர் யூ கமிங்?” என்றாள்.

”நோ…போய் கொஞ்சம் வேலை இருக்கு” என்றேன். ”தட் இஸ் ஓக்கே” என்றாள். நான் அவளுக்கு அவள் சொன்னதெல்லாம் நினைவிருக்குமா என்று எண்ணினேன். ஆனால் அவள் முற்றிலும் வேறு ஒருத்தியாக இருந்தாள். ”நீ கொஞ்சம் ஓவரா போயிட்டே” என்றேன். ”ஐ நோ” என்று சுருக்கமாகச் சொல்லி ”ஸீ யூ” என்று திரும்பி வீட்டுப்படி ஏறினாள். வீட்டின் சாவியை அவள் திறந்து கதவை திறந்து உள்ளே செல்வது வரை பார்த்துக்கொண்டிருந்தேன்.

வாசலில் நின்று தூக்கம் கலந்த சிரிப்புடன் ”ஓக்கே, பை” என்று சொல்லி கையை மெல்ல அசைத்தபின்பு கதவைச் சாத்திக்கொண்டாள். பளீரிட்ட செம்மஞ்சள் நிற உடையும் அவள் சருமமும் ஒன்றுபோலவே இருந்தன. ஒரு பெரிய மலர் போலிருந்தாள். சிலவகை கற்றாழைகள் அதேபோல செங்குத்தாக ஆறடி உயரத்தில் தழல்போல நிற்கும் பூங்கொத்துகளை மலர்த்துக்கொள்வதுண்டு. நான் காரைக்கிளப்பிய பின்புதான் என்ன யோசித்துக்கொண்டிருந்தேன் என்று உணர்ந்தேன்



”எத்தனைபேரழகு!” என்று. ஆம், அது தான் நான் நினைத்துக் கொண்டது. அவளை நான் கண்ட கணம் முதல் கணம்தோறும் அவள் அழகு அதிகரித்தது. பார்க்கும்தோறும் அவள் அழகு கொண்டாள் .என் இமைகளால் விசிறி விசிறி அவளை நான் மேலும் சுடரச் செய்கிறேன் போல! ஆனால் இந்தக் கணத்தில் அவள் அழகு அதிஉச்சத்தில் இருப்பதாகப்

பட்டது. மேலும் அழகாக ஆக முடியாமையால் இன்றிரவே அவள் இறந்து விடுவாள் என்பதுபோல. நாளை அவள் இருக்கமாட்டாள். இந்தக் காட்சிதான் நான் என்றென்றும் என் நினைவில் வைத்திருக்கப்போகும் கடைசிப் பிம்பம்.

முட்டாள்தனம். இதைத்தான் ரொமாண்டிசிசம் என்கிறார்கள். அகங்காரமும் பலவீனமும் சரிசமமாக கலந்து உருவாவது இது. இது மிகச் சர்வசாதாரணமான ஒரு தருணம். நான் இது எனக்கு மட்டுமே நிகழக்கூடிய ஒரு பிரபஞ்ச தருணம் என்று கற்பனைசெய்துகொள்கிறேன். ''நீ ஒரு ரொமாண்டிக் ·பூல்'' என்று சொன்னாள். ஆமாம், உண்மைதான். அவள் சொன்னவை எல்லாம் உண்மை. முழுக்க முழுக்க உண்மை என்பதுதான் அவற்றை அத்தனை குரூரமானவையாக ஆக்கியது.

ஆனால் அவள் சட்டென்று திரைச்சீலைகளைப் பற்றிக்கொண்டு எழுந்து கூரைமேல் படர்ந்தேறும் நெருப்பாக மாறிய அக்கணங்களிலும் நான் அவள் அழகையே ரசித்துக்கொண்டிருந்தேன். அவள் முகம் சிவந்து விரிவதை மேலுதடுகளின் மீது வியர்வை பனித்திருப்பதை இதழ்கள் குவிந்தும் விரிந்தும் கணம்தோறும் கொள்ளும் மலர் வடிவங்களை நெற்றியில் பறந்து விழுந்து நிழலுடன் ஆடிய கருங்குழல் கற்றையை....அவளை நான் என் கண்ணாலேயே அறிகிறேன். பிற புலன்கள் அனைத்தும் கண்ணுக்கு துணையாக வருபவை மட்டுமே.

கார் சாலையில் சென்றபோது என்னால் ஸ்டீரிங்கையே பிடித்துக்கொள்ள முடியவில்லை. என் உடல் எல்லா ஆற்றலையும் இழந்துகொண்டிருந்தது. குருதி வடிந்து என் கால்கீழே தேங்குகிறதா? கால் விரல்கள் சில்லிடுகின்றனவா? உதடுகள் நீருக்காக தவித்தன. காருக்குள் தண்ணீர் இல்லை. ஒரு கட்டத்தில் கார் அதுவே நின்றுவிட்டது. ஏன் நின்றது என்று பார்தபோதுதான் நான் பிரேக்கை அழுத்தியிருப்பது தெரிந்தது. மீண்டும் காரை கிளம்ப்பினேன். என் எஞ்சிய உயிராற்றலால் நானே காரைக் கிளப்புவதுபோலிருந்தது. எப்போது வீட்டை அடைந்தேன் என்று தெரியவில்லை.

நான் கண்விழித்தபோது சற்றே புத்துணர்வுடன் இருந்தேன். அறைமுழுக்க சாயும் வெளிச்சம். மாலையை நெருங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். எழுந்து சன்னல்களை மூடி வெளிச்சத்தைக் குறைத்தபின் பல் தேய்த்து சரவம் செய்து குளித்தேன். டி ஷர்ட் லுங்கி அணிந்து கண்களுக்கு கறுப்புக்கண்ணாடி மாட்டி கீழே வந்தேன். பங்கஜம் உணவு எடுத்து வைத்துக்கொண்டு சென்றுவிட்டிருந்தாள். நான் மௌனமாக சாப்பிட்டேன். வெகுதூரத்தில் யாரோ எதையோ முணுமுணுப்பது போலிருந்தாலும் மனம் சற்று அமைதியாகவே இருந்தது.

கூடத்திற்கு வந்து செய்தித்தாள்களை வாசித்தேன். பின்பு எழுந்து மேலே சென்று என் மேஜையில் அமர்ந்து குறிப்பேட்டை எடுத்துக் கொண்டு பென்சிலால் 'திங்க்' என்று கிறுக்கிவிட்டு அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். நேற்று இரவில் அவளை வீட்டுக்குக் கொண்டு விடும்போது நான் என்ன எதிர்பார்த்தேன்? அவள் ''ஸாரி, ஐ வாஸ் டிரங்க்'' என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எல்லாம் சரியாகியிருக்கும். எனக்குத்தேவையாக இருந்தது அப்படிப்பட்ட ஒரு எளிய சமாளிப்பு மட்டும்தான். ஆனால் அவள் அதையும் தருவதற்கு தயாராக இல்லை. சமரசமே இல்லாமல் நின்றிருந்தாள். தீ எப்படி குளிர முடியும் என்று தோன்றியது.

நான் '·பயர்' என்று கிறுக்கியிருப்பதைக் கண்டு அதை பென்சிலால் அடித்தேன். அதன்மேல் கருமையாக பென்சிலால் பூசினேன். ''நோ'' என்று எழுதிவிட்டு அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். பின்பு மளமளவென எழுத ஆரம்பித்தேன்.'இது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த உலகில் இருந்து மீண்டுவிடவேண்டுமென்றுதான் என் அகம் துடித்துக்கொண்டே இருக்கிறது. இங்கே ஏதோ ஒரு தப்பை நான் பார்க்கிறேன். அதை என்னால் சொல்ல முடியவில்லை. ஆனால் இங்கே எனக்கு அமைதியில்லை. ஆகவே நான் தப்ப வேண்டும். அதற்கான ஒரு சிறந்த வழி இப்போது திறந்திருக்கிறது. இதுபோல இன்னொரு வாய்ப்பு வரப்போவதில்லை. இந்தச் சாக்கையே பயன்படுத்திக்கொண்டு வெளியேறிவிடவேண்டியதுதான். முழுமையாக என்னை துண்டித்துக்கொள்ளவேண்டியதுதான்'

மீண்டும் மீண்டும் அந்த பக்கம் முழுக்க எழுதியிருந்தேன். காகிதத்தை சூட்டி குப்பைக்கூடையில் வீசிவிட்டு மடிக்கணினியை எடுத்து விரித்து இயக்கினேன். திரவத்திரை ஒளி கொண்டது. என் மின்னஞ்சல் பெட்டியை திறந்தேன். இப்போதுகூட நான் திரும்பிவிட முடியும். என்னுடைய பழைய வாடிக்கையாளர்களுக்கு நான் மின்னஞ்சல் செய்தாலேபோதும் , எல்லாமே ஆரம்பித்துவிடும். நான் அப்படி எளிதாக நிராகரிக்கப்படக்கூடியவன் அல்ல. சடசடவென விசைப்பலகை அதிர கடிதத்தை எழுதினேன். ஆனால் கடைசி வரிகளுக்கு வரும் தோறும் என் வேகம் குறைந்தது. கடிதத்தை முடிக்க என்னை நான் உந்த வேண்டியிருந்தது.

முடித்தபின் கடிதத்தையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன். அனுப்பும் ஆணையை அழுத்தினால் போதும். எத்தனை மென்மையான செயல். கண்ணைஒருமுறை இமைப்பதுபோல. ஆனால் என்னால் அதைச் செய்ய முடியவில்லை. அதை நோக்கி என் மனம் நகரவில்லை. மேகத்தை பிடித்து முன்னால் உந்த முயல்வதுபோலிருந்தது அந்த முயற்சி. களைப்புடன் கண்களை மூடிக்கொண்டேன். சிலகணங்களுக்குப் பின்னர் எழுந்து விரைந்து உடைகளை மாற்றி செல்பேசியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

இரவு வானிலிருந்து கசிந்து மரத்தடிகளில் வட்டமாக படிந்திருந்தது. இலைகளுக்கு அடியில் சிந்திக்கிடந்தது. இரவை இறக்கிக்கொள்ளும் கவனத்தில் மரங்கள் கவனம் குவித்து நின்றன. நான் செல்பேசியில் நாயரை அழைத்தேன். ”ஆ, மிஸ்டர் சரவணன்.” என்றார் அவரே ”நீலிமா இஸ் நாட் வெல். ஒரு தலைவலி அவளுக்கு. படுத்திருக்கா. இன்னைக்கு மேனன் வீட்டுக்கு வரமாட்டான்னு நினைக்கிறேன்” என்றார்.

”ஓகே. நான் கொஞ்சம் வெளியே போகணும். உங்க காரை நான் மேனன் கிட்ட ஒப்படைச்சிட்டு போறேன்” ”நோ, யூ கென் யூஸ் இட்..நோ பிராப்ளம்” ”இல்லை…நான் வேற கார் சொல்லியிருக்கேன்…” ”ஓகே…நான் கொஞ்சம் லேட்டா மேனனைப் பார்க்க வருவேன்…அப்ப எடுத்துக்கிறேன்..”

காரை மேனன் வீட்டுமுன் நிறுத்தினேன். மேனன் வீட்டுக்குள் கனல் எரியும் அடுப்புக்குள் இருப்பதுபோல இளம் செம்மை. நான் படிகளை ஏறியபோது அவர் எதிரே வந்தார். டிராக் சூட் போட்டிருந்தார். ”ஹாய்..” என்றார். ”அட்மிரல் ஸர், இந்த சாவி உங்க கிட்டே இருக்கட்டும்…” என்றேன் ”நாயர் வருவார்” அவர் ஒன்றுமே கேட்காமல் ”·பைன்” என்று வாங்கிக்கொண்டார்.

சாலைக்கு வரும்போதே டிராவல்ஸ¤க்கு அழைத்து ஒரு காருக்குச் சொன்னேன். மண்சாலையில் கொஞ்சம் நடந்து தார்ச்சாலையை அடைந்தபோது டாக்ஸி கிடைத்தது. நகருக்குள் நுழைந்து காரை பெற்றுக்கொண்டேன். காரில் ஏரி ·போர்ட் கொச்சினை நோக்கிச் சென்றபோதுதான் நான் எங்கே செல்ல உத்தேசிக்கிறேன் என்ற எண்ணம் எனக்கே தெளிவாகியது. செயிண்ட் ஆன்ஸ் செமினாரி. காரை வேகம் குறைத்து எதிரேவந்தவரிடம் விசாரித்தேன். அது நகருக்கு வெளியே அரூர் அருகே இருப்பதாகச் சொன்னார்.



தேசிய நெடுஞ்சாலை நாற்பத்தேழில் ஏறி இடக்கொச்சிக்குச் சென்று தெற்கு நோக்கிச் சென்றேன். நகரம் முழுக்க விளக்குகள் எரிந்தணைந்துகொண்டிருந்தன. வானில் நிலா மேலும் கரைந்து வெள்ளி அரிவாள் போலிருந்தது. விண்மீன்கள் அதிகமாக இல்லை. நகரத்தின் ஒளியை மீறி விண்மீன்கள் தெரிவதில்லை.

கும்பளங்கி படகுத்துறையில் மீன்பிடிப்படகுகள் ஒளிக்குவியல்களாக நீர்மேல் ஆடி நின்றன. ஒளிரும் கண்கள் கொண்ட பிரம்மாண்டமான் கடலுயிரிகள். ஜெட்டியில் சுமை ஏற்றும் வேலை நடந்துகொண்டிருந்தது. லாரிகளின் முகவெளிச்சங்கள் சாலை வரை நிழல்களை நீட்டின. ஒளியில் மனிதர்கள் அசைய கூச்சல்கள் போனற குரல்கள் இருண்ட வானில் பட்டு எதிரொலித்து திரும்பப் பெய்துகொண்டிருந்தன.

பயிற்சிப்பள்ளி ஒன்றைத்தாண்டி மறுபக்கம் சென்றபோது செயிண்ட் ஆன்ஸ் செமினாரியின் பெயர்ப்பலகை கண்ணுக்குப் பட்டது. தனியார்ச் சாலை அகலமாக இருந்தது இருபக்கமும் சிறிய ஓட்டுக் கட்டிடங்கள் முகப்பில் வெளிச்சம் பரவிய வராந்தாக்கள் மற்றும் முற்றங்களுடன் வந்துகொண்டிருந்தன. அதன் பின் ஓங்கிய கல்கூம்பு கோபுரம் தெரிந்தது. சிலுவைமீது கீழிருந்து பீய்ச்சப்பட்ட ஒளியில் அது அந்தரத்தில் மிதந்து நிற்பது போலிருந்தது. கீழிருந்து பெய்த சாய்வான ஒளியில் கல்பரப்பின் கரடுமுரடு புடைப்புகளின் நிழல்கள் பரவி வித்தியாசமான ஒரு நெசவை உருவாக்கியிருந்தன. தேவாலயத்தின் வாசல் விரியத்திறந்திருந்தது. உள்ளே வெளிச்சம் இருப்பதாகத் தெரியவில்லை.

காரை நிறுத்திவிட்டு மெல்ல நடந்து வாசலை அடைந்தேன். உள்ளே ஆட்கள் இருப்பது தெரிந்தது. வாசலில் செருப்புகளை கழட்டவேண்டுமா என்று பார்த்தேன். தேவையில்லை. உள்ளே செக்கச்சிவப்பான தரைமெத்தை விரிந்த நடைபாதைக்கு இருபக்கமும் ஈட்டிமரத்தாலான பழைமையான பெஞ்சுகளும் டெஸ்குகளும் இருபக்கமும் குவளைமலர்க்கொத்துகள் போல ஏந்தி நின்ற பித்தளை நிலைகளில் எரிந்த மாபெரும் மெழுகுவத்திகளின் கூட்டுச்சுடரொளியில் மெழுகாலானவை போல மின்னின. அவற்றில் ஐம்பதுபேருக்குக் குறையாமல் அமர்ந்திருந்தார்கள். அனைவருமே அசையாமல் மௌனத்தில் முழுமையாக மூழ்கி அமர்ந்திருந்தார்கள்.

ஆல்டரில் தாமஸ் சிரியன் பாதிரிகளுக்குரிய ஆடம்பரமான சடங்காடையுடன் கையில் ஒரு பித்தளைச் சிலுவை ஏந்தி கண்மூடி நின்றிருந்தார். சிவந்த பட்டைகள் நெடுக்காக தொங்கிய மாபெரும் சரிகை அங்கியில் தொன்மையான ஓவியம் ஒன்று போல தோன்றினார். அவருக்குப் பின்னால், அந்த ஊரளவுக்கே பெரிய ஒரு முகத்திற்கான காதணி போல பொன்னாலான மையம்.



அலங்கார வளைவுகள் முழுக்க தேவதைகள் பறந்தன. அவற்றின் குட்டிக்கைகளில் மலர்களும் கிரேக்க யாழ்களும் இருந்தன. குண்டுக்கன்னங்கள், குண்டுத்தொடைகள், குண்டுப்பிருஷ்டங்கள், விதவிதமான நெளிவுகள் மூலம் அவை எடையின்மையை காட்டிக்கொண்டிருந்தன. மலர்கள் பின்னிய வளைவுகள் ஒன்றுக்குள் ஒன்றாகச் சென்ற அல்லிவட்டத்தின் மையத்துப் புல்லிவட்டத்தின் நடுவே மேரியும் மைந்தனும் பொன்னொளிரும் சிலைகளாக நின்றனர்.

கிறிஸ்து தாயின் இடையில் இருந்து எம்பி நம்மை நோக்கி தூக்கு என்று கை நீட்டுபவர் போலிருந்தார். விரல்களை செண்பக மலரிதழ்கள் போல லேசாக முறுக்கவிழும்படித் திருப்பி ஆசியளிப்பது போலவும் இருந்தார். கன்னங்களிலும் திறந்த மழலைத்தோள்களிலும் பொன்னில் சுடரொளியின் பிரதிபலிப்புப் புள்ளிகள். மேரி ஏதோ கனவில் விழிசெருகி நின்றிருப்பதுபோலிருந்தது. ஆல்டரின் இருபக்கமும் இருந்த மெழுகுவத்தி நிலை இரு குட்டி தேவாலயங்கள் போல பல அடுக்குகளுடன் நிற்க அவற்றில் எல்லாம் வெண்மெழுகுவத்திகள் சுடர் மலர்ந்து நின்றன.

நாலைந்துபேர் என்னை திரும்பிப் பார்த்தனர். ஒரு பெண் முக்காடை இழுத்து விட்டுக்கொண்டாள். நான் ஒரு காலியான பெஞ்சில் மெல்ல அமர்ந்துகொண்டேன். ஆல்டருக்கு வலப்பக்கம் நான்கு சிறுவயது

பயிற்சிப்பாதிரியார்கள் கைகளில் பித்தளைச் சிலுவையுடன் நின்றிருந்தார்கள். அது வழக்கமான பிரார்த்தனை போல தெரியவில்லை. தாமஸ் அவரே ஏதோ புதிய சடங்கை உருவாக்கியிருந்தார் என்று தோன்றியது.

வெளியே தம்ம்ம் என்று மணி ஒலித்தது. ஒரு பிரம்மாண்டமான கித்தாரின் கம்பியை மெல்ல தொட்டது போன்ற ஒலி அது. தாமஸ் சிலுவையை இறக்கினார். பயிற்சிப்பாதிரியார்களும் அதேபோலவே செய்தார்கள். எனக்குப் பின்பக்கம் மாபெரும் ஆர்கன் மெல்ல முனக ஆரம்பித்தது. ஒரு யானை வண்டாக மாறி ரீங்கரிப்பதுபோல. அந்த ரீங்காரம் மெழுகுவத்திகளை ஈர்த்து ஒரே சுடராக ஆக்கியதா? ஆல்டரின் பொன்னிறம் அந்த ஒலியில் கரையாமல் உருகிக்கொண்டே இருந்தது. மேரியும் மகனும் திரவவடிவம் கொண்டவர்கள் போலத்தோன்றினர்.

பின்பு ஆர்கன் ஓங்கியும் சரிந்தும் இசைக்க ஆரம்பித்தது. அந்த மாபெரும் கூடமே ஓர் இசைவாத்தியமாக ஆக அதற்குமேலே இருந்து அருவமான மாபெரும் கரங்கள் இரண்டு அதை மீட்டுவது போல. தாமஸ் அந்தச் சிலுவையை நீட்டிக்கொண்டிருக்க ஒவ்வொருவராக எழுந்து சென்று அவர்முன் மண்டியிட்டார்கள். அவர் சிலுவையை ஒவ்வொருவர் தலைமீதும் வைத்து மௌனமாக பிரார்த்தனை செய்தார். அதன் பின் ஒவ்வொருவரையும் பயிற்சிப்பாதிரியார்கள் தனித்தனியாக ஆசீர்வாதம் செய்தார்கள்.

ஐம்பதுபேரும் செய்து முடிப்பது வரை ஆர்கனின் இசை ஒரு அருவி போல கொட்டி அந்த மாபெரும் கூடத்தினுள் சுழன்று வந்தது. நான் அந்த பொன்னிற இசையில் என் நினைவுகள் மிதந்தலைய சித்தம் பிரமித்தவன் போல அமர்ந்திருந்தேன். வேறெந்த ஒலியும் இல்லை. சொற்பொழிவுகள் ஏற்கனவே முடிந்திருக்குமா, இல்லை சொற்களே இல்லையா? கடைசிப்பெண்ணும் மண்டியிட்டபின்பு நான் ஒரு பெருமூச்சுடன் என் இயல்பான எண்ணங்களுக்கு மீண்டேன்.

தாமஸ் சிலுவையை கிறிஸ்துவின் பாதத்தில் வைத்தபின் மெல்ல பின்னகர்ந்து மறைந்தார். நான்கு இளம் பாதிரிகளும் மேடைக்கு வந்து கையில் சிலுவைகளுடன் நின்று பாட ஆரம்பித்தார்கள். சொற்கள் புரியாத சேர்குரல் இசை ஆர்கனுடன் இணைந்து மாபெரும் மணல்வெளிபோல எழுந்து சரிந்து மீண்டும் பொங்கி விழுந்தது. மீண்டும் தம்ம்ம் என்ற மணியோசை ஒலித்து முடிந்ததும் அனைவரும் எழும் கலைசல் ஒலி. ஒரு சொல்கூட பேசாமல் அவர்கள் பிரிந்து சென்றார்கள்.

நான் எழுந்து என் சட்டையை உள்ளே இழுத்துவிட்டுக்கொண்டேன். ஓர் இளம் பாதிரி என்னை நோக்கி வந்து ”நமஸ்காரம் சார்…சரவணனாக்குமா?” என்றார்.

”ஆமா”என்றேன். ”·பாதர் கூட்டி வரான் சொன்னார்” என்றார். நான் அவரைப் பின் தொடர்ந்து சென்றேன். இருண்ட வராந்தாக்களில் கண்ணாடிக்குடுவைகளுக்குள் மெழுகுவத்திச் சுடர்கள் எரிந்துகொண்டிருந்தன. வராந்தாக்களில் மெழுகுவத்திகளுக்கு இருந்த கண்ணாடிக்காப்பு தேவாலயக் கூடத்திற்குள் இல்லை என்பதை எண்ணிக்கொண்டேன். அங்கே வரும் காற்றை கவனித்து கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

அறைக்குள் தாமஸ் தன் சாதாரண அங்கியுடன் இருந்தார். சிவப்புப் பட்டைகளும் பளபளக்கும் சரிகையும் கொண்ட அவரது மேலங்கியும் கிரீடம்போன்ற தொப்பியும் சுவரில் ஒரு கொக்கியில் மாட்டப்பட்டிருந்தன. மேஜைமேல் அவரது வெண்பட்டுக் கையுறைகள் கிடந்தன. அவர் ஓய்வாகச் சாய்ந்து கறுப்பு டீ குடித்துக்கொண்டிருந்தார். நான் உள்ளே நுழைந்ததும் ஆங்கிலத்தில் ”வருக..” என்று சொல்லி அமரும்படி நாற்காலியைக் காட்டினார். சிறிய அறை. கூரையில் பெரிய தேக்குமர உத்தரங்கள் மிக உயரத்தில் இருந்தன. ஒரு மின்விசிறி மெல்லச் சுழன்றுகொண்டிருந்தது. பீங்கான் ஜாடிபோன்ற மையக்குமிழும் வளைந்த இறகுகளும் கொண்ட பழைய மின்விசிறி.

நான் அமர்ந்ததும் ”நீங்கள் வந்ததைப் பார்த்தேன்” என்றார். ”சும்மா பார்க்கவேண்டும் என்று தோன்றியது” என்று சொல்லிவிட்டு ”நான் வருவதற்குள் நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா?” என்றேன். ”இல்லை இங்கே பேச்சே கிடையாது. பேச்சு தர்க்க மனதை நோக்கிச் செய்யப்படுவதல்லவா? இரவில் எந்த தர்க்கத்துக்கும் இடமில்லை. இங்கே குறியீடுகள் மட்டும்தான். அவற்றை சில சடங்குகளாக நாங்கள் அளிக்கிறோம். துணைக்கு சங்கீதம். கூடவே சில சொற்கள். அந்தச் சொற்களை திரும்பத் திரும்பச் சொல்வதுதான் இங்கே உள்ள வழி” என்றார் ”டீ?”

”சரி” என்றேன். அவர் ஒரு பெல்லை அழுத்த இளம் பணியாள் வந்து நின்றான்.”ஒரு கடுஞ்சாய, பிலிப்போஸே” என்றார். ”டீ இரவு என்றால் பால் பகல். பால், சீனி, அரிசி என்று வெள்ளையாக இருக்கும் எல்லாவற்றையும் நான் பகலுடன் தான் தொடர்புபடுத்திக்கொள்கிறேன். அவை எல்லாமே சாத்தானின் அம்சங்கள்” சிரித்து ”பைத்தியக்காரத்தனமாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒரு மனிதன் தனக்கென ஒரு சிந்தனைமுறையை உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அது அவனுக்கு நன்மை செய்தால் போதுமானது”

நான் கால்களை நீட்டிக்கொண்டு ”அழகான சடங்கு” என்றேன். ”ஆமாம், இரவில் அழகில்லாதவை என ஏதுமில்லை” என்றார். ”இவர்கள் எங்கே போகிறார்கள்? தூங்குவார்களா?” ”இல்லை இவர்கள் பதினொருநாள் விரதம் எடுத்தவர்கள். நாற்பத்தொருநாள் இரவில் தூங்கமாட்டார்கள். பகலில் விழித்திருக்கவும்

மாட்டார்கள். நாற்பத்தொருநாள் விரதம் எடுத்தவர்களும் உண்டு. இதற்கு கும்பஸார விரதம் என்று பெயர்... ஒரு மறுபிறப்புக்கான வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது" நான் தலையசைத்தேன்.

டீ வந்தது. மிக அருமையான டீ. அப்போது எனக்கு எந்த அளவுக்கு டீ வேண்டியிருந்தது என அப்போதுதான் உணர்ந்தேன். கோப்பையை வைத்தேன். "வெல்" என்றார் தாமஸ். "·பாதர் நானும் உங்களிடம் ஒரு ஆட்டுக்குட்டியாக உபதேசம் தேடி வந்திருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்" தாமஸ் புன்னகை செய்தார். நான் நேரடியாக, "நான் இதையெல்லாம் விட்டுவிட்டு ஓடலாமென்று நினைக்கிறேன் ·பாதர். என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் நரம்புகள் அதிர்ந்துகொண்டே இருக்கின்றன. தாக்குபிடிக்க முடியாமல் நான் பைத்தியமாகிவிடுவேன்"

·பாதர் "என்ன ஆயிற்று? அந்தப் பெண்ணிடம் சண்டையா?" என்றார். நான் நிமிர்ந்தபோது "விஜயன் சொன்னார். அதை நானும் ஊகித்திருந்தேன். நீ உள்ளே வந்ததும் அவள் எழப்போனதைப் பார்த்ததுமே எனக்கு தெரிந்துவிட்டது" நான் பேசாமல் இருந்தேன். "கமான்" என்றார். "அவள் மிக அப்பட்டமாக இருக்கிறாள் ·பாதர். அப்பட்டமாக என்றால் ...அதாவது மிகமிக உண்மையாக. உண்மையான ஒன்றுக்கு என் மனம் இன்னமும் பழகவில்லை. அது என்னை அதிர்ச்சி கொள்ள வைக்கிறது.'"

நான் தடுமாறினேன் "இதை எப்படிச் சொல்வேன்... அதாவது..இப்போது நான் ஒரு அழகான பெண்ணைப் பார்க்கிறேன். உண்மை எனக்குத்தெரியும் அவள் உடலுக்குள் குருதியும் சதையும் நிணமும் சளியும் கோழையும் எல்லாம் இருக்கின்றன . ஆனால் நான் அவளைப் பார்க்கும்போதெல்லாம் அவையும் கூடவே தெரிந்தால் என்ன செய்வது? எப்படி நான் அவளை காதலிப்பேன், காமம் கொள்வேன்? என்னால் அதை தாங்கிக்கொள்ளவே முடியவில்லை"

"ஆகவே?" என்றார் ·பாதர். "நான் தப்பி ஓடிவிடலாம் என்று நினைக்கிறேன். திரும்ப சென்னைக்குப் போகலாமென்று நினைக்கிறேன்" "போகவேண்டியதுதானே?" நான் தயங்கி "திரும்பி வருவதாக கடிதமெல்லாம் எழுதினேன்" "ஓ" என்றார், சுத்தமான மலையாள ஓ. "ஆனால் அனுப்பவில்லை. அதற்கு முன் உங்களைப் பார்க்கவேண்டுமென்று தோன்றியது..." "ஐ ஸீ" என்றார் தாமஸ். "அதாவது நான் உன்னை தடுத்து இதிலேயே நிறுத்தி வைக்கவேண்டிய தர்க்கங்களைச் சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறாய்"

நான் சற்றே கோபத்துடன் "ஏன் நீங்கள் என்னை அனுப்பி வைக்கும் தர்க்கங்களைச் சொல்லவேண்டுமென நான் ஆசைப்பட்டிருக்கக் கூடாது?" "அந்த தர்க்கங்கள் உன்னிடம் ஏற்கனவே இருக்கின்றன...எதற்காக குறிப்பாக என்னை

தேடி வந்தாய்?” ”தெரியவில்லை…” நான் யோசித்தேன். ”ஒருவேளை நான் நீலிமா சொன்ன ஒரு விஷயத்தை அறிய விரும்பியிருக்கலாம். அது ஒரு சிறிய நெருடலாக என்னுள் இருக்கிறது” ”ஓ” என்றார் தாமஸ். அவரது முகம் நுட்பமாக மாறிவிட்டது.

நான் நேற்றைய நிகழ்ச்சியைச் சொன்னேன். ”அவள் அந்த வெள்ளையனிடம் சொன்னதுதான். ஒரு பெண்ணைப்பார்த்து சாதாரணமாக அவள் அழகாக இருப்பதாகச் சொல்பவனுக்கு அவள் அழகு ஒரு பொருட்டே இல்லை…” நான் இன்னும் கொஞ்சம் தயங்கி ”நீங்கள் நாம் முதலில் சந்தித்த நாளில் நீலிமாவிடமும் சொன்னீர்கள். அதன்பின் கமலாவிடமும் சொன்னீர்கள்” தாமஸின் உதடுகள் மெல்ல கோணலாக சிரிப்பைக் காட்டி இணைந்துகொண்டன. ”உனக்கு என்ன தெரிய வேண்டும்? நான் ஒரு பெண்வெறுப்பாளனா என்றுதானே?”

”அதில் எனக்குச் சந்தேகமே இல்லை” என்றேன் ”ஏனென்றால் யட்சி பொய் சொல்வதில்லை” தாமஸ் உரக்கச் சிரித்தார். ”உண்மை” என்றார். ”சொல்லுங்கள் ·பாதர் இந்தக் கற்பனாவாதம் இல்லாமல் இருந்தால் ஒருவன் இரவில் வாழமுடியுமா?” ”கற்பனாவாதமா? நல்ல கதை, நீ சொல்லிக்கொண்டிருப்பது அப்பட்டமான உண்மையைப்பற்றி அல்லவா?” என்றார் தாமஸ். ”அப்பட்டமான உண்மையில் திளைத்து வாழலாம் என்று நினைக்கும் கற்பனாவாதம் என்று சொல்லுங்கள். அந்தக் கற்பனாவாதம் இல்லாமல் நான் இரவில் வாழ முடியுமா? இது ஒரு உக்கிரமான பாவனையாகத்தானே இருக்கிறது? இதில் நடைமுறைத்தன்மையே இல்லை. என்றாவது ஒருநாள் இந்த கெட்ட கனவு கலையும் அல்லவா?”

தாமஸ் மேஜைமேல் தாளமிட்டபடியே என்னைப் பார்த்தார். ”உன் குழப்பம் என்ன என்று எனக்கு தெரியவில்லை” என்றார். ”நீ அந்தப்பெண்ணை திருமணம் செய்துகொள்ள போவதாக விஜயன் சொன்னார். நல்ல விஷயம் என்று எனக்கும் பட்டது. இப்போது நீ அவளைப் பயப்படுகிறாய். ஒரு பெண் ஆணுக்கு முன் போடக்கூடிய வழக்கமான வேஷங்களை எல்லாம் அவளும் போடுவாளா என்று சந்தேகப்படுகிறாய். அந்தமாதிரி வேடம்போடாத பெண்ணுடன் எப்படி ஒரு ஆண் குடும்பத்தில் வாழமுடியும் என்று நினைக்கிறாய். அந்த வாழ்க்கை சாத்தியமல்ல என்பதனால் திருப்பி பகலுக்கே ஓடிவிடலாம் என்று திட்டமிடுகிறாய்…அதுதானே?”

அவர் மிக எளிமைப்படுத்துகிறார் என்று எனக்குப் பட்டது. ஆனால் அங்கிருந்தே அவர் பேச ஆரம்பிக்கலாமே என்று நினைத்து தலையசைத்தேன். ”அவள் ஒன்றும் அசாதாரணமான பெண் அல்ல. மிக சர்வசாதாரணமான பெண் மட்டும்தான். வெளியே பகலில் வாழும் எந்த ஒருபெண்ணையும் இரவில்

கொண்டுவந்து வைத்தால் இப்படித்தான் இருப்பாள். ..” ”யட்சியாகவா?” ”ஆமாம். யட்சியை பகலில் கொண்டுவந்து வைத்தால் வீட்டுவேலை செய்ய வைக்கலாம்…” நான் தலையசைத்தேன்.

”இதோபார் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீதம் ஆண்கள் பெண்களை கவனிப்பதே இல்லை. இளமையில் அவர்களின் அழகு அவர்களின் பார்வையை திசை திருப்புகிறது. முதுமையில் அவர்களின் அழகின்மை திசை திருப்புகிறது. கவனித்துப் பார்த்த எந்த ஒரு ஆணும் வாழ்க்கையில் ஏதோ ஒரு தருணத்தில் யட்சியைக் கண்டிருப்பான். தப்பவே முடியாது…” ”அவள் என்னை அருவருப்பதாகச் சொன்னாள்…” ”ஆமாம். ஆண்கள் வேறு பாலினம் என்பதற்காகவே பெண்கள் அவர்களை வெறுக்கிறார்கள். ஆண்கள் வேறு பாலினம் என்பதனாலேயே பெண்கள் அவர்களை விரும்பவும் செய்கிறார்கள்..”

நான் அவரையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன். ”ஐ ஹேட் விமன்” என்றார் அவர். ”நான் ஒரு பெண்வெறுப்பாளன். ஆனால் தினமும் ஐந்துநிமிடங்களுக்கு எனக்கு அந்த நிலையில் இருந்து ஒரு இடைவெளி தேவையாகிறது. நான் சுயஇன்பம் செய்யும்போது…” நான் மெல்லிய அதிர்ச்சி ஒன்றை அடைந்தேன். ”அது கடவுள் எளிய மனித உடலை வைத்துக்கொண்டு செய்யும் விளையாட்டு. அந்த சிறுமையை எதிர்த்து அடக்கி அதை பெரிதாக ஆக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. அதேபோன்றதுதான் இதுவும். நீ ஒரு பெண்விரும்பி. பெண்வெறுப்பு உன் நாளின் ஐந்து நிமிடங்களை எடுத்துக்கொள்ளட்டுமே. அது அந்த விருப்பத்தை இன்னமும் உண்மையானதாகவும் தீவிரமானதாகவும்தான் ஆக்கும்.” தாமஸ் மெல்ல புன்னகைசெய்து, ”அந்த உரிமையை நீலிமாவுக்கும் கொடுத்தாலென்ன”

”ஒட்டுமொத்தமாக பார்த்தால் நான் போகக்கூடாது என்று சொல்கிறீர்கள்…இவளை திருமணம் செய்துகொள்ளலாம் என்கிறீர்கள்” ”நான் அப்படிச் சொல்லவில்லை. இவள் ஒன்றும் ஒரு அபூர்வ யட்சி இல்லை, எல்லா பெண்களையும் போல ஒருத்தி என்கிறேன். இந்த இரவில் நீ யட்சியில் இருக்கும் பெண்ணைப் பார்க்கிறாய். பகலுக்குப்போனால் பெண்ணில் இருக்கும் யட்சியைப் பார்ப்பாய். நீ விரும்புவதை தேர்வுசெய்துகொள்ளலாம் ”

தாமஸ் அதே கசப்புபடர்ந்த புன்னகையை விரித்தார் ”இருபது வருடங்களாக நான் பாவமன்னிப்புக் கூண்டில் இருக்கிறேன். தினமும் பத்து மனிதர்கள் என்னிடம் முறையிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஒரு சாதாரணமான ஆண் திருமணமாகி ஆறுமாதத்திற்குள் பெண்ணின் மென்மையான தோற்றத்திற்குள் இருக்கும் அந்த உலோகத்தை காண்பான். குரூரம், பிடிவாதம், கூர்மை. அவன் பூரணமாக அவளிடம் தோற்பான். அனேகமாக அப்போதுதான் அவன்

முதல்முதலாக அவளை அடிப்பான்.... பெண்களை அடிக்கும் ஆண்கள் பரிதாபமாக பெண்களிடம் தோற்றுக்கொண்டே இருப்பவர்கள்தான்"

"எங்கோ ஒருபுள்ளியில் அந்த உண்மையுடன் அவன் சமரசம் செய்துகொள்ள ஆரம்பிக்கிறான். தோல்வியை ஒத்துக்கொள்கிறான். ஆனாலும் அவ்வப்போது உக்கிரமான கழிவிரக்கமாக ஆங்காரமாக ஆணிலிருந்து அந்த தோல்வியின் தாபம் வந்துகொண்டுதான் இருக்கிறது" என்றார் தாமஸ் "இந்தக் கூண்டில் தலையை முட்டி எத்தனைபேர் குமுறி அழுதிருக்கிறார்கள் தெரியுமா? ஆனால் அவனுக்குக் கொஞ்சம் கண் இருந்தால் தன் ஐந்துவயதுப் பெண்குழந்தைக்குள்ளேயே அவன் அந்த உலோகத்தைக் காண்பான். ஒன்று அவளைக் கொல்லவேண்டும் அல்லது சரணடைய வேண்டும், ஒருபோதும் அவனால் அவளை வெல்ல முடியாது"

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே எழுந்து சென்றுவிடவேண்டும் என்று எனக்கு தோன்றிவிட்டிருந்தது. உண்மையில் சரியான சொற்கள் அமையாமல் நாங்கள் இருவருமே சுற்றிவருவதாகத் தோன்றியது. இந்தியமனதுக்கு ஆங்கிலம் பலவகைகளிலும் வசதியானது. அதன் அன்னியத்தன்மை காரணமாகவே உணர்ச்சிகரமான விஷயங்களை ஒட்டாமல் திட்டவட்டமாகச் சொல்ல முடிகிறது. ஆனால் சிலசமயம் உணர்ச்சிகளை அது வெறும் கோட்பாடுகள் போல ஆக்கிவிடுகிறது. பட்டாம்பூச்சிகளை எலக்ட்ரானிக் பறவைகளாக ஆக்குவது போல.

ஒருவேளை மலையாளத்தில் பேசியிருந்தால் இன்னமும் துல்லியமாகப் பேசியிருக்க முடியுமோ என்னவொ. அந்தமொழிக்கே உரிய நக்கல்களும் இடக்கரடக்கல்களும் தொனிமாறுபாடுகளுமாக இன்னமும் அந்தரங்கமாக நினைப்பவற்றை பரிமாறியிருக்க முடியுமோ? தமிழில் நான் பேசியிருந்தால் இந்த அறிவுஜீவிச் சொற்களை எல்லாம் சிதறடித்துவிட்டு அழுதிருப்பேன் என்று தோன்றியது.

"நான் கிளம்புகிறேன்" என்றேன். "நான் உன்னைக் குழப்பி விட்டேன் என்று நினைக்கிறேன்" என்றார் தாமஸ். "யட்சியிடமிருந்து நீ தப்பமுடியாது. பகலின் பல்லாயிரம்பாவனைகளால் அவளை மறைத்து வைக்கலாம். அந்தப்பொய்தான் உனக்குத்தேவை என்றால் போ. ஆனால் போனால் அங்கேதான் நீ இன்னும்பெரிய ஏமாற்றத்தைச் சந்திப்பாய்." எழுந்து கையை நீட்டியபடி "நான் எங்களூரில் மலைவெள்ளம் புரளும் ஆற்றில் நீந்தி வளர்ந்தேன். செமினாரிக்கு வந்தபோது இங்கே நீச்சல்குளம் இருந்தது. என்னால் அதில் நீந்தவே முடியவில்லை. தேங்கிய நீர்வட்டம் என் தோள்களுடன் உரையாடவில்லை. எனக்கு காட்டாறுதான் தேவைப்பட்டது"

நான் அவரது மென்மையான ஈரமான கையைப் பிடித்து குலுக்கிவிட்டு திரும்பி நடந்தேன். வராந்தா மெழுகுவத்தி ஒளியில் பட்டாம்பூச்சி இறகுபோல அதிர்ந்துகொண்டிருந்தது. என் காரை நோக்கிச் சென்று கதவைத்திறந்து அதனுள் அமர்ந்த போது நான் ஒன்றை உணர்ந்தேன், என் அகம் முடிவெடுத்துவிட்டிருந்தது. நான் இன்று அதிகாலையிலேயே கிளம்பபோகிறேன். இனிமேல் எனக்கு இரவு இல்லை. தாமஸ் சொன்ன சொற்கள் வழியாகவே அந்த உறுதியான முடிவுக்கு நான் வந்திருந்தேன் என்று நினைத்தபோது புன்னகை வந்தது

# இரவு 15



**இரவின் புன்னகை**

**மிக அந்தரங்கமானது**

**உதடுகள் இல்லாமல்**

**பற்கள் இல்லாமல்**

**கருவிழிகளால்மட்டுமே**

**ஒளிரும் புன்னகை.**

**கண்ணருகே கண் வைத்து**

**விழிகளுக்குள் பார்த்து**

**நமக்குள் வாங்கிக்கொள்ளவேண்டிய**

**ஆத்மாவின் புன்னகை அது**

இத்தனை தூரம் இவையனைத்தையும் நான் உள்ளுக்குள் நிராகரித்து வந்திருக்கிறேன் என்று அப்போதுதான் ஆச்சரியத்துடன் புரிந்துகொண்டேன். இனிமேல் இல்லை, இன்றுமுதல் இல்லை என்ற எண்ணம் மனதில் தென்றலாக வீசிக்கொண்டிருந்தது. ஒரு தருணத்திற்கு தேவையான பாடலை மனம் எவ்வளவு அனிச்சையாக தேர்ந்துகொள்கிறது.நான் சீட்டியடித்துக்கொண்டிருந்த பாடல் என்ன என்று நான் உணர்ந்தபோது புன்னகைசெய்தேன். ‘எண்ணி எண்ணிப் பார்க்கமனம் இன்பம் கொண்டாடுதே’ ஆனால் அந்த இயல்பான பாடலுக்கு நான் வெறுமே இந்த தருணத்தால் பொருள் கொள்கிறேனா என்ன?

சா¨லையின் இருபக்கமும் முகவிளக்கொளியில் உயிர்கொண்ட தொலைவுக்கற்கள் பளபளத்தோடிவந்து பின்னால் சென்றன. விளம்பரத்தட்டிகளில் இருந்த பெண்கள் சிரித்துக்கொண்டு மெல்ல திரும்பினர். சாலையோரமாக எங்கோ நீர் கொட்டிக்கொண்டிருந்த ஒலி. பாலத்தின் அடியில் பிரம்மாண்டமான எரிமலை ஒன்றின் லாவா உருகி நதியாகி ஓடி உறைந்தது போல ஆறு. அவற்றில் மெல்லிய மின்மினி வெளிச்சத்துடன் படகுகள். எல்லாம் எனக்குப்பின்னால் சென்று மறைய நான் எல்லாவற்றில் இருந்தும் நழுவி நழுவி முன்னால் விழுந்துகொண்டே இருந்தேன்.

நான் செய்ய வேண்டியதென்ன என்பதெல்லாம் மிகத்தெளிவாக எனக்கு தெரிந்திருந்தது. அப்படியானால் நான் ஏற்கனவே ஒரு திரும்பும் வழியை விட்டுக்கொண்டுதான் வாசல்களை பின்னால் சாத்தியிருக்கிறேன். நான் எச்சரிக்கையாக இல்லை, ஆனால் என் ஆழம் எச்சரிக்கையாக இருந்திருக்கிறது. அது அனைத்தையும் அறிந்திருக்கிறது. நான் இந்த பாதிரியாரை எதற்¡கத் தேடிச் சென்றேன்? என் பிரக்ஞை சிதறுண்டிருந்தது. என் ஆழத்தைக் காணமுடியாமல் மேல்நீர் படலம் அலையடித்தது. இவரது தர்க்கத்தின் ஆம்பல் கொடிகளில் என் கைகால்கள் சிக்கி அசைவிழந்தபோது நான் மூழ்கினேன். ஆழத்தில் என் காட்சிகள் தெளிவாக என்னை நோக்கி வந்தன.



ஆம். மற்றபடி நானும் அவரும் பேசிக்கொண்டதற்கு என்னதான் அர்த்தம்? மனிதஉறவுகளைப்பற்றி எவர் அத்தனை திடமாக பேசிக்கொள்ள முடியும்? நான் என்னைப்பற்றியே எதையும் உறுதியாகச் சொல்லிவிட முடியாது, இதில் ஒட்டுமொத்தப் பெண்களைப் பற்றிய மதிப்பீடுகள். அதை கோட்பாடாக ஆக்கி சரியான சொற்றொடர்களைக் கண்டுபிடித்து முன்வைத்து விவாதித்து.... அபத்தம். முட்டாள் சொற்கள் இல்லாமையின் இருளில் இருக்கிறான் என்றால் அறிவுஜீவிகள் சொற்களின் இருளில் இருக்கிறார்கள்.அருமையான சொற்றொடர், எழுதி வைத்துக்கொண்டால் எங்கேனும் மேற்கோள் காட்ட உதவும்.

புன்னகையுடன் காரை வேகம் குறைத்தேன். நெடுஞ்சாலையில் இருந்து ஒரு கிளை இடப்பக்கமாக திரும்பியது. அதில் என் காரைத் திருப்பிய பின்னர்தான் ஏன் என்று ஆச்சரியத்துடன் எண்ணினேன். என் கைகள் மூளையின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இயங்குவது போல. சில நிமிடங்களுக்குப் பின்னர் அது ஆசிரமம் செல்லும் பாதை என்று கண்டுகொண்டேன். கார் சென்றபடியே இருக்க நான் என் ஆழ்மனம் தன்னிச்சையாகவே முடிவெடுத்ததை எண்ணி வியந்து செயலிழந்திருந்தேன். பின்பு பிரேக்கை மிதித்து காரை நிறுத்தினேன்.

பல்லைக்கடித்தபடி காரைத்திருப்பி நேர் எதிர்த்திசையில் ஓட்ட ஆரம்பித்தேன். கார் நெடுந்தூரம் செல்வது வரை யாருக்கு எதிராகவோ வீம்பாக இருப்பதுபோல இறுக்கமாகவே அமர்ந்திருந்தேன். பின்பு மெதுவாக இலகுவானேன். சீட்டியடிக்க ஆரம்பித்ததும் அந்த ஒலியாலேயே உற்சாகமானேன். புன்னகை செய்தபடி என்ன நடக்கிறது என்று நினைத்தேன். இது ஒரு போதையடிமைத்தனம் போல் இருக்கிறது. அவர்கள் அவர்களை அறியாமலேயே மதுக்கடைக்குச் சென்று விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு விஷயத்திற்கும் அடிமையாக ஆவதற்கான தயார் நிலையில் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது மனித மனமும் உடலும். எதையும் சில நாட்களுக்குள் ஏற்றுக்கொண்டு அதை இயல்பாக ஆக்கிக்கொண்டு...

நான் என் கண்களைப் பழக்க வேண்டும். ஆனால் அதிகம்போனால் இரண்டே நாட்கள்தான் அதற்கு தேவை. அதன் பின்பு எனக்கு இரவு மீண்டும் தடித்துவிடும். அதற்குள் நான் காணும் எல்லா நுட்பங்களும் மறைந்துவிடும். எல்லாம் பழங்கதையாக, என்னாலேயே நம்பமுடியாத நினைவுகளாக பின்னால் நகர்ந்து சென்றுவிடும். நீலிமா– நான் அந்நினைவை வலுக்கட்டாயமாக ஒதுக்கினேன்.

சாலையோரமாக ஒரு சிறிய வெளிச்சம் தெரிந்தது. அங்கே நிழல்கள் ஆடுவது போல. கார் நெருங்க நெருங்க என்னால் அந்த இடத்தை நன்றாகவே பார்க்க முடிந்தது. காயலுக்குள் விரல் போல நீட்டிக்கொண்டிருந்த நிலப்பகுதியில்

தகரத்தாலான ஒரு சிறிய டீக்கடை. அதில் ஒரே ஒரு அரிக்கேன் விளக்கு முற்றத்தில் நின்ற தென்னை மரத்தின் மீது கட்டப்பட்டிருந்தது. அதனருகே பெஞ்சுகளில் பலர் அமர்ந்திருப்பது போலத்தெரிந்தது.

காரை நிறுத்திவிட்டு சற்று நேரம் அங்கேயே நின்றேன். கடை சாலையில் இருந்து பதினைந்தடி ஆழத்தில் இருந்தது. கடையில் இருந்து ஒருவன் எழுந்து ”ஆரா அவிடே? எந்தா?” என்றான். நான் ”ஒந்நும் இல்லை” என்றேன். ”மற்றே தமிழனா... ” என்று ஒரு குரல். பின்பு ”ஆ, வரீன் வரீன்” என்று தோமாவின் குரல் கேட்டது. நான் உள்ளூர ஊகித்திருந்தது சரிதான். ”ஈ வழி இறங்காமோ?” என்றேன். ”அவிடே படி உண்டு” வலப்பக்கம் ஒருவர் மட்டும் இறங்கும் அளவுக்கு படிகள் வெட்டப்பட்டிருந்தன. நான் அதன் வழியாக இறங்கி கடையின் முகப்புக்குச் சென்றேன்.



கடைமுகப்பில் தென்னை மரத்தைச் சுற்றி கள்ளிப்பெட்டிகளைக் கொண்டு செய்யப்பட்ட குட்டையான ஏழெட்டு பெஞ்சுகளும் சில டெஸ்குகளும் இருந்தன. அங்கே நான் நினைத்திருந்ததை விட அதிகமான பேர் இருந்தார்கள். பலர் வட்டமான தாமரையிலைகளில் புட்டு சாப்பிட்டுக்கொண்டிருக்க உள்ளே இருவர் தூக்கிக் கட்டிய லுங்கியுடன் புட்டு சமைத்துக்கொண்டிருந்தார்கள். அடுப்பின் கனல் அளித்த செவ்வெளிச்சம் அன்றி கடைக்குள் வேறு ஒளியே இல்லை.

தோமா ”என்னா, எவிடே போயி வருந்ந வழி?” என்றார். நான் ”இங்கே, கும்பளங்கி வரைக்கும் போனேன்” ”ஓ, தாமஸ் அச்சனைக் காணானாயிரிக்கும்” என்றார் தோமா. ”அவரை தெரியுமா?” ”பின்னே? அச்சன் நம்முட சொந்தம் ஆளாக்குமே? இங்கே வருவார்.. புட்டு சாப்பிடுங்கோ, சம்பா அரி புட்டாக்கும்” நான் சாப்பிடும் மனநிலையில் இருந்தேன், பசியென எதையும் உணரவில்லை என்றாலும். பெஞ்சில் அமர்ந்து ”சரி” என்றேன்.

”வற்கிச்சாயா ஒரு குற்றி புட்டு, நம்முடே தமிழன் சாரினு…கடலயோ பயறோ?” ”கடலை…நேந்திரம் பழம் உண்டோ?” ”சுட்ட பழமுண்டு” என்றார் வர்க்கிஸ். ”சரி ஒரு சுட்ட பழம்” என்றேன். அந்த நிலநீட்சியைச் சுற்றி ஆழமில்லாத காயல் முழுக்க அங்கே இருந்தவர்கள் வந்த சிறிய படகுகள் கரையில் நடப்பட்டிருந்த தறிகளில் கட்டப்பட்டிருந்தன. மாடுகளைக் கட்டிப்போட்டுவிட்டு சாப்பிடுபவர்கள் போலிருந்தார்கள். படகுகள் ஒன்றுடன் ஒன்று மெல்ல உரசிக்கொண்டிருந்தன. காயலின் பாசிவாசனை படர்ந்த காற்று நான்குபக்கமிருந்தும் வீசியது.

”பின்னே, என்னவாக்கும் காரியங்கள்?” என்றார் தோமா. ”சாருக்கு என்ன தொழிலு?” ”நான் மெட்ராஸிலே ஆடிட்டர்” என்றேன். ”மதிராசியிலே தாப்புவலை உண்டுமா?” என்றார் அருகே இருந்த சட்டைபோடாத ஆள். அவர் கடலையை புட்டில் போட்டு இறுக்கமாகப் பிசைந்து வைத்திருந்தார்.

நான் ”அங்க சாதாரணமான போட்டுதான்…” என்றேன் ”அவிடே கடலிலே வெறும் மணலாக்குமே. இவ்விடம் மாதரி பாறைகள் இல்லை. பாறை இருந்தால் செம்மீனும் கல்லுமேக்காயும் கிட்டும்…நான் மதிராசியிலே ஆறுமாசம் இருந்தேன்” என்றார் இன்னொரு ஒல்லியான ஆள். இருட்டுக்குள் இருந்து முகங்கள் உருவாகி வந்துகொண்டே இருந்தன. இருளுக்குள் சிலைமாதிரி இருக்கும் ஒருமுகம் பேசியதுமே அந்த பாவனை வெளிப்பாடு காரணமாக மனிதமுகமாக ஆகிவிடுவது போல இருந்தது.

”இங்கஇவ்வளவுபேரு இருக்காங்களா தாப்புவலை போடுறவங்க?” என்றேன். ”இது என்னா சார்? பத்தஞ்ஞூறு பேரு உண்டு. இப்பம் எல்லாரும் கடலுக்குள்ளே இரிப்பாங்க. இங்கே எப்பமுமே நல்ல கூட்டம் உண்டும்” என்றார் தோமா. ஒல்லியான ஆளைக்காட்டி ”இது பெரச்சன். நம்ம ·ப்ரண்டாக்கும்” பெரச்சன் என்னிடம் ”நான் மதிராசியிலே இருந்நேன் சார்” என்றார் மீண்டும். ”என்ன பண்ணினீங்க? நைட் வாட்ச்மேன் ஜோலி. சம்பளம் கொள்ளாம். பட்சே தலையில் வெள்ளம் விட முடியாது. உப்புவெள்ளம். நமக்கு வெள்ளம் இல்லாதே ஜீவிக்க முடியாது சாரே. அதனாலே நான் திரிச்சு வந்நேன். இவிடே கொள்ளாம். நல்ல சுகமாக்கும்”

”சீசன் எப்ப?” என்றேன். பெரச்சன் ”ரண்டு சீசன் உண்டும். ஏப்ரல் மே ஒரு சீசன். அப்பம் நல்ல செம்மீனும் கொஞ்சும் கிட்டும். பின்ன ஓகஸ்டில் மழைக்காலத்தில் கல்லும்மக்காய் கிட்டும்” என்றார் . தோமா ”கல்லும்மக்காயின்னு சொன்னா சிப்பியாக்கும்” என்றேன். ”தெரியும்…”



வர்கீஸ் ”சார் கட்டன் எடுக்கட்டே?” என்றார். நான் ”கடுப்பம் குறைச்சு” என்றேன். என் கண்கள் அப்போது நன்றாகப் பழகிவிட்டன. அங்கிருந்த அத்தனைபேரையும் பார்த்தேன். இருட்டுக்குள் அமர்ந்து மௌனமாக சாப்பிட்டார்கள். சிலர் பீடியை பிடித்தபடி கண்கள் மின்ன எங்களைக் கவனித்தார்கள்.

கிட்டத்தட்ட ஐம்பதுபேர் இருந்த அந்த இடத்தில் உரையாடல் எங்களுக்குள் மட்டுமே நிகழ்ந்தது. அதுவும் மிகமெல்லிய குரலில் .பிறர் இருப்பதே தெரியாமல் இருந்தார்கள். கேரளத்தில் ஒரு சாதாரணகள்ளுக்கடையில் அந்தப்பகுதிவழியாக காரில்செல்லும்போதே காதில் வந்து அறையும் சத்தம் இருக்கும் என்று நினைத்துக்கொண்டேன்.

”நீங்க இருட்டிலே மலையாள மனொராமா வாசிப்பீங்கன்னு கமலா சொன்னார்” என்றேன். தோமா ”ஆரு, தம்ப்ராட்டியா?” என்றார். ”ஆமா” ”அது என்னா சாரே? மத்தவங்க வெளிச்சத்திலே வாசிக்கிறது மாதிரித்தான் இதுவும்” என்றார் பெரச்சன். ”மனசுக்கு ஒரு வெளிச்சம் இருக்குமே அதுமாதிரி பூமிக்கும் கடலுக்கும் ஒரு வெளிச்சம் உண்டு சாரே. அந்த வெளிச்சம் மதி. அதுக்குமேலே வெளிச்சம் இருந்தா வெளிச்சத்தை தடுக்க குடை பிடிக்கணும்....” நான் அவரைப் பார்த்தேன். பெரிய முறுக்கு மீசை. எலும்போடிய உடலில் நரம்புகள் இழுத்துக்கட்டப்பட்டவை போல் இருந்தன.

சிலர் பணம் கொடுத்துவிட்டு கிளம்பினார்கள்."யாருமே பேசக்காணலியே" என்றேன். "அது இந்தத் தொழிலுக்க ரீதியாக்கும். ஓரோருத்தனும் ஒற்றைக்காக்கும் போயி நிந்நு மீன்பிடிக்கிறது. ஒற்றைக்கு நிந்நு நிந்நு பின்னெ பேச்சு இல்லாமல் ஆகும். ஆரம்பத்திலே நாம நமக்குநாமே பேசிட்டே இரிக்கும். சிலர் பாட்டு பாடும். சிலர் கதை சொல்லும். பின்ன அப்டியே பேச்சு போயிடும். கெட்டியவள் கேட்டாக்கூட ம்ம்ம்நு ஒரு மூளல் மதி. பேச்சு மனசுக்குள்ள தாழ்ந்நு போகும். பின்னே ரண்டுபேர் சேர்ந்நு போயாலும் பேச்சு உண்டாவில்ல..." என்றார் தோமா.

"இப்ப நீங்க பேசறீங்களே" தோமா " கரைக்கு வந்நால் குறே பேசும். கடலுக்குள்ளில் போயால் பின்னே வாக்கில்ல". "ஏன்?" என்றேன். "பேச்சு ஆவிசியம் இல்லை சாரே. மனுஷன்மார் சும்மா பேசுந்நார். கோழிக்குஞ்சு கண்டிட்டுண்டா? குஞ்சுகோழி கியா கியான்னு ராப்பகலா பேசிட்டிருக்கும். கோழி மூத்தா பேச்சு நிந்நு போகும்...." தோமா எழுந்து "அப்பம் காணாம் சாரே" என்றார்.

பெரச்சன் ஒரு பீடியைப் பற்ற வைத்தார். நான் "இப்ப எங்க போறீங்க?" என்றேன். "ஒந்நாம் கடலுக்கு சாரே. வருந்நோ?" நான் உடனே அந்த எண்ணத்தை அடைந்து "வரேன்" என்றார். "உடுப்பெல்லாம் நனையும். ரூபாயும் மற்ற கடலாசுகளும் ஒந்நும் இரிக்கருது" என்றார் . நான் "அதெல்லாம் பத்திரமா இருக்கு" என்றேன். "எந்நால் கேறிக்கோ" என்றபடி இருவரும் படகை நோக்கிச் சென்றார்கள்.

படகு என்று அவற்றைச் சொல்வது சற்று அதிகம். நீளமான பிளாஸ்டிக் டப்பாக்கள். இளமஞ்சள் நிறம் பூசப்பட்டவை. நான் பெரச்சனுடன் ஏறிக்கொண்டேன். கால்வைத்தபோது அது முரண்டுபிடிக்கும் குதிரைக்குட்டி மாதிரி ஆடி சற்றே விலக முற்பட்டது. பெரச்சன் என் தோளைப்பற்றிக்கொண்டார். நான் நடுவே சப்பணமிட்டு அமர்ந்தேன். அவர் அதன் முகமுனையில் ஒரு காகம்போல குந்தி அமர்ந்தார். துடுப்பினால் ஒரு உந்து உந்துவதற்குள் படகு காயலில் வெகுதூரம் சென்றது. கரையில் அந்த டீக்கடை ஒரு திரைச்சீலை போல நெளிந்தபடி பின்னால் சென்றது.

சிலநிமிடங்களுக்குள் நாங்கள் காயலுக்குள் இருந்தோம். பெரச்சன் ஒரு பீடியைப் பற்றவைத்துக்கொண்டார். "பெரெச்சன் வெள்ளமடிக்குமோ" என்று கேட்டேன். "இடைக்கு...எனக்கு அதில் வலிய இஷ்டமில்லை" என்றார். "ராத்திரியிலே வாழுறவங்க நல்லா அடிச்சு பூஸ் ஆவீங்கன்னு நெனைச்சேன்" "பூஸ் ஆயால் ஜோலி நடக்காது சாரே. தாப்புவலை இடுந்ந ஆரும் ராத்திரி குடிக்க மாட்டார். காலத்து குடிச்சிட்டு கிடக்குந்நவர் உண்டு..." நான் அவரது

நெளியும் நரம்புகளையே பார்த்தேன். "பெரச்சனு எத்ர வாசாயி?" "எழுபது கழிஞ்ஞ்" நான் அவரை பிரமிப்புடன் பார்த்தேன். நான் ஐம்பது மதிப்பிட்டிருந்தேன்.

கடலும் காயலும் சந்திக்கும் நீர்வேலியை கண்ணாலேயே காணமுடிந்தது. கடல்நீர் இன்னமும் இருண்டு அழுத்தமாக இருப்பதுபோல தெரிந்தது. படகுகள் கடலை அஞ்சி தயங்கியவை போல அலைகளில் தத்தி தத்தி அங்கேயே நின்றன. பெரச்சன் படகை பக்கவாட்டுக்கு திருப்பி துடும்பை பலமாக உந்தி ,ஒரு மதிலை கையூன்றி ஏறி குதிப்பதுபோலவே நீரின் அந்த வேலியை படகைக் கொண்டு எம்பித்தாண்டினார். மறுபக்கம் சென்றதும் படகின் ஆட்டம் மாறுபடுவதை உணர்ந்தேன். அதுவரை அது தத்தி தத்திச் சென்றது, இப்போது ஊசலில் ஆட ஆரம்பித்தது.

நான் "இந்த கடலிலே.." என்றேன். பெரெச்சன் வாயில் கை வைத்து பேசாதே என்றார். நான் பேச்சைநிறுத்திக்கொண்டு திரும்பி தோமா பார்த்தேன். அவர் எங்களுக்கு நாலடி மேலே இருந்தார். அவரது தோள்களில் நீர் வழிவதைக் கண்டேன். என் தலை சுழலும் உணர்வு ஏற்பட்டது. இப்போது அவர் நாலைந்தடி ஆழத்தில் இருக்க நான் அவரது தலைமயிரைப் பார்த்தேன். சற்று குமட்டுவதுபோலிருந்தது. வாந்தி எடுத்துவிடக்கூடாது என்று எண்ணிக்கொண்டேன். கால்களை நன்றாக நீட்டினேன். பின்பு தலையையும் சாய்த்தேன்.

மெல்ல ஆடியபடி வானம் தலைக்குமேலே படர்ந்திருந்தது. கருமையில் விபூதியால் தீற்றப்பட்டது போல மெல்லிய பிறைநிலவு. இன்னும் ஓரிரு நாட்களில் அமாவாசை வந்துவிடும். காற்று நீர்த்துளிகளை அள்ளி படகில் வீசியது. என் உடலும் உடைகளும் நன்றாக நனைந்து விட்டன. ஆனால் காற்றில் படபடத்து நீர்த்துளிகளை உதறிக்கொண்டே இருந்தது சட்டை. பாண்ட் மட்டும் தொடைகளை ஈரமாகக் கவ்வியது.

நட்சத்திரங்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு நட்சத்திரமாக பார்வையால் தொட்டுத் தொட்டுச் சென்று ஒரு கணத்தில் பிரமித்து ஒட்டுமொத்த நட்சத்திரவெளியையும் பார்த்து சில கணங்கள் அதில் இருந்தபின் கலைந்து மீண்டும் ஒவ்வொரு நட்சத்திரமாகப் பார்க்கும் சுழற்சி. மீண்டும் மீண்டும். என்னென்ன எண்ணங்கள். கடற்பாசி போல ஒன்றுடன் ஒன்று தொடாமல் அலைகளில் ஆடும் தனிநினைவுகள். இளமைப்பருவம். பயணங்கள். சம்பந்தமில்லா முகங்கள். சின்ன விஷயங்கள், பெரிய விஷயங்கள். எல்லா எண்ணங்களும் சொற்களாக இருந்தன. அப்படியானால் எல்லாவற்றையும் சொற்களாகத்தான் மாற்றிக்கொண்டிருக்கிறேனா? சொற்களை மட்டும்தான் திருப்பி எடுக்க முடியுமா?

இது என்ன அசட்டு மூளையோட்டல் என்று சலித்தேன். ஏன் இத்தனை நினைப்புகள். ஏன் ஓயாமல் மனதை போட்டு சலித்துக்கொண்டே இருக்கிறேன்? எழுந்து அமர்ந்து கடலைப்பார்த்தேன். அலைகள் அதிகம் இல்லை. அப்போது பார்க்க பெரும் பிசின்பரப்பு போல தோன்றியது. அலைகளின் வளைவுகளில் மட்டும் அக ஒளி. கண் மட்டுமே அறியும் ஒளியுடன் இருந்தது கடல்பரப்பு. கையை தூக்கிப்பார்த்தால் கைக்குப்பின் கடல்தான் தெரிந்தது. வானத்தின் ஒளியை கடல் பிரதிபலிக்கிறதா இல்லை கடலின் ஒளியை வானம் பிரதிபலிக்கிறதா? எங்கிருந்து வரும் ஒளி இது? பகலில் சூரியனிடமிருந்து பெற்ற ஒளியின் சேமிப்பா? இல்லை, அந்த ஒளியைப்பற்றிய நினைவு மட்டும்தான் இது.

அவர்கள் இருவரும் எந்தவிதமான தொடர்புறுத்தலும் இல்லாமல் முற்றிலும் மௌனமாக இணைந்து வேலைசெய்தார்கள். கடலுக்குள் ஏற்கனவே வலையை போட்டிருந்தார்கள் போல. அதை ஒன்றுடன் ஒன்று கயிறால் இணைத்தார்கள். பெரச்சனின் முகத்தைப் பார்த்தால் அவருக்குள் எந்தச் சொற்களும் இல்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. அச்செயல் அன்றி எதுவுமே அவரிடமிருக்கவில்லை என்று பட்டது. இயல்பாக வேலைசெய்யும் கைகள், கூடுகட்டும் தூக்கணாம்குருவியின் அலகுபோன்றவை.

விண்மீன்கள், அலைகள். மீண்டும் விண்மீன்கள் அலைகள். மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்த கண்கள் பின்னர் பிரக்ஞையில் இருந்து விடுபட்டன. நான் வேறெங்கோ இருந்தேன். இளமையில் தனிமையில். மீண்டு வந்து பார்த்தபோது கடலும் வானமும் காலமில்லாமல் ஆடிக்கொண்டே இருந்தன. என்ன ஒரு தனிமை. எதைப்பற்றி நினைக்கிறேன் அப்படி? ஆனால் அந்தச் சொல்லே மனதில் மீண்டும் வந்தது. எத்தனை பெரிய தனிமை. அதிலேயே நெடுநேரம் சென்றுகொண்டிருந்தேன்.

வலைகளை அவர்கள் இணைத்து முடிக்க நெடுநேரமாகியது. பெரச்சன் தோமாவிடமிருந்து விலகிச் சென்றார். கடலுக்குள் நாங்கள் செல்வது போல தெரியவில்லை. கடல் எங்களை மெல்லிய சரடொன்றால் உள்ளுக்கு இழுத்துக்கொள்வது போல் இருந்தது. கரையின் எல்லா ஒளிகளும் முழுமையாக மறைய சுற்றிலும் நீர் மட்டுமே தெரிந்தது. பெரெச்சன் படகின் நுனியில் துடுப்பை மடிமீது வைத்துக்கொண்டு அமர்ந்தார். நான் அவர் ஏதோ பேசப்போகிறார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் நானிருப்பதையே அறியாதவராக இருந்தார்.

கடலின் ஒளி அதிகரித்து வருவதாக தோன்றியது. கடல் ஒரு மாபெரும் நீலத்திரைச்சீலையாக அதற்கு அப்பால் யாரோ விளக்கேற்றுவது போல. சற்று நேரத்தில் என்னால் கடலின் நுரைகளை மிதக்கும் சிறிய

கடற்குப்பைகளைக்கூட பார்க்க முடிந்தது. வானில் நட்சத்திரங்கள் மிகப்பெரிதாக தெரிந்தன. மின்னி மின்னி அவை வளர்ந்தன. உதிர்ந்து விழுந்துவிடுபவை போல வானில் இருந்து தனித்து பிரிந்தன. ஆரஞ்சுப்பழம் அளவுக்குப் பெரிய ஒரு கோள் வான் சரிவில் தொங்கி நின்றது.

அப்படியே நேரம் சென்று கொண்டிருந்தது. எதற்காக காத்திருக்கிறார் பெரெச்சன். இவர்களின் தொழிலும், உத்திகளும் எனக்குப் புரியப்போவதில்லை. ஆனால் எப்படி இப்படி முற்றிலும் அமைதியாக முற்றிலும் செயலற்று அமர்ந்திருக்க முடிகிறது? தலைக்குள் ஓடும் மூளையை என்ன செய்வார்? ஆனால் இது மனிதனின் பிரச்சினை மட்டும் தானே? பூனைகள் நாளெல்லாம் சிலைபோல காத்திருக்கின்றன. நாய்கள் கல்லித்து அமர்ந்துவிடுகின்றன. மாடுகள் பூரணமான தியானநிலையை அடைகின்றன. ஆனால் இது தியானநிலையா? இது ஒரு மனப்பழக்கம் மட்டும்தானே?

நிமிடங்கள் மேலும் நிமிடங்கள். ஒருமணிநேரம் ஆகியிருக்குமா? இல்லை, மேலும் ஆகியிருக்கும். என் முன் படகு நுனியில் ஒரு கல்லை எடைக்கு வைத்ததுபோல் அவர் அமந்திருந்தார். அவருக்குப்பின்னால் கடலின் திரவஒளி. கண்கள் மட்டும் இரு திரவ ஒளிப்புள்ளிகள். அப்படியே சென்றுகொண்டிருந்தது காலம். காலம் என்பது மரங்களால் கட்டிடங்களால் சாலைகளால் ஆனது. இங்கே காலம் கீழே விழுந்த திரவம்போல பரவிப்பரந்து விட்டிருக்கிறது.

விடிய விடிய இப்படியே கடல் மீது நின்றிருக்க வேண்டுமா என்ன? என்னால் தாங்கமுடியாது, மனம் பித்தாகிவிடும். இப்போதே காலம் என் பிரக்ஞையை அழுத்திக் கனக்க ஆரம்பித்துவிட்டது. கணம்தோறும் எடை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதோ வெறியுடன் கைவீசி எதையோ கத்தப்போகிறேன். அல்லது மார்பில் அறைந்து அழப்போகிறேன். திருப்பு, திருப்பு, கரைக்குப்போ, கரைக்குப்போ. ஆனால் அந்தக்குரல் எனக்குள்ளே மட்டும்தான் ஒலித்தது. அந்தக்குரலை நான் பேசினாலும் அவருக்குத் தெரியவைத்துவிடமுடியாது. அவர் எங்கோ இருந்தார். அவருக்கு எனக்குமான எல்லா தொடர்புகளும் அறுந்துவிட்டன.

ஒருவகையான தன்னிரக்கம் வந்து மனம் இரங்கி கண்ணீர் துளிர்க்குமளவுக்கு நான் நெகிழ்ந்தேன். ஆனால் எதைப்பற்றி அந்த நெகிழ்ச்சி என்று மறுகணமே எண்ணியதும் புன்னகை புரிந்தேன். என் மனம் நிலையழிகிறது. பித்துநிலை நோக்கிச் செல்கிறது. நான் திரும்பி வரவே முடியாத ஒரு ஆழம் நோக்கி இறங்கிக் கொண்டிருக்கிறேன். திரும்பு திரும்பிவிடு....திரும்பு.. ஆனால் சில கணங்களில் அந்த ஆவேசக்கூக்குரல் வெறுமொரு அகஒலியாக ஆகி தாளமாக மாறி மூச்சுடன் கலந்து மறைந்தது. எத்தனை பெரிய விண்மீன்கள். இவற்றை நான் ஏன் இதுவரை பார்க்கவில்லை!

நான் அலையொன்றால் அடிக்கப்பட்டு விழித்தெழுந்தேன். எழுந்து அமர்ந்தேன். முழுமையான விழிப்பில் முற்றிலும் நான் இல்லாமல் இருந்திருக்கிறேன். என் அகம் உதைபட்டதுபோல திடுக்கிட்டது. பெரெச்சன் ”போவாம்... வேலியேற்றம் துடங்ஙி” என்றார். கடலில் இருந்து பெரிய அலைகள் கரை நோக்கி யானைப்படைகள் போல திரண்டு வரிசையாக சென்று கொண்டிருந்தன. இந்த நீர் ஏற்றத்தில்தான் கடலில் இருந்து மீன்கள் காயலுக்குள் வரும் போலும்.

அலைகளில் ஏறி கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். துடுப்புபோடவெண்டிய தேவையே இருக்கவில்லை. அலைகளுக்குள் நடுவே நீர் வளைவில் நான் கண்ணாடிக்குள் குமிழிகள் போல மீன்களைப் பார்த்தேன். கரையின் விளக்கு வரிசைகள் ஒரு செம்மணிச்சரம்போல தெரிந்தன. பின்பு ஒரு காரின் முக விளக்கொளியைக் கண்டேன். கடைசியாக என்ன நினைத்தேன்? விண்மீன்கள். ஆம், அவை அப்போதும் மிகப்பெரிதாக இருந்தன. ஆனால் அவற்றின் மீதான ஆச்சரியம் என்னுள் இருந்து அகன்றிருந்தது. கடலும் வானமும் அளித்த பிரமிப்பு முற்றாக விலகிவிட்டிருந்தது. நான் அவற்றுக்குச் சமானமாக இருந்தேன்.

கரையை அடைந்ததும் நான் இறங்கிக்கொண்டேன். ஒரு கணம் பெரெச்சனை நோக்கி புன்னகை செய்துவிட்டு டீக்கடை முன் ஏறி படிகளில் ஏறி என் காரை அடைந்தேன். கதவைத்திறந்து உள்ளே அமர்ந்து மெல்ல அதை கிளப்பி சாலை வழியாக மிதந்து சென்றேன். பிளாஸ்டிக் குழாயின் நீரோட்டம் வழியாகச் செல்லும் குமிழி போல, அத்தனை எளிதாக, மௌனமாக.

# இரவு 16

**பசுமை**
**குலத்துடன் இருக்கிறது**
**மஞ்சள்**
**துணையுடன் இருக்கிறது**
**செம்மை**
**ஈர்த்துக்கொள்கிறது**
**தன்னுள் தான் நிறைந்து**
**நீலம்**
**தனித்திருக்கிறது**



நான் கதவைத்தட்டியபோது நீலிமாதான் திறந்தாள். அவள் வீட்டுக்கூடத்தில் நடுநாயகமாக மூன்றடுக்குள்ள பெரிய தட்டுவிளக்கு ஒவ்வொரு தட்டிலும் ஏழு திரிகளுட ஒரு பெரிய கொன்றைமலர்ச்செண்டு போல் எரிந்துகொண்டிருந்தது. அவள் கூந்தலின் பிசிறுகளை அது ஒளிபெறச்செய்ய பொன்னாலான வலையொன்றை தலையில் அணிந்திருப்பதுபோலிருந்தது. ”வாங்க” என்று எந்த உணர்ச்சியும் இல்லாமல் சொல்லி புன்னகை செய்தாள். நான் அவளைத்தொடர்ந்து உள்ளே சென்றேன்.

அந்த தட்டுவிளக்கில் மெழுகுதான் எரிபொருளாக இருந்தது. சுடர்கள் அசையாமல் நின்றன. கூடத்தில் இரண்டு தாந்த்ரிக் ஓவியங்கள் அந்த செவ்வொளியில் செம்பிழம்புகளாக தெரிந்தன. வெண்செம்மை நிறமான சோபாக்களும் திரைச்சீலைகளும் அடக்கமான சுடரால் ஆனவை போலிருந்தன. நான் சோபாவில் அமர்ந்துகொண்டேன். அவள் எனக்கு எதிராக அமர்ந்துகொண்டாள். லேசாகப் பார்வையை தாழ்த்திக்கொண்டு வெறுமே அமர்ந்திருந்தாள்.

சற்று நேரம் மௌனத்தை உணர்ந்தபின்பு நான் ”உடம்பு சரியில்லைன்னு அப்பா சொன்னார்” என்றேன். ”அதெல்லாம் இல்லை. சும்மா வெளியே கிளம்ப மனசில்லாம சொன்னது. ஐ யம் ஆல்ரைட்” என்று மெல்லிய புன்னகையுடன் சொன்னாள். நான் அதன்பின்னர் என்ன பேசுவதென தெரியாமல் அப்படியே அமர்ந்திருந்தேன். நான் ஒரு நாள் அவளை புறக்கணித்தது பற்றி அவள் ஏதாவது சொல்வாள் என்று எதிர்பார்த்து வந்திருந்தேன் என்பதை எண்ணி ஆச்சரியம் கொண்டேன். அப்படி சொல்லக்கூடியவளல்ல அவள் என

நன்றாகவே என் அகம் அறிந்திருந்தும்கூட நான் அப்படி என்னிடம் நடித்துக்கொண்டிருந்திருக்கிறேன்.

நாயர் உள்ளிருந்து வருவது வரை நாங்கள் ஒருவரை ஒருவர் உணர்ந்தபடி அமர்ந்திருந்தோம். நாயர் வந்துகொண்டே ” ஆ, யூ ஹேவ் கம். கூட்!” என்று சொல்லி என்னிடம் கைகளை நீட்டினார். ”ஆக்சுவலி மேனன் ஹேஸ் என் இண்டியூஷன்... நீங்க கிளம்பி போயிடுவீங்கன்னு சொன்னார். கமலா சொன்னார் அப்டி போக முடியாதுன்னு. நான் ரொம்ப வருத்தமா ஆயிட்டேன். இவ வேற டல்லா படுத்திட்டா. உங்களுக்குள்ளே ஏதாவது தகராறா?”

அத்தனை திறந்த தன்மையுடன் அவர் இருந்தது என்னை மலரச்செய்துவிட்டது. சிரித்தபடி ”நோ சர்...” என்றேன். ”சில்லறை சௌந்தரியப்பிணக்கம் எல்லாம் வேணும்தான். அந்த மாதிரி இருந்தா ஓக்கே... வேற மாதிரின்னா யூ ஸீ..” அவர் சட்டென்று தீவிரம் கொண்டு ”ஐ நோ...இவளுக்கு உங்கமேலே ரொம்ப இஷ்டம்.அதான் நான் ரொம்ப ·பீல் பண்ணினேன்” நீலிமா ”அச்சா, எந்தா இது?” என்றாள். அவர் தலைகுனிந்து ”ஸாரி” என்றார்

நான் ”சண்டையெல்லாம் ஒண்ணுமில்லை சார். எனக்கு ஒரு மாதிரி ஒரு ·பீலிங். அதை எப்டி சொல்றதுன்னே தெரியலை. முழுக்க முழுக்க ஸ்பிரிச்சுவலா ஒரு ரெஸ்ட்லெஸ்னெஸ். அதான்” என்றேன். ”அதுக்கு ஸ்பிரிட் ரொம்ப நல்லது. ஒரு ஸ்மால் அடிச்சா எல்லா பிராப்ளமும் வாளையார் சுரம் தாண்டி தமிழ்நாட்டுக்கு ஓடிப்போயிடும்...” என்று சிரித்தார்.

நான் சிரித்துக்கொண்டு ”அந்த ஸ்பிரிட்ட்டே அங்கே இருந்து வர்ரதுதானே சார்” என்றேன். அவர் மேலும் உரக்கச்சிரித்து ‘தட் இஸ் ட்ரூ. அம்மை முலையை குடிக்கிற மாதிரி கேரளம் சாயங்காலமானா தமிழ்நாட்டை குடிக்க ஆரம்பிச்சிடுது” நான் புன்னகைசெய்தேன். நாயர் மீண்டும் தீவிரம் கொண்ட முகத்துடன் ”பூவர் பீப்பிள். அவங்களாலே ராத்திரியை ·பேஸ் பண்ண முடியல்லை. ராத்திரிங்கிறது அவங்களோட அடியாழம். அங்கே திறந்த கண்ணோட மூழ்கி போக அவங்களால முடியறதில்லை.” என்று சொல்லிவந்தவர் சட்டென்று சிரித்து ”யூ ஆர் ரைட். இது என்னோட தியரி இல்லை. மேனனோட தியரி” என்றார்.



நான்,"உலகம் முழுக்க ராத்திரியிலே குடிச்சிட்டுதான் இருக்காங்க" என்றேன். "எங்கேயும் மனுஷ மனசு ஒண்ணுதானே? நீங்க ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் விட்டுட்டு இருந்தப்ப ஏன் இத்தனை சந்தேகம் வருதுன்னா ராத்திரி ரொம்ப இமோஷனலானதுங்கிறதனாலதான். ராத்திரியிலே எந்த பாவனைக்கும் இடம் கிடையாது. ஸோ, எங்க ராத்திரி சொசைட்டியிலே எல்லா உறவும் ஹை வால்டேஜ் பவரோடத்தான் இருக்கும். அன்பு வெறுப்பு ரண்டுமே அப்டித்தான் இருக்கும்....ஸோ..." தோள்களைக் குலுக்கி "எனிவே, இட் இஸ் குட்...யூ ஹேவ் கம்"

"நான் போற எண்ணத்திலேயே இருக்கலை சார்" என்றேன். "தென் இட் இஸ் வெரி குட்" என்றார். "என்ன சாப்பிடறீங்க" நான் "யார் சமைக்கிறது, நீங்களா?" என்றேன். "ஏன் சமைக்கக் கூடாதா? ஐ யம் எ வெரி குட் குக்..." என்றார். நீலிமா " அப்பா ரொம்ப நல்லா சமைப்பார்" என்றாள். "நீங்க உங்களுக்குப் பிடிச்சதை சமைங்க" என்றேன்0

"கலத்தப்பம் சாப்பிட்டிருக்கீங்களா?" "அப்டீன்னா?" "இது ஒரு கேரள டிரைபல் ·புட். பளியர் சமைக்கிறது. சிம்பிள். பெரிய கலத்திலே வைத்து சமைக்கிற அப்பம் , அவ்வளவுதான்" நான் " சாப்பிட்டதில்லை" என்றேன். "அப்ப இன்னைக்கு சாப்பிடுங்கோ" நான் சிரித்து "தேங்க்யூ" என்றேன்.

அவர் உள்ளே சென்றார். எங்களை தனியாக விடுகிறார் என்று தெரிந்தது. அந்த தனிமையில் எனக்கு ஓர் எண்ணம் எழுந்தது. நான் நீலிமாவைச் சந்தித்து இன்னமும் பதினைந்து நாள் ஆகவில்லை. அதற்குள் நான் இந்த உறவை உறுதி செய்து விட்டதாக அனைவரும் நம்புகிறார்கள். என்னைச்சூழ்ந்து ஒரு வலைபோல இறுகி இறுகி வந்து அவளிடம் சேர்த்துக் கட்டுகிறார்கள். பெரும்பாலான ஆண்பெண் உறவுகள் அப்படி ஒரு சூழலால் நெருக்கப்பட்டே உருவாகின்றன என்று நினைத்தேன். இல்லை, அவை நீடிப்பதற்கும் அதுதான் காரணமா?

ஏதேதோ நினைத்துக்கொண்டிருந்தேன். நேரடியாக நிகழ்ச்சிகளைச் சந்திக்க முடியாதபோது சிந்திப்பதை ஒரு தப்பும் வழியாக கொள்கிறோம் என்று திடீரென்று தோன்றியது. நீலிமா சட்டென்று ”என் அறைக்குப் போகலாம்” என்றாள். நான் திடுக்கிட்டு ”என்ன?” என்றேன். அவள் பேசாமல் எழுந்து நடந்தாள். நான் அவளை பின் தொடர்ந்தேன்.



அவள் தன் அறையின் கதவைத்திறந்தாள். ஏசி செய்யப்பட்ட அறை மென்மையான நீல வெளிச்சத்துடன் இருந்தது. அதில் அவள் நீரில் மூழ்குவது போல மூழ்கிச்செல்ல குளத்தில் குதிக்கத் தயங்குபவன்போல நான் நின்றேன். அவள் சுவரோரமாக கதவைப்பற்றியபடி நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அக்கணம் நான் உடைபட்டு உள்ளே சென்று அவளை அள்ளி என்னுடன் இறுக்கிக்கொண்டு முத்தமிட ஆரம்பித்தேன். வெறியுடன் முத்தமிட்டு முத்தமிட்டு முத்தமிட்டு மழை கொட்டி ஓய்வது போல துளி சொட்டி மெல்ல அடங்கினேன்.

அவள் மழைபெய்த நிலத்தின் குளுமையுடன் என் மீது முழு உடலையும் சாய்த்து என் தோள்களில் அவள் கைகள் துவள மெல்ல மூச்சுவாங்க நின்றாள். நான் அவள் தோள் வளைவில் முகம் புதைத்தேன். அவள் மூச்சின் அசைவையும் சருமத்தின் வாசனையையும் அறிந்துகொண்டிருந்தேன். அவள் உடல் என் கைகளுக்குள் இருந்தபோதிலும் நான் அதை அப்போது

உணரவில்லை. உடலுக்குள் இருந்த அவளை என் கைகளில் வளைத்திருந்தேன்.

மெல்ல பெருமூச்சுவிட்டு அவள் ஆங்கிலத்தில் ”விட்டுவிட்டு போக நினைத்தீர்கள் அல்லவா?” என்றாள். சொற்கள் இல்லாமல் அவள் மனதிலிருந்து என் மனதுக்கு நேரடியாக வந்தது போலிருந்தது அந்த வினா. நான் ”ம்ம்” என்றேன். மீண்டும் நீண்ட மௌனம். நான் அவள் காதுமடலையும் கன்னத்தில் இறங்கிய மென்மயிரையும் முகர்ந்தேன். அவள் உடலாக ஆனாள். கழுத்தின் மென்மையும் நிறமும் என்னை எழுச்சி கொள்ளச் செய்தன. அந்த எழுச்சி அவளை வெல்ல வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியது. ”நான் போக மாட்டேன் என்று உனக்கு தெரியுமா?”

”இல்லை..” என்றாள். ”நீங்கள் திரும்பிவந்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது” நான் அவளை விலக்கி கண்களைப் பார்த்து ”ஏன்?” என்றேன். ”நீங்கள் அன்றிரவு கிளம்பிப் போனபோதிருந்த முகம் எனக்கு நன்றாக மனதில் இருந்தது. திரும்பி வரமாட்டீர்கள் என்று எனக்குத்தெரிந்த்து.” ”காரிலிருந்து இறங்கும்போதேவா?” ”ஆமாம்” நான் அப்படியும் அவள் ஒன்றும் சொல்லாமல் போனாள் என்பதை எண்ணிக்கொண்டேன்.

உடலின் மெல்லிய தடுப்புக்கு இருபக்கமும் இருவர் உள்ளமும் ஒன்றாக இருந்தன போலும். நான் எண்ணியதற்கு அவள் பதில் சொன்னாள்.”நான் என் மனசுக்குள் ஒரு ஆயிரம் தடவை உங்களைக் கூப்பிட்டேன். பின்னால் காரிலேயே ஓடி வரக்கூட நினைத்தேன். ஆனால் வேண்டாம் என்று என்னை கட்டுப்படுத்திக்கொண்டேன். எப்படி அப்போது அதைச் செய்ய என்னால் முடிந்தது என்றே எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நீங்கள் போனபிறகு என்னால் கட்டுப்படுத்திக்கொள்ளவே முடியவில்லை. படுத்து அழுதுகொண்டே இருந்தேன்”

நான் அவளையே பார்த்தேன். என் கைகள் அவளிடமிருந்து நழுவின. அவள் மெல்ல பின்னால்சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். நான் எதிரே ஒரு மோடாவில் அமர்ந்தேன். நீல நிறத்தில் அந்த அறை ஒரு பெரிய ஓவியத்திரை போலிருந்தது. அதில் செம்மஞ்சள்நிறமாக வரையப்பட்டவள் போல அவள். கண்களைத் தழைத்து ”நான் அங்கே வரவேண்டுமென்று ஒவ்வொரு கணமும் நினைத்துக்கொண்டே இருந்தேன். வருவதை துளித்துளியாக கற்பனைசெய்துகொண்டிருந்தேன். ஆனால் வரமாட்டேன் என்று எனக்கு தெரிந்திருந்தது. நீங்கள் ஊருக்கு கிளம்பிவிட்டீர்களா என்று மேனனிடம் கேட்கலாம் என்று பலமுறை மொபைல் ·போனை எடுத்தேன். கேட்கவில்லை…”

”அப்புறம் அப்பா திரும்பி வந்தால் சொல்வார் என்று நினைத்துக்கொண்டேன்” என்றாள் ”அப்பா திரும்பி வந்து ஒன்றுமே சொல்லவில்லை. இன்று மாலை எனக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது.நீங்கள் வரமாட்டீர்கள் என்று... நீங்கள் ஏற்கனவே மானசீகமாக கிளம்பிவிட்டிருப்பீர்கள் என்று நினைத்தேன். ஒரு வரிகூட கோர்வையாகச் சிந்திக்க முடியவில்லை. காரை எடுத்துக்கொண்டு உங்களை தேடி வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டே இங்கேயே உட்கார்ந்திருந்தேன்”

”என்ன செய்துகொண்டிருந்தாய்?” என்றேன் அபத்தமாக. ”சும்மா, நெட்டில் இருந்து தமிழ்பாட்டுகளை பதிவுசெய்துகொண்டிருந்தேன்...கூல் டோட் என்று ஒரு இணையதளம் இருக்கிறது” அவள் புன்னகைசெய்தாள். நான் கால்களை நீட்டிக்கொண்டேன். மனதை தளர்த்திக்கொள்ள விரும்புவதன் புற அடையாளம் அது என்று தோன்றியது. அவளை என்னால் நேராகப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவள் என்னை நேராகத்தான் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தாள்.

”நான் போவதாக இருந்தால் உடனே கிளம்பியிருக்கலாமே...” என்றேன். ”ஆமாம். ஆனால் நீங்கள் குற்றவுணர்ச்சி இல்லாமல் போக விரும்பியிருந்திருக்கலாம். அதற்கான சொற்களைச் சொல்லக்கூடிய யாரையாவது தேடிச்சென்றிருக்கலாம்...” நான் சிறிய அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தேன். அவள் நான் ·பாதர் தாமஸிடம் பேசிய சொற்களைக்கூட சொல்லிவிடுவாளோ என்று தோன்றியது. ”அப்படியானால் என் திரும்பி வந்தேன்? அவர் என்னை மனம் திருப்பியிருப்பாரா?” ”இல்லை. மனம் திரும்பச் செய்யும் ஒருவரை தேடி நீங்கள் சென்றிருக்க மாட்டீர்கள்...” அவள் இதோ தாமஸ் பெயரைச் சொல்லபோகிறாள்.

”...அனேகமாக நீங்கள் பிரசண்டானந்தரை சந்தித்திருப்பீர்கள்” நான் மெல்ல இலகுவானேன். புன்னகையுடன் ”இல்லை...தாமஸை பார்க்கப்போனேன்” ”ஓ” என்று சற்றே சுருங்கிய இடது கண்ணுடன் சொன்னாள். அவளுக்கு அவரை சுத்தமாகப்பிடிக்காது என்று உணர்ந்தேன்

”நான் ஏன் திரும்பிவந்தேன் என்று நீ நினைக்கிறாய்?” நான் இப்போது அவளை நேருக்கு நேராகப் பார்த்தேன். இது என்னுடைய வெற்றியின் தொடக்கம். ”தெரியவில்லை...நீங்கள் திரும்பியதே ஆச்சரியமாக இருந்தது. உங்களை பார்த்ததும் எனக்கு மூச்சே நின்றுவிட்டது. அப்படியே உங்களக் கட்டிப்பிடித்திருப்பேன்..” ”ஏன் பிடிக்க வேண்டியதுதானே?” அவள் சிரித்தாள்.

”கட்டிப்பிடித்திருந்தால் அப்போதே பேச ஆரம்பித்திருப்போம்... ”என்றேன்.”கட்டிப்பிடிக்காத காரணத்தால்தான் அனாவசியமாக ஒருமணிநேரம் போய்விட்டது” அவள் உரக்கச்சிரித்து நழுவிய முந்தானை நுனியை எழுத்து

மடியில் வைத்தாள். அப்போது அவள் கழுத்து அழகாக திரும்ப கன்னத்தில் நீலம் பளபளக்க நான் மானசீகமாக எழுந்து அவளை கட்டி இறுக்கினேன்.

”என்ன பார்வை?” என்று சிணுங்கினாள். நான் குரலை தாழ்த்தி ”உண்மையிலேயே வருத்தப்பட்டாயா?” என்றேன். ”நான் பொய்யா சொல்கிறேன்?” ”ரொம்ப துக்கமா?” அவள் கண்கள் தழைந்தன. இமைகளின் ஓரம் ஈரமாவதைக் கண்டேன்.”ம்ம்” உதடுகளை அழுத்தியபடி ”அது ஒரு மாதிரி மரணம்...அப்படிப்பட்ட அனுபவம்”

நான் எழுந்து அவள் தலையை இழுத்து என் இடுப்புடன் சேர்த்துக்கொண்டேன். அவள் வகிடில் குனிந்து முத்தமிட்டேன். அவள் மெல்ல விசும்பினாள். என் உடையில் முகம் புதைத்துக்கொண்டு சில கணங்கள் இருந்தாள். மெல்ல அவளை எழுப்பி என் உடலுடன் பொருத்திக்கொண்டு இரு கன்னங்களிலும் முத்தமிட்டேன். கண்ணீரின் உப்பும் ஈரமும் என் உதடுகளை தொட்டன. மிக மெல்ல அவள் காதில் ”என்ன வெறுக்கிறதா சொன்னே?” என்றேன்.

அவள் ஒருகணம் கழித்து ”அதுவும் உண்மைதான்...”என்றாள். நான் கைகள் நடுங்க அவளை விலக்கினேன். பிளேடின் லேசர்செதுக்கிய கூர்நுனியைப் பார்ப்பதுபோல ஒரு மெல்லிய பதற்றம் அவளைப் பார்க்கும்போது ஏற்பட்டது. ஒரு பேச்சுக்குக் கூட அவள் அதை மறுக்கவில்லை. இன்னமும் அவளிடம் நான் பொய்யை எதிர்பார்க்கிறேனா?

அவள் நிமிர்ந்து நோக்கி தமிழில் ”எனக்கு தெரியலை. எப்பவும் உங்க நினைப்பா இருக்கு. நான் உங்களை கண்மூடித்தனமா விரும்பறேன்னுதான் என் மனசு சொல்லுது. ஆனா அப்பப உக்கிரமா வெஷம் போல ஒரு வெறுப்பு வந்திருது. அதுக்கு ஏதாவது ஒரு காரணம் கிடைச்சிருது. என்னைப் பாக்க வரலைன்னு நினிச்சாக்கூட போதும் அந்த சாக்கை வச்சுகிட்டு வெறுப்பு கொதிச்சு எழுந்திடுது...தெரியலை”

நான் அவளையே பார்த்தேன். ”நானும் அதே மாதிரி உன்னை வெறுக்கிறேன்னு சொன்னா?” என்றேன். ”சரிதான்...”என்றாள் கண்களை பக்கவாட்டில் விலக்கி ”இல்லேன்னா எதுக்காக என்னை விட்டு தப்பியோட டிரை பண்ணிட்டே இருக்கீங்க” பெருமூச்சுவிட்டேன். ”மனுஷங்க பொய்யா எதையுமே உருவாக்கிக்காம உண்மையிலேயே நின்னுட்டு ஒருத்தருக்கொருத்தர் அன்பா இருக்க முடியாதா?” என்றேன். அவள் சட்டென்று சிரித்து ”சொல்றேன், அதுக்கு ரெண்டு கிளாஸ் வைன் வேணும்”என்றாள்

அந்தச் சிரிப்பில் எல்லாமே பனிக்கட்டி போல உடைந்து சிதற நாங்கள் இருவரும் வாய்விட்டுச் சிரித்தோம். சிரிப்பின் ஒருகட்டத்தில் அவளை நான்

மீண்டும் என்னுடன் இழுத்துக்கொண்டேன். இருவரும் ஒருவரை ஒருவர் முத்ததால் இணைத்துக்கொண்டோம். பின்பு விடுபட்டு முத்தத்தை எண்ணி மீண்டும் சிறு முத்தங்கள் இட்டு பெருமூச்சுடன் பிரிந்தோம். அவள் சென்று தன் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அவள் பார்வையைக் கண்டபின் நான் சென்று அவளருகே அமர்ந்தேன்.

அவள் என்மீது சாய்ந்து அமர்ந்தாள். நான் அவள் நெற்றி மயிரை ஒதுக்கி காதில் செருகினேன். ”ஏன் இதெல்லாம் இத்தனை காம்ப்ளிகேட்டா இருக்கு?” என்றேன். அவள் சிரித்தாள்.”நான் ஏன் திரும்பி வந்தேன் தெரியுமா?” என்றேன். அவள் நிமிர்ந்து பார்த்தாள். பெரிய கண்களுக்குள் வெண்விழிகளில் நீலம் படர்ந்திருந்தது. ”நேத்து நான் கடலுக்குள்ளே போனேன். அது ஒரு அற்புதமான அனுபவம். ரொம்ப தீவிரமானது. அதை என்னாலே சொல்ல முடியாது…”

”ஓ” என்றாள். ”அதைப்பத்தி என்ன சொன்னாலும் தப்பாத்தான் இருக்கும்… அதை அப்றமா நான் இப்டி நினைச்சிட்டேன். எக்ஸிஸ்டென்ஸ்ங்கிறதை நான் அதுக்குப்பின்னாடி முற்றிலும் வேற மாதிரி நினைக்க ஆரம்பிச்சிட்டேன்…” அவள் எதிர்பார்ப்புடன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். ”காரிலே திரும்பிவர்ரப்ப நினைச்சுக்கிட்டேன். இனிமே என்னால திரும்பிப்போக முடியாதுன்னு. சூடான டீ குடிச்சு பழகிட்டா கொஞ்சம் ஆறினாக்கூட ருசிக்கிறதில்லை. இந்த இரவு வாழ்க்கையிலே நான் ஒருவகையான தீவிரத்துக்குப் பழகிட்டேன். இனிமே திரும்ப முடியாது. ஒருமுறை லை·ப் தீவிரமாகிட்டுதுன்னா மேலும் தீவிரமாத்தான் ஆக முடியும். திரும்பிப்போகவே முடியாது…”

”அதனாலே எங்கிட்ட திரும்பி வந்தீங்க?” என்றாள் விளையாட்டு தெரிய. ”ஆமா. நீ சாதாரண பெண் இல்லை. சாதாரண பெண்ணோட மறுபக்கம். இன்னும் தீவிரமான ஒரு வெர்ஷன். எனக்கு நீதான் தேவை. எந்த ஒரு சாதாரணமான பெண்கூடயும் என்னால இனிமே இருக்க முடியாது. அவகிட்டே இன்னும் கொஞ்சம் தீவிரமா இருன்னுதான் என் மனசு கேக்கும். எனக்கு ராத்திரியோட உக்கிரம் தேவைப்படுது….அதான் திரும்பவேண்டாம்னு முடிவு செஞ்சேன்.. இந்த தீவிரத்தை பயந்துதான் போயிடலாம்னு நினைச்சேன்.”

”வெல்” என்றாள் ”எனிவே..” பேச்சை முடிக்காமல் என் மார்பில் முகம் புதைத்துக்கொண்டாள். கடிகாரம் அடிக்கும் ஒலி . பின்பு என் மார்பின் ஒலியையே நான் கேட்டேன். ”என்ன பாட்டு டௌன்லோட் பண்ணினே?” என்றேன். அந்த ஆழ்ந்த மௌனத்தை நீடிக்க விட்டால் அது கரைகிறது, பேசுவதன் மூலம் சற்றே இளைப்பாறி மீண்டும் அங்கேயே சென்று விட முடியும். ”எஸ்.ஜானகி பாட்டு.எல்லாமே தமிழ்ப்பாட்டுதான்.. ” சிரித்து ” அதிலே ஒரு பாட்டு சரியான சிச்சுவேஷன் பாட்டு..” ”என்னது?” அவள் மெல்லிய

குரலில் ”உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன். உன்னை உள்ளமெங்கும் அள்ளித்தெளித்தேன்..”

நான் அவளை முத்தமிட்டேன். ”நல்லா பாடுறே” என்றேன். ”ஓ டோண்ட்..” ”இல்லை. இப்ப நீ பாடுறப்ப நல்லா இருக்கு” ” உறவினில் விளையாடீங்கிற இழுப்பை ஜானகிதான் குடுக்க முடியும்” ”எஸ்” நான் சுசீலாவின் ‘இரவுக்கு ஆயிரம் கண்களை’பாட்டை நினைவுகூர்ந்தேன். அது வெகுதூரத்தில் , வரலாற்றில் எங்கோ இருந்தது. புன்னகையுடன் ”இந்த மாதிரி கவிதை சங்கீதம் எல்லாத்தையும் கலந்து நெகிழ்ந்து உருக வைச்சாத்தான் மனுஷங்களால ஒருத்தரை ஒருத்தர் லவ் பண்ண முடியுதா என்ன?” என்றேன். ”நோ தியரி ப்ளீஸ்” ”ஓக்கே ஓக்கே” என்றேன்.

பெல் ஒன்று வெளியே அடித்தது. ”அப்பா கூப்பிடறார்..” என்றாள். ”சாப்பிடலாமா?” நான் எழுந்து என் சட்டையை நேர்த்தியாக இழுத்து விட்டேன். அவள் சேலையை சரிசெய்தாள். அவளுடைய பளீரிட்ட இடுப்பும் வயிறும் தெரிய நான் ”அழகா இருக்கே” என்றேன். ”நாட்டி” என்றாள் கையை ஓங்கி. ”பளீர்னு இருக்கு” ”தமிழ்நாட்டிலே சிவப்பு கலர்னா பெரிய மோகம் இல்லை?” ”ஏன் இங்க இல்லியா?” ”இல்லை..இங்க மாந்தளிர் நிறம்தான் பெரிய கிரேஸ்”

வெளியே வந்தபோது செந்நிற ஒளிக்கு மாறியது மொத்த உணர்ச்சிகளை திசை திருப்பியது. நான் மனதுக்குள் சிட்டியடித்தேன். அவள் திரும்பி ”இனிமே ஒரு நாப்பத்தெட்டுமணிநேரம் இந்தப் பாட்டுதான் என்ன?” என்றாள். ”பாட்டு ஒரு பேய் மாதிரி” என்றேன். நாயர் ”கலத்தப்பம் இஸ் வெயிட்டிங்” என்றார்.

மேஜையில் அமர்ந்தோம். நாயர் ஒரு பெரிய தட்டை எடுத்துவந்தார். அதில் சிறிய சட்டி அளவுக்கு பெரிய ஒரு இட்லி இருந்தது. ”இட்லியா?” என்றேன். ”நோ…இது அரிசிமாவு தேங்காய் வெல்லம் இன்னும் பல இலைகள் தழைகள்லாம் சேர்ந்தது. கலத்திலே தண்ணிவிட்டு அதோட வாயிலே ஒரு துணியைக் கட்டி அதிலே இந்த மாவை வச்சு இன்னொரு மூடியாலே மூடி அப்டியே அடுப்பிலே ஏத்த வேண்டியதுதான். ஆவியிலே வெந்திடும்”

கலத்தப்பம் வினோதமான மனத்துடன் சுவையாக இருந்தது. ”இந்த டிரைப்ஸ் சமையல் ரொம்ப சிம்பிள். ஆவியிலே அவிப்பாங்க இல்லேன்னா சுட்டிருவாங்க. எல்லாமே நேச்சுரலான பொருட்கள். வறுக்கிறது பொரிக்கிறதெல்லாம் சுத்தமா கெடையாது. ஆனா அந்த ருசி நம்ம ·பைவ்ஸ்டார் செ·ப்ஸ் சமைக்கிற சாப்பாட்டுக்கு வராது”

நீலிமா என் காலை மிதித்தாள்.நான் ஏன் என்றேன் கண்களால். ”நாம வெளியே போவோம்” என்றாள் முணுமுணுப்பாக. ”ஓக்கே, பட் நோ வைன்” ”யூ

பாஸ்டர்ட்!” நாயர் அடுப்பில் இருந்து கிடுக்கியால் டீ பாத்திரத்தை எடுத்தார். ”இது டீ கெடையாது. சுக்கு அப்றம் சில கொட்டைகள்லாம் போட்டு காய்ச்சுற பானம். கிட்டத்தட்ட சுக்குக்காப்பி. ஆனா காப்பி கெடையாது..” அந்த பானம் அபாரமான பச்சிலை மணத்துடன் நாசியை எரிப்பதுபோல் இருந்தது

நீலிமா ”அச்சா ஞங்ஙள் அம்பலத்தில் போயி வராம்” என்றாள். ”ஓக்கே” நீலிமா ”ஞங்கள் ஒரு தீர்மானத்தில் எத்தி” என்றாள். நாயர் முகம் மலர்ந்து ”ஓ, ·பைன்” என்றார். என்னிடம் ”கன்கிராஜுலெஷன்ஸ்…” சட்டென்று நெகிழ்ந்து ”ஆண்ட் தாங்ஸ்” என்றார். நான் புன்னகை செய்து ”தாங்க்யூ சார்” என்றேன்

# இரவு 17



**இந்த இரவில் இப்புவியில்**

**எத்தனை கோடி உயிர்கள்**

**உறவுகொள்கின்றன!**

**காட்டில்**

**கரிய பெரும் யானைகள்**

**மண்ணுக்குள் எலிகள்**

**நீருக்குள் மீன்கள்**

**பல்லாயிரம் கோடி புழுக்கள் பூச்சிகள்**

**நாளைய புவி**

**இங்கே கருபுகுகிறது**

**நிறைவுடன்**

**சற்றே சலிப்புடன்**

**பெருமூச்சு விட்டுக்கொண்டு**

**திரும்பிப் படுக்கிறது இரவு**

காரில் ஏறி அமர்ந்ததும் நான் ”எங்கே?” என்றேன். நீலிமா சிரித்தபடி ”தெரியலையே” என்றாள். நான் ”என்ன செய்யலாம்/” என்றேன்.”காரை ஓட்டுங்க, அது எங்கே போகுமோ அங்கே போகலாம்” என்றாள்.”இ·ப் தி டோர் ஓப்பன்ஸ்–னு ஒரு நாவல் வாசிச்சேன். அதிலே ஹீரோ அப்டித்தான் செய்றான். குதிரை அவனோட சப்கான்ஷியஸ். அவன் நினைக்காத இடத்துக்கெல்லாம் கூட்டிட்டு போகுது. ஆனா அதான் அவன் உண்மையிலேயே நினைச்ச இடம்.” ”கௌபாய் நாவலா?” ”ஆமா..”

நான் காரை கிளப்பியபடி ” என் அருமை சப்கான்ஷியஸே தயவுசெஞ்சு பொறுப்பா போ” என்று சொல்லி விட்டு ”அப்டில்லாம் சப்கான்ஷியசை நம்ப முடியுமா என்ன? அது பாட்டுக்கு எங்கயாம் போயி நம்மை கேவலப்படுத்திட்டுதுன்னா என்ன பண்றது?” என்றேன்.”இது, பிரேக்கும் ஸ்டீரிங்கும் எல்லாம் உள்ள சப்கான்ஷியஸ்ல?” ”சரிதான்”

கார் சாலையில் செல்லும்போது உண்மையிலேயே ஒரு லயம் கூடியது. காரில் செல்லும்போது நாம் காரில் செல்வதன் ஒரு மனச்சித்திரமும் நமக்குள் எழுகிறது. அந்த சித்திரத்தில் ஒரு நிலமிருந்தது. காயலோரம். ”காயல்!” என்றேன். ”கார் அங்கதான் போய்ட்டிருக்கு” ”தட் இஸ் ·பைன்” என்று சொல்லி இரு கைகளையும் கன்னத்தில் வைத்துக்கொண்டாள்

காயலோரம் தெரிய ஆரம்பித்தது. இருளுக்குள் படகுத்துறை தெரிந்தது. முகவெளிச்சத்தில் அங்கே நீருக்குள் நின்றிருந்த சிறிய ·பைபர்படகுகளின் பலவண்ண விலாக்கள் ஒளிவிட்டு அணைந்தன. நான் காரை நிறுத்தினேன். ”ஸோ?” ””காயலுக்குள்ளே போவோம்” என்றாள். ”படகுக்காரங்க யாருமே இருக்கிற மாதிரி தெரியலையே” ”அவங்க எதுக்கு? நாம ஒரு படகை எடுத்துக்குவோம்.” நான் ”தெரியாமலா?” என்றேன். ”காரை விட்டுட்டுப்போறோம்ல/”

அவள் இறங்கி படகுகளை அணுகி ஒரு படகின் மீது ஏறினாள். ஒரு படகுடன் இன்னொன்று சேர்த்து கட்டப்பட்டு படகுகள் ஒரு பெரிய சங்கிலி வலை போல அங்கே பரவி நின்றன. எவற்றிலுமே துடுப்பு இல்லை.”துடுப்புகளை வீட்டுக்குக் கொண்டு போயிடுவாங்க... ஆனா ஒருத்தன் கண்டிப்பா ஒரு வேலை செஞ்சிருப்பான்” என்றாள். படகுகள் வழியாகச் சென்றாள். ஒரு படகில் நின்றாள்.

”இங்கே...” என்று சொல்லி அந்தப்படகில் இருந்து தொங்கிய ஒரு கயிறை நீரில் இருந்து இழுத்து எடுத்தாள். அதில் ஒரு துடுப்பு இருந்தது. ·பைபர் துடுப்பு. கொண்டு போக சோம்பல்பட்டுக்கொண்டு அதைச் செய்திருக்கிறான். துடுப்புடன் நடந்து கடைசிப்படகை கட்டவிழ்த்து அதில் ஏறி அமர்ந்துகொண்டாள்.

நான் படகில் ஏறியதும் அவள் திறமையாக துடுப்பைத் தள்ளி படகை நீரில் சறுக்கிச் செல்ல வைத்தாள். ”நல்லா துடுப்பு போடறே” என்றேன். அவள் ஒன்றுமே சொல்லவில்லை. துடுப்பை போடுகையில் அவள் தோள்கள் முன்னும் பின்னும் சென்றன. நீர் ரகசியமாகச் சளசளத்தது. காற்று தெற்கிலிருந்து மேற்கே பெரிய ஓட்டமாக சென்று கொண்டிருந்தது.

”இன்னைக்கு கரிமீன் பிடிக்க மாட்டாங்களா?” என்றேன். காயல் முற்றிலும் காலியாக இருந்தது. ” நாளைக்கழிஞ்சு அமாவாசை” என்றாள் அவள். வானில் விண்மீன்கள் கொட்டிக்கிடந்தன. நிலா இல்லை. நிலா இருந்த இடம் என்பது போல ஒரு மெல்லிய வெளிச்சம் மட்டும் அங்கே இருந்தது. வானத்துக்குள் ஒரு ராக் இசை மௌனமாக ஓடுவதுபோல நட்சத்திரங்கள் அதிர்ந்துகொண்டிருந்தன. அந்த இசையை கண்ணால் பார்த்துவிட முடியும் என்று தோன்றியது.

தூரத்தில் நான்கு படகுகள் தேங்காய்நார் சுமையுடன் மெல்லச் சென்றன. கருவுற்ற திமிங்கலங்கள் போல கனத்து அசைந்து சென்றன. அவற்றில் ஒன்றில் ஒரு டேப்ரிக்கார்டர் ஓடிக்கொண்டிருந்தது. ”·பாசிலா ·பாசிலா என்றே மாத்ரம் பெண்ணல்லே நீ, என்றே ஸ்வந்தம் பெண்ணல்லே நீ” பாட்டு நீரில் சாயம் கரைவது போல காற்றில் கரைந்தது. இசையின் விளிம்புகள் பிசிறாக பறந்தன. அதன் நடுவே அதிர்ந்த தாளம் மட்டும் இருண்ட நீரிலும் காற்றிலும் இருந்தது

படகுகளில் லாந்தர் விளக்குகள் ஆடின. அவற்றைச் சுற்றியிருந்த செம்மஞ்சள் ஒளியில் கயிறுகளும் பாத்திரங்களும் கிடப்பது தெரிந்தது. ஒன்றில் ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். படகுகளைத்தாண்டிச் சென்றதும் நீலிமா பக்கவாட்டில் திரும்பி காயலின் கிளை வழியாகச் சென்றாள். ”இது எங்கே போகுது?” என்றேன். ”இந்தப்பக்கமா பெரிய ஊரெல்லாம் இல்லை. சின்ன கிராமங்கள்தான்…”

துடுப்பு படகின் சிறகு போலவே ஆகிவிட்டிருந்தது. கச்சிதமான சுழலல்களாக அது நீரை அளைய படகு வாத்து போல நீரில் இயல்பாகச் சென்றது. கரையோரத்து தென்னை மரங்களின் நிழல்கள் கரிய நீருக்குள் ஒரு தலைகீழ் உலகைக் காட்டின. தூரத்தில் ஒரு படகு நாலைந்து விளக்குகளுடன் நீரில் அதன் வண்ணப்படம் ஒன்றை கூடவே இழுத்துகொண்டு சென்றது. அதிலும் ஏதோ பாட்டு. ஆனால் எலக்ட்ரானிக் தாளம் மட்டுமே கேட்டது. புல்லாங்குழலின் கிரீச்சிட்ட நாதம் சுழன்று மறைந்தது.



பின்பு முற்றிலும் அமைதியான காயல் வளைவுக்குள் நாங்கள் சென்றோம். வெகுதூரம் வந்திருக்கிறோம் என்று தோன்றியது. காயல் அலையில்லாமல் இறுகிப்போன இருட்டாக விரிந்து கிடந்தது. மென்மையாக முடிகோதும் காற்று மட்டும்தான் வீசியது. கரையோரத்து தென்னைமரங்களின் ஓலைகளை துல்லியமாக பார்க்க முடிந்தது. அவற்றின் நீர்நிழல்களிலும் அதே போல ஓலைகள் தெளிவாக தெரிந்தன.

வியப்புடன் நான் குனிந்து பார்த்தேன். காயலுக்குள் தெரிந்த வானில் விண்மீன்கள் மின்னிக்கொண்டிருந்தன. சில விண்மீன்கள் அலைகளில் அசைந்தாடி ஒன்றுடன் ஒன்று மோதப்போவது போல் தள்ளாடின. சிவந்த பெரிய கோள்கள். மிக மெல்லிய நீலப்புள்ளி போன்ற தொலைதூர விண்மீன்கள். நான் நன்றாகவே குனிந்து அந்த விண்மீன் வெளி மீது மெதுவாக ஊர்ந்து சென்றேன். துடுப்பு உருவாக்கிய அலைகளில் விண்மீன்களின் படலம் வ¨ளைந்து வளைந்து அமைந்தது.

பின்பு நான் மீன்களைக் கண்டேன். இருளுக்குள் மின்னும் இருள்த்துளிகள் போல. நாலைந்து மீன்கள் மேலே வந்து சில அடி ஆழத்தில் நீருக்குள் மெல்லத் திரும்பியபோது அவற்றின் பக்கவாட்டுப் பளபளப்பை முதலில் கண்டேன். மீன்களா என்ற ஐயம் கணநேரத்தில் விலக இன்னும் ஆழத்தில் இன்னும் ஆழத்தில் என மீன்களைக் கண்டு ஒரு கட்டத்தில் எங்கள் படகே ஒரு பெரும் மீன்பரப்புக்கு மேல் செல்வதை உணர்ந்தேன். விண்மீன்கள் மீன்கூட்டத்தின் மீது துலக்கமான ஒளியுடன் நின்று அதிர்ந்தன.

மீன்படலம் ஒற்றை உடலாக ஒற்றை உயிராக தெரிந்தது. ஒரேகணத்தில் தலைமுதல் வால்வரைச் அசைவதுபோல ஆயிரக்கணக்கான மீன்கள் சுழன்று திரும்பின. திரும்பும் ஒரு கோணத்தில் மொத்த மீன்களும் காணாமலாகி மறு கணத்தில் ஒளியுடன் மீண்டன. சட்டென்று ஏதோ அந்தரங்க நினைவுக்குச்

சென்றவை போல மீன்கள் அனைத்துமே குப்புறச்சரிந்து ஆழத்தில் மறைய விண்மீன்கள் மட்டும்நலுங்கி நலுங்கி நின்றன. சிம்பனி இசை முடிந்த பின் ஒலிக்கும் ஒற்றைத் தந்தி போல ஒரே ஒரு வெள்ளிமீன் மேலே வந்து தயங்கி நின்று பின்பு சுழன்று கீழிறங்கியது.

விழிகள் மலைத்து நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். மீண்டும் மீன்கள் வரும் என்பது போல நீருக்குள் என் கவனத்தை நாட்டியிருந்தேன். நீருக்குள் இருந்த ஆழத்து இருள் என் பார்வையை உணர்ந்து சருமம் சிலிர்க்க மௌனமாக விரிந்திருந்தது. ஓரக்கண்ணால் அசைவை உணர்ந்து திரும்பிப்பார்த்தேன். நீலிமா அவள் உடைகளைக் களைந்து கொண்டிருந்தாள்.



என் இதயத்தின் ஒலியை கேட்டேன். மொத்தக்காயல்வெளியும் மாபெரும் முரசொன்றின் தோற்பரப்பு போல அதிர ஆரம்பித்தது. அவள் உடைகளைக் கழற்றுவது ஒரு நடனம்போல பிசிறற்ற அசைவுகளுடன் இருந்தது. கைகளை தூக்கி ஜாக்கெட்டின் இடதுகையை உருவி முதுகு வழியாக அதை எடுத்து வலது கையை உருவி இரு கைகளையும் பின்னால் கொண்டு சென்று பிராவின் கொக்கிகளைக் கழற்றி அதை கீழே போட்டாள். பாவாடை அதுவாகவே நழுவுவது போல விழுந்தது

இருண்ட காயலின் பின்புலத்தில் நட்சத்திரங்களின் ஒளியில் அவளுடைய சிவந்த சருமம் தெரிந்தது. ஒரு மகத்தான சிற்பம் போல. கைகளை தூக்கி கூந்தலை அவிழ்த்து தோளுக்கு பின்னால் பரப்ப மென் காற்றில் அது எழுந்து பறக்க ஆரம்பித்தது. அவள் முகத்தை என்னால் பார்க்க முடிந்தது. கன்னங்களும் உதடுகளும் கொதிப்பவை போலிருந்தன. தோள்களின் மெருகை மார்புகளின் மெல்லிய அசைவை...

என் உடலும் மனமும் ஆழ்ந்த அமைதியில் நிலைக்க நான் பல்லாயிரம் கண்களுடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் நானிருப்பதையே அறியாதவள் போல படகின் விளிம்பில் நின்றிருந்தாள். கூந்தல் பறந்து முலைகள் மேல் பரவி வழிந்தது. பிழையற்ற பெண்ணுடல். முழுமைகொண்ட பெண்ணுடல். இருளில் இன்னும் மலராத ஒரு செந்தாமரை.

நான் அசைவிலாது அமர்ந்திருக்க காலம் நழுவிக்கொண்டே இருந்தது. அவள் பெருமூச்சுடன் திரும்பி என்னைப் பார்த்தாள். பின்பு புன்னகைசெய்தாள். என் வாழ்நாளில் அத்தகைய பேரழகுடன் ஒரு புன்னகையைக் கண்டதில்லை. ஒளிவிடும் கண்களும் மின்னும் பற்களும் சிவந்த உதடுகளும் இணைந்து கொள்ளும் ஒரு தருணம். பின்பு கைகளை நீட்டினாள். வசியம் செய்யப்பட்டவனாக நான் எழுந்து அவளை நோக்கிச் சென்றேன். அவளுடைய நீட்டிய கரங்களை மெல்லத் தொட்டேன். அவள் என்னை அள்ளி தன்னுடன் அணைத்துக்கொண்டாள்.

என் காதுக்குள் அவளுடைய மெல்லிய குரலைக் கேட்டேன் ”பயம்மா இருக்கா?” நான் முனகலாக ”இல்லேயே…எதுக்கு பயம்?” என்றேன். ”ஒரு கிறுக்கு கூட இப்டி வந்திட்டோமேன்னு” நான் ”எனக்கும் கொஞ்சம் கிறுக்குதான்” என்றேன். மிக ரகசியமான ஒரு கிளுகிளுப்பாக அவள் சிரித்தாள். படகில் அமர்ந்துகொள்ள நான் அவளருகே அமர்ந்தேன். என் உடைகளைக் களைந்து இருவரும் ஒரே உடலாவது போல இணைந்துகொண்டோம்.

மல்லாந்த நிலையில் அவள் ”நட்சத்திரங்கள் இல்லாம இதைச் செய்யவே கூடாதுன்னு நினைப்பேன்” என்றாள். நான் ”காயலைப்பத்தி நான் நினைச்சே பாத்ததில்லை” என்றேன். அவள் முலைகளை அள்ளிக்கொண்டேன். பெண்கள் முலைகளால் ஆனவர்கள். அது கருணை, கனிவு. அதன் வழியாக அவர்களின் அன்பை பருப்பொருளாக வெளிவருகிறது. முலைகளை ஏந்துவதற்காகவே உடல். முலைகளை கனியவைப்பதற்காகவே ஆன்மா.

”என்ன நினைப்பு?” என்றாள். ”மத்ஸ்யகந்தி ஞாபகத்துக்கு வந்தது. இதேமாதிரி போட்டிலேதான்…” சிரித்து ”மத்ஸ்யம் மணக்கிறதா?” என்றாள். ”இல்லை..நீ நிசாகந்தி” அவள் சிரித்துக்கொண்டு என்னை இறுக்கிக்கொண்டாள். மெல்ல மெல்ல எல்லா எண்ணங்களும் வடிந்தன. உடல் அதன் புராதனச் சடங்கைச் செய்ய ஆரம்பித்தது. எதற்காக அது தன்னை அவ்விதம் திரட்டி உருவம் கொண்டிருக்கிறதோ அதை. எதற்காக அது உண்கிறதோ, எதற்காக உடுக்கிறதோ, எதற்காக உறங்குகிறதோ அதை. எங்கே அது தன்னை உடல் மட்டுமே என உணர்கிறதோ அதை.

பின்பு மூச்சு மெலிதாக சீற அவள் மேலே விண்மீன்களைப் பார்த்துக்கொண்டிருக்க நான் கீழே நீரில் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தோம். காயலுக்குள் ஒரு ரகசியக் கண் திறந்து கொண்டதுபோல நான் ஒரு மீனைப்பார்த்தேன். பின்பு இன்னொரு கண். பின்பு கண்கள். பின்பு கண்களின் பெரு வெளி. மீன்படலம் சுழிக்க காயலின் பெருவிழி ஒருகணம் இமைப்பதைக் கண்டேன்.

# இரவு 18



**பதில் இல்லாத வினா**

**இவ்விரவு.**

**பதிலற்றவை**
**முழுமையானவை**

**முடிவிலாதவை.**

**பகல்**

**இரவின் பதிலல்ல**

**ஒத்திப்போடுதல்தான்.**

**மீண்டும் மீண்டும்.**

மேனன் சமையலறைக்குள் வந்து ''கமலா வாட் இஸ் கோயிங் ஆன் ஹியர்?'' என்றார். ''போய் உங்க வேலையை பாருங்க. சும்மா உயிரை எடுக்காம'' என்று கமலா சொன்னார். நான் தட்டுகளை து¨டைத்துக்கொண்டிருந்தேன். மேனோன் என்னிடம் ''நைஸ் ஜாப்'' என்றபின் ''இவன் தான் இன்றைக்கு ஹீரோ. இவனை நீ இங்கே உட்கார வைச்சிருக்கே?'' என்றார். ''எல்லாரும் வர்ரப்ப வருவார். யூ கென் கோ'' என்றார் கமலா

''அட்மிரல் கிட்டே நாலு காய்கறி நறுக்கச் சொல்றது?'' என்றேன். ''யார் இவரா? நல்ல கதை'' என்று சிரித்தார் கமலா. ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? மிலிட்டரின்னா ஒரு பெரிய யந்திரம். அதுக்குள்ள நல்ல புத்திசாலிகளா பொறுக்கி கொட்டுவாங்க. மறுபக்கம் ஒண்ணுக்கும் உதவாத ஆட்களா வெளியே வருவாங்க. மிலிட்டரியிலே சேந்தா டிசிப்ளின் வரும். வேற எல்லாமே போயிடும்''

''நான் வர்ரேன்...அதான் சே·ப்'' என்றபடி மேனன் திரும்பச் சென்றார். மஜீத் வெளியே இருந்து சீராக நறுக்கிய முள்ளங்கிகளுடன் வந்தார். 'எடா மஜீதே, மேனன் சார் தொடங்ஙியா எந்நு நோக்கு'' என்றபின் என்னிடம் ''நான் என்ன செய்றேன்னு பாக்கிறதுக்காக நைசா வந்திட்டு போறார்'' என்றார். ''போத்துநாயர் வராதே மேனோன்சார் தொடங்ங்கில்ல'' என்றார் மஜீத். ''போத்தா, யார்?''

என்றேன். ”அதான் உன் வருங்கால மாமனார்.” என்றார் கமலா. நான் சிரித்தேன்.

வெளியே கார் வந்து நிற்கும் ஒலி கேட்டது. ”ஐ திங் இட் இஸ் வீணா... தே ஹேவ் தட் ஓல்ட் பென்ஸ்” என்றார் கமலா. அடுப்பில் அவியல் வெந்துகொண்டிருந்தது. அதன் வாழைக்காய் துண்டு ஒன்றை எடுத்து விரலால் நசுக்கியபின் ”ஓக்கே' என்றார். ”அந்த தயிரை எடு” நான் பெரிய எவர்சில்வர் கிண்ணத்தில் இருந்த தயிரை எடுத்து நீட்டினேன். அதை பளிங்குப் பாளங்களாக சீவி எடுத்து அவியலின் மீது போட்டு லேசாக கிளறி பெரிய தட்டால் மூடி அப்படியே இறக்கி வைத்தார். அவியலுக்கே உரிய மணம் வர ஆரம்பித்தது.

கூடத்தில் இருந்து மேனன் ”சரவண்...” என்று கூவினார். ”பொய்க்கோ...பொய்க்கோ” என்றார் கமலா. நான் கையை துடைத்துக்கொண்டு கூடத்திற்குச் சென்றேன். அங்கே உயரமான ஒல்லியான அறுபது வயதான மனிதர் ஒருவர் கனத்த கண்ணாடியுடன் நிற்க அருகே ஒரு தடித்த சிவந்த நிறப் பெண். ”ஆ, திஸ் இஸ் த ஹீரோ...சரவண்” என்ற மேனன் என்னிடம் ‘இது வீணா பாகுலேயன். இது அவள் கணவன் பாகுலேயன். ஹி வாஸ் எ புர·பசர் ஆ·ப் ·ப்லாச·பி ஒன்ஸ்” என்றார். நான் ”ஹாய்” என்றேன்.

வீணா ”கமலா எந்து செய்யுந்நு?” என்றார். நான் ”சமையல்” என்றேன். ”ஓ...எந்தா அட்மிரல், எத்ர விருந்நுகாருண்டு இந்நு?” என்று வீணா சிரித்துக்கொண்டு கேட்டார். ”த ஹோல் கம்பெனி... பிகாஸ் டுடே இஸ் அ ஸ்பெஷல் டே” பாகுலேயன் என்னைப்பார்த்து புன்னகைசெய்தார். வீணா சமையலறைக்குள் சென்றார். நான் சோ·பாவில் அமர்ந்தேன். பாகுலேயன் ”ஆடிட்டர், இல்ல?” என்றார். ”ஆமா” என்றேன்.”ஆனா ஷேர் மார்க்கெட் பிசினஸிலேதான் இருந்தேன்...”

”குட்” என்றார் பாகுலேயன். நான் ”நீங்க எங்க வேலை பாத்தீங்க?” என்றேன். ”எர்ணாகுளம் மகாராஜாஸ் காலேஜில்.. நான் இந்த வருடம் ஓய்வுபெற்றேன்” என்றார் பாகுலேயன் ஆங்கிலத்தில். நான் புன்னகையுடன் ” அதற்குப்பின்னர்தான் இரவு வாழ்க்கையா/” என்றேன். ” அதற்கு முன்பே அப்படித்தான். நான் அனேகமாக வகுப்புகளுக்கு போவதில்லை. மாணவர்களை அதிகாலையிலும் அந்தியிலும் என் வீட்டுக்கு வரசொல்லிவிடுவேன். என் கல்லூரியில் அதை பொருட்படுத்தவில்லை. ஏனென்றால் நான் ஒரு நல்ல ஆசிரியன்...”



மேனன் ''நல்ல தத்துவஞானின்னா மத்தவங்களை குழப்பிட்டு தான் தெளிவா இருக்கணும். இவர் அந்த மாதிரி'' என்றார் . பாகுலேயன் சிரித்தார். ''மகாராஜாசில் ரொம்ப நன்றாக இருந்தது வாழ்க்கை. இப்போதுகூட நிறைய மாணவர்கள் தேடி வருகிறார்கள். நான் இருந்த காலம் ஒரு பொற்காலம். கெ.ஜி.சங்கரப்பிள்ளை டி வினயசந்திரன் மாதிரி கவிஞர்களெல்லாம் இருந்தார்கள். ..எல்லாருடனும் எனக்கு நல்ல உறவிருந்தது'' மேனன் ''டாக்டர் எம் கங்காதரன் இருந்தார் இல்லையா?'' என்றார். ''அவர் எம்ஜி யூனிவர்சிட்டியில். ஆனால் எல்லாரும் ஒரே குழுவாகத்தான் இருந்தோம்''

வெளியே இன்னொரு கார் வந்து நிற்க ஒருவர் ச·பாரி சூட்டில் ஏறி வந்தார். ''வரணம் வரணம்...'' என்றார் மேனன். ''ஆகா, நம்ம பக்ஷிசார் வந்நிட்டுண்டல்லோ'' என்றபடி வந்து அவர் பாகுலேயனின் தோளில் ஓங்கி அறைந்தார். முரட்டுத்தனமான தோரணையும் கட்டை மீசையும் கொண்ட உற்சாகமான மனிதர் ''நீங்கள்தான் சரவணன் இல்லையா? நான் அப்துல்

சத்தார். ஒரு வியாபாரி...சந்தித்ததில் மகிழ்ச்சி" என்று கையை நீட்டினார். இறுகப்பற்றி உற்சாகமாகக் குலுக்கினார். "எந்தா மேனனே, தொடங்ஙுகயல்லே?"

"ஓ எந்தா தொடங்ஙுக? இவனல்லே வந்நிரிக்குந்நு" என்றார் மேனன். "ஏன் இவர் குடிக்க மாட்டாரா?" "இவனா, இவன் கொஞ்சம் ஜாஸ்தியா பச்சைத்தண்ணி குடிச்சா போதையேறி தத்துவமா உளறுவான்" சத்தார் என்னிடம் "நான் இந்த மாதிரி தத்துவம் காரணமாக இரவு தூங்காமல் இருப்பவன் அல்ல. என் தொழில் முழுக்க அமெரிக்காவில். அமெரிக்காவின் பகல்தான் எனக்கு ராத்திரி. அமெரிக்கா போனால் பகலில்தான் விழித்திருப்பேன்" என்றார்.

இன்னொரு கார் வந்து நிற்க முப்பது வயதான இளைஞனும் மனைவியும் நான்கு வயதான பெண்குழந்தையும் வந்தார்கள். மேளயில் ரவிச்சந்திரன் என்று அறிமுகம் செய்துகொண்ட அந்த இளைஞர் ஒரு சிற்பி. நெற்றியில் செந்தூரம் போட்டு மாநிறத்துடன் கொஞ்சம் குண்டாக அழகாக இருந்த அவர் மனைவி "ரெம்யா ரெவி " என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார். "அதென்ன மேளையில்?" என்றேன். "தரவாட்டு பெயர். என் அப்பா கூட பிரபலமான சிற்பிதான் மேளயில் திவாகரன்." நான் கேட்டிருக்கவில்லை. "நவீன சிற்பங்கள் செய்கிறீர்களா?" "இல்லை, நான் சிலைகள்தான் செய்கிறேன். மெட்டல். பார்த்தாஸ் கடையில் இருக்கும் பார்த்தாஸ் உரிமையாளரின் சிற்பம் நான் செய்ததுதான்"

பெண்குழந்தை அப்பா மடியிலேயே பிடிவாதமாக அமர முயன்றது. "கமான் நிஷா" என்றார் பாகுலேயன். அவள் வெட்கத்துடன் அப்பா மடியில் முகம் புதைத்துக்கொண்டாள்."லீவ் ஹர். ஒரு அரைமணிநேரம் அப்படி இருப்பாள் . அதற்குப் பின் அவளை கட்டுப்படுத்த ரவி ஓடி அலைய வேண்டியிருக்கும். போனதடவை என்ன ஆயிற்று தெரியுமில்லையா?" நான் "படிக்கிறாளா?" என்றேன். "ஸ்கூலுக்கு போகவில்லை. இவள் பகலில் விழித்திருப்பதில்லை" என்றான் ரவி.

நான் கொஞ்சம் வியப்புடன் அவனையே பார்த்தேன். "அது ஒரு பிரச்சினை. அவளும் எங்கள் இரவுச் சமூகத்தில் ஒருத்தி." என்றார் மேனன். "இவளுக்காக ஒரு பள்ளிக்கூடம் தொடங்க முடியாது. எங்கள் இரவுச்சமூகத்தில் மொத்தம் நான்கு குழந்தைகள். நான்குபேரும் நான்கு ஊர்களில் இருக்கிறார்கள்" நான் "எப்படியும் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமில்லையா?' என்றேன். "ஆமாம், கொஞ்சம் கொஞ்சமாக பழக்க வேண்டும்...கஷ்டம்தான். ஆனால் அவள் அபாரமான புத்திசாலி. நான்கு சாதாரண குழந்தைகளுக்குச் சமம்" என்றான் ரவி. மேனன் "பகலில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பு...ஒரே வாரத்தில் அவளை நான்கில் ஒன்றாக ஆக்கிவிடுவார்கள்" என்றார்

பாகுலேயன் ”நிஷா, நீ பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமா வேண்டாமா?” என்றார். ”பள்ளிக்கூடம் டிவி மாதிரித்தானே இருக்கும்/” என்று நல்ல ஆங்கிலத்தில் நிஷா கேட்டாள். ”என்ன சொல்கிறாள்?” என்று அவர் ரவியிடம் கேட்டார். ”இப்போது இவளுக்கு டிவி போட்டுக்காட்டி பள்ளிக்கூடம் எப்படி இருக்கும் என்று சொல்லிக்கொடுக்கிறோம்” என்றான் ரவி. ”இவள் கேட்கிறாள், பள்ளிக்கூடத்தில் ஒருத்தர் எல்லாருக்கும் சேர்த்து ஒரே விஷயத்தை சொல்லிக்கொடுக்கிறாரே அது எப்படி புரியும் என்கிறாள்....”

”இல்லை” என்றாள் நிஷா. ” ஒரு மீசை வைத்த மனிதர் டிவி மாதிரி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவரைச்சுற்றி இப்படி ஒரு சதுரம் போட்டால் அது டிவிக்காட்சியாக ஆகிவிடும்..” கையால் சதுரம் போட்டு காட்டினாள். ” அவரிடம் நாம் பேசவே முடியாது. அவர்தான் அவருக்கு தோன்றியதை நம்மிடம் பேசுவார்....அப்புறம்” மூச்சை இழுத்து சோபாவில் ஏறி அமர்ந்து தீவிரமான முகத்துடன் ”ஒரே சேனல்தான். நாம் ஒரு ரிமோட் வைத்து அவரை ஒரு குரங்காக மாற்ற முடியாது. அவர் குரங்கைப்பற்றி பேசிக்கொண்டே இருந்தார். குரங்கைப்பற்றி பேசும்போது அவர் சிரிக்கவே இல்லை. சிரிக்காமல் குரங்கைப்பற்றி பேசினால் குழந்தைகளுக்கு எப்படி புரியும்?”

நான் அந்தக்குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தேன். அச்சமூட்டும் அறிவுக்கூர்மையும் கற்பனையும் கொண்ட பெண்குழந்தை என்று தோன்றியது. அவள் சோபாவில் இருந்து இறங்கி ”உங்கள் வீட்டில் ஏன் டிவி இல்லை?” என்றாள். ”எனக்குப் பிடிக்காது” என்றார் மேனன். ”எனக்கும் பிடிக்காது. ஆனால் நாம் டிவியை முட்டாளாக ஆக்க முடியும். ரிமோட்டில் அழுத்திக்கொண்டே இருந்தால் போதும் . ஆங்கிலமும் மலையாளமும் கலந்து அது பேசும். பாகுலேயன் தாத்தா, நீங்கள் தத்துவத்தில் டிவி வைத்திருக்கிறீர்களா?” ”என்ன டிவி?” ”வி¨ளையாட்டு டிவி மாதிரி தத்துவ டிவி?” ”நல்ல ஐடியாதான்” என்றார் அவர்.



”தத்துவத்தில் டிவி வைத்தால் அதில் பாட்டே இருக்காது.” என்றாள் நிஷா. ” ஏன் என்றால் தாத்தாக்கள்தான் தத்துவம் பேச முடியும்” பேசியபடியே புத்தக அலமாராவில் தொற்றி ஏறி ஒரு அலங்கார கண்ணாடிப்பொருளை எடுத்தாள். அந்தக்குழந்தைக்கு கொஞ்சம் ஹைப்பர் ஆக்டிவிட்டி பிரச்சினை இருக்குமோ என்று எனக்கு சந்தேகம் எழுந்தது. ”தத்துவத்தில் பாட்டு பாடினால் அழுவது மாதிரி இருக்கும்” நான் அவளிடம் ”நிஷா உனக்கு தத்துவம் என்றால் என்ன என்று தெரியுமா?” என்றேன். ”நீ யார்?” ”சரவணன்” ”என்ன சரவணன்?” ”ஒரு நண்பர்” ”ஓ” என்றாள். பின்பு ”தத்துவம் என்றால் தர்க்கம். எல்லாவற்றையும் பற்றி தர்க்கம் செய்வது…”. மடேரென்று டீபாய் கோப்பையுடன் சரிந்தது

உள்ளிருந்து ரம்யா ஓடிவந்து ”அய்யோ…” என்றாள். ”ஒந்நு நோக்கிக்கூடே?” என்று சொல்லி ”ஸோறி” என்றாள். ”இட் இஸ் ஓக்கே…அவள் இதுமாதிரி பலதும் உடைக்கான் வேண்டி ஜனிச்சவள் அல்லே? ஸீ சரவணன், நிஷா இஸ் கோயிங் டு பி எ கிரேட் ஐகனோகிளாஸ்ட் ஒன் டே” ரம்யா மகளை கையில் பற்றி தர தரவென இழுத்துக்கொண்டே சென்றாள் ‘நோ.. நோ அம்மே நோ” என்று கூவியபடி தரையில் இழுபட்டு சென்றது குழந்தை. ”ஐ வாண்ட் டு டாக் டு த ·பிலாச·பர்”

”அவளுக்கு பெண்களையே பிடிக்காது…”என்றான் ரவி ”உதவாத விஷயங்களை பேசுகிறார்கள் என்று நினைப்பு” ”அபாரமான புத்திசாலி” என்றேன் நான். ”இரவிலே வளர்கிறாள்” மேனன் சொன்னார் ”அவள் இயல்பிலே புத்திசாலி. ஆனால் கூடவே இரவு இருக்கிறதே. பகலில் பெரும்பகுதி அவசியமே இல்லாத சமூகச் செயல்பாடுகளுக்காக சென்றுவிடுகிறது. வெயில், சத்தம் என்று சோர்வூட்டும் நேரமே அதிகம். ஒருநாளில் ஒரு குழந்தை ஆழ்ந்த கவனத்துடன் எத்தனை நேரம் செலவிடுமென நினைக்கிறாய்? அதிகம்போனால் ஒருமணி நேரம். ஆனால் இரவில் நிஷா பனிரண்டு மனிநேரம் அப்படி கவனமாக இருக்கிறாள். பன்னிரண்டு மடங்கு!”

வாசலில் நீலிமாவும் நாயரும் வந்தார்கள். நான் எழுந்தேன். நாயர் ''ஹா ஹா...எல்லா ஆந்தைகளும் வந்திருக்கின்றன'' என்றார். நீலிமாவின் கண்கள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தன. முதன் முதலாக பார்த்துக்கொள்ளும் ஆணும் பெண்ணும்போல பார்வைகள் கலந்து ஒருவரில் ஒருவர் ஆழ்ந்திருந்தோம். மேனன் எங்களைப்பார்த்து ''ஆஹா..திஸ் இஸ் டெ·பனிட்லி எ டிவைன் லவ்!'' என்றார்.

சத்தார் ''கேட்டடா நாயரே, நல்ல ஒரு பையனை நின்றே மகள் ஞானஸ்நானம் கொடுத்து எடுத்து... மிடுக்கி'' என்றார். நீலிமா ''தேங்க் யூ அங்கிள்'' என்றாள். வெளியே உரக்க கார்கள் வரும் ஒலி கேட்டது. மேலும் நால்வர் வந்தார்கள். அறைக்குள் கலைசலாக குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. உள்ளிருந்து வீணா வந்து ''அய்யோ நீலூ... நீ சுந்தரி ஆயல்லோடீ..'' என்று வந்து தழுவிக்கொண்டாள். ரம்யா பின்னால் வந்து ''அவள் எப்போழும் சுந்தரியல்லே?'' என்றாள்.

வழக்கமான பார்ட்டி மனநிலை. ஒருவர் இன்னொருவரிடம் பேசி பேச்சு முடிவதற்குள் இன்னொருவர் வந்து கலந்துகொள்ள அர்த்தமில்லாத உற்சாகப் பேச்சுகள். சிரிப்புகள். தழுவல்கள். புட்டிகள் வெளியே எடுக்கப்பட்டன. ஆளுக்கு ஒரு கோப்பையுடன் இருவர் மூவராக அமர்ந்து பேசினார்கள். எதிர்பாராத மூலைகளில் இருந்தெல்லாம் உரத்த சிரிப்பொலிகள் வெடித்தன. அவ்வப்போது என்னைப்பற்றிய பேச்சு வரும்போது ''சரவணன் இட் இஸ் எபவுட் யூ'' என்று கூவினார்கள். நான் மனம் முழுக்க மகிழ்ச்சியை உணர்ந்தேன். மகிழ்ச்சி ஒரு விதமான அர்த்தமற்ற ததும்பலாக இருந்தது. நீலிமாவிடம் பேச விரும்பினேன். அவள் சமையலறையில் இருந்தாள்.

வெளியே கார் வந்தது. பிரசண்டானந்தாவும் முகர்ஜியும் வந்தார்கள். மேனன் வாசலுக்குச் சென்று ''வரூ வரூ'' என்று வரவேற்றார். பிரசண்டானந்தா வந்ததும் அமைதி ஏற்பட்டது. எல்லாரும் அவருக்கு வணக்கம் சொன்னார்கள். உள்ளிருந்து கமலா வேகமாக வந்தார். ''ஆ, கமலா...யூ ஆர் பிஸி'' என்றார் பிரசண்டானந்தா. கமலா ''நமஸ்தே ஸ்வாமிஜி..நமஸ்தே முகர்ஜி சார்'' என்றார். ''என்ன சமையல் கம்லா? மீன் உண்டா?'' என்றார் முகர்ஜி. ''சைவம்'' என்று கமலா சிரிக்க ''ஓ நோ'' என்றார் அவர் கையை வீசி.

பிரசண்டானந்தா அமர்ந்துகொண்டார். ''எல்லாரும் தொடங்ஙிக் கழிஞ்ஞ் அல்லே?'' மேனன் சிரித்துக்கொண்டு ''ஜஸ்ட் எ ·பன்...'' என்றார். ''ஓகே குட்'' என்றார் பிரசண்டானந்தா. முகர்ஜி நாயர் அருகே சென்று கட்டித்தழுவினார். ஒரு பெரிய மக் நிறைய எதையோ ஊற்றிக்கொண்டார். மீண்டும் சத்தம் எழ ஆரம்பித்தது. பிரசண்டானந்தா ''உன் மாமனாரையும் முக்கர்ஜியையும் ஒரே நுகத்தில் கட்டலாம், நல்ல ஆகிருதி'' என்றார் ஆங்கிலத்தில். நான் சிரித்தேன். ''நீ ஒரு

நல்ல முடிவை எடுத்திருக்கிறாய். வாழ்த்துக்கள். நீலிமா ஒரு தேவதை" "தெரியும்" என்றேன்.

பிரசண்டானந்தா என்னைக் கூர்ந்து நோக்கி "உனக்கு சஞ்சலங்கள் இருந்திருக்குமே" என்றார். "இருந்தது..." என்றேன். "இப்போது?" "இல்லை" என்றேன். "ஏன்?" நான் கொஞ்சம் தயங்கிவிட்டு கடலுக்குள் போனதைப் பற்றிச் சொன்னேன். அந்த அனுபவத்தை எப்படி விளக்குவதென எனக்கு புரியவில்லை. ஆனால் நான் சொல்ல ஆரம்பிப்பதற்குள் அவரே புரிந்துகொண்டது போல் இருந்தது. "எனக்கு உக்கிரம் தேவையாக ஆகிறது. அது இல்லாமல் என்னால் இனிமேல் வாழ முடியாது" என்றேன்.

"உண்மைதான்" என்றார் பிரசண்டானந்தா. "பகலில் வாழும் மனிதர்களையே பார்ப்போம். அவர்களில் யார் அதிகம் கூர்மையானவர்களோ அவர்கள் இன்னும் ஆழமாக வாழ முனைகிறார்கள். மற்றவர்கள் மேல்மட்டத்திலேயே வாழ்கிறார்கள். எந்த அளவுக்கு நுண்ணுணர்வு கூர்மையடைகிறதோ அந்த அளவுக்கு மனிதர்கள் வாழ்க்கையை ஆழமாகப் பார்த்து ஆழத்தில் வாழ்கிறார்கள், இல்லையா?" என்னை கூர்ந்து நோக்கி கேட்டார். நான் "ஆமாம்" என்றேன்.

"ஆழம் என்று எதைச் சொல்கிறோம்?" என்றார் பிரசண்டானந்தா. நான் அவரே பேசட்டும் என்று காத்திருந்தேன். "பெரும்பாலானவர்கள் வாழ்க்கையைப்பற்றிய நம்பிக்கைகள் புராணங்கள் சடங்குகள் ஆசாரங்கள் ஆகியவற்றிலேயே வாழ்கிறார்கள். நூற்றுக்கு தொண்ணூறு பங்கு வாழ்க்கை பழக்கம், வழக்கம் என்ற இரண்டிலேயே முடிந்து விடுகிறது. நாமே செய்து நம்மிடம் படிந்துவிட்ட செயல்கள்தான் பழக்கம்.. நம்மைச்சுற்றியிருப்பவர்கள் காலாகாலமாகச் செய்து வரும் விஷயங்கள் வழக்கம். இதற்கு அப்பால் எதையாவது செய்பவர்கள் மிகமிக குறைவு. நம் மக்களில் எதைப்பற்றியாவது சொந்தமாகச் சிந்திப்பவர்கள், ஒரு சொற்றொடரையாவது சொந்தமாகச் சொல்பவர்கள் அபூர்வத்திலும் அபூர்வம். நம்முடைய பொதுவான வாழ்க்கை என்பது மிக மென்மையான ஒரு சவ்வுபோன்றது. ஒரு மேல் சருமம் போன்றது. அதில்தான் நாம் சொல்லும் அத்தனை பண்பாடும் நாகரீகமும் அமர்ந்திருக்கின்றன. அத்தனை உணர்ச்சிகளும் சிந்தனைகளும் வளர்ந்து நிற்கின்றன..."



நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். கண்களையே உற்று நோக்கி பேசும் வழக்கம் அவரிடம் உண்டு. அது அவரது சொற்களில் இருந்து நம் கவனத்தை விலக்க முடியாமல் செய்கிறதென்று நினைத்துக்கொண்டேன். ''மிகச்சிலர் அந்தச் சருமத்தை தாண்டி அடுத்த தளத்திற்கு வருகிறார்கள். பழக்கத்திற்கும் வழக்கத்திற்கும் அப்பால் என்ன இருக்கிறதென தேடுகிறார்கள். பொதுவான நம்பிக்கைகளுக்கு அடியில் உண்மையில் என்ன இருக்கிறதென ஆராய்கிறார்கள். சிந்தனையாளர்கள் கலைஞர்கள் பலசமயம் வெறும் எக்ஸெண்டிரிக்குகள்....ஆனால் அவர்கள்தான் ஆழத்திற்கு வருகிறவர்கள். ஆனால் அவர்கள்கூட மேல்மட்டத்தில்தான் வாழ்கிறார்கள். எப்போதாவது ஆழத்திற்கு வந்து திரும்பிசெல்கிறார்கள். அவ்வளவுதான்''

அவரை நான் வால்ட் டிஸ்னி படங்களில் வரும் பாம்பு என்று கற்பனைசெய்துகொண்டேன். இமைக்காத மயக்குவிழிகள். பேசப்பேச அவரது குரல் தாழ்ந்து மெல்லிய சீறலாக ஆகியது. உரத்து ஒலிக்கும் குரலை நம்மால் ஒதுக்க முடியும். முணுமுணுக்கும் குரலை கூர்ந்து கவனிக்காமல் இருக்கவே முடியாது ''ஆனால் சாதாரண மனிதர்களும் ஆழத்திற்கு வருவதுண்டு. முழுக்க முழுக்க மேல்சருமத்திலேயே வாழ்ந்து மறைய எவராலும் இயலாது. ஒருவேளை மந்தபுத்திகளால் முடியலாம். நுண்ணுணர்வு கொஞ்சமேனும் இல்லாத எவரும் இல்லை. மேலே மிதப்பவன் கைசோர்ந்து கொஞ்சம் அமிழ்ந்துவிடக்கூடும். உள்ளே இருந்து எதாவது அவனை பிடித்து

இழுக்கக்கூடும். ஒரு சாமானியனின் வாழ்க்கையில் உக்கிரமான தருணங்கள் என்று அவன் சொல்வதெல்லாமே இந்த ஆழத்திற்கு அவன் வந்து மீண்டதைப்பற்றித்தான். ஒருவன் தன் வாழ்நாளைச் சுருக்கிச் சொன்னால் இந்த மூழ்கிய தருணங்களை மட்டும்தான் சொல்வான்…"

ஆழமான மௌனத்திற்குப் பின் அவர் தொடர்ந்தார் "நீ கவனித்திருப்பாய்… அவ்வாறு அவர்கள் மூழ்கிய அனுபவங்கள் அனைத்துமே மிகமிக துயரம் மிக்கவையாகவே இருக்கும். தங்கள் பழக்க வழக்கங்களுக்கு அடியில் மனிதர்கள் உண்மையில் எப்படிப்பட்டவர்கள் என்று அறியும் போது அவர்கள் ஆடிப்போய்விடுகிறார்கள். வாழ்க்கையின் அஸ்திவாரமே நொறுங்கிவிடுவது போல உணர்கிறார்கள். அதிலிருந்து மீள அவர்கள் மாதக்கணக்கில் வருடக்கணக்கில் போராடுகிறார்கள். பலர் மீளமுடியாமலே ஆகிவிடுகிறார்கள். நடைபிணங்களாக ஆகிவிடுபவர்கள் உண்டு. கிறுக்கர்களாக , அவநம்பிக்கைவாதிகளாக ஆகிறவர்கள் உண்டு. அந்த மேல்மட்டத்தில் கொலைகளும் தற்கொலைகளும் அந்த ஆழத்தை சந்தித்த தருணங்களின் விளைவாகவே நடக்கின்றன. உதாரணமாக ஒரு மாபெரும் நம்பிக்கைத்துரோகம். மேல்மட்ட வாழ்க்கையில் மிகமிக உக்கிரமான அனுபவம் என்றால் அதுதான். ஏனென்றால் அவர்கள் வாழும் சருமத்தில் அது இல்லை. அது சருமத்திற்கு அடியில் ஆழத்தில் இருக்கிறது. அந்த ஆழத்தை முற்றிலும் அறியாமலேயே அவர்கள் அது வரை வந்திருக்கிறார்கள். பிரம்மாண்டமான பேய் போல அது கண்முன் நிற்கும்போது அவர்களால் அதை தாங்கிக்கொள்ள முடிவதில்லை…"

"நான் அந்த மேல்சருமத்தை ஜாக்ரத் என்று சொல்வேன்" என்றார் பிரசண்டானந்தா. "சாக்த மரபிலே உனக்கு ஆர்வமிருந்தால் விரிவாகவே அதை நீ பயிலலாம். ஜாக்ரத் என்பது பல ஆயிரம் வருடங்களாக மனிதர்கள் உருவாக்கி எடுத்த ஒரு பாதுகாப்புப் படலம். முழுக்க முழுக்க பொய்யாலான ஒன்று அது. நம் உடலின் மேல்சருமம் இறந்த செல்களால் ஆனது தெரியுமா? ஆனால் உயிரற்றவற்றால் ஆன ஒரு படலம் நம் மீது இருப்பதனால்தான் நமக்குள் இருக்கும் உயிர்ச்சருமமும் சதைகளும் பாதுகாப்பாக இருக்கின்றன. அரைமணிநேரம் மேல்தோல் இல்லாமலிருந்தால் நம் உடல் பாளம் பாளமாக வெடித்துப் புண்ணாகிவிடும். அதேபோன்றதுதான் ஜாக்ரத். சாமானியர்கள் அதில்தான் வாழமுடியும். அது கொஞ்சம் விலகினால்கூட அதிர்ச்சியில் அவர்களின் உலகம் சிதறிப்போய்விடும்."

"நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஜாக்ரத் என்றால் கிட்டத்தட்ட ·ப்ராய்ட் சொல்லும் கான்ஷியஸ்" என்றேன். "ஆமாம். ஆனால் நாம் ·ப்ராய்டை மறந்துவிடவேண்டும். மொத்த மேலை உளவியலே ஒரு குழந்தைவிளையாட்டு. அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. லங்காவதார சூத்ரம்

மாதிரியான பௌத்த தியான நூல்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெர்மனிய மொழியில் மொழியாக்கம்செய்யப்பட்டன. அவற்றை படித்துவிட்டு ·ப்ராய்டும் யுங்கும் அவர்களுக்குத் தோன்றியதுபோல ஏதோ எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் ஒன்றும் இல்லை" என்றார் பிரசண்டானந்தா "பகல் என்பது ஜாக்ரத்தால் ஆனது. ஜாக்ரத் விழித்திருக்கும் நேரம் அது. ஜாக்ரத்துக்கு அடியில் இருக்கிறது ஸ்வப்னம். அது இரவுக்குரியது. அதுதான் ஆழம். நம்முடைய கனவுகள் எங்கிருந்து முளைக்கின்றனவோ அந்த ஆழம். சப்கான்ஷியஸ் என்று அதைத்தான் கிட்டத்தட்ட ·ப்ராய்ட் சொல்கிறார். அந்த ஆழத்துக்குத்தான் அடிக்கடி சாமானியர் மூழ்கி பதறியடித்துக்கொண்டு வெளியேறுகிறார்கள். கனவு என்றால் அதை அவர்கள் விருப்பப்படி விளக்கிக்கொண்டு வாழ முடியும். அதுவே உண்மை என்று உணரும்போது அவர்களால் தாங்க முடிவதில்லை"

"இரவில் வாழும் நாம் அந்த ஸ்வப்னநிலையில் இருக்கிறோம்" என்றார் பிரசண்டானந்தா. "ஆகவேதான் இது இத்தனை அழகாக இருக்கிறது. அழகு என்பதே ஸ்வப்னநிலையில் மட்டும் அறியப்படக்கூடிய ஒன்றுதான். அழகான ஒன்றைப் பார்க்கும்போது அந்த முதல் கணம் என்ன நிகழ்கிறது? நம் ஜாக்ரத் விலகி ஸ்வப்னம் வெளிப்படுகிறது.ஒரே ஒரு கணம் தான். உடனே ஜாக்ரத்தின் திரை வந்து மூடிவிடுகிறது. ஆனால் ஒரு பேரழகு நம்மை பல நிமிடங்களுக்கு ஸ்வப்ன நிலையில் வைத்திருக்கிறது. அதைத்தான் நாம் பரவசம் என்கிறோம். உன்மத்த நிலை என்கிறோம். இந்த இரவு வாழ்க்கையில் நாம் எப்போதும் அந்த பரவசநிலையில் இருக்கிறோம், இல்லையா?" நான் பெருமூச்சுவிட்டேன். "இங்கே நீ அறிந்த இந்த பரவசத்தை வேறு எப்போதும் அறிந்திருக்க மாட்டாய்.. இது ஒரு மாபெரும் கனவு. நாட்கணக்கில், வருடக்கணக்கில், முழு வாழ்க்கைக்கும் நீளும் கனவு."

பிரசண்டானந்தா புன்னகைசெய்தார் "நீ அந்தக் கனவை அஞ்சியிருப்பாய். கனவு கலைந்துவிடுமே என்ற அச்சம் மட்டும் அல்ல அது. கனவு நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதனால் வரும் அச்சமும் கூட. அங்கே எல்லாமே அவற்றின் உண்மை வடிவில் இருக்கின்றன. எந்த போர்வையும் இல்லை. எல்லாமே அம்மணமாக இருக்கின்றன. அந்த உண்மையை நீ அஞ்சினாய். அதில் இருந்து தப்பி மீண்டும் பொய்யை நோக்கி செல்ல விரும்பினாய். ஆனால் உண்மையை அறிந்தபின் பொய்யில் வாழ்வது கடினமானது. நீரை உறிஞ்சிக்கொண்டபின்பு உன்னால் மிதக்க முடியாது"

"உண்மைதான்...ஒன்று தெரிகிறது, என்னால் திரும்பிப்போகவே முடியாது" என்றேன். "அதேதான் நானும் சொல்கிறேன். திரும்பிப்போக முடியாதென்று நீ உணர்ந்த கணம்தான அந்தக் கடல். அப்பட்டமான உண்மைகளினால் ஆன இந்த கனவுவெளியின் பிரம்மாண்டத்தையும் மகத்துவத்தையும் அங்கே நீ கண்டாய்" என்றார் பிரசண்டானந்தா "மகாபாரதத்தில் ஓர் அற்புதமான கதை

உண்டு. பீமனை கொல்வதற்காக கௌரவர் அவனைப்பிடித்து கைகால்களைக் கட்டி கங்கையில் தூக்கிப்போட்டுவிடுகிறார்கள். அவர்கள் போட்ட இடத்தில் நீருக்குள் ஒரு பெரிய பிலம் திறந்திருந்தது. அது பாதாள மூர்த்திகளான மாபெரும் நாகங்கள் பூமிக்கு வந்துசெல்லும் வாசல். அந்த வாய் வழியாக பீமன் பாதாள உலகுக்குச் சென்றுவிட்டான். அங்கே அதிபிரம்மாண்டமான நாகங்கள் இருந்தன. அவற்றில் பெரிய நாகமான வாசுகி விந்திய மலையை விட பெரிய பாம்பு. தங்களிடம் விருந்தாளியாக வந்த பீமனுக்கு வாசுகி ஒரு பானம் கொடுத்து உபசரித்தார். அந்த பானம் ஒரு பெரிய கலம் நிறைய உக்கிரமான பாம்பு விஷம். அதைக்குடித்ததும் பீமனுக்கு ஆயிரம் யானையின் பலம் வந்தது. மண்ணில் எவருமே அவனை தோற்கடிக்க முடியாது என்ற நிலை வந்தது. பூமியில் எந்த விஷமும் அவனை எதுவும் செய்யாது என்றாயிற்று"

கைநீட்டி என் தொடையில் தட்டினார் பிரசண்டானந்தா "நீ அந்த விஷத்தைக் குடித்துவிட்டாய். இனிமேல் உன்னை எந்த விஷமும் தாக்காது. முழுஉண்மையில் நீ வாழும்போது திரைவிலகி உன்னை அதிர்ச்சிகொள்ளச்செய்யும் எதுவும் நிகழப்போவதில்லை. நீ வாழ்வது ஸ்வப்னநிலையில். உனக்கு ஆர்வமிருந்தால் இன்னொரு வாசலை உனக்குள் மிக எளிதாக திறக்க முடியும். அது சுஷ◌ுப்தியின் வாசல். மகத்தான இன்பத்தால் ஆன ஓர் உலகம். அதற்குள்ளும் ஒரு வாசல். அது துரியம். இன்பத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு வெளி அது...மேலே , பகலில் வாழ்பவர்கள், வருடக்கணக்காக தியானம் செய்தால் மட்டுமே சில கணங்கள் ஜாக்ரத்தை விலக்க முடியும். அதையே அவர்கள் பேரனுபவம் என்று கொண்டாடுவார்கள். நீ அவர்கள் தியானம் மூலம் வந்தடையும் இடத்தில் வாழ்கிறாய். அவர்கலில் லட்சத்தில் ஒருவர் மட்டுமே போகக்கூடிய ஆழங்களுக்கு நீ சாதாரணமாகச் செல்ல முடியும்..."

கமலா வாசலில் வந்து "ஓகே கைஸ்...ஊணு ரெடி" என்று கை தட்டினார். மொத்தக்கும்பலும் "ஹோ" என்று சத்தமிட்டது. அவருக்குப் பின்னால் ரம்யா நிற்க ஊடே புகுந்து வந்த நிஷா "எல்லாரும் சேர்ந்து பீட்டில்ஸ் மாதிரி ரீங்கரிக்கிறார்கள்" என்றாள். "நோ நிஷா...அவர் சம்ஸாரிக்குகயல்லே" என்றாள் ரம்யா. " எ லாட் ஆ·ப் இண்டலிஜெண்ட் டாக்ஸ் பிகம் எ நாய்ஸ்" என்றாள் நிஷா. பிரசண்டானந்தா "அந்தச் சிறுமியைப் பார்த்தாயா? எத்தனை புத்திசாலி? ஏனென்றால் சாதாரணமான குழந்தைகள் அப்பா அம்மா சொல்லும் பொய்களை கற்றுக்கொண்டிருக்கும் வயதில் அவள் உண்மைகளின் ஆழத்தில் வாழ்கிறாள்" நாயர் என்னிடம் "கமான்"என்றார். மேனன் 'ஸ்வாமிஜி...ஊணு கழிக்காம்" என்றார்.

பிரசண்டானந்தா எழுந்தார். என் தோளைத்தட்டி ”வெல், வி ஹேட் எ கூட் டாக்” என்றார். கமலா,”ஒன்லி வெஜிடேரியன்… சத்தார் வெஷமிக்கருது” என்றார். ”ஓ ஞான் ஷமிச்சே” என்றார் சத்தார். ”ஈ நாலு லார்ஜ் கேறியதினு சேஷம் ஞான் மண்ணு கிட்டியாலும் தின்னும்” நான் பிரசண்டானந்தாவிடம் ”நீங்கள் புலால் உண்ண மாட்டீர்களா? சாக்தர்கள் உண்பார்கள் என்கிறார்களே?” என்றேன். ”புலால் உண்பேன். குடிப்பேன். ஆனால் எல்லாம் சாக்தபூஜையில் மட்டும். நாளைக்கு அமாவாசை. பஞ்ச தத்வ பூஜை உண்டு…நீ வா…உனக்கு ஒரு திறப்பாக அமையும்” என்றார். நான் ”சரி” என்றேன். சட்டென்று உதயபானுவின் முகம் நினைவுக்கு வந்தது. ”முகர்ஜி, டுமாரோ சரவணன் வில் பி நித் அஸ்” என்றார் பிரசண்டானந்தா. முகர்ஜி என்னை நோக்கி கோப்பையை தூக்கிக் காட்டினார்

நாங்கள் கூட்டமாக உள்ளே சென்றோம். நீலிமாவும் வீணாவும் ஊண்மேஜையில் தட்டுகளை பரப்பிக்கொண்டிருந்தார்கள். மஜீத் சாப்பாட்டை எடுத்து வைத்துக்கொண்டிருந்தார். ”ஆ, மஜீத். இந்நு சங்கீதம் இல்லே?” என்றார் பிரசண்டானந்தா. ”ஆ·ப்டர் மீல்ஸ், மஜீத் வில் சிங்” மேனன் சொன்னார். மஜீத் ”வெளுக்கும் வரே” என்று சிரித்து உள்ளே சென்றார். பிரசண்டானந்தா என்னிடம் ”ப்ளீஸ் கம்…இட் வில் பி என் எக்ஸ்பீரியன்ஸ் டு யூ” என்றார்.

# இரவு 19

**கூரிருளில்**
**கண்ணாடிக்கோப்பையில்**
**நிறைதுப் பருகுகிறேன்**
**இரவை**
**என் உடலின் ஆழங்களுள்**
**பரவுகிறது**
**என் நரம்புகளில் ஓடி**
**செல்களில் தேங்குகிறது**
**கரிய இரவு**
**பால்வீதிகளை**
**நகைகளாக அணிந்துகொண்ட**
**முடிவிலா இரவு**



நான் ஆசிரமத்தை அடையும்போது பத்தரை மணி. ஆசிரமத்திற்கு வெளியே காவலிருந்தது. சீருடை அணிந்த கரிய ஆள் கையில் டார்ச்சுடன் என்னை அணுகி ”ஆரா? எந்தா?” என்றான். நான் ”சுவாமிஜி விளிச்சு வந்நதா” என்றேன். ”ஸ்வாமிஜி எழுத்து தந்நிட்டுண்டோ?” நான் ”இல்ல, ஸ்வாமிஜியை அறியும்” என்றேன். அவன் ”எழுத்து இல்லாத ஆரையும் விடுகயில்ல” என்று சொல்லிவிட்டான். நல்லவேளையாக முகர்ஜி செல்போனை எடுத்தார் . நான் விஷயத்தைச் சொன்னதும் அவரே வாசலுக்கு வந்து காரை உள்ளே அனுப்பச் சொன்னார்.

நான் இறங்கியதுமே முகர்ஜி ”ஸோ யூ ஆர் அலோன்” என்றார்.” ”யா...ஹி இன்வைட்டட் மி ஒன்லி”. ”கமான்..” நான் அவருடன் சென்றேன். அவர் இடையில் ஒரு சிவந்த பட்டு துண்டு மட்டும் அணிந்திருந்தார். பூதாகரமான உடலில் இறுக்கமான தசைகளுடன் பயில்வான் போல தெரிந்தார். ”நீங்கள்

முதலில் குளிக்க வேண்டும். இரவில் எதையும் சாப்பிட்டிருக்கக் கூடாது. சுவாமிஜி சொல்லியிருப்பாரே" நான் "நான் குளித்துவிட்டுதான் வந்தேன். சாப்பிடவில்லை" என்றேன். "இல்லை , இங்கே திரும்பவும் குளிக்க வேண்டும். நேரம் இருக்கிறது. வாருங்கள்" ஆசிரம வளைப்புக்குள் எங்குமே வெளிச்சம் இல்லை என்பதைக் கவனித்தேன். ஒரு விளக்கு கூட இல்லை. ஆனால் இருளுக்குள் நிறைய நடமாட்டம் இருந்தது.

முகர்ஜியின் ஸ்டுடியோவுக்குள் சுவர்களில் இருந்த யட்சி முகங்கள் இருளுக்குள் என்னை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தன. அந்தப்பார்வை என்னை பதற்றம் கொள்ளச் செய்தது. முகர்ஜி ஒரு துண்டு மற்றும் பொருட்களை எடுத்துக்கொண்டு "வாருங்கள்" என்று சொல்லி முன்னால் சென்றார். ஆசிரமத்தின் பின்பக்கம் ஒரு வெளியே செல்லும் வழி இருட்டுக்குள் வெண்தடம் போல தெரிந்தது. தென்னைமரங்கள் அடர்ந்த இருள் வழியாகச் சென்றோம். அப்பால் காயல் தெரிந்தது. " இது காயலா/" என்றேன். "காயலின் ஒரு வால்....நல்ல தண்ணீர்தான்" என்றார் முகர்ஜி


அங்கே ஒரு புதிய படித்துறை. அனேகமாக ஆசிரமத்தால் கட்டப்பட்டது "நீங்கள் இங்கே குளிக்கலாம். நூற்றியெட்டு முறை நீரில் மூழ்க வேண்டும்" என்றார் முகர்ஜி "மூழ்கி எழும்போது ஒவ்வொரு முறையும் நான் சொல்வது போல சொல்லுங்கள்" என்னருகே வந்து என் தோளில் கையை வைத்து மெல்ல கனத்த குரலில் "ஓம் ஹ்ரீம் ஹம்" என்றார். நான் அதை வாய்க்குள் உச்சரித்தேன். "ம்ம்" என்றபின் படியில் அவர் அமர்ந்துகொண்டார். நான் அவர் தந்த துண்டை வாங்கி கட்டிக்கொண்டு படிகளில் இறங்கி நீருள் புகுந்தேன். கீழே மணல். நீர் இளம் குளிருடன் இருந்தது.

மந்திரத்தைச் சொன்னேன். வாயில் புதிய ஒரு பலகாரத்தைப் போட்டது மாதிரி இருந்தது. சொல்லியபடியே மூழ்கி எழுந்தேன். மெல்லிய பாசிமணம் கொண்ட நீர். மந்திரத்தைச் சொல்லியபடியே மூழ்கி எழுந்தேன். ஹ்ரீம் என்பது சக்திக்கான மந்திரம் போலும். மந்திர உபதேசத்தை பெரிய சடங்குகளுடன் செய்வார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன். இத்தனை எளிமையாக, சாதாரணமாக, அதை முகர்ஜி செய்தது ஆச்சரியமாக இருந்தது. இதென்ன நினைப்புகள். ஒரு மந்திரத்தைக்கூட முறையாகச் சொல்ல முடியாமல்... மீண்டும் மந்திரம். எதற்காக இங்கே வந்திருக்கிரேன், ஏன் இதைச் செய்கிறேன்? எனக்கு இதில் நம்பிக்கையும் இல்லை. மீண்டும் மந்திரம்... ஆனால்...

நூற்றியெட்டு எண்ணிக்கை சரியா? நான் மூழ்கி எழுந்ததும் முகர்ஜி "ஓம் ஹ◌ம் மணபத்மே ஹம்" என்று உரத்த குரலில் சொன்னார். நான் நீரில் இருந்து எழப்போக "அந்த துணியை நீரிலேயே விட்டுவிட்டு நிர்வாணமாக ஏறி

வாருங்கள்” என்றார் முகர்ஜி. நான் நிர்வாணமாக மேலே ஏறினேன். நூறு நூறாயிரம் கண்களால் ஆனதாக என்னைச்சூழ்ந்த வெளி தோற்றமளித்தது. மறுகணம் அது ஒரு கரிய ஆடைபோல என்னை வந்து மூடிக்கொண்டது. நான் எழுந்து நின்று திரும்பி காயலைப்பார்த்தேன். காயலும் வானமும் நிர்வாணமாக இருப்பது போல பிரமை எழுந்து உடல் சிலிர்த்துக்கொண்டது.

முகர்ஜி ஒரு சிவந்த பட்டுத்துண்டை நீட்டினார். நான் அதைக் கட்டிக்கொண்டேன். அவர் பேசாமல் திரும்பி நடந்தார். அவர் ஒன்றும் சொல்லாமலேயே மேற்கொண்டு எதுவும் பேசலாகாது என்பது எனக்குப் புரிந்தது. என் மனதில் நினைவுகள் ஓடின, ஆனால் அவை சொற்களில்லாமல் வெறும் ஓடைகளாக பிரிந்து பிரிந்து வழிவதாக தோன்றியது. வானம் இதமான கரிய ஒளியுடன் இருக்க கருமையின் ஒளியில் தென்னை ஓலைகள் மின்னி அசைந்தன. கடலில் இருந்து காற்று வரவில்லை. நிதானமான அலையோசை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.



ஆசிரம வளைவுக்குள் நுழைந்தபோது முதலில் என்னெதிரே வந்த கனமான வெள்ளையர் முழுமையான நிர்வாணத்துடன் இருப்பதைக் கண்டேன். அவரிடமிருந்து பச்சைகக்றபூரத்தின் வாசனை வீசியது. பின்னர் இரு இந்தியர்கள். நான்காம் முறையாக நிர்வாணமானவரைப் பார்த்ததும் நான் உடையுடன் இருப்பதை அசௌகரியமாக உணர ஆரம்பித்தேன். என்னை

குடிலுக்குள் கொண்டுசென்ற முகர்ஜி ஒரு துண்டு கர்ப்பூரத்தை என்னிடம் கொடுத்தார். இன்னொன்றை எடுத்து இரண்டாக ஒடித்து தன் இரு அக்குள்களுக்குள்ளும் வைத்துக்கொண்டார். நானும் அதே போலச் செய்தேன். அது உடலின் வாடையை இல்லாமலாக்கும் உத்தி என்று எண்ணிக்கொண்டேன்.

முகர்ஜி தன் துண்டை எடுத்து கொடியில் போட்டார். நான் அவரைப் பார்த்தேன். பெரிய சிலை போன்ற உடல். அவர் ஏதும் சொல்லாமல் வெளியே சென்றார். நானும் துண்டை எடுத்து கொடியில் போட்டுவிட்டு வெளியே சென்றேன். முழுநிர்வாணமாக இருக்கிறோம் என்ற துணுக்குறல் என் மனதுக்குள் வந்து சென்றது. என்னால் அதற்கு முடிகிறதென்பதே ஆச்சரியமாக இருந்தது. நான் என்னைச்சுற்றி யட்சிகளின் விழிகளைப் பார்த்தேன். என்னை உண்ணக்காத்திருக்கும் உதிரப்பசி கொண்ட மிருகங்களின் பார்வை.

சட்டென்று வெளியே சென்றுவிட்டேன். முற்றத்தில் சுழன்றுகொண்டிருந்த கடல்காற்றை உடலெங்கும் ஏற்றுக்கொண்டு கைகளை மார்பில் கட்டியபடி நின்றேன். பின்பு கைகளை எடுத்துக்கொண்டேன். நிர்வாணமான சமணச் சிலைகளைப்போல கைகளை தொங்க விட்டுக்கொண்டு நின்றேன். நிர்வாணம் ஏன் அந்தச் சுதந்திரத்தை அளிக்கிறது? இல்லை வெறும் மனப்பிரமை தானா அது?

அங்கே நடமாடிய அனைவருமே நிர்வாணமாக இருந்தார்கள். எவரும் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ளவில்லை. தங்களுக்குள் மூழ்கி இயல்பாக நடப்பவர்கள் போலிருந்தனர். எனக்கு பெருமூச்சுகளாக வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு பெருமூச்சுக்கும் நான் இலகுவாக ஆகிக்கொண்டிருப்பது போல உணர்ந்தேன். ஒரு கட்டத்தில் அந்த இடம் கடலோசை எல்லாவற்றையும் வெகுதூரத்தில் கேட்க நான் எனக்குள் ஆழ்ந்து துண்டு கனவுக்காட்சிகளினால் ஆன ஓர் உலகுக்குள் சென்று கொண்டே இருந்தேன். அர்த்தமே இல்லாத கனவுப்பிசிறுகள். கனவு மட்டுமல்ல, நிகழ்ந்தவை. நினைவுகளுக்குள் கனவுகள் ஊடுருவியவை. பின்பு எப்போதோ நான் கனத்த பிசினாலான கடலொன்றுக்குள் மூழுகுவது போல அமைதிக்குள் மூழ்கிச்சென்றேன். காதுகள் அடைத்தன. கண்கள் மறைந்தன.

மீண்டபோது சுவர் சாய்ந்து அப்படியே நின்றுகொண்டிருப்பதை உணர்ந்தேன். அந்த அற்புதமான இன்மை உணர்வை நான் இரண்டாம் முறையாக அனுபவிக்கிறேன். அங்கே கடலும் வானமும் இருந்தன. இங்கே ஏதுமில்லை. ஆனால் இங்கே என் உடல் கடல் போல வானம் போல இருக்கிறது. அங்கே நான் கண்டதும் ஒரு நிர்வாணத்தைத்தானா? சொற்கள், மீண்டும் சொற்கள்.

இச்சொற்களை நான் முழுதும் விலக்க முடிந்தால் நான் அகத்திலும் நிர்வாணம் ஆவேன்.

மணியோசை ஒலித்தது. ஒவ்வொருவராக கூடத்திற்குள் செல்ல ஆரம்பித்தார்கள். யாரும் யாரையும் அழைக்கவில்லை. யாரும் கூட்டமாகச் சேர்ந்து போகவும் இல்லை. நான் உள்ளே சென்று என் மனம் இயல்பாக தேர்வுசெய்த இடத்தில் அமர்ந்துகொண்டேன். கூடத்தின் பாதிப்பங்கு மெல்ல மெல்ல நிறைந்தது. அனைவருமே நிர்வாணமானவர்கள். பாதிப்பேர் வெள்ளையர்கள். பெண்களாக ஏழெட்டு வெள்ளைக்காரிகள் மட்டுமே. கூடத்தில் அந்த மையவிளக்கு மிகமிகச் சிறிய முத்துச் சுடருடன் எரிந்தது. அந்த ஒளியில் அங்கே நிறைந்திருந்த உடல்கள் நிழல்களை உருவாக்கி சுவர்களில் ஆடச்செய்தன.

நான் அந்த மந்திரத்தை உள்ளுக்குள் சொல்லிக்கொண்டே இருந்தேன். சிலமுறை சொன்னபோது மந்திரம் மறைந்து உதிரி எண்ணங்களில் அலைந்து மீண்டும் மந்திரத்திற்கு திரும்பி வந்தேன். என் மனம் இத்தனை ஒழுங்கற்ற பாய்ச்சல் என்பது எனக்கே வியப்பாக இருந்தது. என் மனதுக்குள் நான் இடைவெளியே இல்லாமல் நான் நான் என்று எண்ணிக்கோண்டிருந்தேன். நான் சொல்கிறேன் நான் செய்கிறேன் நான் இருந்துகொண்டிருக்கிறேன். இப்படி நினைத்துக்கொண்டே இருக்கும் இந்த இதுதான் நான் போலும்.

மீண்டும் மணியொலி. வெளியே சங்கு முழங்கியது. பிரசண்டானந்தா வருகிறார் என்று நினைத்துக்கொண்டேன். வழக்கம்போல முன்னால் ஒரு சீடர் சங்கு ஒலித்து வர கையில் ஏந்திய சிற்றகலுடன் பிரசண்டானந்தா வந்தார். அவரது உடல் முழு நிர்வாணமாக இருந்தது. தாடியின் நிழல் மார்பில் விழுந்துக் கிடந்தது. அனைவரும் அமைதியாக எழுந்து நின்றார்கள்

பிரசண்டானந்தா விளக்கைக் கொண்டு வந்து கும்ப வடிவில் நிறுவப்பட்டிருந்த சக்தியின் அருகே வைத்தார். அந்த விளக்கில் இருந்து முதல் திரியை கொளுத்தி அங்கிருந்த எல்லா தீபங்களையும் சுடரச்செய்தார் உதயபானு. பின்பு ஒரு பெரிய தாம்பாளத்தில் சுடர் முத்து எரியும் பீங்கான்அகல்களுடன் சுற்றிவந்தார். ஆளுக்கொரு அகல்விளக்குகளை எடுத்துக்கொண்டார்கள். கூடம் முழுக்க சுடர்கள் அசைய அச்சுடர்களுக்குள் மனித உடல்கள் ஒளியுடன் அதிர்ந்தன. அந்தக்கூடமே கொன்றைமரம்போல செவ்வொளி இதழ்களால் நிறைந்தது.



ஓயாது மனியோசை கேட்டுக்கொண்டே இருந்தது. விளக்குகள் அடர்ந்து ஒளி எழுந்ததும்தான் நான் ஒன்றைக்கவனித்தேன். அந்த மொத்தக்கூடத்தையும் அடைத்துக்கொண்டு மாபெரும் சக்கரவடிவமொன்று தரையில் வரையப்பட்டிருதது. அதன் மீதுதான் அனைவருமே நின்றிருந்தார்கள். பல்லாயிரம் இதழ்கள் கொண்ட தாமரை. அந்த தாமரை இதழ்களுக்குள் சதுரங்களும் முக்கோணங்களும் ஒன்றையொன்று வெட்டித்தழுவி பின்னிச்சென்றன. சிவப்பு கருமை வெண்மை நிறங்களால் ஆன ஓவியம் அது. பலநூறு தாந்த்ரிக் ஓவியங்களில் நான் கண்டிருந்த சக்கரம்தான். அப்படி ஒன்பது சக்கரங்கள் உண்டு என்று அறிவேன். நடுவே தலைகீழ் முக்கோணம் கொண்ட அந்த சக்கரம் மூலாதாரம் என்னும் முதல்தாமரை. அதுதான் குண்டலினி உரங்கும் மலர். காம ஆற்றலின் ஊற்று.

தேவி பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இடத்தின் முன் தாமரை வடிவிலான மணையில் பத்மாசனத்தில் அமர்ந்தவராக பிரசண்டானந்தா பூஜைசெய்ய ஆரம்பித்தார். இரு சீடர்களும் இருபக்கமும் நின்று அவருக்கு உதவிசெய்தார்கள். கும்ப வடிவிலானா சக்தி பிரதிஷ்டை மீது விளக்குள் பட்டு அது ஒரு நெருப்புக்கோளம் போல சுடர்விட்டுக்கொண்டிருந்தது. அந்த பூஜைகளையும் மந்திரங்களையும் அது தன் உடலே கண்ணாக பெற்றுக்கொள்வது போலிருந்தது. வெளியே இருந்து சீடர்கள் பல்வேறு பொருட்களுடன் உள்ளே வந்தார்கள். கும்பத்தின் முன்னால் விரிக்கப்பட்ட

வாழை இலைகளில் ஏழு குவியல்களாக சூடான மாவு கொட்டப்பட்டது. பச்சரியும் வெல்லமும் சேர்த்து இடித்தது என்று மணம் மூலம் தெரிந்தது. அருகே ஏழு குவியல்களாக ஏழுவகை செம்மலர்கள். தெச்சி, செவ்வரளி, தாமரை ஆகியவற்றை மட்டுமே என்னால் அடையாளம் காண முடிந்தது.

பஞ்ச தத்துவ பூஜை என்பதை இணையத்தில் தேடி வாசித்திருந்தேன். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்று. ஐந்து 'ம'க்கள். பஞ்ச மகாரம். மலர், மாவு, மது, மாமிசம், மங்கை. சில இடங்களில் மந்திரம் என்றார்கள். சில இடங்களில் மைதுனம் என்றார்கள். வங்காளத்தில் ஒருகாலத்தில் மாபெரும் வழிபாட்டுமரபாக இருந்திருக்கிறது. இப்போது ஆனந்த மார்க்கிகள் போன்ற சிறு குழுக்கள் மட்டுமே செய்கின்றன.

சீடர்கள் ஏழு மண்கலயங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள். சித்திரங்கள் வரையப்பட்ட சிறிய கலங்களில் கிரீடம் போல வெண் நுரை தெரிந்தது. வாசனையிலேயே அவற்றில் புளித்த கள் இருப்பது தெரிந்தது. அவற்றை கும்பத்தின் இடப்பக்கம் பரப்பி வைத்தார்கள். வலப்பக்கம் ஒரு மரபீடம் போடப்பட்டிருந்தது. அந்த பீடம் மீது வெள்ளி போல பளபளத்த ஒரு வாளை உதயபானு வைத்தார். அந்த வாளையே நான் பார்த்துக்கொண்டிருதேன். அது ஒரு கண் போல ஆகி என்னையே உற்றுப்பார்த்தது.

என் மனம் பிரமைகொண்டு மிதப்பதை நானே கவனித்துக்கொண்டிருந்தேன். அங்கே இருந்த விசித்திரமான சூழலே யதார்த்த உலகில் இருந்து விலக்கிக் கொண்டு சென்றுவிடுவது. ஓயாது சீராக ஒலித்துக்கொண்டிருந்த மணியோசை மனதை 'மெஸ்மரைஸ்' செய்கிறது என்று பட்டது. அங்கே நிகழ்ந்த எல்லா சடங்குகளும் மிகவும் சீராக நிதானமாக மெல்லிய் நடனத்தன்மையுடன் சடங்குகளாக நடந்தன. மெதுவான அசைவுகளுக்கே மனதை மயக்கும் தன்மை உண்டு. அவற்றிலிருந்து நம்மால் பார்வையை விலக்கவே முடிவதில்லை. ஒன்றில் அரைமணிநேரத்திற்கு மேல் கண்களை வைத்திருந்தாலே போதும் அது நம்மை மயக்கி பிரமையிலாழ்த்த ஆரம்பித்துவிடும். அதை நம் ஆழ்மனம் பார்க்க ஆரம்பித்துவிடும்.

ஏன் இப்படி பேசிக்கொண்டே இருக்கிறது மனம்? இங்கே நிற்கும் அத்தனைபேரும் அதைத்தான் செய்கிறார்களா? அப்படியானால் எத்தனை குரல்கள் இங்கே கேளாமல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன! இல்லை, தர்க்கம் மூலம் எனக்குள் விரிந்துகொண்டிருக்கும் கட்டவிழ்ந்த பிரமையை கண்காணிக்கிறேன். அதற்காகவே இச்சொற்களைச் சொல்கிறேன். இப்படி சீராகக் கோர்த்துக்கொள்கிரேன். ஆனால் இந்த சொற்கோவைகளுடன் சம்பந்தமே இல்லாமல் என் மனம் பித்து கொண்டு அங்கிருந்த காட்சிகளின்

அசைவுகளுடன் சேர்ந்து அசைந்து கொண்டிருந்த்து. அந்த் மணியோசையுடன் சேர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

ஒரு சிறிய குறும்பாட்டுக் குட்டி தூக்கி வரப்பட்டது. அந்த மரப்பலிபீடம் மீது அது அமர்த்தப்பட்டது. எந்தக் கட்டும் இல்லாமல் அது வைக்கப்பட்ட இடத்திலேயே லேசாக நடுங்கியபடி அமர்ந்திருந்தது. அதை நன்றாக நனைத்திருந்தார்கள். அதன் கழுத்தில் சிவந்த மலர்மாலை போட்டு நெற்றியில் சிவந்த செந்தூரத்தை அப்பினார்கள். அதன் கண்கள் சிலையின் கண்கள் போல வெறித்து அசையாமல் நின்றன.

பிரசண்டானந்தா உரத்த குரலில் மந்திரங்களைச் சொல்லி கைகளால் விதவிதமான சைகைகளைச் செய்தபடி பூஜை செய்ய ஆரம்பித்தார். ஒரேபோல ஒலிக்கும் மந்திர உச்சாடனம் ரயிலோசை போல இருந்தது. சுழன்ற கையசைவுகளுடன் மலர்களையும் மாவையும் மாறி மாறி அள்ளி அந்த கும்பத்திற்கு ச் சமர்ப்பித்தார். நெடுநேரம் அந்த மந்திர உச்சாடனம் நடந்தது. ஒருவேளை அங்கிருந்தவர்களில் நான் மட்டுமே அந்த காலப்பிரக்ஞையை அடைந்தேன் போலும் என எண்ணிக்கொண்டேன். பின்பு பிரசண்டானந்தா எழுந்து அந்த பளபளக்கும் கத்தியை எடுத்து மும்முறை தூக்கி, தாழ்த்தி வணங்கியபின் அந்த ஆட்டின் கழுத்தில் வைத்தார்

என் உடல் சிலிர்த்து புல்லரித்தது. அந்தக் கத்தியை என் கழுத்தில் உணர்வதுபோலிருந்தது. வெட்டு வெட்டு என்று என் அகம் பொறுமையிழந்து எம்பியது. அந்தக் கத்தி என் கழுத்தை குளுமையாக மென்மையாக வெட்டிக் கிழிக்க எனக்குள் இருந்து சூடான குருதியும் விம்மி நிறைந்திருந்த எண்ணங்களும் வெளியே பீரிட்டன. ஒரு தெறிக்கும் கட்டி உடைந்து சலம் வெளியேறியது போல என் உடல் நிம்மதியடைந்தது. என் மனம் காலியாகியது. என் குருதி தரையில் சிதறிக்கிடந்தது. என்னுள் குமிழியிட்ட அனைத்தும் சிந்திப்பரவிக்கிடந்தன.

பிரசண்டானந்தா குருதியை அள்ளி அந்தக்குடம் மீது தெளித்தபின் திரும்பி கூடி நின்றவர்கள் மேல் வீசினார். என் கழுத்தின் மீது ஒரு மெல்லிய துளி பட்டபோது உடல் குலுங்கியது. அந்தக்குருதி நெருப்புபோல என் சருமத்தை எரித்தது. ஒரு மச்சம்போல அங்கேயே நிரந்தரமாக பதிந்துவிட்டது அது என எண்ணிக்கொண்டேன். சட்டென்று உலுக்கி விடுபட்டு கழுத்தை தொட்டேன். ஏதுமில்லை. மூக்கருகே கொண்டு சென்றேன். வாசனை ஏதுமில்லை. அதுவும் பிரமைதானா?



ஆட்டின் குருதியை மலர்களால் தொட்டு கும்பம் மீது போட்டுக்கொண்டே இருந்தார் பிரசண்டானந்தா. மீண்டும் மீண்டும் பொருளே இல்லாமல் ஒலிக்கும் மந்திரங்கள். இப்போது அந்த மந்திரங்களின் தாளமே என் சிந்தனையின் தாளமாக ஆகிவிட்டிருக்கிறது. என் விளிம்புகள் கரைந்து உள்ளே கொட்டிக்கொண்டிருக்கின்றன. நான் வேகமாக எல்லைகளழிந்துகொண்டிருக்கிறேன். அங்கிருந்து வெளியேற வேண்டுமென எண்ணிக்கொண்டேன். ஆனால் அதற்கு நான் பலரை தாண்டிச் செல்ல வேண்டும். தாண்ட என்னால் முடியுமா? அவர்கள் அனுமதிப்பார்களா?

வலப்பக்க வாசலில் இருந்து இருபக்கமும் இரு சீடர்கள் இரு பந்தங்கள் ஏந்தி வர அந்த ஒளியில் அதிரும் காட்சியாக லிஸ் முழு நிர்வாணமாக வந்தாள். அவள் தனியாக வந்ததனால்தான் அந்த நிர்வாணம் கண்ணுக்கு தெரிந்தது. அந்த ஆட்டைப்போலவே அவளும் கனவிலிருந்தாள். அவள் வந்து நின்றதும் பின்னால் ஒருவன் ஒரு பீ£டத்தை எடுத்துவந்தான். கவிழ்ந்த தாமரைபோல மரத்தாலான பீடம். அதை அவன் வைத்து அதன்மேல் செவ்விதழ்களை அள்ளிப்பரப்பினான்.

பிரசண்டானந்தா எழுந்து கைகூப்பியபடி குப்புற நிலத்தில் விழுந்து முகமும் தோள்களும் மார்பும் தரைபடிய வணங்கினார். பின்பு எழுந்து அவளை இரு கைகளாலும் சைகை காட்டி வழிநடத்தி அந்த பீடத்தில் அமரச் செய்தார். அவள்

அதன் மேல் அமர்ந்து வலதுகாலை விலக்கி தொங்க வைத்து இடதுகாலை தூக்கி மடித்து தொடையுடன் சேர்த்து அமர்ந்தாள். சிற்பங்களில் பெண்தெய்வங்கள் அமரும் முறை. அவள் பெண்குறி நன்றாக வாய்பிளந்து ஒரு ஆழமான உதிரக்காயம் போல தெரிந்தது.

என் நெஞ்சு அதிர்ந்துகொண்டே இருப்பதை உணர்ந்தேன். என் உடல் குளிரில் நடுங்குவது போல நடுங்க கழுத்துச்சதைகள் இறுக்கமாக இழுத்துக்கொண்டிருந்தன. அவள் கழுத்தில் செம்மலர் மாலை போடப்பட்டது. அவள் காலடியில் அந்த வெண்கலக்கும்பம் கொண்டுவந்து வைக்கப்பட்டது. அவள் பெண்குறியை பார்க்கலாகாது என என் கண்களை விலக்கினேன். ஆனால் என் கண்களுக்கும் பிரக்ஞைக்குமான தொடர்பே முற்றிலும் இல்லாமலாகிவிட்டிருந்தது. என் கால்கள் உடலுடன் தொடர்பற்றவை போல துவள இடது தொடை மட்டும் துடித்துக்கொண்டே இருந்தது.



வேட்டைப்புலியின் குருதிவழியும் வாய்போலத் தெரிந்தது அவள் பெண்குறி. பின்பு எரிந்தெழும் செஞ்சுடர் போல. பின்பு ஒரு சினம் கோண்ட விழிபோல. அந்த விழி என்னை மட்டுமே நோக்குவதுபோல் இருந்தது. அங்கே என்ன நடக்கிறதென்பதையே நான் அறியவில்லை. நானும் அந்த விழியும் மட்டுமே அங்கிருந்தோம். மனம் திடுக்கிட்ட ஒரு கணத்தில் அது எனக்கு மிக அருகே இருந்தது. நான் அதன்பின் என் நினைவை இழந்து மெல்ல துவண்டு விழப்போகிறோம் என்ற உணர்வை கடைசியாக அடைந்து விழுந்துவிட்டேன்

# இரவு 20

காலடித்தடங்கள் பரவிய

வெண்மணல் வெளி இந்தப் பகல்

இந்தக் கருங்கடலோ

ஆயிரம் பல்லாயிரம்

மரக்கலங்களோடியும்

தடமேதும் பதியாதது.



எத்தனையோ நாட்கள் நான் தூங்கிக்கொண்டே இருந்தது போல உணர்ந்தேன். கட்டிலில் மீண்டும் மீண்டும் உடம்பை முறுக்கியபடி படுத்துக்கொண்டிருந்தேன். எழவே முடியவில்லை. காய்ச்சல் இருப்பதைப்போல வாய் உலர்ந்து நாக்கு லேசான கசப்புடன் இருந்தது. மூக்கும் கண்களும் காந்தின. ஆனால் கழுத்தில் கையை வைத்துப் பார்த்தபோது காய்ச்சல் இருக்கவில்லை. அப்படியே மீண்டும் தூக்கத்திற்குள் சென்றேன். இம்முறை அரைமணிநேரம் தூங்கியிருப்பேன். அது தூக்கமில்லை, ஒரு மென்மயக்கம். மீண்டும் விழித்துக்கொண்டபோது கொஞ்சம் புத்துணர்ச்சி இருந்தது.

எழுந்து கொண்டு தலையை கையால் தாங்கியபடி கண்மூடி சிந்தனையை ஓடவிட்டு மெத்தையிலேயே அமர்ந்திருந்தேன். மிக முக்கியமான ஒன்று நம்முள் இருக்கும்போது அதை தொடத்தயங்கி சிந்தனைகள் சுற்றிச் சுற்றிச் செல்கின்றன. வீட்டுக்கு முக்கியமான விருந்தாளி வந்திருக்கையில் குழந்தைகள் நடந்துகொள்வதுபோல.

பளீரென்று ஓர் காட்சிப்படிமமாக அது என் முன் நின்றது. உடம்பு விதிர்க்க தலை நிமிர்ந்து அறைக்குள் யாரோ வந்துவிட்டது போல சுற்று முற்றும் பார்த்தேன். அதன் பின் அமர முடியவில்லை. அந்த நினைவுன் தீவிரம் உள்ளே அழுத்தும்போது உடல் நிலையாக நிற்க முடியவில்லை. பரபரப்புடன் கழிப்பறை சென்றேன். பற்பசையை மட்டும் எடுத்துக்கொண்டு திரும்பி வந்தேன். என்ன செய்கிறேன் என நானே வியந்தபின் மீண்டும் உள்ளேபோய் சிறுநீர் கழித்தேன்.

கண்ணாடியைப்பார்த்துக்கொண்டே பல்தேய்க்க ஆரம்பித்தேன். கண்களுக்கு கீழே களைத்த இமைச்சதைகளில் நிழல் படிந்திருந்தது. என் முகத்தில் நிரந்தரமான ஒரு திகைப்பு படிந்திருப்பது போல தோன்றியது. என்ன நினைத்தேன் என எனக்கே தெரியவில்லை. நேராக ஷவரை திறந்து விட்டு லுங்கியுடனும் சட்டையுடனும் நீர்ப்பொழிவில் நின்றேன். நீர் என் சிந்தனைகளின் மீது கொட்டியதுபோல அவை கனத்து குளிர்ந்து ஈரமாகப் படிந்து அமைதியாவதை உணர்ந்தேன்.

தலைதுவட்டியபோது நான் என் நிதானம் மீண்டு விட்டிருப்பதை உணர்ந்தேன். உடைமாற்றிவிட்டு கீழே வந்தேன். பங்கஜம் இருந்தாள். மாலை வெயில் முற்றத்தில் நீள நீளமான நிழல்களாக விழுந்து கிடந்தது. கண்கள் கூச திரும்பிக்கொண்டு டீபாயில் கிடந்த கருப்புக் கண்னாடியை எடுத்து மாட்டிக்கொண்டேன். சோம்பல் முறித்தபடி அமர்ந்து நாளிதழ்களை வாசித்தேன். எந்தச் செய்தியும் ஆர்வம் அளிக்கவில்லை.

பங்கஜம் வந்து ”சாய எடுக்கட்டே?” என்றாள். ”ம்” என்றேன். ”நாயர் வந்நிருந்நு” ”ம்?” ”ஈ வீடு ஒரு மாசத்தினு எடுத்ததாணத்ரே...நீட்டணமோ எந்நு சோதிச்சு”

நான் சற்றே யோசித்தபின் ”நான் அவர் கிட்டே பேசிக்கறேன்”என்றேன். அவள் இறுக்கமான முகத்துடன் விலகிச்சென்றாள்.

வெளியே நீளமான நிழல்களையும் மஞ்சள் ஒளியையும் பார்த்து அமர்ந்திருந்தேன். மிக இளம் வயது நினைவுகள் எழுந்தன. நானும் என் அம்மாவும் மஞ்சள் வெயில் ஒரு காலியான சாலையில் செல்கிறோம். பின்பு வேறெங்கோ ஒரு குளத்தின் மதிலில் நான் கைக்குழந்தையாக அமர்ந்திருக்க எதிரே நீரில் இதே போல மஞ்சள் வெயில். என்னருகே அம்மா இருக்கும் உனர்வு. மெல்லிய தன்னிரக்கம் ஒன்று நெஞ்சுக்குள் பரவியது

வெளியே செல்ல முடியும் என்று தோன்றவில்லை. என் கண்கள் கூசி கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது. ஒரு யோசனை தோன்றி மாடிக்குச் சென்று இன்னொரு கறுப்புக்கண்ணாடியை எடுத்து அதை முதல் கறுப்புக்கண்ணாடி மீதே மாட்டிக்கொண்டேன். இப்போது கண்ணுக்கு இதமான வெளிச்சம் உருவாகியது. மாலையின் மஞ்சள் ஒளி கறுப்பு தேநீர் நிறைந்த கண்ணாடிக்கோப்பை வழியாக வரும் ஒளி போல இருந்தது.

வெளியே இறங்கி தென்னை மர நிழல்கள் நடுவே நடந்து சென்றேன். காயலில் மாலையின் ஒளி அலைகளின் வளைவுகளில் பல்லாயிரம் உப்புச்சிதறல்களாக துள்ளிக்கொண்டிருந்தது. பாசிக்குமிழிகள் மீது நாலைந்து கொக்குகள் அமர்ந்து ஊசலாடின. நான் நெருங்கியதும் அவை எழுந்து பறந்தன. நீருக்குள் அவற்றின் பிரதிபலிப்புகள் ஆழமான எங்கோ பறந்து செல்வதைக் கண்டேன். காயல் விளிம்பில் படிக்கட்டுகளில் அமர்ந்துகொண்டேன்.

காயலையே பார்த்துக்கொண்டிருந்தேன். முதன் முதலாக அங்கே வந்தமர்ந்ததை எண்ணிக்கொண்டேன். மிக முக்கியமான எதையோ இழந்து விட்டேன் என்று பட்டது. எதை? தெரியவில்லை. அங்கே முதலில் வந்தமர்ந்ததன் பின்பு எத்தனையோ தீவிரமான அனுபவங்கள். ஒருமாதம் கூட ஆகவில்லை. அதற்குள் வெகுதூரம் தாண்டி வந்து விட்டிருக்கிறேன். அன்று நான் எந்த வாசலையும் திறக்காதவனாக, எல்லா முற்றங்களிலும் தயங்கி ஆவலுடன் நிற்பவனாக, இருந்தேன். அந்த ஆவலே அந்தக் காலகட்டத்தின் எனது இன்பமாக இருந்தது.

உடலுறவே அறியாத வயதில் பெண் அளிக்கும் பரவசம் அது. எல்லா பெண்களும் அழகிகளாக மனதை படபடக்க வைக்கிறார்கள். எந்தப்பெண்ணிடம் பேசினாலும் தொண்டை அடைத்துக்கொள்கிறது. உடல் வியர்த்து கைவிரல் நுனிகள் நடுங்குகின்றன. பெண்ணனுபவத்தின் ஆழங்கள் வேறு வகையில் நம்மை திறக்கின்றன . ஆனால் அறியாமையிலும் ஒரு பேரின்பம் இருக்கிறது.

நான் இழந்தது அறியாமையை. அறியாமை அளிக்கும் குதூகலத்தையும், அச்சமற்ற துள்ளலையும். ‘லாஸ் ஆ·ப் இன்னொசென்ஸ்’. எங்கோ வாசித்த வரி. நான் ஒரு கணம் ஏங்கிவிட்டேன். மீண்டும் திரும்பவே முடியாதா? மேலும் மேலும் ஆழத்திற்குத்தான் செல்ல முடியுமா? உடனே திரும்பி ஓடிவிட்டால் என்ன? ஆனால் என் பழைய உலகுக்கு என்னால் செல்ல முடியாதே. பழைய இடங்களுக்கு மட்டும்தானே செல்ல முடியும்?

என் எண்ணத்தை அறிந்ததுபோல காயல் மேல் பாசிப்படலம் வளைந்து எழுந்தமரக் கண்டு திடுக்கிட்டேன். அதையே அர்த்தமில்லாமல் பார்த்தேன். காயல் மீது இரு சிறிய படகுகள் மெதுவாகச் சென்றன. தூரத்தில் தேங்காய் நார் ஏற்றிய ஒரு படகு மாபெரும் சேவல் ஒன்று நீந்தி வருவது போல வந்தது. மீண்டும் பெருமூச்சு விட்டேன்.

முந்தாநாள் நான் விழுந்து கிடந்தபோது பூசை முடிவது வரை எவருமே என்னை தூக்கவில்லை. அரை மணிநேரத்தில் என் மயக்கம் தெளிந்து மூளைக்குள் ஆக்ஸிஜன் பரவியது. பனித்த கண்ணாடி துளித்து தெளிவது போல என் அகம் தெளிவடைய ஆரம்பித்தது. மணியோசையும் மந்திர உச்சாடனமும் கேட்டுக்கொண்டிருக்க நான் எங்கிருக்கிறேன் என்று தெரியாமல் சில நிமிடங்கள் பிரமித்து கிடந்தேன். கல்கத்தா தட்சிணேஸ்வர் கோயிலில் இருப்பதாக ஒரு எண்ணம் நெடுநேரம் இருந்தது.

தட்சிணேஸ்வருக்கு எட்டாண்டுகளுக்கு முன்பு ஒருமுறை சென்றேன். ஐம்பதுக்கும் மேலான ஆடுகளை அங்கே அன்று வெட்டினார்கள். பீச்சிய குருதி தரையில் தெறித்து அதன் மீது மனிதர்கள் நடந்து நடந்து கோயில் முழுக்க ரத்தத்தின் பச்சை வீச்சம். பெண்கள்கூட அந்தப் பச்சைக் குருதியை தொட்டு நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டார்கள். வெட்டப்பட்ட ஆடுகள் வரிசையாக தூக்கி கிடத்தப்பட்டிருந்தன. குருதி படிந்து உலர்ந்து திரிதிரியாக ஆன அவற்றின் சருமம் மீது ஈக்கள் ரீங்கரித்தன. கருவறைக்குள் பளபளக்கும் கிரீடமும், செம்பட்டும், வெறித்த விழிகளுமாக காளி அமர்திருந்தாள்

என்னைச்சுற்றி இருந்தவர்களிடமிருந்தே குருதி வாசனை வீசுகிறதென உணர்ந்து மெல்ல எழுந்தமர்ந்தேன். அவர்கள் தங்கள் உடலில் ஆட்டின் ரத்தத்தை சந்தனம் போல பூசியிருந்தார்கள். அது உலர்ந்து திட்டுகளாக படிந்திருந்தது. மணியோசை என் தலைக்குமேல் கேட்டது. பிரமை கொண்டவர்கள் போல அவர்கள் மெல்ல மெல்ல ஆடியபடி ஒரு குறிப்பிட்ட சைகையே செய்துகொண்டிருந்தார்கள். எனக்கு குமட்டல் வந்தது . என்னால் அமர்ந்திருக்க முடியவில்லை. தலை கனத்தது.

இரு வெள்ளையரின் தொடைகள் நடுவே உள்ள இடைவெளி வழியாக நான் பீடத்தில் அமர்ந்த லிஸ்ஸை பார்த்தேன். அவள் உடலெங்கும் குருதியும் குங்குமமும் பரவியிருக்க அடிவயிற்றின் கீழே திறந்த யோனிக்கு முன்னால் செம்மலர்கள். என் நெஞ்சு திடுக்கிட்டு உச்சத்தில் அதிர மீண்டும் நான் மயக்கம்கொள்பவனாக உணர்ந்தேன். ஆனால் அப்படியே படுத்துக்கொண்டேன். கண்களை மூடிக்கொண்டு இது முடிந்து விட வேண்டும், சீக்கிரம் முடிந்துவிட வேண்டும் என எண்ணிக்கொண்டிருந்தேன்.

அப்படியே தூங்கிப்போய் நான் விழித்தபோது என்னை முகர்ஜி மெல்ல தூக்கிக் கொண்டிருந்தார். நான் விழித்துக்கொண்டு ''முகர்ஜி, என்னுடைய கார்'' என்று அர்த்தமில்லாமல் ஏதோ சொன்னேன். ''கமான்'' என்றார் அவர். நான் சட்டென்று எழுந்து அமர்ந்தேன். என் முன்னால் கலைந்த மாபெரும் சக்கரத்தின் ஓவியம். அதன் மேல் மலர்கள். எண்ணை சொட்டிய தடங்கள். பூஜை நிகழ்ந்த இடத்தில் எதுவுமே இல்லை. அந்த கூடமே எச்சில்பட்டு கிடப்பது போலிருந்தது



''எல்லாரும் எங்கே?'' என்றேன். ''கமான்'' என்றார் முகர்ஜி. நான் அவருடன் மெல்ல நடந்தேன். தலையின் கனம் என்னை தள்ளியது. அவர் என்னை அவரது குடிலுக்கு அழைத்துச் சென்றதும் தரையில் பாய் விரித்து படுக்கச் செய்தார். பெரிய பித்தளை செம்பு நிறைய நுரைக்கும் கள் எடுத்து தந்து குடிக்கச் சொன்னார். நான் ''நோ'' என்று சொன்னபடியே அதை வாங்கி குடித்தேன். சில்லென்று அதன் புளிப்பும் இனிப்பும் சாராயமும் கலந்த வாடை என்னுள் நிறைந்தது. வரண்டு போயிருந்த என் தொண்டையும் நெஞ்சும் குளிர்ந்து சிலிர்க்க உடலை உலுக்கிக் கொண்டேன். ''ஸ்லீப்'' என்றார் முகர்ஜி

அன்று பகல் முழுக்க நான் அவரது குடிலுக்குள் தூங்கிக்கொண்டிருந்தேன். எப்போதோ ஒரு முறை விழித்துக்கொண்டபோது நீலிமா என்னை குனிந்து பார்த்துக்கொண்டிருந்தாள். கோபத்துடன். அல்லது குரோதத்துடன். நான் ''ஐயம் ஸாரி'' என்றேன். அவள் முகம் அப்படியே உறைந்திருந்தது. பார்வையை

திருப்பினால் மறுபக்கம் இன்னொரு நீலிமா. இந்தப்பக்கம் இன்னொரு நீலிமா. அறையைச் சுற்றி வேறு வேறு வடிவங்களில் அவள் நின்றுகொண்டிருந்தாள்.

நான் மீண்டும் தூங்கிவிட்டேன். நீலிமாவின் கொடூரமான பார்வை என்னை கட்டி நிறுத்தியிருந்தது. புலி தன் இரையை காலொடித்து போட்டுவிட்டு நிதானமாக அமர்ந்து வேடிக்கை பார்க்கும். அதன் கண்களைச் சந்தித்த இரை முடிவில்லாத ஒன்றை கண்ட பிரமிப்பில் அப்படியே உறைந்து நிற்கும். நீலிமாவின் வாய்க்குள் கோரைப்பறகள் ஒளிர்வதைக் கண்டேன். இரு சிறு குறுவாள்களைப்போல. அவள் நாக்கு செக்கச்சிவந்த ஒரு பாம்பு . எரியும் கண்கள். ஆனால் அவள் பேரழகுடன் இருப்பதாகவும் எனக்குப் பட்டது. ”நீயா?” என்றேன்.

நான் மாலையில் விழித்துக்கொண்டபோது முக்கர்ஜி அருகே நின்றார் ”நான் உங்களைக் கொண்டுபோய் வீட்டில் விடுகிறேன். இப்போது பரவாயில்லை அல்லவா?” ”யா, ஐ யம் ஓக்கே” என்று எழுந்து கொண்டேன். சோம்பல் முறித்தேன். குடிலுக்கு வெளியே சென்று மண் தொட்டியில் இருந்த குளிர்ந்த நீரால் முகம் கழுவினேன். உள்ளே வந்து என் உடைகளை அணிந்துகொண்டேன். உடைகளை அணிந்து கொண்டதுமே நான் பழைய மனிதனாக மீண்டு விட்டதுபோலிருந்தது.

”போவோம்” என்றார் முக்கர்ஜி .நான் எதையாவது சாப்பிட விரும்பினேன். அல்லது ஒரு டீயாவது. அதை உணர்ந்தவர் போல ”நாம் போகும் வழியிலேயே சாப்பிடலாம்” என்றார். என் காரிலேயே என்னை பக்கத்தில் அமரச்செய்து அவர் ஓட்டினார். கார் கடற்கரைச் சாலையில் சீரான வேகம் கொண்டபோது மெல்ல மெல்ல நான் சமநிலைக்கு மீண்டு வந்தேன். ”நேற்று என்ன நடந்தது என்றே தெரியவில்லை” என்றேன்.

”நீங்கள் அதைப்பற்றி பேச விரும்புகிறீர்களா?” என்றார் முகர்ஜி ”ஏன்?” என்றேன். ”பேசினால் அது பலவீனமாகும். வெறும் தர்க்கமாக ஆகும். அதன் ஆழம் மறைந்துவிடும்” ”பரவாயில்லை. முழுக்க தர்க்கமாக ஆனபின்னர் எது எஞ்சுகிறதோ அது போதும்” ”அப்படியானால் பரவாயில்லை” ”நான் இந்த அளவுக்கு பலவீனமானவன் என்று நினைக்கவில்லை” என்றேன். ”ஆம் எனக்கும் அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் படித்தவர். வாசிக்கும் பழக்கமும் இருக்கிறது” என்றார் முக்கர்ஜி ”சுவாமிஜி பொதுவாக இப்படி ஒருவரை ஆரம்பத்திலேயே உள்ளே விடுவதில்லை. அவருக்கு ஏதோ திட்டம் இருக்கிறது”

”என்ன நடந்தது எனக்கு?” என்றேன். ”வேறொன்றுமில்லை. நம்முடைய இந்திய மனம் பலவகையான தீவிரமான மனப்பழக்கங்கள் கொண்டது. காமமும்

நிர்வாணமும் இன்னமும் நமக்கு எளிதானவையாக இல்லை. நேரடியாக உடலை எதிர்கொள்ள நாம் இன்னமும் பழகவில்லை. ஆகவே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நம் அகம் கடுமையான அதிர்ச்சியைச் சந்திக்கிறது... அதுதான்" என்றார் முகர்ஜி "நான் இதை எப்படி விளக்குவேன் தெரியுமா? உங்கள் ஆழத்தில் உள்ள தூய பிரக்ஞை மிகப்பெரிய ஒன்றை கண்டுகொண்டது. மேல் மனத்தில் உள்ள ஒழுக்கப்பிரக்ஞை அதை இறுக்கிப்பிடிக்க முயன்றது. உனக்குள் நிகழ்ந்த அந்த போராட்டத்தை உன்னால் தாங்கமுடியாமலானபோது உன் மனம் தன்னை அணைத்துக்கொண்டு அதில் இருந்து தப்பித்தது"

நான் ஒன்றும் பேசவில்லை. "என்ன?" என்றார் முகர்ஜி. "இதேபோன்ற சொற்களுக்கு நீங்கள் நன்றாக பழகிவிட்டிருக்கக் கூடும் என நினைக்கிறேன்" என்றேன் "சரி, இது ஒரு ஊகம். சரியாக இருக்க வேண்டியதில்லை. இதுபோல எத்தனையோ ஊகங்களை சொல்லலாம். இப்படி எதைச் சொன்னாலும் அவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று முரண்படுவதாகவே இருக்கும். உண்மைக்கு மிக அருகே செல்வதுபோலவும் இருக்கும். உண்மையை நெருங்க முடியாதவையாகவும் இருக்கும்"

கார் சென்றுகொண்டே இருந்தது. சற்று நேரம் கழித்து முகர்ஜி மேலும் சொன்னார் "தாயும் தந்தையும் உடலுறவு கொள்வதை பார்க்கும் குழந்தை அடையும் அதிர்ச்சி போன்றது இது என்று சொல்லலாம். நீங்கள் பார்த்தது ஓர் உண்மை. அந்த உண்மையை தாங்கும் சக்தி உங்கள் முதிராத மனதுக்கு இல்லை. ஆனால் அந்த உண்மைக்குப் பழகப் பழக நீங்கள் அதை சாதாரணமாக உணர முடியும்"

காரில் நெடுநேரம் ஆழமான அமைதி நிலவியது. முக்கர்ஜி தொடர்ந்தார் "இதே அனுபவம் தலைகீழாக ஆகும் தெரியுமா? உங்கள் கண்ணிலும் நினைவிலும் காமம் குடியேறியபின் உங்கள் அம்மாவை நிர்வாணமாக பார்க்க நேர்ந்தால் –" "ஓ, ஷட் அப்" என்றேன். "ஸாரி" என்றார் முக்கர்ஜி "பட் –" "ப்ளீஸ்" என்றேன். அவர் "ஸாரி..." என்று அமைதியடைந்தார்

கார் தாப்புவலைக்காரர்களின் டீக்கடை முன் நின்றது. சாலையில் செல்லும் வண்டிகளின் ஒளி அதை சுடரச் செய்து அணைப்பதன்றி வேறு விளக்கே இல்லை. காரை நிறுத்தி விட்டு ஒரு சொல் கூட பேசாமல் முக்கர்ஜி இறங்கிச் சென்றார். நாங்கள் அங்கே சென்றபோது கிட்டத்தட்ட எல்லா பெஞ்சுகளிலும் ஆளிருந்தது. கடைக்காரர் வந்து இரு மர ஸ்டூல்களை போட்டார். நாங்கள் அமர்ந்துகொண்டோம்

எதிரே பெரச்சனைப் பார்த்தேன். அப்பால் தோமா. இருவரும் என் கண்களைச் சந்தித்து கண்ணிமைப்பாலேயே குசலம் செய்தனர். முகர்ஜி மெல்லிய குரலில்

புட்டு பப்படம் பயறு சொன்னார். நான் என்னுள் ஆழ்ந்து அமர்ந்திருந்தேன். புட்டு வந்ததும் மௌனமாக சாப்பிட்டோம். மௌனமாகவே பணம் கொடுத்துவிட்டு எழுந்து தோமா ,பெரச்சன் இருவரிடமும் சிறு கண்ணசைவால் விடைபெற்று மேடேறினோம். திடீரென்று எனக்கு நான் மண்ணிலிருந்து ஆழத்துக்கு இறங்கி ஒரு பாதாள உலகுக்குள் சென்று மீண்டது போலிருந்தது. எலிகளின் உலகம். அல்லது ஆவிகளின் உலகம். மௌனமானது. கரும்பாறைபோல.



மீண்டும் காரில் இருவரும் இரு ஆவிகள் போல பயணம்செய்தோம். என் வீட்டுக்கு திரும்பும் வழியில் முக்கர்ஜி மென்ன கனைத்தார். ''நான் சொல்வது இதைத்தான். எதற்காக அடித்தளத்தை அஞ்ச வேண்டும்? எதற்காக உண்மைக்கு முன்னால் கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும்? உண்மை அப்பட்டமானது. தாகத்துக்கு நீட்டிய கோப்பையில் கடல் வந்து கொட்டுவதுபோலத்தான் அது நம் முன்வரும் என்று ஒரு வங்காளி பவுல் பாட்டு உண்டு... நான் சொல்வதை சரியாகச் சொல்லியிருக்கிறேனா என்று தெரியவில்லை''

நான் ஏதாவது சொல்வேன் என்று தயங்கிவிட்டு முகர்ஜி மேலும் தொடர்ந்தார். ''உண்மையை கொஞ்சம் கொஞ்சமாக பழக்கப்படுத்திக்கொள்வோம். அதன் பின்னர் நமக்கு கிடைக்கும் விடுதலையே அலாதியானது. பொய்யில் நாம் வாழும்போது நமக்குள் உண்மை ஒரு ரகசியமான பிரக்ஞையாக இருந்துகொண்டே இருக்கிறது. அதனால் ஒருபோதும் நம்மால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. நம் அகம் பதைத்துக்கொண்டே இருக்கிறது. நம் கால்கீழே பூமி எக்கணமும் சிதைந்துவிடும் என்ற பயம் இருக்கிறது நம்மிடம். ஆனால் இங்கே அது இல்லை. உண்மையின் கரும்பாறை மீது நாம் நின்றிருக்கிறோம்''

''கிறித்தவர்களை நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன். இந்த ஆழத்தை அவர்கள் உணர்ந்துகொண்டே இருக்கிறார்கள். அதை பாவம் என்ற சொல்லைக்கொண்டு மூட முயல்கிறார்கள். தலையை மூடினால் கால் வெளியே தெரியும். தன்னை ஏமாற்றிக்கொள்ளாத ஒரு கிறித்தவன் வாழ்நாள் முழுக்க பாவத்துடன் போராடித் தோற்றுக்கொண்டே இருப்பான். அதன் குற்றவுணர்ச்சியை சுமந்து அவன் ஆன்மா வளைந்திருக்கும். அதை தன்னிடமிருந்தே மறைக்க வேடங்கள் போடுவான். அந்தரங்கத்தில் அச்சம் நிறைந்தவனாக இருப்பான். அதைவெல்ல எப்போதும் பைபைளப்பற்றி பிறரிடம் பேசிக்கொண்டிருப்பான். அந்தச்சொற்களெல்லாமே அவன் தனக்குத்தானே சொல்லிக்கொள்வது.

ஒருவனை மதம் மாற்ற முடிந்தால் ஒரு கிறித்தவன் தனக்குள் இருக்கும் ஒரு அவிசுவாசியைத்தான் ஜெயிக்கிறான். பிராக்ஸி வார்...ஹஹாஹா!"

ஒருகட்டத்துக்குமேல் நான் அதைப்பற்றி எதையும் கேட்க விரும்பவில்லை. ஆனால் முகர்ஜி பேச விரும்பினார் " அவன் தன்னை ஏமாற்றிக்கொள்ள விரும்பாத அளவுக்கு நேர்மையானவன் என்றால் தன்னை கசப்பு நிறைந்தவனாக ஆக்கிக்கொண்டிருப்பான். தோமஸைப்போல...பாவம் மனிதர்" என்றார் முகர்ஜி

நான் வெளியே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன். முகர்ஜி மெல்ல அவரே பேச்சை நிறுத்திக்கொண்டார். மேனனின் வீட்டில் மெல்லிய சிவப்பு வெளிச்சம் ஜன்னல்கள் ஓட்டுக்கூரை இடுக்குகள்வழியாக கசிந்துகொண்டிருந்தது. சூளை போன்றிருந்தது அந்த வீடு. முகர்ஜி "வெல்...நான் சொல்ல வந்தது என்னவென்றால், நாம் காமத்தை பலவாறாக பிரித்து வைத்திருக்கிறோம். காதல் தாய்மை பாசம்....காமத்தை ஆதிப்பெரும் வல்லமையாகப் பார்த்தால்தான் அதிலிருந்து ஆரம்பித்து பிற ஆற்றல்களை நோக்கிச் செல்ல முடியும். ஆகவேதான் சக்திவழிபாட்டில் காமத்தையும் அன்னையையும் ஒன்றாக இணைக்கிறார்கள் . நாம் நம் தாயால் வளார்க்கபப்ட்டிருக்கும் விதம் – "

"ப்ளீஸ் ஸ்டாப்பிட்" என்றேன். "ஓகே. நாம் மறுபடியும் சந்திப்போம்" என் வீட்டு முகப்பில் முகர்ஜி காரை நிறுத்தினார். நான் இறங்கிக்கொண்டேன். "எப்படி போவீர்கள்?" என்றேன். "அது பிரச்சினையே இல்லை. மேனன் வீட்டில் யாராவது வருவார்கள் கூடவே சென்று நகரில் இறங்கி டாக்ஸியில் செல்வேன். பை" நான் படிகளில் நின்று "பார்ப்போம்" என்றேன். "கண்டிப்பாக. நான் வருகிறேன். இந்த முதிய யட்சியை தரிசனம் செய்துவிட்டுச் செல்கிறேன்..." சிரித்துக்கொண்டே தென்னை மரங்களின் வழியாக நடந்து சென்றார். நான் உள்ளே சென்று உடைகளுடன் படுத்துக் கொண்டேன்.

உரத்த சினிமாப்பாட்டொலியுடன் ஒரு சுற்றுலாப்படகு காயலில் சென்றது. ஏதோ இந்திப்பாட்டு. எல்லா இந்திப்பாட்டுகளும் ஒன்றுபோலிருப்பதாக, எங்கோ ஏற்கனவே கேட்டவையாக, தெரியும் எனக்கு. எனக்கு இந்தி அறிமுகம் மிகமிகக் குறைவு. படகின் முகப்பில் சூரல் நாற்காலியில் குண்டான வட இந்தியர் சேட்டு அவரைப்போலவே குண்டான மனைவியுடன் ஒரு ஷார்ட்ஸ் மட்டுமே அணிந்து அமர்ந்திருந்தார். மனைவி பூப்போட்ட பாலிஸ்டர் புடவையை முக்காடு போட்டு க்கொண்டு அமர்ந்திருக்க அவளருகே இரு பெண்கள் கரையை பைனாக்குலர் வைத்து பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

அவர்களுக்கு எப்படி அந்த பயணத்தை ரசிப்பதென தெரியவில்லை என்று ஊகித்தேன். எல்லாரும் சொல்கிறார்களே என்று கிளம்பி வந்திருக்கிறாரக்ள்.

ஆனால் இதில் என்ன இன்பம் இருக்கிறதென்றும் புரியவில்லை. நீர், தென்னைமரக்கூட்டங்கள், வானம். வேறு என்ன இருக்கிறது? இருட்டிவிட்டது. மரக்கூட்டங்கள் நிழல்குவியல்களாக ஆக ஆரம்பித்துவிட்டன.

மேனன் வீட்டில் இருந்து இசை கேட்டது. கூரிய வீணை அதிர்வு. மேனன் வெளியே இறங்கி முற்றத்தில் நின்று என்னைப்பார்த்தார். பின்பு கையை ஆட்டினார். நானும் கையசைத்தேன். 'ஹாய்" என்றபடி அவர் என்னை நோக்கி வந்தார். "இங்கே என்ன செய்றே?" "சும்மாதான்" "சுவாமிஜியோட பூஜை உன்னை அதிர்ச்சி அடைய வச்சிட்டுதாமே" "அதிர்ச்சி இல்லை...வேறு ஏதோ ஒரு மனக்குழப்பம்" "இப்ப சரியாயிட்டியா?" "பைன்" "நீ அங்கே போயிருக்கவே கூடாது. ஐயம் ஸாரி, நான் தான் உன்னை அவர்களுக்கு அறிமுகம் செய்தேன். சுவாமி உன்னிடம் பேசிக்கொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை" "அதனாலென்ன, ஓர் அனுபவம் தானே?"

மேனன் என்னருகே அமர்ந்தார். "அனுபவம்னா, உண்மைதான்" என்றார். "பட் திஸ் இஸ் டிரீம், தட் இஸ் நைட்மேர்" "ட்ரூ" என்றேன். "உண்மைய எதுக்காக அப்டி குரூரமா உருவகிச்சுக்கணும்? அழகா பரவசமா ஏன் அதை உருவகிச்சுக்கக் கூடாது? எனிவே இதெல்லாமே வெறும் உருவகங்கள் மட்டும்தானே?" என்றார் மேனன் "என்ன பிரச்சினைன்னா இந்த ஆட்களுக்கு உண்மை உண்மையா இருந்தா மட்டும் போதாது. அது வந்து அறையணும். அதிர வைக்கணும். இவங்களுக்குள்ள இருக்கிற எல்லா பொய்யோட மிச்சங்களையும் அந்த வேகத்திலே அது அடிச்சுட்டு போயிடணும்....அவங்க எதிர்பார்க்கிறது அதுதான். ரப்பிஷ்"

"பின்ன என்ன செய்யலாம்கிறீங்க?" என்றேன். "உண்மைன்னா அது கடல். கடல் மாதிரி அது வந்துட்டே இருக்கிறப்ப நமக்குள்ள இருக்கிற எல்லா பொய்யும் கொஞ்சம் கொஞ்சமா நாமே அறியாம கரைஞ்சு போயிடுதுல்ல? அது தான் சரியான வழி. எதுக்கும் அதுக்கான பரிணாம காலகட்டம் இருக்கு. அதுக்கான அவகாசத்த நாம குடுக்கணும்..." "எனக்கு இது ஒண்ணுமே புரியலை" என்றேன்.

"இங்கிலீஷிலே 'லிவிங் இன் த டே லைட்'னு ஒரு இடியம் உண்டு. பொய்களிலே ஒளிஞ்சுக்காம உண்மையோட வெளிச்சத்திலே வந்து நிக்கிறதுன்னு அதுக்கு அர்த்தம். உண்மையிலே பகலே ஒருபெரிய மறைப்புதான். வெளிச்சம் ஆழத்திலே இருக்கிற எத்தனையோ விஷயங்களை மறைச்சிடுது. அந்த மறைப்பை களைஞ்சுட்டு வந்து வெட்டவெளியிலே நிக்கிறதுதான் ராத்திரியிலே வாழறது. லிவிங் இன் ப்யூர் சப்கான்ஷியஸ். நீ அதைத்தான் பயப்படறே. அதன் ஆழம் உன்னை பயமுறுத்துது"

நான் ''உண்மைதான்'' என்றேன். ''எதுக்காக இந்த பயங்கரங்களை நான் சந்திக்கணும்னு இருக்கு'' என்றேன். ''உனக்கு புற்றுநோய் இருக்குன்னா அதை உங்கிட்ட டாக்டர் சொல்லணும்னுதானே நினைப்பே? அதை தெரிஞ்சுகிட்டு கொஞ்சம் கொஞ்சமா அதுக்கு சமரசமாயிடுவே. அதிலே வாழ ஆரம்பிச்சிருவே. அதை அறியாம மூட சந்தோஷத்திலே வாழ ஆசைப்படுவியா? அப்டி வாழ்ந்திரத்தான் முடியுமா?'' நான் ''எல்லாத்துக்கும் லாஜிக் இருக்கு'' என்று புன்னகைசெய்தேன்.

''உண்மைதான்... லாஜிக்கை மீறி மனசுக்கு உண்மை தெரியும். அதாவது உண்மைய லாஜிக் வழியாத்தான் கைமாற முடியும். லாஜிக்கோட இடைவெளிகளிலே அதை ரகசியமா வச்சு பரிமாறணும்...'' மேனன் சிரித்தார் ''கொஞ்சம் கொஞ்சமா நானும் ஒரு ·பிலாச·பரா ஆயிட்டு வர்ரேன் பாத்தியா? நைஸ்'' நானும் இறுக்கம் விலகி வாய்விட்டு சிரித்தேன்.

மிண்டும் சட்டென்று தீவிரமாகி மேனன் சொன்னார். '' தாந்தேயோட டிவைன் காமெடியிலே மாவீரனான யுலிஸஸ்தான் பாதாள உலகங்களுக்குப் போறான். ஒரு மாபெரும் வீரன் மட்டும்தான் ஆழங்களுக்கு போக முடியும். பயமே இல்லாதவன், தன்னோட ஆற்றல் வெளிப்படறதுக்கான சந்தர்ப்பமா எல்லா சவாலையும் பாக்கக்கூடியவன். அந்தமாதிரி வீரனாலதான் அங்கே போக முடியும்...'' நான் பீமனைப்பற்றி நினைத்துக்கொண்டேன்.

மேனன் வீட்டுமுன் கார் வந்து நின்றது. அது நீலிமாவின் கார் என்றறிந்து என் மனம் படபடக்க ஆரம்பித்தது. நீலிமாவும் நாயரும் இறங்கி எங்களைப்பார்த்தார்கள். வீட்டுக்குள் இருந்து வந்த கமலாவும் எங்களைப் பார்த்தார். அவர்கள் எங்களைச் சுட்டி ஏதோ சொன்னார்கள். பின்பு மூவரும் எங்களை நோக்கி வந்தார்கள்.

நாயர் ''என்ன இங்கே? ·பிலாஸ·பியா?' என்றார். ''கொஞ்சம்...'' என்று சிரித்தேன். ''தானா கனியாததை தடியால அடிச்சு கனியவைக்கிறதுக்கு பேருதான் ·பிலாச·பி '' என்ற நாயர் அதை அவரே ரசித்து ஹோஹோ என்று அண்ணாந்து சிரித்தார். ''சரியாச்சொல்லணுமானா கனியவைக்கிறதுதான். ஆனா தடியாலே இல்லை. செறிய வயசிலே எங்க வீட்டிலே பெரிய பலாக்காய்களை பறிப்பாங்க. அதை பழுக்க வைக்கணும்கிறதுக்காக காஞ்சிர மரத்திலே இருந்து குச்சி ஒடிச்சு அதிலே குத்தி வைச்சிருவாங்க. மறுநளைக்கே பழுத்து அறைமுழுக்க மணமா இருக்கும். அறுத்தா தேன் சொட்டும்'' என்றார் மேனன். ''காஞ்சிரம் எப்டி கசக்கும் தெரியும்ல? கனியவைக்கிற கசப்பு தன் இஸ் ·பிலாஸ·பி''

நீலிமா சிரித்துக்கொண்டே பேசாமல் நின்றாள். எங்கள் கண்கள் சந்தித்து ரகசியமாக ஒரு புன்னகையை கைமாறிக்கொண்டன. பின்பக்கம் காயலில் ஒரு

படகு எங்களை நோக்கி வந்தது. அதிலிருந்த படகோட்டி ”மேனன் சாரே? சவாரி உண்டோ?” என்றார். ”ஓ இந்நில்லடா” என்றார். ”வேம்பநாட்டு காயலிலேக்கு போகாம். அசலாய வேலியேற்றமுண்டு...” மேனன் என்னைப்பார்த்து ”என்ன போகலாமா?” என்றார். நான் ”ஓகே” என்றேன்

நாயர் ”நோ ஐ ஹேவ் நோ மூட்” என்றார். ”எந்நா தானிவிடே இருந்நோ” என்ற மேனன் ”அடுத்துவாடே” என்று படகுக்காரனிடம் சொன்னார். மோட்டார் பொருத்தப்பட்ட சிறிய உல்லாசப்படகு. பழங்கால கூண்டுவண்டிகள் போல கவிழ்க்கப்பட்ட கூடை வடிவப் பிரம்புக்கூரை .அதன் முகப்பில் அமர்ந்துகொள்வதற்கான சூரல் நாற்காலிகள், ஒரு மேஜை. உள்ளே பாட்டரியால் இயங்கும் விளக்கு.

புகை அதிர அது நெருங்கி வந்தது. முதலில் மேனன் இறங்கி படகுக்காரன் போட்ட பலகை வழியாக படகுக்குள் சென்றார். அதன்பின் கமலா செல்ல அவர் பிடித்துக்கொண்டார். கமலா ”ஊ” என்று உற்சாகமாக கூவி உள்ளே குதித்தார். அதன்பின் நீலிமா. கடைசியாக நான். படகு மெல்ல ஆடியபின் மெல்லிய மோட்டார் ஒலியுடன் கிளம்பி நீர் நடுவே சென்றது. படகுக்காரன் விளக்கை அணைக்க நாங்கள் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டோம். படகை நன்றாக திருப்பி நீரோட்டத்தில் விட்டுவிட்டு மோட்டாரை அணைத்துவிட்டான்.



மெதுவாக ஒழுக்கில் சென்றது படகு. ”மோட்டார் வேண்டே?” என்றேன் படகுக்காரனிடம். ”ஆஹா, இயாள் மலையாளம் படிச்சல்லோ” என்றார் கமலா சிரித்துக்கொண்டே நீலிமாவைப் பார்த்தபின். நீலிமா என்னை நோக்கி சிரித்தாள். படகுக்காரன் ”பெரியாற்று ஒழுக்குண்டு சாரே..நேரே கடலிலேக்கு போய்க்கோள்ளும். ராத்ரி பத்துமணிக்கு வேலியேற்றம் தொடங்ஙும். மடங்ஙி உள்ளில் வராம்…” என்றான். ”ஓரோ கட்டன் சாயா இடட்டே?” மேனன் ”ஆய்க்கோட்டே” என்றார்.

சூடான டீயை நீர் நடுவே அருந்துவது வினோதமான நிறைவை அளித்தது. இருபக்கமும் தென்னைமரத்தோப்புகள் நடுவே உயர்ந்த கட்டிடங்கள் மிதந்து பின்னால் சென்றன. ”இன்னும் கொஞ்ச வருஷம்…இந்த காயல்கரை முழுக்க ·ப்ளாட் வீடுகளாயிடும்” என்றார் மேனன் ”அப்ப நாங்க இங்கேருந்து போயிடுவோம். கொல்லம் பக்கம் போயிடலாம். அங்கே காயல் இன்னும் காயலாத்தான் இருக்கு” நான் ஒளிநிறைந்த கட்டிடங்களையே பார்த்தேன். மாபெரும் பொன்வண்டுகள் போலிருந்தன. காயலோரத்துச் சாலையில் செம்மணிச்சரம் போல கார்கள் சென்றுகொண்டிருந்தன.

”நாங்க இங்கே வந்தப்ப இந்த நகரத்திலே இத்தனை கார்கள் இல்லை” என்றார் மேனன். ”இப்ப கேரளத்திலே கார்கள் இருக்கு ஓடுறதுக்கு ரோடுகள் இல்லை…சீக்கிரமே பணக்காரங்க ஹெலிகாப்டருக்கு மாறிடுவாங்கன்னு நினைக்கிறேன்” நகரம் மிதந்துகொண்டிருப்பது போலிருந்தது. நீலிமா அவளது பெரிய விழிகளால் என்னை பார்த்துக்கொண்டிருந்தாள். கண்களுக்குள் செவ்வொளி மின்னிக்கொண்டிருந்தது. மாசற்ற கன்னங்கள். மென்மையும் உயிரும் வழிந்த கழுத்து. விரிந்த தோள்களில் கூந்தலிழைகள் வந்து படிய மெல்ல அவற்றை விலக்கி பின்னால் தள்ளினாள்.

பேச்சு மெதுவாக நின்றுவிட்டிருந்தது. விழிகளில் பிரக்ஞை மையம் கொள்ள சுழன்று பின்னால் மறையும் நகரையே பார்த்துக்கொண்டிருந்தோம். கொச்சி உயர்ந்த கிரேன்களில் விளக்குகளுடன் எங்களை நோக்கி மிதந்து அலைபாய்ந்து வந்துகொண்டிருந்தது. நான் வானத்தின் விண்மீன்களைப் பார்த்தேன். காற்றில் அவை ஆடுவது போல தோன்றியது. காற்றில் கட்டிடங்கள் திரைச்சீலை போல ஆடின.

சட்டென்று ஒரு கார் எதிரே திரும்ப அந்த செந்நிற ஒளியில் நீலிமாவையும் கமலாவையும் சில கணங்கள் பார்த்தேன். செந்தழலால் எழுதப்பட்ட இரு ஓவியங்கள் போல தெரிந்து மறைந்தார்கள்

# இரவு 21

**குருதி**
**உறைந்து**
**கனத்து**
**பூச்சிகளால் ரீங்கரித்து**
**உலர்ந்து**
**கறுப்பதுபோல்**
**வருகிறது இரவு**



நான் உசுப்பி எழுப்பப் பட்டபோது கூரிய பளபளக்கும் வாள்போல என் உடல் மீது குறுக்காகக் கிடந்த வெயிலைத்தான் முதலில் பார்த்தேன். ஜன்னல் சற்றே திறந்து கண்கூசும் ஒளிக்கோடாக இருந்தது. ''சார்'' நான் திடுக்கிட்டு எழுந்து ''யாரு?'' என்றேன். 'உண்ணிகிருஷ்ணனாக்கும் சார். சுவிச்சு எவிடேந்நு தெரியாமல் நான் ஜன்னல் துறந்நேன்'' நான் லுங்கியைக் கட்டிக்கொண்டு எழுந்து நேரத்தைப்பார்த்தேன். மணி மூன்றரை. ''என்ன?'' என்று எரிச்சலுடன் கேட்டேன்.

”சார், பக்கத்துவீட்டிலே போலீஸ் வந்நிருக்கு” நான் புரியாமல் விழித்து ”என்னது?” என்றேன். ”போலீஸ¤ சார்...போலீஸ் வந்நிருக்கு.. பயங்கரமான ஸம்பவங்ஙள் நடந்நு போச்சு... ” குரலைத்தாழ்த்தி ”அந்த மேனோன்ஸ்த்ரீயை ஆரோ கொந்நு போட்டாங்க” என் மூளை அப்போதும் இயங்கவில்லை. அவர் என்னருகே குனிந்து ”அந்த மேனோன் சாருக்க வை•பை கொந்நு போட்டாங்க சார்”

நான் குதித்து எழுந்து நின்றேன். என் தொடை அநிச்சையாக படபடவென ஆடியது. கண்கள் மங்கலாகி வந்தன. ”என்னது? என்னய்யா சொல்றே?” ”அந்த ஸ்திரீ...” ”ஆரு கமலாவா?” ”அதேதான் சார். அவள் இந்நு காலையிலே காரிலே ஒரு ஆசிரமத்துக்கு போயிரிக்காள். அங்கே ஒரு சுவாமியும் இவளும் ஒந்நா இருந்நதைக் கண்டு அவ்விடம் உள்ள ஒரு பெங்காள்காரன் ரண்டாளையும் வெட்டிக் கொந்நுபோட்டான்” நான் தள்ளாடி மெத்தையில் விழுந்து விட்டேன்.”சாரே, சாரே”

காய்ந்த உதடுகளுடன் தண்ணீர் என சுட்டிக்காட்டினேன். அவர் தண்ணீரை விட்டு எனக்கு தரும்போது தளும்பி தரையில் கொட்டியது. என்னால் டம்ளரைச் சரியாக பிடிக்க முடியவில்லை. நீர் வாயில் தளும்பி மெத்தைமேல் கொட்டியது. குளிர்ந்த ரப்பர் பந்தாக நீர் தொண்டையில் நிற்பது போலிருந்தது. சில கணங்களுக்குப் பின்னர் சட்டென்று மொத்த உண்மையும் என் தலையை அறைந்தது.

தீச்சுட்டவனைப்போல எழுந்து கீழே ஓடி, பிரக்ஞை கொண்டு மேலே வந்து சரசரவென உடை மாற்றி மீண்டும் கீழே ஓடி, வெயிலில் கண்கூச மீண்டும் மேலே வந்து கறுப்புக்கண்ணாடியை அறையெங்கும் வெறி¢ பிடித்தவன் போல தேடி உண்ண்கிருஷ்ணன் எடுத்துக்கொடுக்க அதை வாங்கிக்கொண்டு மீண்டும் கீழே ஓடி, தென்னைமரக்கூட்டங்கள் வழியாக பாய்ந்து மேனன் வீட்டை அடைந்தேன்.

முற்றத்தில் ஒரு ஜீப் நின்றிருந்தது. காக்கி அணிந்த டிரைவர் பானெட்டில் சாய்ந்து நிற்க உள்ளே பேச்சொலிகள் கேட்டன. நான் டிரைவரிடம் ”வேர் இஸ் த இண்ஸ்பெக்டர்?” என்றேன். அவர் ”அகத்தொண்டு” என்றார். நான் படிகளில் ஏறி வாசலில் நின்றேன். உள்ளிருந்து ”ஆ முறி ஒந்நு துறந்நே” என்று சொன்னபடி வந்த இன்ஸ்பெக்டர் ”ஆரா?” என்றார். நான் என்னை அறிமுகம் செய்துகொண்டேன். ”அட்மிரல் எங்கே?” என்றேன். அவர் சூபரிண்டெண்ட் ஆ•பீஸில் இருப்பதாகச் சொன்னார்.

நான் இறங்கி வெளியே ஓடி என் வீட்டுக்குச் சென்று காரைக்கிளப்பி சாலையில் புழுதி பறக்க விரைந்தேன். மரணம். எனக்கு தெரிந்த்துதான்.

ஆனால் ஒவ்வொருமுறையும் அருகே பார்க்கும்போது அதன் பிரம்மாண்டமான மர்மம் மனதை உறையச்செய்துவிடுகிறது. ஒரு மனிதர் , அவரது சிந்தனைகள் உணர்ச்சிகள் நினைவுகள் அறிமுகங்கள் அனைத்துடனும் அப்படியே இல்லாமலாகிவிடுகிறார். அதெப்படி என்று மனம் பிரமித்து அரற்றி மீண்டும் பிரமித்தது. மீண்டும் வீடுதிரும்பினால் அங்கே கமலா இருக்கலாம். இல்லை போகுமிடத்தில் சிரித்துக்கொண்டு கையசைக்கலாம். இல்லை — மனம் பொங்தோரு துளிக் கண்ணீர் விட்டுவிட்டேன்.

சூபரிண்டெண்ட் அலுவலகம் மகாராஜா காலத்து இரண்டடுக்கு ஓட்டுக் கட்டிடம். பெரிய உருண்ட மரத்தூண்கள் கோண்ட அகலமான வராந்தாக்கள். தரை மட்டும் புதிதாக டைல்ஸ் போடப்பட்டிருந்தது. கரிய ஈட்டிமரக் கதவுகள். பித்தளைக் கம்பிகள் கொண்ட ஜன்னல்களுக்கு அப்பால் •பைல்கள் பிதுங்கிய அடுக்குகளின் நடுவே மின்விசிறிகள் கறகறவென சுழன்றன.

அரைக்கதவின் முன் ஸ்டூலில் அமர்ந்திருந்த பியூனிடம் நான் என்னை அறிமுகம் செய்துகொண்டேன். ”எந்தா கேஸ்?” என்றார். நான் அட்மிரல் பெயரைச் சொன்னேன். ”டி.எஸ்.பி.சதானந்தன் சாராணு நோக்குந்நது…ஆ நாலாமத்த முறியிலேக்கு பொய்க்கோ” என்றார். நான் நன்றிசொல்லி செல்லும்போது ”மற்றே தேவிடிச்சியுடே ஆளா… கறுத்த கண்ணட கண்டோ” என்று அவர் பின்னால் யாரிடமோ சொல்லும் முணுமுணுப்பொலி கேட்டது.



அவன் சுட்டிக்காட்டிய அறைக்குள் பெரிய மரப்படிகள் மேலேறின. திம் திம் என அதில் ஏறினேன். வரிசையாக அறைகளில் டிஎஸ்பி சதானந்தனின் அறையை பெயர்பலகை மூலம் அடையாளம் கண்டேன். அங்கெ நின்ற போலீஸ்காரரிடம் மீண்டும் என்னை அறிமுகம் செய்து கொண்டேன். அவன் உள்ளே சென்றபின் என்னை உள்ளே வரச்சொன்னான். கண்ணாடியை கழற்றிவிட்டு உள்ளே சென்றேன். டி.எஸ்.பிக்கு நாற்பது வயதிருக்கும். இறுக்கமான முறைப்பான உடலும் முகமும். குடி தெரியும் கண் இரப்பைகள். நிகோடின் படிந்த உதடுகள். கையசைவால் அமரச் சொன்னார்.

நான் என்னை அறிமுகம் செய்துகொண்டதும் ”மலையாளம் தெரியாதா?” என்றார். ”இல்லை” என்றேன். ”எனக்கு இங்கிலீஷ் சரியாக வராது…போலீஸ்இங்கிலீஷ் என்று ஒன்று இருக்கிறது அதுதான் தெரியும்.” என்று புன்னகை செய்தபின் ”பயப்படவேண்டாம், போலீஸ் மலையாளத்தை விட கௌரவமாகத்தான் இருக்கும்” என்று சிரித்தார். சட்டென்று அவரில் தெரிந்த அந்த நகைச்சுவை அவரை சற்று ஒளி கொள்ளச்செய்தது. நான் அந்நிமிடம் வரையிலான இறுக்கத்தை இழந்து புன்னகைத்தேன். ”எனக்கும் ஆடிட் இங்கிலீஷ்தான் தெரியும்” என்றேன்.

என்னைப்பற்றி சுருக்கமாக விசாரித்தார். நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இணையத்தில் தட்டி என்னைப்பற்றிய பக்கத்தை எடுத்துவிட்டார். ”…ரன்னிங் எ பி•ப்டி க்ரோர் ஆர்கனைஸேஷன்..” நிமிர்ந்து ”பணக்காரர்!” என்றார். ”சென்னையில் இது ஒரு பணமே இல்லை” என்றேன். ”எர்ணாகுளத்திலும் அப்படித்தான். ஒரு ஆறு அறையுள்ள •ப்ளாட் இங்கே நான்கு கோடிக்குப் போகிறது. அராஜகம்” என்றபின் என்னைப்பற்றி வாசித்துக்கொண்டே அடிக்கடி மீசையை முறுக்கி என்னை பார்த்துக்கொண்டார்.

”மேனனை எப்படி தெரியும்?” நான் வந்ததில் இருந்து விரிவாகச் சொன்னேன். ”அப்படியானால் நீங்களும் அந்த சமூகக்குழுவில் உண்டு. நான் உங்களைப் பார்த்தபோதே நினைத்தேன். கறுப்புக்கண்ணாடி போட்டிருந்தீர்கள்.” என் கண்ணில் ஆச்சரியத்தைப் பார்த்தபின் ”வெளியே ஷார்ட் சக்யூட் காமிரா இருக்கிறது” என்றார். ”ஓ” என்றேன். ”என்ன சமூகம் இது? கூட்ட உடலுறவு, காமமும் யோகாவும்…என்ன செய்கிறீர்கள்?” நான் பெருமூச்சு விட்டு ”எனக்கு தெரிந்தவரை அப்படி ஏதும் இல்லை. இது பகல் வெளிச்சத்தைப் பார்க்கமுடியாத பிரச்சினை உள்ளவர்களின் ஒரு குழு மட்டும்தான்” என்றேன்

”என்னபிரச்சினை, மெடிக்கல்?” ”ஆமாம்” ”ஓ..” என்றார் ”ஒரு டாக்டர் இதை சான்றிதழ் வழங்குவாரா?” ”முடியும்” என்றேன். ”ஓக்கே” நான் மேஜையில் சரிந்து ‘மேனன் எங்கே இருக்கிறார்?” என்றேன். ”ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். பிரேதபரிசோதனைக்கு முன் அவர் சில கையெழுத்துக்கள் போடவேண்டும்.” ”எப்படி இருக்கிறார்?” ”ஆடிப்போயிருக்கிறார். ஆனால் உறுதியான மனிதர்” நான் சில கணங்கள் மௌனத்திற்குப் பின்பு ”என்ன நடந்தது?” என்றேன். அவர் ஒரு வெள்ளி டப்பாவைத் திறந்து ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டார். ”நீங்கள் சிகரெட் பிடிப்பதில்லை..” என்றார்

”அந்த சுவாமிஜிக்கும் இந்தப் பெண் கமலாவுக்கும் கள்ளத்தொடர்பு இருந்திருக்கிறது. அவளுக்கு ஐம்பத்தேழு வயது. ஆனால் இப்போதும் பேரழகி. சுவாமிஜிக்கு நாற்பத்தி ஒன்பது. இந்த உறவு ஒரு வருடமாக நீடிக்கிறது. சுவாமிஜியின் சீடர்களை விசாரித்தோம். அதில் ஒருவர் உதயபானு என்று

பெயர். அவர் தெளிவாகவே சொல்லிவிட்டார். அவர்தான் முதல் சாட்சி...” அவர் டிவியின் ரிமோட்டை அழுத்தினார் ‘ஸீ...ஹி இஸ் அல்மோஸ்ட் எ ஸெலிபிரிட்டி நெள”

டிவியில் உதயபானு விதவிதமான கோணங்களில் பேசிக்கொண்டிருந்தார். அவரைச்சுற்றி போலீஸ்காரர்களும் நிருபர்களும் பிதுங்கினார்கள். கண்ணாடி டம்ளரில் தண்ணீர் குடித்தார். உண்மையிலேயே அந்த முக்கியத்துவத்தை அவர் ரசிக்கிறாரா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. ”கமலா மேனன் வதத்தில் உன்னதர்க்கு பங்குண்டோ? ஆரொக்கெயாணு ஆ உன்னதர்? ஞங்ஙளுடே ஸ்வந்தம் லேஹகன்றே ஸ்பெஷல் ரிப்போர்ட்” என்று ஒரு இளம்பெண் கூட்டத்தில் தள்ளாடியபடி மைக்கை நோக்கி கூவினாள். பின்னணியில் போலீஸ் ஜீப் ஒன்று உறுமியது.

”இது லைவா?” என்றேன். ”இல்லை. மூன்றுமணிநேரம் பழைய காட்சி. லைவ் மாதிரி காட்டுகிறார்கள்....இனி ஒருமாதம் இதை மீடியாவிலே ஓணம் போல கொண்டாடுவார்கள்... பாஸ்டார்ட்ஸ்” அணைத்துவிட்டு ”ஆச்சரியம் என்னவென்றான் அந்த ஆசிரமத்தில் வேறு யாருக்குமே இந்த விஷயம் தெரியாது. எல்லாருக்குமே ஆச்சரியம். சுவாமிஜி மிகவும் நேர்மையானவர் என்கிறார்கள். இதுவரை அவரைப்பற்றி எந்த வகையான குற்றச்சாட்டோ சந்தேகமோகூட வந்ததில்லை.”

சிகரெட்டை உயிர்காக்கும் மருந்து போல ஆழமாக இழுத்து ”என்ன நடந்திருக்கிறது என்றால் அந்த ஆசிரமத்தில் பகலில் யாருமே விழித்திருக்க மாட்டார்கள். வாட்ச்மேன் மட்டும்தான் இருப்பான். ஆசிரமத்திற்கு பின்பக்கம் வழியாக தென்னைமரத்தோப்புக்குள் போகலாம். அங்கே சுவாமிஜிக்கு ஒரு சிறிய குடில் இருக்கிறது. அவர் அங்கே போய்விடுவார். இந்த கமலா மேனனின் கணவரும் பகலில் விழித்திருக்க மாட்டார். அதாவது நம்முடைய நள்ளிரவுதான் அவர்களின் பகல்... ஓ, நான் உங்களிடமே சொல்கிறேன்” என்றார். நான் ”ஐ நோ” என்றேன்.

”அந்தப்பெண்மணி ரகசியமாக டாக்ஸியில் வந்து காயலுக்கு மறுபக்கம் இறங்கி ஒரு தோணி பிடித்து இந்தக்குடிலுக்கு வந்து விடுவாள். அங்கே அவர்கள் உடலுறவு வைத்துக்கொள்வார்கள். உதயபானு மிகவும் தற்செயலாக அதை ஒருமுறை கண்டுவிட்டார். அதைப்பற்றி சுவாமிஜியிடம் சண்டை போட்டிருக்கிறார். இனிமேல் இது நடக்காது என்று சுவாமிஜி உறுதி அளித்திருக்கிறார். ஒருமாதம் வரை ஒதுங்கியும் இருந்திருக்கிறார். ஆனால் இந்த மாதிரி விஷயங்களை அப்படி விட்டுவிட முடியாதல்லவா? மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. உதயபானு அந்தப்பெண்ணை மிரட்டியிருக்கிறார்.

அட்மிரலிடம் சொல்லிவிடுவேன் என்று சொல்லியிருக்கிறார். மீண்டும் ஒருமாதம் எல்லாம் நின்றிவிட்டிருக்கிறது. மறுபடியும் ஆரம்பித்திருக்கிறது''



''இந்தமுறை சுவாமிஜி உதயபானுவிடம் பேரம் பேசியிருக்கிறார். அவர் சம்மதிக்கவில்லை. உதயபானுவுக்கு இது அவரது நம்பிக்கை சார்ந்த விஷயம். பெரிய போராட்டமே நடந்திருக்கிறது. கடைசியில் இருவரும் உதயபானுவிடம் இனிமேல் இது தொடராது என்று சொல்லி காளிமுன்னர் தீபம் தொட்டு சத்தியம் செய்திருக்கிறார்கள். கமலா மேனன் உதயபானுவின் காலில் விழுந்து அழுதிருக்கிறாள். சுவாமிஜியும் அழுதிருக்கிறார். இருபது நாளாக எந்த தொடர்பும் இல்லை என்று உதயபானு சொல்கிறார். நாலைந்து நாட்களுக்கு முன்னர் சுவாமிஜி கமலா மேனன் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றிருக்கிறார்...''

''நானும் அங்கே இருந்தேன்'' ''ஓ...அங்கே அவர்கள் ஏதாவது பேசிக்கோண்டார்களா?'' ''இல்லை...சுவாமிஜி மிகவும் சம்பிரதாயமாக இருந்தார். என்னிடம் மட்டும்தான் பேசிக்கொண்டிருந்தார்'' ''ஓகோ...அதைப்பற்றி அன்றிரவு உதயபானு சுவாமிஜியிடம் கேட்டிருக்கிறார். சுவாமிஜி அவர் கையைப்பிடித்துக் கண்ணீர் விட்டிருக்கிறார். தன்னுடைய மனம் எப்படி அவளை நோக்கியே செல்கிறது என்றும் அதை தடுத்து ஜெயிக்க எத்தனை கஷ்டப்படுகிறார் என்றும் சொல்லியிருக்கிறார். அந்த விருந்தில் அவர் வேண்டுமென்றே கமலா மேனனிடம் ஒரு வார்த்தைகூட பேசவில்லையாம்''

''உண்மை'' என்றேன். டிஎஸ்பி, ''உதயபானுவைப் பொறுத்தவரை இந்தப் பெண்மணி ஒரு யட்சி. யட்சி என்றால் காமரூபிணி என்று திரும்ப திரும்பச் சொல்கிறார். சுவாமி மீது தவறே இல்லை, அவளுடைய வசீகர சக்தியை அவரால் வெல்ல முடியவில்லை என்று சொல்கிறார். அன்றிரவு அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவளை சுவாமிஜி பார்த்துக்கொண்டிருக்கும் வரை அவரால் அவளது மாயத்தில் இருந்து மீள முடியாது. அவளிடம்

சொல்லாமல் சுவாமி கிளம்பி ரிஷிகேஷில் உள்ள இன்னொரு சுவாமிஜியின் ஆசிரமத்துக்குச் சென்றுவிடவேண்டும். இங்கே ஆசிரமத்தை உதயபானு கவனித்துக்கொள்வார். அவர் எங்கிருக்கிறார் என்ற தகவலை கமலா மேனனிடம் சொல்லவேகூடாது. இதுதான் திட்டம். டிக்கெட் கூட எடுத்து விட்டிருக்கிறார்கள். அதைக் காட்டினார்''

''ஓ'' என்றேன். ''நடுவில் என்ன நடந்தது என்றே உதயபானுவுக்கு தெரியவில்லை. நாளைக் காலையில் பத்து மணிக்கு சுவாமிஜி போவதாக இருந்தது. இன்று காலை பத்து மணிக்கு சுவாமிஜி கமலாவை அந்த குடிலில் சந்தித்திருக்கிறார். உதயபானு கொஞ்சம் நம்பிக்கை வந்து கவனமில்லாமல் இருந்திருக்கிறார். உண்மையில் அவர் நேற்றிரவுதான் சுவாமிஜியின் பெட்டிகளை அடுக்கிக் கட்டி வைத்திருக்கிறார். நன்றாக தூங்கி விட்டார். முகர்ஜி போட்ட கூச்சலைக் கேட்டுத்தான் எழுந்திருக்கிறார்''

''முகர்ஜிக்கு இது முன்னாலேயே தெரியுமா?'' என்றேன். ''தெரியாது என்று உதயபானு உறுதியாகச் சொல்கிறார். அவரைப்பொறுத்தவரை இந்த முகர்ஜி விஷயம் மிகப்பெரிய ஆச்சரியம். அதிர்ச்சி. அவருக்கு முக்கர்ஜி ஒரு களங்கமே இல்லாத ஆத்மா என்று நினைப்பிருந்தது. முகர்ஜிக்கும் கமலா மேல் ஒரு ரகசிய ஆசை இருந்திருக்கிறது. அது கமலா உட்பட எவருக்குமே தெரியாது. முகர்ஜியின் பெட்டிக்குள் கமலாவின் நிர்வாண ஓவியம் ஒன்று இருந்தது...'' ''கமலா போஸ்கொடுத்திருக்கிறாரா?'' என்றேன். ''இல்லை. இவரே கற்பனைசெய்து வரைந்தது.'' ''ஓகோ'' என்றேன்.

''முகர்ஜிக்கு எதுவுமே தெரியாது. அவர் அதை உறுதியாகச் சொல்கிறார். இதில் என்ன சௌகரியம் என்றால் குற்றவாளி எந்த விஷயத்தையும் மறைக்கவில்லை. தெளிவான மனநிலையுடன் இருக்கிறார். அவர் மிகமிகத் தற்செயலாகத்தான் அந்தக்குடில் பக்கமாகச் சென்றிருக்கிறார். அவரது காமிராவின் லென்ஸ் ஒன்று முந்தைய நாள் இரவு அங்கே தொலைந்துவிட்டது. அதை தேடுவதற்காகச் சென்றிருக்கிறார். தேடிக்கொண்டிருக்கும்போது கமலா முக்காடு போட்டுக்கொண்டு செல்வதைக் கண்டிருக்கிறார். அது கமலாதானா என்று நெடுநேரம் அவருக்கு சந்தேகம். நெடுநேரம் கழித்துத்தான் பார்த்துவிடலாமே என்று அந்தக் குடில் அருகே சென்று பின்பக்க ஜன்னலின் விரிசல் வழியாகப் பார்த்திருக்கிறார்.''

நான் சில கணங்கள் பேசாமல் இருந்தேன். டிஎஸ்பி சிக்ரெட் குச்சியை சாம்பல்கிண்ணத்தில் குத்திவிட்டு என்னை நோக்கி புன்னகை புரிந்து ''என் வேலையில் இதே மாதிரி வழக்குகள் நூற்றுக்கும் மேலாக பார்த்திருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நடப்பது ஒன்றே ஒன்றுதான். எந்தப்பேச்சும் இல்லை. அந்த மனிதர் பைத்தியமாகிவிடுகிறார். ஒரு கெட்ட ஆவி பீடிப்பதுபோல. என்ன

நடக்கிறதென அவருக்கே தெரிவதில்லை. அப்போது எது கையில் கிடைக்கிறதோ அதை எடுத்துக்கொண்டு கதவை உடைத்து உள்ளே போய் போனவேகத்திலேயே இருவரையும் தாக்குவார். இவர் கையில் கிடைத்தது ஒரு கோடரி.”

நான் முகத்தை கைகளால் மூடிக்கொண்டு சில கணங்கள் இருந்தேன். இதய ஒலி கேட்டது. அந்தக் காட்சியை என்னால் காணமுடிந்தது. அதை தவிர்க்க எண்ணினேன். நன்றாகவே வேர்த்துவிட்டது. ஆனால் டிஎஸ்பி தொடர்ந்தார். ”இருவருமே நிர்வாணமாக இருந்திருகிறார்கள். உறவின் உச்சம். கதவை உடைத்து இவர் வந்ததே தெரியவில்லை. முதல் வெட்டு மேலே கிடந்த சுவாமிஜிக்கு. மண்டை தேங்காய் மாதிரி சிதறிவிட்டது. கீழே கிடந்த கமலா–”

”நோ ப்ளீஸ்” ”ஓகே” என்றார் டிஎஸ்பி. ஆனால் அவரால் சொல்லாமலிருக்க முடியவில்லை. நெடுங்கால போலீஸ் சேவை குரூரங்களை ரசிப்பவராக ஆக்கியிருந்திருக்கலாம். வர்ணனையில் மனம் ஆழமாக ஈடுபட்டு இருந்தது தெரிந்தது. ”ஏன் கமலா எழுந்து தடுக்க முயலவில்லை , ஓடவில்லை என்று கண்டிப்பாக கோர்ட்டில் கேட்பார்கள். நெற்றியில் ஒரே வெட்டு. மண்டை இரண்டாக பிளந்து விட்டது. வேறு எந்த காயமும் இல்லை. எந்த திமிறலும் நடந்ததாக தெரியவில்லை. வேறு ஒன்றுமில்லை, சுவாமிஜியின் மொத்த எடையும் அவள்மேல் இருந்தது. அவர் சரிந்து பக்கவாட்டில் விழுந்ததும் அவள் அபப்டியே ஸ்தம்பித்து போயிருப்பாள். அவள் ஒரு ஆர்கஸத்தின் தொடக்கத்தில் இருந்திருக்கலாம். என்ன ஏது என்று தெரிந்து மூளை தெளிவடையாமலேயே கொல்லப்பட்டுவிட்டாள்.”

நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். குரூரமான உதடுகள் அசைந்து அசைந்து சொல்லிக் கொண்டிருந்தன. ஆங்காங்கே சில சொற்கள் மட்டும் என் காதில் விழுந்தன. ”கோடாலியோடு முக்கர்ஜி பைத்தியம் போல ஓடி ஆசிரமத்திற்குச் சென்று பயங்கரமாக கூச்சல்போட்டிருக்கிறார். தன்னுடைய ஓவியங்களை எல்லாம் கிழித்து போட்டிருக்கிறார். யாருமே அருகில் செல்ல முடியவில்லை. போலீஸ் போகும்போது வெறும் மணலில் ரத்தம் உலர்ந்த கோடாலியுடன் படுத்துக்கிடந்தார்...”

”மேனன் எப்படி இருக்கிறார்?” என்றேன், பேச்சை மாற்றும் பொருட்டு.”இந்தமாதிரி வழக்குகளில் அந்தக் கணவனின் நிலைதான் பரிதாபம். அவன் ஒரு பொய்யான உலகில் இருந்திருப்பான். சோரம்போகும் பெண் கணவனிடம் மிகமிக நல்ல உறவை வைத்திருப்பாள். அதற்குக் காரணம் ஏமாற்றுவது மட்டும் அல்ல. அவளுக்குள் ஒரு குற்றவுணர்ச்சி இருக்கிறதே அதுதான். அதனால் கணவன் மனைவி உறவு மிகச்சிறப்பாக இருக்கும்.

ஏற்கனவே இருந்த சிறிய பூசல்கள்கூட இல்லாமல் ஆகிவிடும். கிட்டத்தட்ட ஒரு லட்சிய உறவு…”

இன்னொரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டு ”அது சட்டென்று உடையும்போது அவனால் நம்ப முடிவதில்லை” என்றார்.”அப்படியே பிரமித்து உறைந்து போய்விடுவான். நிறையபேர் மந்தபுத்திகள் போலவே இருப்பார்கள். இந்த மாதிரி வழக்குகளில் இனிமேல் டிவியில் பாருங்கள். அந்த கணவன் ஒரு முட்டாள் மாதிரி இருப்பான். மூளையே இல்லாதவன் மாதிரி பேசுவான். நீங்கள் கூட இந்த முட்டாளை விட்டு அவள் சோரம்போகாமலிருந்தால்தான் ஆச்சரியம் என்று நினைப்பீர்கள். ஆனால் அவன் அந்த கணத்திற்கு முன்புவரை அதி புத்திசாலியாக இருந்திருப்பான். உற்சாகமானவனாக இருந்திருப்பான். ஒரு துரோகம் என்பது சாதாரணமான விஷயமா என்ன? ஒருவனுடைய இருப்பை முழுமையாகவே நிராகரிப்பதுதானே…நீ மனிதனே இல்லை, நீ செத்துப்போ என்று சொல்வதுதானே? துரோகத்தைச் சந்தித்த கணவர்களில் மிகமிகச்சிலர்தான் மீண்டு வருவார்கள்…”

”மேனன் -” என்றேன். ”அவர் நன்றாகத்தான் இருக்கிறார். அமைதியாக சிலை போல இருக்கிறார். கேட்டால் மட்டுமே பதில் சொல்கிறார். தலைகுனிந்து யோசித்துக்கொண்டே இருக்கிறார்” ”நான் அவரைச் சந்திக்கவேண்டும்…” ”பார்ப்போம். அவரை இங்கே கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன். சடலத்தை அவர் வாங்கிக்கொண்டு எரிக்கப்போகிறாரா இல்லை கார்ப்பரேஷன் பொறுப்புக்கே விடப்போகிறாரா என்று தெரியவில்லை. போஸ்ட்மார்ட்டம் இன்னமும் முடியவில்லை என்று நினைக்கிறேன்…” செல்போனை எடுத்து அழுத்தியபடி ”அந்த ஆசிரமக் கும்பல்தான் எல்லாருக்குமே வேடிக்கை. ஒருவர் பாக்கியில்லாமல் அத்தனைபேரும் கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு தடுமாறுகிறார்கள்” செல் எடுக்கப்பட்டதும் ”ஆ, செபாஸ்டின் இது ஞானா…எந்தாயி?”

செல்லை அணைத்தபின் ”போஸ்ட் மார்ட்டம் முடிந்து விட்டது. மின்சாரச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகிறார்கள். மேனன் எல்லா சடங்குக¨ளையும் அவரே செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அங்கே போய்விட்டு திரும்ப இங்கே வருவதற்கு எப்படியும் இரண்டுமணி நேரம் ஆகும்” என்றார். ”ஓகே” என்றேன். பின்பு ”நான் சுடுகாட்டுக்கு போகிறேன். இப்போது அவருடன் இருக்க ஆசைப்படுகிறேன்” என்றேன்.” ஓகே…நீங்கள் இந்த விஷயங்களைப்பற்றி ஒரு விரிவான ரிப்போர்ட் கொடுக்க வேண்டியிருக்கும். எழுதியே கொடுத்தால் நல்லது” ”கண்டிப்பாக” என்றேன்.

”இது எளிமையான வழக்கு. நீங்கள் ஒன்றும் நீதிமன்றத்தில் அலையவேண்டியிருக்காது. குற்றவாளி கையிலேயே இருக்கிறான்.

கண்ணால்பார்த்த சாட்சிகள் இருக்கிறார்கள். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டிலும் எந்த சிக்கலும் இல்லை. எல்லாமே தெளிவாக இருக்கின்றன. செய்திகள்தான் கொஞ்சநாள் பரபரப்பாக இருக்கும். சம்பவம் ஒரு ஆசிரமத்தில் நிகழ்ந்திருக்கிறது பாருங்கள்." என்றார். நான் எழுந்தேன். "ஆசிரமவாசிகளை வளைத்து வளைத்து படம் எடுக்கிறார்கள். பெருச்சாளிகளை மாதிரி அவர்கள் விழிக்கிறார்கள். எதையுமே தெரிந்துகொள்ளாமல் ஒரு கனவிலே இருந்துவிட்டார்கள். இப்போது யதார்த்தத்தின் வெளிச்சத்திற்கு வந்து நிற்க முடியவில்லை. பாவப்பட்ட ஆத்மாக்கள்..."

"நான் கிளம்புகிறேன்" என்றேன். "நானும் வருகிறேன். நான் இன்றைக்கு அவசியம் கடைவீதி வரை போகவேண்டும். என்னை இறக்கி விடமுடியுமா?" என்றார். "ஒரு தனிப்பட்ட வேலை. நான் அதற்கு அலுவலக வண்டியில் செல்வதில்லை" "கண்டிப்பாக" என்றேன். கீழே இறங்கிச் செல்லும்போது "அனேகமாக இந்த விஷயத்தில் மேலிட அழுத்தம் வரும். அதிகம் மீடியாவுக்கு தீனி போடாமல் சட்டென்று முடிக்கச் சொல்வார்கள். வெளிநாட்டுப் பிரஜைகள் இருக்கிறார்கள் அல்லவா" என்றார்

காரில் ஏறி அமர்ந்ததும் டிஎஸ்பி "உங்களுக்கு ஓ.வி.விஜயனை தெரியுமா?" "தெரியும்" என்றேன் "லெஜெண்ட் ஆஃப் கஸாக் வாசித்திருக்கிறேன்" "ஓ, அது அவரது மாஸ்டர்பீஸ். மலையாளத்தில் வாசிக்க வேண்டும். என்ன ஒரு நடை!" என்றார். "விஜயன் ஒரு கதையில் சொல்கிறார். அபத்தங்களின் நடுவில் வாழ்வதனால் போலீஸ்காரர்களுக்கு குரூரம் உறைப்பதில்லை என்று. குரூரம் என்பதே ஒருவகை அபத்தம் தானே" நான் புன்னகை செய்தேன். "நாளை என் மனைவிக்கு பிறந்தநாள். ஒரு பரிசு வாங்க வேண்டும். எப்படி அபத்தம்?" என்று சிரித்துக்கொண்டு காரின் கண்ணாடியை சற்றே திறந்து வைத்துக்கொண்டு ஒரு சிகரெட் எடுத்துக்கொண்டார்.

# இரவு 22

**இறந்தவர்கள்**

**மௌனமாக நடந்து**

**சென்றுசேரும் இடம்**

**இருண்டிருக்கும்.**

**அவர்கள் தங்கள் இறந்தகாலத்தில்**

**வாழ்வதற்கு அனுமதிக்கும்**

**தனிமை கொண்டிருக்கும்.**

**விடிய முடியாததாக இருக்கும்**



நான் மயானத்தை அடைந்தபோது அதன் முன் ஐஜியின் சிவப்பு விளக்கு கொண்ட கார் நிற்பதைக் கண்டேன். வேறு பல கார்கள் நின்றன. மேனன் அவரது நண்பர்களுக்கு தகவல்தெரிவித்து அவர்கள் வந்து கூடிவிட்டார்கள் என்று தெரிந்தது. அனைவருமே உயர்நிலையில் உள்ளவர்கள் என்பதை கார்கள் காட்டின. டிவி பத்திரிகை என எவருமே அப்பகுதியில் இல்லை. நான் காரை அந்த பெரிய ப வடிவக் கட்டிடத்தின் முன்னால் இருந்த முற்றத்தில் நிறுத்தியபோது காவலன் வந்து ''இவிட நிறுத்தருது சார்'' என்றான். ''அட்மிரல் சார் இருக்காரா?'' என்றேன். உண்டு. ''ஐஜி வந்நிட்டுண்டு. சடங்ஙுகள் நடக்குந்நு'' என்றார் மரியாதையுடன்.

நான் இறங்கி ''கார் ஓட்டுவீங்களா?'' ''ஓட்டும் சார்'' ''அப்ப இதை எடுத்து பார்க்கிங் போடுங்க'' என்று சாவியைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றேன். உள்ளே நிறைய பொலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள்.. நான் நேராகச் சென்று இன்ஸ்பெக்டரிடம் ''மிஸ்டர் செபாஸ்டின்?'' என்றேன். ''எஸ்...'' என்றார். ''நான் சரவணன். அட்மிரலின் ஆடிட்டர்களில் ஒருவன். அவரை பார்க்க வந்தேன். மிஸ்டர் சதானந்தனைப் பார்த்தேன்.'' ''கமின்'' என்று அழைத்துச்சென்றார். குண்டான இளைஞன். அங்கிருந்த வெக்கையில் வியர்த்து வழிந்துகொண்டிருந்தான். காக்கிச்சட்டை முதுகில் ஒட்டியிருந்தது.

”அட்மிரல் சடங்குகள் செய்துகொண்டிருக்கிறார். நீங்கள் கொஞ்ச நேரம் இங்கே காத்திருக்க வேண்டியிருக்கும்” என்றார். நான் அந்த வரவேற்பறையில் இருந்த அலுமினிய நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். மணி ஐந்து தாண்டிவிட்டிருந்தது. என்னருகே மேலும் இருவர் காத்திருந்தார்கள். ஒல்லியாக கண்ணாடிபோட்டு நரைத்த நறுக்கு மீசை வைத்த மனிதர் என்னிடம் ”நீங்கள் யார் என்று நான் தெரிந்துகொள்ளலாமா?” என்றார். ”ஆடிட்டர்” ”எந்த ஊர்?” ”சென்னை” அவர் குரலைத்தணித்து ”மேனன் இந்த வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்படுவாரா?” என்றார். நான் அவரையே பார்த்தேன். வம்புக்கான பேராவல் முகத்தில் ததும்பியது.”தெரியவில்லை.” ”இருக்காது. ஏனென்றால் இது மிகவும் தெளிவான வழக்கு. குற்றவாளி ஒரு மனநோயாளி.”

”குற்றவாளி மிகவும் தெளிவாகத்தான் இருக்கிறாராம். எல்லாவற்றையும் சொல்லிவிட்டாராம்” என்றார் அப்பாலிருந்த தொந்தி வழுக்கை ஆசாமி. காதில் சிறகுகள் போல முடி சிலிர்த்து நின்றது அவருக்கு. ”அந்த பெங்காலிக்கும் இந்த பெண்மணிக்கும் கள்ள உறவு இருந்திருக்கிறது. அதை தட்டிக்கேட்டார் என்றுதான் சுவாமியை கொன்றான் என்கிறார்கள்”. கண்ணாடிக்காரர் ”யார் சொன்னது? இரண்டுபேருக்குமே உறவிருந்ததாகத்தான் சொல்கிறார்கள். இந்த மாதிரி ஒழுக்கமற்ற பெண்கள் எல்லா ஆண்களையும் ஏமாற்றிவிடுவார்கள். யட்சிகள் அல்லவா? ஆணின் ரத்தத்தைக் குடித்தால்தான் அவர்களின் தாகம் அடங்கும்...” என்றார்.

நான் தலையை கைகளில் தாங்கி கண்மூடி அமர்ந்திருந்தேன். என் கண்ணுக்குள் குருதி சுழிப்பதைக் கண்டேன். கீழே விழுந்துகொண்டே இருப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. இந்நேரம் கமலாவின் உடல் எரிமேடையில் ஏற்றப்பட்டிருக்கலாம். அவரது சிரித்த முகம் என்னுள் மின்னிச்சென்றது. எத்தனை பிரகாசமான கண்கள். சிறுமியுடையது போல உற்சாகம் ததும்பும் முகபாவனை. முகங்களுக்கு அப்பால் நாமறியாத ஒரு இருண்ட வெளி இருக்கிறது. இல்லை, இப்போது எதைப்பற்றியும் யோசிக்கக் கூடாது. ஆனால் மனம் அங்கேயே திரும்ப திரும்ப வந்தது. அதே முகம், அதே சிரிப்பு. எங்கே போயிருக்கும் அவையெல்லாம்?

காலடியோசைகள் கேட்டன, எல்லாரும் எழுந்தபோது நானும் எழுந்தேன். மேனன் கூடவே இரு தடித்த உயரமான மனிதர்களுடன் வந்தார். ஒருவர் ஐஜி என்று ஊகித்தேன். மேனனின் தலைமயிர் ஈரமாக மண்டையில் வெண்ணுரை போல ஒட்டியிருந்தது. கண்களின் கீழே சுருக்கங்கள் அடர்ந்திருந்தன. ஆனால் மிடுக்குடன் திடமாகவே வந்தார். ”ஆ, சரவணன்!” என்றார். ஐஜியிடம் திரும்பி ”மீட் திஸ் இஸ் மிஸ்டர் சரவணன்.” என்றார். ஐஜி கனத்த கரங்களை நீட்டி குலுக்கியபடி ”ஹலோ, ஐயம் நாரயண மேனன். ஐஜி கிரைம்” என்றார். நான் ”கிளாட் டு மீட் யூ” என்றேன். அபத்தமாக உடனே உள்ளே உணர்ந்தேன்.இது

”கேசவபிள்ளை. ஹி வாஸ் எ கேணல்…” கேசவபிள்ளை கைநீட்டியபடி ”மேனன் உங்களைப்பற்றிச் சொன்னார்.” என்றார்.

அவர்களுக்குப் பின்னால் இருபது பேர் வரைக்கும் வந்தார்கள். மௌனமாக தலை குனிந்து. மேனன் திரும்பி ”அவங்கள்லாம் கமலாவொட ரிலேட்டிவ்ஸ். அவளுக்கு ரெண்டு அண்ணன்கள். ரெண்டுபேரும் இப்ப இல்லை. மூத்த அண்ணனுக்கு ஒருபையன். தட் கை. கிரீஷ் மேனன். ரெண்டாவது அண்ணனுக்கு ரெண்டு பையன் ஒரு பொண்ணு… ராகவ் மேனன், அஜய் மேனன். மூணுபேருமே எஞ்சினியர்ஸ்” நான் அவர்களுக்கு கைகொடுத்து ஹலோ சொன்னேன். அந்த சம்பிரதாயங்களில் எல்லாமே உருமாறி இன்னொன்றாக ஆகிக்கொண்டிருந்தன.

”எப்ப கிட்டும் கிரீஷே?” என்றார் மேனன். ”ஒரு அரமணிக்கூர்” என்று கிரீஷ் பவ்யமாகச் சொன்னான். ”ஓக்கே லெட் அஸ் வெயிட்” என்றார் அவர். ”நமுக்கொரு சாய குடிக்காம், எந்தா மேனனே?” ஐஜி ”பின்னெந்தா?” என்றார். நாங்கள் நடந்து அந்த சுடுகாட்டிலேயே இருந்த அறைக்குள் சென்றோம். ஏழெட்டு நாற்காலிகள் கிடந்தன. நாங்கள் அமர்ந்தோம். பையன்கள் ஓரமாக நின்றுகொண்டார்கள். ”ஸோ திஸ் இஸ் த எண்ட் ஆ·ப் கமலா… அவர் கிரேட் ரிலேஷன் ஷிப்” என்றார் மேனன். ”லீவ் இட். விஜய்… இனி எந்தினு சிந்திக்கணம்?” என்றார் கர்னல்.

”ஓ நோ” என்று கைவீசினார் மேனன்.”நான் நீங்கள் நினைப்பது போல ஒன்றும் மனக்கசப்படையவில்லை. இந்த உண்மையை கொஞ்சம் கொஞ்சமாக உள்வாங்க முயல்கிறேன். இந்த உண்மை தெரிந்ததனால் எனக்கும் அவளுக்குமான முப்பத்தாறு வருட இலட்சிய உறவு இல்லாமலாகிவிடுமா என்ன? எனக்கு அவள் மேல் இருக்கும் காதல் வற்றி விடுமா என்ன? சட்டென்று ஒரு தவறு நடந்து விட்டது. அது மனித வாழ்க்கையில் சாதாரணம். அந்த தவறை வைத்து நான் அவளை மதிப்பிடவில்லை. அவள் ஒரு அழகான தேவதை..அவளுக்கு இப்படி ஒரு முடிவு..” குரல் உடைந்து மேனன் நிறுத்திக்கொண்டார். கழுத்துச்சதைகள் இறுகித்துடித்தன. ”சச் எ ஹாரிபிள் டெத்…ஷி டஸ் நாட் டிசர்வ் இட்… ரியல்¢… ஷி இஸ் சச் எ டார்லிங்…”



மௌனமாக அவர் அழ ஆரம்பித்தார். ஐஜி சங்கடமாக என்னைப்பார்த்தார். அப்போது எதுவும் சொல்லாமலிருப்பதே மேல் என்று எனக்குப்பட்டது. அவர் சில நிமிடங்களிலேயே மீண்டு வெள்ளைக் கைக்குட்டையால் கண்க¨ளையும் மூக்கையும் அழுத்தி துடைத்துக்கொண்டார். வெகுநேரம் தலைகுனிந்து அமைதியாக இருந்தார். அப்போது டீ வந்தது. அவர் நிமிர்ந்து ”ஆ, டீ” என்றபின் டீயை எடுத்துக்கொண்டு மெல்ல உறிஞ்சினார். ”தெரியுமா நாராயணன், உலகம் முழுக்க மரணத்துடன் குடியையும் சாப்பாட்டையும் இணைத்திருக்கிறார்கள் மக்கள். மரண வீட்டில் சாப்பிடுவது இல்லாத பழங்குடிச்சமூகமே இல்லை. அவை இரண்டு அடிப்படை விஷயங்கள் அல்லவா!” என்று சிரித்தார் ”எங்காவது மரணமும் சாப்பாடும் உடலுறவும் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை”

நாராயண மேனன் புன்னகை செய்தார். கர்னல் ”டா மேனனே தான் இந்து என்றே கூடே வாடா..நமுக்கு இந்நு நாலஞ்சு லார்ஜ் கேற்றணம்” என்றார். ”யா.. லெட் அஸ் ஸெலிபரேட் தி டெத்” என்றார் மேனன். அவரது மீசை ஈரம் உலர்ந்தது. அதை முறுக்கி கச்சிதமாக ஏற்றிவிட்டார். இரு கொக்கிறகுகள் போல அவை நின்றன. ”வேர் இஸ் மை மொபைல்?” என்றார். கிரீஷ் அதை அவரிடம் நீட்டினார். தவறிய அழைப்புகளை ஒவ்வொன்றாகப் பார்த்தார். ”கேட்டாடா பிள்ளேச்சா, ஸீம்ஸ் ஐ யம் எ விஐபி. அல்மோஸ்ட் எவ்ரிபடி கால்ட். இன்க்லூடிங் மினிஸ்டர்ஸ்” ”அது பின்னே, வேணமல்லோ” என்றார் கர்னல் ”ஒரு யுத்தம்போலும் காணாதே ரிட்டயர் ஆய மகா வீரனல்லே தான்”

”முட்டாள்…” என்றார் மேனன் ” அந்தக்காலத்தில் கடற்படையில் ஓட்டை இல்லாத கப்பலே இல்லை தெரியுமா? ஒரு கடற்ப¨டைக்கப்பலில் ஆயிரம் கிலோமீட்டர் பயணம்செய்தால் அதற்கே வீரசக்ரா கொடுக்க வேண்டும்.நான் ஒருமுறை அந்தமானுக்கு போகும்போது ஒரு கப்பலில் சோதனைக்குப் போனேன். கப்பலில் எல்லாமே இருந்தன. கஞ்சா வரை. ஆனால் பெண் இல்லை. காப்டனிடம் கேட்டேன், ஏன் பெண்ணே இல்லை என்று. காப்டன் நல்ல நகைச்சுவை உணர்ச்சி கொண்ட சர்தார்ஜி. அவர் சொன்னார் இந்த

கப்பலில் இருக்கும்போது எங்கள் கைகால்கள் மட்டும்தான் விரைத்துக்கொள்கின்றன அட்மிரல் சார் என்று...ஹாஹாஹா!"

கர்னல் நிஜமாகவே வெடித்துச் சிரித்துவிட்டார். மேற்கொண்டும் அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மிக எளிமையான மனமுள்ள மனிதராக இருக்கவேண்டும் அவர் என நினைத்துக்கொண்டேன். ஜஜி மெல்ல புன்னகை செய்து நிறுத்திக்கொண்டார். "மேனனே இப்பழாடா நீ சரிக்கும் ஒரு பட்டாளக்காரனாயது" என்றார் கர்னல்.

"சர்தார்ஜிகள் இந்த விஷயத்திலே பெரிய கில்லாடிகள். அவர்களுக்கு தென்னிந்தியர்கள் மேல் மதிப்பே கிடையாது. மூளை மட்டும் இருந்தால் போதுமா என்பார்கள். ஒருமுறை இப்படித்தான் கண்ட்லா துறைமுகத்துக்கு நள்ளிரவில் வந்தபோது கப்பலில் காண்டம் இல்லை. சர்தார்ஜிக்கு ஒரு யோசனை வந்திருக்கிறது. நாலைந்து ரப்பர்கிளவுஸ்களை எடுத்து விரல்களை கத்திரியால் வெட்டி பகிர்ந்து அளித்திருக்கிறான். கட்டைவிரல் உத்தர பிரதேசத்தானுக்கு. சுண்டுவிரல் மலையாளிக்கு...". கர்னல் சிரித்துப் புரையேறி "ஓ நோ" என்றார். "சர்தார்ஜி மட்டும் விரல் வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம். சாக்ஸே போதுமாம்" கர்னல் சிரித்துக்கொண்டு எழுந்து நின்று இடுப்பில் கைவைத்து அதிர்ந்தார்.

"ஆண்குறியை பெரும்பாலான நேரங்களில் ஜோக் அடிக்க பயன்படுத்துபவன்தான் படைவீரன் என்று மனேக்ஷா சொல்லியிருக்கிறார்." மேனன் சிரித்துக்கொண்டே சொன்னார். "நம்முடைய பீரங்கிகளும் அப்படித்தான் என்பார். ஜோக் வழியாகவே அவை துருப்பிடித்து போகின்றன" சிரித்து அவருக்கு கண்களில் நீர் தளும்பியது. "ஐ வர்க்ட் வித் த கிரேட் பார்ஸி ·பார் த்ரீ இயர்ஸ். வாட் எ மேன்! எ ரியல் சோல்ஜர். எந்தா ஒரு ஹ்யூமர் சென்ஸ். எந்தா ஒரு லைவ்லினெஸ்..." ஜஜி சிரித்து "அதுகொண்டா தான் அங்ஙேரே இமிட்டேட் செய்யுந்நது" என்றார். "நாட் இமிட்டேஷன். இன்ஸ்பிரேஷன். எஸ் ஐயம் இன்ஸ்·பையர்ட் பை ஹிம்..." மேனன் சொன்னார்

அலுவலக ஆள் வந்து "ரெடியாணு சார்" என்றான். "ஓக்கே ஓக்கே" என்று மேனன் எழுந்துகொண்டார். அனைவரும் குழப்பமான மனநிலையில் செல்பவர்கள் போல வெளியே சென்றார்கள். மேனன் பல பதிவேடுகளில் கையெழுத்திட வேண்டியிருந்தது. அவரது கைகள் நடுங்குவதைக் கண்டேன். பேனாவை பேரேடு மேல் வைத்துவிட்டு அப்படியே நின்றார். "சார்" என்றான் வேலையாள். "எஸ்"' என்று திடுக்கிட்டு விழித்தார். "இதாணு சார்" ஒரு சிறிய மண்பானையை அவன் நீட்ட மேனன் அதை வாங்கிக்கொண்டார். அவர் உதடுகள் வளைந்தபோது சிரிப்பது போலிருந்தது. "ஓக்கே..கிரிஷே" கிரீஷ் முன்னால் வந்து புரிந்துகொண்டு பணம் கொடுக்க ஆரம்பித்தான்

மேனன் அந்த கலசத்துடன் முன்னால் வந்தார். கண்கள் என்னை தேடிவந்து தீண்டின.”ஸோ, திஸ் இஸ் கமலா.. இனிமே இதான் கமலா.. என்ன ஒரு அபத்தம் இல்ல?” பேசிக்கொண்டிருக்கையிலேயே முகத்தின் வலப்பக்கம் கோணலாக கழுத்துச்சதைகள் இழுபட மெல்லிய கேவல் ஒலியுடன் அழ ஆரம்பித்தார். ”ஓ நோ…இட் இஸ் ஸோ க்ரூயல்… ஷி இஸ் சச் எ டார்லிங்… ” என்னால் அவரை பார்க்க முடியவில்லை. நான் பின்னால் நகர்ந்துவிட்டேன். ராகவ் மேனன் வந்து கலசத்தை வாங்கிக்கொண்டார்

வெளியே வந்து அனைவரும் கார்களில் ஏறிக்கொண்டார்கள். மேனன் கர்னலின் காரில் ஏறிக்கொண்டார். அதற்குள் அவர் மீண்டு வந்திருந்தார். கர்னல் என்னிடம் ”ஆர் யூ கமிங் வித் அஸ்? நமுக்கு நாலஞ்சு லார்ஜன் ஆவாம்” என்றார். மேனன், ”ஓ, ஹி இஸ் எ ஸில்லி டீட்டோட்டலர்…லீவ் ஹிம்” என்றார். நான் ”அப்றம் வந்து பாக்கிறேன் சார்” என்றேன். ”ஓகே…” என்று சிரித்துக்கொண்டு சொல்லி மேனன் கிளம்பிச்சென்றார். கார்கள் இரைந்தபடிச் சென்றன.



நான் என் காருக்குத்திரும்பினேன். ஸ்டீரிங்கைப்பிடித்துக்கொண்டு அப்படியே அமர்ந்திருந்தேன். எங்கே செல்வதென்று தெரியவில்லை. மணி ஆறரை ஆகிவிட்டிருந்தது. திரும்ப என் வீட்டுக்குச் செல்வதைப்பற்றி நினைக்கவே முடியவில்லை. அங்கே எல்லாமே மாறிவிட்டிருக்கின்றன என்று பட்டது. ஒருவேளை அங்கே வீடே கூட இல்லாமலிருக்கலாம். ஒருவெளை அந்த இடம் ஒரு வெறுமையான வெட்டவெளியாக இருக்கலாம்.

தாமஸை பார்க்கப்போகலாமென எண்ணி காரை திருப்பி அரைமணி நேரம் ஓட்டினேன். அதன்பின்பு அவரை சந்திப்பது மிகமிகக் கடினமான ஒன்றாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது. திரும்பி நகருக்குள் வந்தேன். அந்தி இருள ஆரம்பித்திருந்தது. போலீஸில் ஒரு விரிவான ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டியிருக்கும் என்று டிஎஸ்பி சதானந்தன் சொன்னது நினைவுக்கு வந்தது. ஆனால் இனிமேல் அதற்கான தேவை இருக்காது, எல்லாம் அவரது கைவிட்டு மேலே சென்றிருக்கும் என்று தெரிந்தது

என்னையறியாமலே வந்ததுபோல திரும்ப வீடுவந்தேன். நேராக மாடிக்குச் சென்று படுத்துக்கொண்டேன். மீண்டும் மீண்டும் புரண்டபடியே இருந்தேன். கமலாவின் முகம். சிரிக்கும் கண்கள் சிரிக்கும் கன்னங்கள் சிரிக்கும் உதடுகள் சிரிக்கும் உடல்...அரைத்தூக்கம்போல மயங்கிச்சென்றபோது நீலிமா நினைவு வந்தது. இன்று முழுக்க அவளைப்பற்றி எண்ணாமலேயே இருந்திருக்கிறேன்!

எழுந்து அமர்ந்து பிரமித்தவன் போல இருட்டையே பார்த்துக்கொண்டிருந்தேன். பெருமூச்சுடன் எழுந்து முகம் கழுவியபின் கணிப்பொறியை எடுத்து விரித்து இணையத்தை இயக்கினேன். என்ன வாசிப்பதென்று தெரியவில்லை. தொடர்பே இல்லாமல் எதையெதையோ சொடுக்கினேன். பாலியல் தளங்களில் சில நிமிடங்களுக்கு மேல் ஆர்வம் நீடிக்கவில்லை. மீண்டும் செய்தித்தளங்களில் அலைந்தேன். ஏதோ ஒரு விவாதத்தளத்திற்குள் நுழைந்தேன். அணு ஒப்பந்தத்தைப்பற்றி காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். போலி மின்னஞ்சலில் போலி பெயரில் பதிவுசெய்து உள்ளே சென்றேன். ஏற்கனவே எழுதியிருந்த ஒருவரை மிகக் கடுமையாகத் தாக்கி ஒரு பதிவு எழுதினேன்.

வினோதமான ஒரு நிறைவுடன் வெளிவந்தேன். மீண்டும் வேறு ஒரு விவாதத்தளம். அங்கே ஈழப்பிரச்சினை. அங்கும் அப்படி ஒரு உக்கிரமான பதிவு போட்டேன். என்னுடைய மொழியில் வரும் கசப்பும் நக்கலும் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. மீண்டும் இன்னொரு இணையதளத்தில் பிரபலம் ஒருவரை வசைபாடி எழுதிவிட்டு குறுகுறுப்புடன் முதல் தளத்திற்குச் சென்று பார்த்தேன். என் கருத்துக்கு இருவர் கடுமையாக எதிர்வினையாற்றியிருந்தார்கள். அவர்களை வசைபாடி எழுதிவிட்டு மீண்டும் அடுத்த தளங்களுக்குச் சென்றேன்.

அந்த கொந்தளிப்பும் வேகமும் மெல்ல தணிகையில் நள்ளிரவாகியிருந்தது. என் கைகளும் கண்களும் சோர்ந்து விட்டிருந்தன. மடிக்கணினியை மூடி அப்படியே தூக்கி வீசிவிட்டு குப்புற விழுந்தேன். மெல்ல தூங்கிப்போனேன். எத்தனை நேரம் தூங்கியிருப்பேன் என்று தெரியவில்லை. மிக அசாதாரணமான ஓர் உருவெளிக்காட்சியைக் கண்டேன். கனவில் கனவெனும் பிரக்ஞை ஓடிக்கொண்டிருக்கும். இது ஒருவகை நிஜமாகவே நிகழ்ந்தது. அதன் துல்லியமான தர்க்கம் விழித்துக்கொண்டபின் என்னை துணுக்குறச் செய்தது.

நான் தூங்கிக்கொண்டிருக்கும்போது கீழே வாசல் மணி ஒலிக்க எழுந்து சென்று கதவைத் திறந்தேன். கறுப்புக்கண்ணாடியுடன் கமலா நின்றிருந்தார். நான் பிரமித்து நின்றிருக்க ”என்ன வீடு பூட்டியிருக்கு? எங்கே விஜய்?” என்றார். ”நீங்க...நீங்க இன்னைக்கு..” என்று நான் திணற ”என்ன பிரச்சினை?” என்று கேட்டபடி உள்ளே வந்தார். ”இல்லை இன்னைக்கு ஒரு நியூஸ்...” ”என்ன நியூஸ்?” நான் ஓடிப்போய் டீபாயில் இருந்து செய்தித்தாளை

எடுத்துக்காட்டினேன். மலையாள மனோரமாவின் தலைப்புச்செய்தியே ”சுவாமிஜியும் சிஷ்யயும் கொல்லப்பெட்டு” என்பதுதான்

சரசரவென் வாசித்துவிட்டு ”அய்யோ இது நான் இல்லை. வேற யாரோ” என்றார் கமலா. ”உண்மையாவா? ” ”இதென்ன கேள்வி. செத்துப்போனா பின்னே நான் எப்டி வந்து இங்கே நிப்பேன்…” ”ஆமால்ல” ” அந்தப்பெண்ணை யாரோ நான்னு சொல்லிட்டாங்க. ரத்தம் மூடியிருந்ததனாலே தெரியாம போயிருக்கும். விஜய் அங்கேதான் போயிருக்காரா?” ”ஆமா” அதைச் சொன்ன பிறகுதான் எனக்கு எல்லாம் தெளிவாகி உவகை பொங்கியது. மார்பின் எல்லா பாரமும் விலக நான் உற்சாகமாக சிரித்துக்கொண்டு ”மை காட்! என்ன ஒரு ஷாக் பாருங்க…அப்பாடா” என்றேன். என்னுடன் சேர்ந்து கமலாவும் சிரித்தார். அப்போது விழித்துக்கொண்டேன்.

விழித்தபோது என்னுடைய மனப்பாரமெல்லாம் விலகி நான் சிரித்த முகத்துடன் இருந்தேன். சில கணங்கள் சிரித்தபடி கிடந்த பின்புதான் அது கனவென உணர்ந்தேன். எழுந்து அமர்ந்து அந்தக் கனவை ஆராய்ந்தபோதுகூட அந்த உல்லாசம் மனதில் மிச்சமிருந்தது. அதுவரை என்னிடமிருந்த இறுக்கமும் கனமும் விலகி மிக எளிதாக இருந்தேன். ‘என்ன ஒரு கனவு!’ என்று மட்டும் உள்ளூர திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

மீண்டும் படுத்துக்கொண்டபோது அதுவரை எனக்கிருந்த உள்பதற்றம் முற்றிலும் விலகியிருந்ததை உணர்ந்தேன். படுக்கும்போது எனக்குள் ஓய மறுத்து இறுகி நின்றிருந்த நரம்புகள் இப்போது இயல்பாக தளர்ந்து அமைந்தன. நான் மீண்டும் கண்ணயர்ந்த போது என் அம்மாவைப் பார்த்தேன். ஏதோ ஒரு கோயில் . உயரமான திண்ணையும் தூண்களும் இடப்பக்கம் வர வலப்பக்கம் கருவறை. பிராகாரத்தில் நான் அம்மாவின் பட்டுப்புடவையை பிடித்துக்கொண்டு நடந்துகொண்டிருந்தேன். அதன்பின் அம்மா என்னை ஒரு கல்தரையில் துண்டு விரித்து படுக்கவைத்தாள். என் மேல் மெல்ல தட்டி ‘தூங்கணும்..அப்பதான் சமத்து என்ன?’ என்றாள்.

காலையில் நான் விழித்துக்கொண்டபோது எல்லாமே கனவு போல முற்றிலும் விலகி பின்னால் சென்றிருந்தது. உற்சாகமாக உணர்ந்தேன். மூச்சில் ஒரு மெல்லிய பாட்டு வருவதை கழிப்பறை சென்றபோது உணர்ந்தேன். ‘மாலையில் யாரோ மனதோடு பேச’ என்று பாடியபடி பல்தேய்த்து முகம் கழுவி கீழே வந்தேன். நன்றாகவே விடிந்திருந்தது. உண்ணிகிருஷ்ணன் வந்திருந்தார். என்னைக் கண்டதும் எழுந்து ”எல்லாபேப்பரிலும் நியூஸ¤ண்டு” என்றார்.

நான் செய்தித்தாள்களை கவனமில்லாமல் விரித்தேன். மலையாள மனோரமாவின் முதல்பக்கத்தைப் பார்த்தது இதயம் இறுகப்பற்றப்பட்டது போல்

உணர்ந்தேன். நான் அந்தப்பக்கத்தை கிட்டத்தட்ட அப்படியே பார்த்திருந்தேன். நேற்றே. அதெப்படி? ஆம் அந்தக் கனவில். ஆச்சரியமாக அதையே மீண்டும் மீண்டும் பார்த்தேன். அந்தப்பக்கத்தை தான் பார்த்தேனா, இல்லை இந்தப்பக்கம் அந்தக்கனவை நினைவூட்டுகிறதா?

இதைப் புரிந்துகொள்ளவே முடியாது என்று நினைத்துக்கொண்டேன். மனோரமாவின் லே-அவுட் என் ஆழ்மனதில் இருந்திருக்கிறது. அது கனவாக வெளிவந்திருக்கிறது. ஆனால் பிணங்கள் கிடக்கும் கோலம்கூட அப்படியேதான் இருக்கிறது. இல்லை, இந்தப்படத்தை வைத்து நான் அக்கனவை திரும்ப எடுக்கிறேன். அதுதான். பெருமூச்சுடன் செய்தித்தாளை மடித்து வைத்தேன். எதையுமே வாசிக்கத் தோன்றவில்லை.

பங்கஜம் காபி கொண்டுவந்தாள். குடித்து விட்டு டிவியை போட்டேன். செய்திகளை ஒதுக்கி கிரண் டிவியை போட்டேன். பழைய பாட்டுகளை ஒரு அதிஒல்லியான சிறுமி கேட்டு வாங்கி சமர்ப்பணம் செய்துகொண்டிருந்தாள். கறுப்புவெள்ளை படங்களில் பெண்பிள்ளைத்தனமான நஸீரும், கனத்த காளைக்கழுத்துடன் சத்யனும், மோவாய் தொங்கும் மதுவும் நடந்துகொண்டே பாடினார்கள். கறுப்புவெள்ளை ஒருவகை நிழல் விளையாட்டு போலிருக்கிறது. அதுவே பாடல்களுக்கு ஒரு கனவுத்தன்மையை அளிக்கிறது. ‘அகலே நீலாகாசம் அலதல்லும் மேக தீர்த்தம்’ என்ன ஒரு உச்ச ஸ்தாயி பாட்டு. நடுவே நான் ஏதோ எண்ணங்களுக்குள் சென்றேன். மீண்டும் பாடல் ‘கிருஷ்ணபட்ச கிளி சிலச்சு…’

பாடல் முடிந்ததும் மேலே சென்று கணினியை எடுத்து விரித்து மின்னஞ்சல்களைப் பார்த்தேன். சிறிய ஆவலுடன் நேற்று நான் கருத்து போட்ட இணைய தளங்களை போய் பார்த்தேன். பலர் என்னை வசைபாடி எழுதியிருந்தார்கள். அவற்றை வாசிக்கையில் முதலில் சிறிய புன்னகை வந்தது. பின்பு மெல்ல அவ்வசைகள் என் அகங்காரத்தைச் சீண்டுவதை உணர்ந்தேன். வெறும் நிழலுருவாக இருந்தாலும் அந்த இணைய ஆளுமையும் நான் தானே. அந்தவசைகளுக்கு சரமாரியாக வசைபாடி பதில்களைப் போட்டேன். இனிய நிறைவு ஒன்று உருவாகியது.

கீழே வந்து சாப்பிட்டுவிட்டு மேலே சென்று மீண்டும் கணினியை எடுத்து அந்த இணைய தளங்களுக்குள் சென்றேன். என்னை பலர் மேலும் வசைபாடியிருந்தார்கள். என்னை ஆதரிக்கும் சிலர் உருவாகியிருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை கடுமையாக நடந்தது. நான் மிக இயல்பாக ஒரு குழுவாக ஆகிவிட்டிருந்தேன். என் குழுவை ஆதரித்தும் மற்றகுழுவை வசைபாடியும் பதிவுகளை எழுதினேன். என்னிடம் இத்தனை வன்மையான மொழி இருப்பது எனக்கே ஆச்சரியமாக, உவகையளிப்பதாக இருந்தது.

இணையம் மிக அந்தரங்கமாக உலவ வழியமைக்கிறது.அந்தரங்கமான எந்த இடமும் மனநோய் வெளியே.

ஒருகட்டத்தில் சலித்துப்போய் மூடிவிட்டு படுத்துக்கொண்டேன். மெதுவாகக் கண்ணயரும்போது அரைக்கனவில் நீலிமா வந்தாள். அவள் எனக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பியிருந்தாள். கருமையான சட்டையற்ற உடலுடன் ஒரு தோணிக்காரன் கையில் துடுப்புடன் வந்து ”தம்புராட்டியுடே ஒரு கத்துண்டு” என்றான். அந்தக்கடிதம் வாழையிலையின் தளிரில் எழுந்தப்பட்டிருந்தது. நீலிமாவின் கையெழுத்து நீளவாட்டில் சரிந்து நீலநிற மையால் எழுதப்பட்டிருந்தது. அவள் அதில் என்ன எழுதியிருக்கிறாள் என என்னால் வாசிக்க முடியவில்லை. கூர்ந்து பார்க்கும்தோறும் எழுத்துக்கள் மங்கலடைந்தன

விழித்துக்கொண்டேன். மீண்டும் கனவு! ஆனால் நான் தூங்கியது போலவே தோன்றவில்லை. நான் படுத்திருப்பதும் ஏஸியின் உறுமலும் எல்லாம் எனக்கு நன்றாகவே நினைவிருந்தன. நீலிமாவை ஏன் பிரக்ஞை மயங்கும்போது மட்டுமே நினைவுகூர்கிறேன். விழித்திருக்கும்போது அவளைப்பற்றி நினைப்பதே இல்லை. நான் இவ்வாறு செய்வதெல்லாமே அவளைப்பற்றி நினைப்பதை ஒத்திப்போடுவதற்காகத்தானா?

மேனன் அவரது வீட்டில் இருப்பது போல எனக்கு ஓர் உள்ளுணர்வு வந்தது. கீழே இறங்கி வந்தேன். அது உள்ளுணர்வல்ல, வெளியே கேட்ட சத்தங்களை வைத்து என் மனம் அனிச்சையாக ஊகித்ததுதான் என்று தோன்றியது. மேனன் வீட்டுமுன் இரு கார்கள் நின்றன. ஒரு மினிலாரியில் பொருட்கள் ஏற்றப்பட்டன. மரங்கள் நடுவே நடந்து அங்கே சென்றேன். கறுப்புக்கண்ணாடி இல்லாமல் என் கண் அதிகமாகக் கூசவில்லை. வெயிலை மட்டும் பார்க்க முடியவில்லை. ஒருநாளில் பகலுக்கு கண் பழகிவிட்டிருந்தது.

# இரவு 23



**நோய்கள்**

**எத்தனை நட்பாக**

**அடையாளம்கண்டுகொள்கின்றன இரவை**

**கவலைகள்**

**எத்தனை சொந்தமாக**

**அணைத்துக்கொள்கின்றன இரவை!**

நான் மேனன் வீட்டுமுற்றத்தை நெருங்கியதும் அவர் கறுப்புக்கண்ணாடியுடன் உள்ளிருந்து வெளியே வந்தார். ”மற்ற சாதனங்ஙள் கிடக்கட்டே.. ” என்று சொன்னபடி படிகளில் இறங்கியவர் என்னைப்பார்த்து ”ஆ, சரவணன்…” என்றார். ”சார்” என்றேன். அவர் என்னை நோக்கி புன்னகையுடன் வந்து தோளில் கைவைத்தார். ”ஹௌ டு யூ டு?” ”ஓக்கே” என்றேன். ”ஐயம் லீவிங்.ஸீ ஐ கன் நாட் லிவ் ஹியர் அலோன்…” சிரித்துக்கொண்டு ”ஒரு சின்ன பயணம். சிம்லாவிலே என் பழைய கலீக் ஒருத்தன் இருக்கான். வா ஒரு டிரெக்கிங் போகலாம்னான். சரீன்னு கௌம்பிட்டேன். இன்னைக்கு ராத்திரி ·ப்ளைட்.”

அவரது தோற்றத்தில் இருந்த வேறுபாடு என்ன என்று எனக்கு அப்போதுதான் உறைத்தது. அவர் ஒரு கேன்வாஸ் தொப்பி அணிந்திருந்தார். முன்னர் அவர் தொப்பி ஏதும் அணிந்து நான் பார்த்ததில்லை. படங்களில்கூட! ஆழமான மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்கள் புறத்தோற்றத்தில் ஏதேனும் மாற்றத்தை அடைவதை அப்போது நினைவுகூர்ந்தேன். அது தன்னை மாற்றிக்கொள்வதற்கான ஒரு புற அடையாளமாக இருக்கிறது போலும்.

”இங்கே உள்ள வேல்யுபிள் திங்ஸ் எல்லாத்தையும் அஜய் கிட்டே குடுத்திடலாம்னு நெனைக்கிறேன். இங்கே இருந்தா திருட்டுப் போனாலும் போகும். எல்லாருக்கும் சொல்லிட்டேன். பாப்போம்” நான் ”ஸீ யூ சர்” என்றார். ”நேத்து தூங்கவே இல்லை. கிறுக்கனைமாதிரி குடிச்சிருக்கேன். வோட்கா. அப்டியே ராவா சாராயம்தான் அது. நாலஞ்சுதடவை வாந்தி எடுத்திட்டு மறுபடியும் குடிச்சேன். எல்லாரும் விழுந்திட்டாங்க. நான் மட்டும் தூங்காம இருந்தேன். போதையிலே கண்ணிமைகள் அப்டியே சரியும். சட்டுன்னு

உலுக்கிட்டு முழிப்பு வந்திடும். கமலா இப்ப இல்லைன்னு ஒரு நினைப்பு. வேற ஏதுவுமே இல்லை. ஷி இஸ் நோமோர். அவ்வளவுதான், மறுபடியும் ஊத்திக்குடிக்க ஆரம்பிச்சிருவேன். மறுபடியும் வாந்தி. ஹெல்!”

”நீங்க டிரக்ஸ் ஏதாவது சாப்பிட்டிருக்கணும் சார் ” என்றேன். ”சாப்பிட்டிருக்கலாம். அப்ப யாருக்கும் அது ஞாபகம் வரல்லை. எல்லாரும் தூங்கிட்டாங்க. நான் மட்டும் முழிச்சிட்டிருந்தேன். சச் எ லோன்லினெஸ். ரத்தம் கக்கி சாகப்போறேன்னு தோணிட்டுது. கடைசியிலே கொஞ்சம் கண்ணசந்தேன். அப்டிச் சொல்லிட முடியாது. கட்டிலிலே சாய்ஞ்சு ஒரு அஞ்சு நிமிஷம் போதையிலே மயங்கியிருப்பேன். ஒரு கனவு. கனவு இல்லை. ஒருவகையான ரியாலிட்டி. அந்த அளவு ரியலா எனக்கு கனவே வந்ததில்லை”

நான் படபடப்புடன் அவரையே பார்த்தேன். என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்! ”என்ன நடந்துதுன்னா கமலா உள்ளே வந்தாள். நான் குடிச்சிட்டு கிடக்கிறதைப் பாத்ததும் பயங்கரமான கோபம். ‘எந்தா இது? எந்த இது?’ ன்னு கத்துறா. மூக்கு முகம்லாம் ரத்தமா சிவந்துபோச்சு. நான் போதையிலே கண்ணைத்திறந்து அவளைப்பாத்து முழிக்கிறேன். ‘கமலா நீயாணோ? நீ தன்னேயாணோ?’ன்னு கத்தறேன். அவ என்ன ஆச்சுந்னு என்னை தூக்கி கட்டிலிலே உக்கார வைச்சா். டிவிய போடு காட்டறேன், டிவிய போடுன்னு நான் பதறினேன். டிவியை போட்டா இவளோட சடலம் கெடக்கிற ஸீன் ஓடிட்டிருக்கு. நீ செத்துட்டேன்னு நெனைச்சிட்டேன் கமலான்னு சொல்லி அழுதிட்டேன். நான்சென்ஸ், அந்தப்பொம்பிளை கட்டியிருக்கிற ஸாரிய பாருங்க. எப்பவாவது நான் அந்தமாதிரி கலர்ல ஸாரி கட்டியிருக்கேனா. அது வேற யாரோ. அவ முகமே வேற...இதுகூட கவனிக்கலையா. உங்களுக்கு என்ன பைத்தியமான்னு காச்சு மூச்சுன்னு கத்தறா. ஆக்சுவலி நானும் அப்பதான் டெட்பாடியோட முகத்தை பாக்கிறேன். அது வேற. ஆலப்புழயில் இவளுக்கு ஒரு கசின் உண்டு. சரஸ்வதின்னு பேரு. அவதான் அது. அப்டியே புல்லரிச்சு போயிட்டேன். சந்தோஷம்னா அந்தமாதிரி ஒரு சந்தோஷத்தோட உச்சியிலே நான் இருந்ததே இல்லை. பாய்ஞ்சு அவளை அப்டியே கட்டிக்கிட்டு கன்னம் கழுத்து மூக்குன்னு கண்டபடி முத்தம் குடுக்க ஆரம்பிச்சேன். அவ வெட்கமும் கோபமுமா அய்யய்யோ அய்யய்யோன்னு என்னை பிடிச்சு தள்ளினா. நான் கட்டிலிலே மல்லாந்து விழுந்தா நாராயணனும் கேணலும் கண்முழிச்சுப்பாத்து சிரிக்கிறாங்க... அப்பதான் நான் முழிச்சுகிட்டேன். ஆச்சரியம் என்னன்னா நான் கட்டிலிலே கிடந்தேன். மத்தவங்க என்னை பாத்திட்டிருந்தாங்க. நான் சிரிச்சுட்டே கமலா சாகலைன்னு சொன்னேன். நாராயணன் ‘ஒகே, நவ் யூ ஸ்லீப்’ னு சொன்னான். அப்பதான் எல்லாம் கனவுன்னு தெரிஞ்சது. ஆனா அப்டி தெரிஞ்சும்கூட மனசில இருந்த சந்தோஷம் குறையலை. ஐ வாஸ் டோட்டலி ரிலீவ்ட். எல்லா பாரமும் போச்சு. அப்டியே படுத்து நல்லா தூங்கிட்டேன்.”

என்னால் எதுவுமே சொல்ல முடியவில்லை. மேனன் ”என்ன ஒரு விஷன். அது கனவே இல்லை. அவளோட சருமமும் சூடும் என் கையிலேயும் முகத்திலேயும் இருக்கு. அது ஒரு அபூர்வமான சைக்காலஜிகல் ·பினாமினன். அந்த இல்யூஷன் வரலேன்னா நான் பைத்தியமா ஆகியிருப்பேன். மனசோட கடைசி லிமிட் தாண்டுதுன்னு தெரிஞ்சதும் மனசே போட்டுக்கிற டிராமாதான் அது. பொங்குற பாலிலே குளிர்ந்த தண்ணிய விடுறதுமாதிரி அந்த விஷ்·புல் டிரீம் நரம்புகளை சாந்தப்படுத்திட்டுது. மைகாட்! இ·ப் தேர் இஸ் எ காட் ஹி இஸ் இன் அவர் பிரெய்ன்” நான் என் மனதை அழுத்திய எடையை மூச்சாக வெளியே விட்டேன். நேற்று நானும் பைத்தியத்தின் விளிம்பை தொட்டுவிட்டேனா?



”நான் உனக்கு ஒரு அட்வைஸ் பண்ணலாமா?” என்றார் மேனன். ”சொல்லுங்க சார்” ”இந்த ராத்திரி லை·ப் வேணாம். விட்டிரு…” ”சார்” என்றேன் அர்த்தமில்லாமல். ”இது ஒரு சீப் ரொமாண்டிசிசம். மனுஷ மனசை அப்டியெல்லாம் எவரும் அளந்து வச்சிட முடியாது. அது பெரிய கடல். ஸோ…” நான் பேசாமல் நின்றேன். அவர் அப்படிச் சொல்வார் என நான் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தது போல உணர்ந்தேன்.

”அதைவிட குறிப்பாச் சொல்லணும்னா…” அவர் ஒரு கணம் தயங்கி முற்றத்தில் குரல் கேட்காத தூரத்தில் நின்ற அஜய்மேனனைப் பார்த்தார். ”அதாவது லீவ் தட் கர்ல்…நீலிமா. அவ உனக்கு சரிவர மாட்டா” நான் என் உடம்பெல்லாம் அதிர்வுடன் அவரையெ பார்த்து நின்றேன். அவர் ஆங்கிலத்திற்கு தாவினார் ”எனக்கு அந்தரங்கமாக ஒரு விஷயம் தெரியும். நீ கமலாவால் தீவிரமாக

கவரப்பட்டிருந்தாய். அவள் அப்படித்தான். நெருப்பு போல. அவளை விட்டு யாரும் கண்களை எடுக்க முடியாது. நீலிமா கமலாவின் ஒரு சிறிய மாற்றுவடிவம்தான் உனக்கு"

நான் அவரை மறுத்துப்பேச எண்ணினேன். ஆனால் என்னால் ஒருசொல்லைக்கூட என் உள்ளத்தில் இருந்து பெயர்த்தெடுக்க முடியவில்லை. மொழியே என்னுள் இல்லை போலிருந்தது. "நேற்று இந்தச்செய்தி கேட்டதும் உனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் துயரமும் அதனால்தான். உனக்கும் துரோகம் இழைக்கப்பட்டிருக்கிறது. நீயும் ஏமாற்றப்பட்டிருக்கிறாய்....இப்போது உன்மனதில் இருக்கும் சஞ்சலமும் இதனால்தான். நீலிமாவை கமலாவுடன் தொடர்புபடுத்தாமல் உன்னால் பார்க்க முடியாது. ஆகவே உன்னால் இனிமேல் ஒருநாள் கூட அவளுடன் நிம்மதியாக வாழமுடியாது. உன்னுடைய அகம் பதறிக்கொண்டே இருக்கும்"

"இல்லை சார்" என்று ஆரம்பித்தேன். "ப்ளீஸ்.." என்றார் மேனன் சிரித்தபடி. "நாம் உண்மையை அப்பட்டமாகச் சந்திப்பதைப்பற்றி நிறையவே பேசியிருக்கிறோம்." வாய்விட்டு சிரித்து "முட்டாள்தனம். உண்மையை எவராலும் நேருக்கு நேர் சந்தித்து பழக முடியாது. மெடுஸாவின் முகம் மாதிரி. அதை பல்வேறு பிரதிபலிப்புகளில்தான் பார்க்க முடியும். இல்லாவிட்டால் எதற்கு இத்தனை காவியம் கதைகள் கவிதைகள் இல்லையா? பேசாமல் திரும்பிப்போ. எல்லாரும் வாழக்கூடிய எளிமையான சாதாரணமான உலகத்தில் சாதாரணமாக வாழ முயற்சி செய்"

மேனன் என் தோளை இறுகப்பிடித்தார் "உன்னை இதற்குள் கொண்டுவந்தவன் நான். ஆகவே எனக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. நீ வெளியே போவது என் குற்றவுணர்ச்சியை கொஞ்சம் குறைக்கும்" "சரி சார்" என்றேன். "இதில் உள்ள மிக அசிங்கமான விஷயம் என்ன தெரியுமா, நம்முடைய அகங்காரம்தான். நாம் அசாதாரணமானவர்கள், இலக்கியமும் தத்துவமும் படித்தவர்கள் என்று கற்பனைசெய்துகொள்கிறோம். ஆகவே பிற முட்டாள்களைப்போல அல்லாமல் நாம் உண்மைகளில் காலூன்றி வாழ்கிறோம் என்ற எண்ணம் நமக்கு நிறைவை அளிக்கிறது. அப்படி எண்ணிக்கொள்ளும்போது நாம் மேலும் முட்டாள்களாக ஆகிறோம் என்பதை நாம் அறிவதில்லை. இப்படி பிடரியில் ஒரு கோடாலிவெட்டு விழும்போது சட்டென்று எல்லாம் தெரிந்துவிடுகிறது"



நான் அந்தக் கோடாலிவெட்டு என்ற சொல்லாட்சியால் அதிர்ந்தேன். அவர் அதை கவனமில்லாமல்தான் சொல்லியிருந்தார். "நீ பேசாமல் சென்னைக்குப் போ. உன்னுடைய சாதாரண வாழ்க்கையில் சாதாரணமான

சந்தோஷங்களில் ஈடுபட்டு நிம்மதியாக இரு. இந்த ஆபத்தான இருண்ட பாதை வேண்டாம்... நீலிமாவை மறந்துவிடு. அவளை நீ ஒருபோதும் பகலுக்குக் கொண்டு செல்லமுடியாது. அவள் ஒரு யட்சி. யட்சிகள் பகலில் வாழ முடியாது" சட்டென்று கண்கள் சுருங்க "அந்த பெங்காலிபாபு போலீஸிடம் என்ன சொல்லியிருக்கிறான் தெரியுமா? கமலா ஒரு யட்சியாம். யட்சி பகலில் வரக்கூடாது என்பதற்காகத்தான் கொன்றானாம். பாவம், அவனும் கலங்கிப்போயிருக்கிறான்."

நான் முகர்ஜியின் முகத்தை நினைவுகூர்ந்ததும் கடுமையான துவேஷத்துக்கு உள்ளானேன். அதை என் முகத்தில் வாசித்த மேனன் "அவனை வெறுப்பதில் அர்த்தமே இல்லை. அவனும் சாதாரண மனிதன்தான். சுவாமிஜியும் கமலாவும் எல்லாருமே சர்வ சாதாரணமான மனிதர்கள். தங்களை அபூர்வமானவர்கள் என்று கற்பனைசெய்துகொண்டு ஆழ்மனத்துடன் விளையாடினார்கள். குழந்தைகள் தீயுடன் விளையாடுவது போல." சட்டென்று என் தோளை மேலும் தட்டி "ஓகே..பைன்" என்றார்

நான் பெருமூச்சு விட்டு புன்னகைசெய்தேன். புன்னகையில் என் முகத்தின் சதைகள் விரிசலிடுவது போல உணர்ந்தேன். "நேரா டெல்லிக்கா சார்?" "எஸ்.அங்கேருந்து வரணாசி. ஒரு நாள் அங்கே இருப்பேன். கமலாவை கங்கையிலே கரைக்கணும். அவளோட ஆசை அது. பலதடவை சொல்லியிருக்கா" "ஓக்கே" என்றேன். "ஸீ, ஷி இஸ் சச் எ நைஸ் வுமன். எனிவே வி ஹேவ் எ லாட் ஆ·ப் வெரி ப்யூட்டி·புல் மொமென்ட்ஸ்.." அவர் புன்னகை செய்தபோது கண்கள் கலங்கியிருந்தன. நான் கண்களை திருப்பிக்கொண்டேன்.

கார்கள் கிளம்பின. மேனன் ஏறிக்கொண்டு "நான் சொன்னதை ஞாபகம் வச்சுக்கோ.." என்றார். அஜய்மேனன் முகபாவனையாலேயே விடைபெற்றான். கார்கள் சென்றபின் நான் அந்த வீட்டுமுன்பு பேசாமல் அமர்ந்திருந்தேன். அந்த வீடு என்னை முழுமையாக கைவிட்டு எல்லா வாசல்களையும் மூடிக்கொண்டு வெறும் ஜடப்பொருளாக மாறிவிட்டிருந்தது. நான் அதையே பார்த்தபின் திரும்பி நடந்தேன். அப்போது எனக்கு அந்த உள்ளுணர்வு ஏற்பட்டது. முதல்முறையாக அந்த வீட்டைச் சுற்றி நடந்தபோது ஏற்பட்ட உள்ளுணர்வு. அதற்குள் ஆளிருக்கிறது!

என் உடம்பு புல்லரித்துவிட்டது. நான் அனிச்சையாக அந்த வீட்டை நோக்கிச் சென்றேன். உடனே கடுமையான அச்சத்தால் செயலிழந்து நின்று விட்டேன். சேற்றில் புதைந்து கிடந்த மூளையை பெயர்த்தெடுத்ததும் வேகமாக என் வீட்டை நோக்கி ஓடிப்போய் மாடிக்குச் சென்று என் கட்டிலில் மூச்சு வாங்க அமர்ந்துகொண்டேன். மெல்ல மெல்ல மூச்சு தணிந்ததும் மீண்டும்

மடிக்கணினியை எடுத்தேன். பழைய இணைய தளங்களுக்குள் சென்றேன். அந்த தீராத வசைப்போர்களில் மூழ்கினேன்.

எத்தனை வசைகள். கிண்டல்கள் நக்கல்கள், தர்க்கங்கள். எதிலுமே அர்த்தமில்லை. மார்க்ஸியம், தேசியம், இனவாதம், மதவாதம்... கொள்கைகள், நம்பிக்கைகள், தரப்புகள். எல்லாமே பொய். வெறுப்பையும் காழ்ப்பையும் கொட்டுவதற்கான முகாந்திரங்கள் மட்டும்தான் அவை. இவர்கள் அனைவருமே என்னைப்போல அடிபட்டு வலி தெறிக்க எங்காவது பதுங்கிருப்பவர்கள்தானா? இல்லை, பாதிப்பேர் நிஜவாழ்வில் கோழைகள். நிஜவாழ்வில் பெரும் வெற்றிடம் ஒன்று கொண்டவர்கள்.

நான் தூங்கிவிட்டேன். பின்பு எழுந்துகொண்டபோது கீழே பெல் அடித்துக்கொண்டிருந்தது. மாலை மூன்றரை மணி. மதியம் சாப்பிட்டிருக்கவில்லை. அதன் களைப்பும் சோர்வும் உடலில் இருந்தன. கதவைத் திறந்தேன். ஒரு கார் நின்றிருந்தது. சற்று கழிந்துதான் அது நாயரின் கார் என்று தெரிந்தது. ”சரவணன் சார் அல்லே?” ”அதே” என்றேன். ”ஞான் நாயர் சாரின்றே டிரைவரா...ஒரு லெட்டர் உண்டு” நல்லவேளை, அவன் டிரைவராக இருந்தான். தோணிக்காரனாக இருந்திருந்தால் அங்கேயே நான் பைத்தியமாகியிருப்பேன்.

நீலிமாவின் கடிதம்தான். இளநீலநிறமான தாளில் நீலநிற கையெழுத்து. நான் கனவில் பார்த்த அதே கையெழுத்து. ஆனால் எனக்கு அவள் எதுவுமே எழுதியதில்லை. அப்படியானால் எங்கே பார்த்தேன் இந்தக் கையெழுத்தை? அவள் அறையில் தாள்களை கவனமில்லாமல் எடுத்துப் பார்த்திருக்கிறேன். ஒரு சிவப்பு டைரி. அதுவா? இருக்கலாம். எண்ணங்கள் ஊடாகப்போனதனால் என் கவனம் அந்த எழுத்துக்களில் நிலைக்கவில்லை. பார்த்துக்கொண்டிருந்தேனே ஒழிய என்னால் வாசிக்க முடியவில்லை. திரும்பி அமர்ந்து கொண்டேன். அந்த அசைவில் என் மனதைக் கலைத்து அடுக்கியவன் போல என்னால் வாசிக்க முடிந்தது.

சுருக்கமாக ஆங்கிலத்தில் நீலிமா எழுதியிருந்தாள். ‘அன்புள்ள சரண், உங்கள் மனம் எப்படி போகிறது என்று என்னால் ஊகிக்க முடிகிறது. உங்களுக்கு முழுச் சுதந்திரத்தையும் கொடுப்பதற்காகவே இதை எழுதுகிறேன். நான் எந்தவகையிலும் உங்களை கட்டுப்படுத்த விரும்பவில்லை. நீங்கள் எந்தவிதமான குற்றவுணர்ச்சியும் இல்லாமல் என்னைவிட்டுச் செல்லலாம். உங்கள் விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம். மீண்டும் தொடர்பு கொள்ளாமலும் இருக்கலாம். எனக்கு எந்தவகையான வருத்தமும் இல்லை. நான் இந்த உறவின் இதுவரையிலான நாட்களையே பெரிய அதிருஷ்டமாக நினைக்கிறேன். அன்புடன் நீல்”

கடிதத்தை நாலைந்து முறை மீண்டும் மீண்டும் வாசித்தேன். மடித்து டீபாயில் வைத்துவிட்டு சோபாவில் கால் நீட்டி படுத்துக்கொண்டேன். கண்களை மூடியபடி நீலிமாவை நினைக்க முயன்றேன். ஆச்சரியமாக அவள் முகமே அகத்தில் தெளியவில்லை. கலங்கிய நீரின் நிழல்கள் போல என்னென்னவோ ஓடிக்கொண்டிருந்தது.

பின்பு எழுந்து அமர்ந்தேன். மீண்டும் கடிதத்தை வாசித்தேன். அந்தக் கடிதத்தை நான் ஏன் கனவு கண்டேன்? அதை நான் எதிர்பார்த்திருந்தேனா என்ன? அப்படித்தான் இருக்கவேண்டும். இதோ நான் எதிர்பார்த்த கடிதம் வந்துவிட்டது. அவ்வளவுதான். அப்போது ஒன்று தோன்றியது, அந்த வீட்டில் இனிமேல் என்னால் ஒரு கணம்கூட இருக்க முடியாது. அந்த இருவீடுகளுமே பேய்வீடுகளாக ஆகிவிட்டிருந்தன. இரவின் தனிமையில் அங்கே இருந்தால் என் சித்தம் கலங்கிவிடும்.

நான் வேகமாக படிகள் ஒலிக்க ஏறி மாடிக்குச் சென்றேன். என் உடைகளை அள்ளி அள்ளி பெட்டியில் வைத்து மூடினேன். பொருட்களை எடுத்து அடுக்கினேன். பெட்டியுடன் கீழே வந்தேன். ஒரு கணம் வீட்டை திரும்பிப் பார்த்தேன். இந்த வீடு இனி என் நினைவுகளில் எப்படி இருக்கும்? ஒரு பேய்வீடாக மாறிவிடுமா என்ன? கதவைத்திறந்து வெளியே சென்று பூட்டிய பின்னர்தான் நீலிமாவின் கடிதத்தை நினைவுகூர்ந்தேன். கதவைத்திறந்து அதை எடுத்துக்கொண்டு மிீண்டும்பூட்டினேன். காரை எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

ரயிலில் செல்லலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் சட்டென்று காரிலேயே போகலாமென்று தோன்றியது. ரயிலிலொ அல்லது விமானத்திலோ சும்மா அமர்ந்திருப்பது என்னால் முடியாது. நான் இந்த இடத்தை விட்டுப்போவது என் மனதுக்கு உறுதியாக வேண்டுமென்றால் நான் இங்கிருந்து ஓட வேண்டும். காரை நானே ஓட்டி எனக்குப்பின்னால் நகரமும் கட்டிடங்களும் காயல்களும் விலகிச்செல்வதை காணாவேண்டும். ஓடிச்செல்லும் சாலையில் இரவெல்லாம் இருந்துகொண்டிருக்க வேண்டும்



உண்ணிகிருஷ்ணனுக்கு போன்செய்து நகரத்தில் வந்து என்னிடமிருந்து சாவியை வாங்கிக்கொள்ளச் சொன்னேன். காரை சென்னையில் இருந்து திரும்பக் கொண்டுவர ஏற்பாடு செய்வதாக டிராவல்ஸிடம் சொல்லும்படிச் சொன்னேன். பெருமூச்சு விட்டுக்கொண்டு நிதானமாக காரை ஓட்ட ஆரம்பித்தேன். தென்னைமரங்கள் நடுவே காயல் ஒளி நெளியும் அலைகளுடன் என்னை விட்டு பிரிந்து மறைந்தது.

# இரவு 24

**இரவே**

**ஒரு சொல்கூட**

**இல்லாதது உன் கருணை.**

**தேடுவோரன்றி**

**துய்க்கமுடியாதது.**

**அதனாலேயே அளவற்றது.**

**உனக்கு வணக்கம்!**



விமானம் பின்னிரவு ஒன்றரை மணிக்கு தரையிறங்கும் என்றார்கள். நான் காரை நிறுத்திவிட்டு வந்து விமானம் தாமதம் உண்டா என்று விசாரித்தேன். நீலக்காலர் கொண்ட சீருடை அணிந்த பெண் ''இல்லை'' என்று சொன்னாள். அவள் முகமெங்கும் பருக்கள். ஆனால் சிவந்த முகத்திற்கு பருக்கள்

அழகாகவே இருந்தன. ·பாதர் தாமஸ் என்றால் உடனே அவளிடம் ”தேங் யூ. யூ லுக்ஸ் ப்யூட்டி·புல்” என்று சொல்லியிருப்பார். அடுத்த முறை அவளை சுதந்திரமாக ரசிக்க முடியாமலாகும். நான் அவளை பார்த்தபடி ”தேங்க்யூ” என்ற பின் ஒரு காபி சாப்பிட்டேன்.

தாய் ஏர்வேய்ஸ் விமானம் ஹாங்காங்கில் இருந்து வரும் தகவலை ஒலிப்பெருக்கி சொன்னபோது சென்று வரவேற்புக் கும்பலில் நின்றுகொண்டேன். விமானம் வந்து இறங்குவதற்கான நேரம், பயணிகள் வெளிவருவதற்கான நேரம், பெட்டிகள் தூக்கிப்பட்டையில் வெளிவருவதற்கான நேரம் அனைத்தையும் மானசீகமாக கணக்கிட்டபடி நின்றேன். நாற்பது நிமிடங்கள் கழித்து தாமஸ் ஒரு தள்ளு வண்டியை தள்ளியபடி சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு வந்தார். நான் கைவீசினேன்.

”ஆ, ஸெரவணன்!” என்றார் தாமஸ். நான் அவரை அணுகி அவரது தள்ளுவண்டியை வாங்கிக் கொண்டேன். ”எப்படி இருந்தது பயணம்?” ”·பைன்.. நன்றாக தூங்கினேன்..” தள்ளுவண்டியுடன் சாலையைக் கடந்தோம். ”சீனா எப்டி இருக்கிறது? இன்னும் பத்து வருடத்தில் கர்த்தரிடம் வந்துவிடுமா?” என்றேன். ”வாய்ப்பே இல்லை. ஆனால் போப்பிடம் வந்துவிட வாய்ப்பிருக்கிறது” என்று சிரித்தார்.

காரில் பெட்டிகளை தூக்கி வைத்தேன். ”நல்ல எடை இருக்கிறதே...ஏகப்பட்ட பொருட்கள் வாங்கியிருக்கிறீர்கள்”. ”அய்யய்யோ , எல்லாம் பரிசுப்பொருட்கள். கிளம்பும்போது தந்துகொண்டே இருந்தார்கள்.” என்றார். நான் காரை கிளப்பினேன். ”சரவணன் நீங்கள் சொன்னது உண்மை, சீனா சீக்கிரமே கிறித்தவமாகி விடும்”

”ஏன்?” என்றேன். ”அங்கே பிரம்மாண்டமான தொழில் வளர்ச்சி. மிகக் கடுமையான உழைப்பு இல்லாமல் அது நடக்காது. இயந்திரம் போல மனிதனை வேலைசெய்ய வைக்க வேண்டுமென்றால் மகிழ்ச்சி என்பது பணத்தில் இருக்கிறது என்று மக்களை நம்ப வைக்க வேண்டும். முதலாளித்துவம் அதற்காக பொம்மைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும். செல்போன்கள், கம்ப்யூட்டர்கள், கார்கள், விமானங்கள், துப்பாக்கிகள். அவற்றை வாங்கி மகிழ்ச்சியை அடைவதற்காக மக்கள் ரத்தத்தை வியர்வையாக ஆக்குவார்கள்” ·பாதர் சிரித்தார் ”கிறித்தவ மதம் உலகம் முழுக்க எப்படி பரவியது என்றால் லௌகீகமான பொருட்களை கோரி கடவுளிடம் மிக உருக்கமாக, மிக நம்பகமாக பிரார்த்தனை செய்ய கற்பிக்கும் மதம் இதுதான்...”

”சீனர்கள் என்ன கேட்கிறார்கள்?” என்றேன். ”என்ன கேட்பார்கள்? பாவப்பட்ட ஜனங்கள். செல்·போன் கேட்கிறார்கள்..” என்று சிரித்தார். ”அவர்கள் ஏமாற்றம்

அடைய அடையத்தான் கிறித்தவத்துக்கு வாய்ப்பு அதிகம். ஆரம்பத்தில் உழைக்கலாம், சம்பாதிக்கலாம் என்றெல்லாம் தோன்றும். பிறகு இது எதுவும் அவர்கள் கையில் இல்லை என்று தெரியும்போது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வருவார்கள். தேவாலயங்கள் நிரம்பி வழியும். எங்களுக்கு வேலை தேடித்தாருங்கள் கர்த்தாவே, எங்கள் பிள்ளைகளுக்கு வேலை தேடித்தாருங்கள் கர்த்தாவே, எங்கள் சம்பளங்களை கூட்டித்தாருங்கள் கர்த்தாவே..”

”நீங்கள் ஒருவரே போதும், திருச்சபைக்கு பெரிய தடையாக குறுக்கே படுத்து விடுவீர்கள்” என்றேன். ”அந்த யூத ஆசாரியாலேதான் பிரச்சினை. அவனை வைத்துக்கொண்டு உருப்படியாக பிழைக்க முடியாது. நான் சீனாவுக்கு திரும்பப் போவதாக இல்லை. என்னை கிட்டத்தட்ட வராதே என்று சொல்லிவிட்டார்கள்...” என்றார். ”ஆத்ம அறுவடை என்ன ஆகிறது?” என்றேன். ”அங்கே அறுவடை இன்னும் ஆரம்பிக்கவில்லை. விதைத்து முளைத்திருக்கிறது. கடுமையாக பூச்சிக்கொல்லி அடித்துக்கொண்டிருக்கிறார்கள். உன் வீடு என்ன நகரத்துக்கு வெளியேயா இருக்கிறது?” நான் ”ஆமாம், வண்டலூர் தாண்டி” என்றேன். ”ஓ” என்றார். மலையாள ஓ

சற்று நேரம் கார் அமைதியாகச் சென்றது. ”மறுபடியும் எர்ணாகுளம் போகவே இல்லை , இல்லையா?” என்றார். ”ஆமாம்” என்றேன். ”போகத்தோன்றவில்லை. அங்கே தொழில்முறையாகப் போகவேண்டிய தேவையும் இல்லை” ”எப்படி போகிறது தொழில்?” ”இது ஆலோசனை தொழில்தானே. நன்றாகவே போகிறது” என்றேன். ”மேனன்?” ”நாலைந்து கடிதங்கள் போட்டிருந்தார். அதே கம்பீரமான ஆங்கிலம். அழகான வாதகதிகள். இப்போது ரிஷிகேஷில் இருக்கிறார். ஒரு ஆசிரமத்தில். கஞ்சன்ஜங்கா ஏறும் அளவுக்கு உடல்நிலை நன்றாகத்தான் இருக்கிறது”

சாலையின் நிலாவரிசைகள் காரின் வேகத்தில் இணைந்து இரு ஒளிநதிகளாக ஆகி பின்னால் பீரிட்டு ஓடின. ”நீ அன்றைக்கே கிளம்பிப்போய்விட்டாய் என்று நான் நான்கு நாட்கள் கழித்துத்தான் தெரிந்துகொண்டேன்.” என்றார். ”ஆமாம்...அது ஒரு கொந்தளிப்பான மனநிலை. நான் என் வசத்தில் இல்லை. நீலிமா எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். என்னை அவள் கட்டுப்படுத்துவதில்லை என்று. ஏனோ அதன் பிறகு ஒரு கணம் கூட அந்த வீட்டில் தங்க முடியாது என்று தோன்றி விட்டது. உடனே கிளம்பிவிட்டேன்...”

”விமானத்திலா?” ”இல்லை காரில்” என்றேன் ”ஓ” என்றார் தாமஸ். ”அப்போது அந்த மனநிலையில் வேகமாக கார் ஓட்டி நேரடியாகவே விலகி வரவேண்டும் போலிருந்தது. — தாண்டுவது வரை மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டினேன். எதிரே வந்தவர்கள் எல்லாம் பதறி விலாகினார்கள். பல லாரிக்காரர்கள் கை நீட்டி

திட்டினார்கள். விபத்து இல்லாமல் சென்றது அதிருஷ்டம். என் நரம்புப்பதற்றத்தால் அக்சிலேட்டரை இறுக மிதித்திருந்தேன்... மலை ஏற ஆரம்பித்ததும் கொஞ்சம் கவனமானேன். நேர்ச்சாலையில் இருந்த அந்த வெறி வளைவுகளில் சுழலச் சுழல இல்லாமலாயிற்று.. வழியில் ஒரு சிறிய டீக்கடையில் நிறுத்தி டீ சாப்பிட்டேன்"

·பாதர் "என்னால் ஊகிக்க முடிகிறது" என்றார். "மனநிலைகளை ஊகிக்க முடியும் ·பாதர். மனநிலை மாற்றங்களைத்தான் ஊகிக்க முடியாது" என்றேன். "மேலே போகப்போக நான் அமைதியடைந்துகொண்டே வந்தேன். வளைவுகளில் கவனமாக ஓட்டவேண்டியிருந்தது என்பதுதான் காரணம். மனம் கொந்தளித்த நிலையில் காரம்ஸ் ஆட ஆரம்பித்தால் சாந்தமாகிவிடும் அல்லவா அதை மாதிரி..." "காரம்ஸ் என் பிரியமான உதாரணம்..." என்றார் தாமஸ் "பிதாவிடம் மக்களை கொண்டு சென்று சேர்க்கிற ஸ்டிரைக்கர்தான் கிறிஸ்து" "என்றே குருவாயூரப்பா!" என்றேன். தாமஸ் சிரித்தார்.



"உசிலம்பட்டி தாண்டியதும் மலைக்குமேலே ஏதோ ஒரு இடத்தில் பக்கவாட்டில் ஒரு காட்டுச்சாலையில் திரும்பிவிட்டேன். அது ஒரு கிராமத்திற்குச் சென்றது. அதில் இருந்து ஒரு மண்சாலைக்குச் சென்றேன். அங்கிருந்து மீண்டும் வ¨ளைந்தேன். மூங்கில் வைத்து தடுத்திருந்த ஒரு தனியார் சாலைக்குள் மூங்கிலை தூக்கிவிட்டுவிட்டுச் சென்றேன். ஏதோ ஒரு எல்லையில் கார் போகமுடியாமல் ஆகியது. அங்கேயே காரை விட்டுவிட்டு இறங்கி காட்டுக்குள் சென்றுவிட்டேன். எத்தனை தூரம் நடந்தேன் என்று தெரியாது. போய்க்கொண்டே இருந்தேன்... வழியில் நிறைய பாம்புகளைப் பார்த்தேன். முட்களில் சிக்கி உடம்பெல்லாம் கோடுகள் விழுந்து ரத்தம் கசிந்தது..."

தாமஸ் புன்னகையை மாறாமல் வைத்துக்கொண்டு கேட்டார். அவரது கண்கள் தீவிரமடைந்திருந்தன. "ஒரு பாறைக்குப் போய் சேர்ந்தேன். காட்டுக்கு நடுவே ஒளிந்து நிற்கும் பிரம்மாண்டமான யானை மாதிரி ஒரு கரும்பாறை. அதன்

மீது சில நிறிய நீரோடைகள் இருட்டுக்குள் பளபளத்தபடி ஓடிச்சரிந்து மெல்லிய சத்ததுடன் விழுந்தன. பாறையில் பல இடங்களில் வெல்வெட் மாதிரி பாசி. சில இடங்களில் கால் வழுக்கியது. அங்கே ஒரு சிறிய கல் மேல் அமர்ந்துகொண்டேன். கொஞ்ச நேரம் கழித்து படுத்துக்கொண்டு நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படியே தூங்கிவிட்டேன்"

"நல்லது..."என்றார் தாமஸ் "மன அழுத்தம் ஏற்படும்போது வரும் தூக்கம் மிக நல்லது. மூளைக்குள் ஒரு சிறிய தென்றல் வீசும் அப்போது" நான் "ஆம். இப்போது அந்த தூக்கம்தான் எல்லாம் என்று தெரிகிறது. தூக்கத்தில் நான் கனவுகள் கண்டுகொண்டிருந்தேன். வானம் நட்சத்திரங்கள் காயலில் மீன்கள்.மீண்டும் மீண்டும் அதே காட்சிகள்தான். அவை ஒன்றுடன் ஒன்று கலந்து வந்துகொண்டே இருந்தன. நான் ஏற்கனவே எரணாகுளத்தில் கண்ட காட்சிகள் அவை. ஒரு படகில் நான் சென்றுகொண்டிருக்கிறேன். படகு கவிழ்ந்து நீரில் விழுகிறேன். குளிர்ந்து சில்லிட்ட தண்ணீர். ஆழத்துக்குச் சென்றபடியே இருக்கிறேன். என்னைச்சுற்றி மின்னும் மீன்கூட்டங்கள். அவற்றின் நடுவே நட்சத்திரங்கள். திடீரென்று ஓர் உணர்வு. நான் நீரில் க"ரைந்து விட்டேன். நான் இல்லை. என் நினைப்பு மட்டும்தான் இருக்கிறது. அதுவும் புகை காற்றில் மறைவது போல பிரிந்து பிரிந்து மறைந்து கொண்டிருக்கிறது. நான் வேகமாக இல்லாமலாகிக்கொண்டிருந்தேன். அந்த நீர்வெளி ஆகாயம் போல விரிந்து பரந்து முடிவில்லாததாக கிடந்தது. கோடானுகோடி நட்சத்திரங்கள். புகை கொஞ்சம் தான் மிச்சமிருந்தது. மாட்டேன் மாட்டேன் என்று கூவியபடி தலையை ஆட்டினேன். விழித்துக்கொண்டேன். அங்கேதான் கிடந்தேன். உடம்பு பனியில் ஈரமாகியிருந்தது"

தாமஸ் முழுமையாக அந்தச் சொற்களை உள் வாங்கிக்கொண்டிருந்தார். அவரது கண்ணாடிகளின் கீழ்ச்சில்லுகளில் சாலை ஒளிவிட்டது. "நான் அப்போது ஓர் அசைவை கண்டேன். எனக்கு மேலே. மரக்கிளையில் ஒரு மெல்லிய அசைவு. நிமிர்ந்து பார்த்தேன். காற்றின் அசைவு அல்ல அது. எழுந்து அமர்ந்தேன். வானத்தில் மெல்லிய நிலவு. ஆனால் நட்சத்திரங்களுடன் சேர்ந்து நன்றாகவே அது ஒளி வீசியது. வெண்மையான மூடுபனிமீது நிலா அமர்ந்திருந்தது. நிலவொளி அந்த படலம் வழியாக நேரடியாகவே இறங்கி எங்கும் பரவியிருந்தது. சாம்பல் நிறமான ஒளி. காடு அந்த ஒளியில் நிழல் வடிவமாக தெரிந்தது. அந்த கிளையசைவையே பார்த்துக்கொண்டிருந்தேன். சட்டென்று அதில் இருந்து ஒரு மலபார் அணில் இன்னொரு கிளைக்குக் குதித்தது. மூடுபனியின் ஒளிவெள்ளத்தில் அது நீந்தி துழாவிச் சென்றது. அதன் உடலில் நிலவொளியே முடிகளாக சிலிர்த்திருந்தது. நிலவொளி அதன்

வாலாக சுழன்றது. என் உடம்பு விரைத்துவிட்டது. ஒரு வலிப்பு மாதிரி வந்து கைகால்கள் இழுத்துக்கொண்டு வாய் கிட்டித்து விட்டது”.



நான் தாமசை நோக்கி திரும்பி ”மேனன் இதே மாதிரி அனுபவத்தைச் சொல்லியிருப்பார்” என்றேன். ” ஆமாம்” என்று நிறுத்திக்கொண்டார். ”என் தொடைகளில் விந்து வெளியேறியிருந்தது” என்றேன். ”அந்த அனுபவத்தை இப்போது என் எதிர்வினைகள் வழியாகச் சொல்கிறேன். ஆனால் அப்போது நான் இல்லை. என்னைப்பற்றிய தன்னுணர்வே இல்லை” ”அது ஒரு பிரார்த்தனை” என்றார் தாமஸ். ”நல்ல பிரார்த்தனையில் பிரார்த்திப்பவன் இல்லாமலாவான். பிரார்த்தனையும் இல்லாமலாகும். பிரார்த்திக்கப்படுவது மட்டும் மிஞ்சியிருக்கும்”

நான் பெருமூச்சு விட்டேன். ”’அவ்வளவு போதும் என்று நினைக்கிறேன். நான் அங்கிருந்து கிளம்பி என் காரை நோக்கி வந்தேன். காரில் என் மொபைல் இருந்தது. எடுத்து நீலிமாவைக் கூப்பிட்டேன். முதல் மணியிலேயே எடுத்தாள். அவள் அந்த மொபைலை மார்புடன் அணைத்துக்கொண்டு தூங்காமல் படுத்திருந்தாளாம். அந்த மொபைலில் கணங்களின் எண்கள் மாறுவதை பார்த்துக்கொண்டே முழு இரவும் இருந்திருக்கிறாள். அவள் ஹலோ என்று சொன்னபோது குரல் அடைத்திருந்தது. நான் தெளிவாகவே பேசினேன். அவளுடன் தான் என் வாழ்க்கை என்று சொன்னேன். ஆனால் நான் மீண்டும் எர்ணாகுளத்துக்கு வரப்போவதில்லை. அவளை சென்னைக்கு வரச்சொன்னேன்”

”தட் வாஸ் நைஸ்” என்று சொல்லி கண்ணாடியை தூக்கி கண்களை அழுத்தினார் தாமஸ். ”ஸாரி, அவள் அந்த மொபைலை விடிய விடிய பார்த்துக்கொண்டிருந்தாள் என்று கேட்டபோது என் மனம் பொங்கி விட்டது” நான் ”அவளால் மீண்டும் ஒரு சொல்கூட பேச முடியவில்லை. நான் ஹலோ ஹலோ என்று கத்தினேன். அதன்பின் மொபைலை அணைத்துவிட்டேன். நேராக — சென்று ஒரு ஓட்டலில் தங்கினேன். நன்றாக தூங்கினேன்.” என்றேன்.

கார் செல்லும் பாதையை தாமஸ் கவனித்து ”இது கிராமம் மாதிரி இருக்கிறதே” என்றார். ”ஆமாம் கிராமம்தான். இங்கே ஒரு எட்டு ஏக்கர் நிலத்துடன் ஒரு வீட்டை வாங்கியிருக்கிறேன். எனக்கும் நீலிமாவுக்கும் எங்கள் இரவு வாழ்க்கைக்கு தனிமை தேவைப்படுகிறது” தாமஸ் ”நைஸ் பிளேஸ். சென்னைக்கு அருகில் இப்படி ஒரு இடமிருப்பதே ஆச்சரியமாக இருக்கிறது” என்றார். ”சென்னையில் இருந்து வெறும் முப்பது கிலோமீட்டர் தூரத்தில் சிறுத்தை வாழும் காடு இருக்கிறது. பலருக்கு அது தெரியவதில்லை” என்றேன்.

”மேனனிடம் சொன்னாயா?” ”அவருக்கு எழுதியிருந்தேன். அவர் பதில் போடவில்லை” என்றேன். ”அவரிடம் நான் மானசீகமாக நிறைய விவாதித்திருக்கிறேன். இப்போது இதைப்பற்றி நான் சொல்லும் வாதங்கள் எல்லாமே அவரிடம் மானசீகமாக உரையாடி உருவாக்கிக் கொண்டவைதான்.” என்றேன்.

”முதல் விஷயம் இதுதான் ·பாதர். இத்தனை தீவிரமான அனுபவங்களுக்குப் பின்னர் நான் சாதாரணமான உலகுக்குப் போய் சாதாரணமாக வாழ முடியாது. அப்படி நடிக்கலாம். மனம் இந்த உக்கிரத்தையே நாடிக்கொண்டிருக்கும் நாம் எவ்வளவு ஆழமான வாழ்க்கை வாழவேண்டும் என்று நாம் தீர்மானிக்க முடியாது.” ”உண்மைதான்” என்றார் தாமஸ்.

”மேனன் என்ன தவறு செய்தார் என்றால் அவர் கனவின் அப்பட்டத்தில் வாழ விரும்பினார். ஆனால் அந்தக்கனவு அவர் விரும்பியபடி நடக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். யுலிஸஸ் நரகத்துக்குப் போனதைப்பற்றி என்னிடம் அவர் சொன்னார். வீரன் மட்டுமே ஆழத்திற்குச் செல்ல முடியும் என்றார். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் மேனன் தாந்தேயின் டிவைன் காமெடியைப் படித்துவிட்டு அதைச்சார்ந்து ஒரு வரைபடம் அமைத்துக்கொண்டு நரகத்துக்குச் செல்ல முயன்றவர் என்று. ஒவ்வொரு கணமும் முற்றிலும் எதிர்பாராத ஒன்று நடக்கும்போது அதை எதிர்கொள்வதுதானே வீரம்?”



”மேனனைவிட சுவாமிஜி இன்னும் தெரிந்து வைத்திருந்தார்” என்று தொடர்ந்தேன் ”அவர் இரவை ஒரு யானை என்றார். நூற்றுக்கு தொண்ணூறு பாகன்கள் யானையால்தான் கொல்லப்படுகிறார்கள். யானைக்குள் ஒரு காடு இருந்துகொண்டே இருக்கிறது. யானையை எவருமே முற்றிலும் கட்டுப்படுத்த முடியாது. யானை அவரை மிதித்துக்கொன்றது. ஒருபாகனை யானை கொன்றது என்பதனால் இன்னொருவன் யானைப்பாகனாக வர மாட்டானா என்ன? இறந்தவனின் மகனே வருவான் அல்லவா? இது ஒரு பெரிய சவால். இந்த கனவு வெளியின் அடியில் இன்னும் மகத்தான வெளிகள் இருக்கின்றன. என்னுடைய ஆர்வம் அந்த ஆழம் நோக்கித்தானே ஒழிய என் தலைக்குமேல் உள்ள குமிழிகளின் பரப்பை நோக்கி அல்ல”

”அது நல்ல தன்னம்பிக்கை” என்று தாமஸ் சிரித்தார். ”என்னுடைய ஒற்றை வரியே இதுதான். நான் நெடுஞ்சாலையில் நடக்கவிரும்பவில்லை, இழுத்துக்கட்டிய கம்பிமீது அந்தரவெளியில் நடக்க விரும்புகிறேன்” என்றேன் ”இந்த பயணத்தில் என் நரம்புகள் ஒரு கணம் கூட தொய்வடையாது. சாதாரணமான தருணம் என்பதே கிடையாது. ஒவ்வொரு காலடியும் ஒரு சவால். இதுதான் வீரனின் வாழ்க்கை”

”ஷ◌ரஸ்ய தாரா..” என்றார் தாமஸ். ”என்ன?” என்றேன். ”ரேஸர்ஸ் எட்ஜ்”. நாவிதனின் கத்திமுனையின் கூர்மைமேல் நடப்பதுதான் ஞானத்தின் பயணம் என்பது. ”தாமஸ் மன் ஒரு நாவல் எழுதியிருக்கிறார்” என்றேன். ”ஆமாம். நான் வாசித்ததில்லை. இது உபநிஷத வாக்கியம். என் குரு ஜார்ஜ் பூதக்காட்டில் அடிக்கடிச் சொல்வார்”

”இந்த மேடுமீதுதான் என் வீடு” என்றேன். ”இரவு தனிமையாக இருக்குமே?” ”இல்லை. இந்த நகரத்தில்கூட ஒரு இரவுச்சமூகம் உண்டு. மாலையில் கண்விழிப்பவர்கள். இப்போது நாங்கள் ஏழுபேர் இருக்கிறோம்” என்றேன். ”

எர்ணாகுளம் சமூகம் என்ன ஆயிற்று?" "அவர்கள் இப்போது நாயர் வீட்டில் கூடுகிறார்கள். அவர் அங்கே கொண்டாட்டமாக இருக்கிறார்"

எதிரே என் வீடு தெரிந்தது. பால்கனியிலும் வராந்தாவிலும் சிவந்த ஒளியுடன் விளக்குகள் எரிந்தன. சன்னல்கள் வாசல்கள் வழியாக செவ்வொளி தீச்சுவாலை போல தெரிந்தது. "நெய்விளக்கா?" என்றார் தாமஸ். "இல்லை. நான் ஹாலந்தில் இருந்து வரவழைத்த விளக்குகள். நெய்விளக்கு போலவே ஒளியை அமைக்கலாம். ஒளி சன்னமாக அசைவதுபோலக்கூட வைக்கலாம்."

தானாகத் திறந்த முகப்பு வாசலைத்தாண்டி உள்ளே சென்றேன். வீட்டு வாசலில் நீலிமா நின்றிருந்தாள். அவள் இளம்சிவப்பு சேலை அணிந்திருந்தாள். செவ்வொளியில் அவள் ஆறடி உயரமான தழல் போலிருந்தாள்.

**[முற்றும்]**